நமது

பரதகண்டம்

இரண்டாம் பாகம்:

அன்னிய நாட்டுக் கிரஹணம்

கிரந்தகர்த்தா:

வை. சூரியநாராயண சாஸ்திரி, M.A., L.T.

பிரசுரஞ்செய்தது:

சு. வை. வே. சகோதரர்கள்,

சென்னை.

நமது பரதகண்டம்

இரண்டாம் பாகம்

அன்னியநாட்டுக் கிரஉறணம்.

கிரந்தகர்த்தா:

உலக சரித்திரம், பிரபஞ்சதாரை அல்லது மானிடர் முன்னேற்றம், தமிழ் நூற்பெருக்கம், முதலிய நூல்களியற்றிய

வை. சூரியநாராயண சாஸ்திரி,

பிரசுரஞ் செய்தது:

சூ. வை. வெ. சகோதரர்கள்,

தபாற்பெட்டி நெ. 408,

திருவல்லிக்கேணி,

சென்னை.

1926.

விலை.) (1-14-0

9=06

பொருள் அடக்கம்.

நமது பரதகண்டம்.

இரண்டாவது பாகம்.

அன்னிய நாட்டுக் கிரஹணம்.

நூன்முகம்.

ஆரியசூரியன் என்று திருநாமமிடப் பெற்ற நமது பரதகண்டத்தின் முதற் பாகத்தில் ஆரியர்களின் பேரொளியால் பிரகாசிக்கப் பெற்ற நம் நந்நாட்டைப் பற்றிய வரலாறுகள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. அதில் பண்டைக்காலம் முதல் பரதகண்டத்தின்மீது ஏற்பட்டுவந்த அன்னிய நாட்டார்களின் கண்ணோக்கங்களும், இப்பரத கண்டமாகிய அரிய காமதேனு அன்னிய நாட்டார்களுக்குப் புரிந்த நன்மைகளும் உரைக்கப் பட்டிருக்கின்றன. இப்பாரத மாதாவை எதிர்த்துத் தாக்கி அடித்து வென்று அடக்கி ஆண்ட பாரசீகர், கிரேக்கர், பாக்டிரியர், சாகர் (ஸீதியர்) பார்த்திபர் (பல்லவர்), குஷானர், வெள்ளை ஹூணர், அராபியர், துருஷ்கர், படான்கள், மொகலாயர், முதலிய விதேசிகளின் ஆட்சி முறைகளும் காலவரைகளும் அவரவர்களுடைய நோக்கத்துக்கும் புத்திக்கும் யுக்திக்கும் செயலுக்கும் நடவடிக்கைகளுக்கும் தக்கவாறு குறுகியவைகளாகவும் விரிவுற்றவைகளாகவும் பலவாறாய் வித்தியாசம்

அடைந்திருந்தன என்பவைகளும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

ஆரியசூரியன் அன்னிய நாட்டார்களால் அடிக்கடி பிடிக்கப்பட்டிருந்த கிரஹண பரிமாணங்கள் அஃதாவது கிரஹண அளவுகள் காணி, வீசம், அரைக்கால், கால், காலே அரைக்கால், அரை, அரையேஅரைக்கால், முக்கால், முக்காலே வீசம், முக்காலே அரைக்கால், முக்காலே மூணுவீசம் ஆகியவைகளாய் இருந்தன. ஆனால், பூர்ண கிரஹணத்தினால் பிடிக்கப்பட்ட காலத்தை இனி விவரிப்போமாக. அதன் பின் கிரஹண விமோசனம் அதாவது விடுதலை என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வோமாக.

நிற்க; ஆரியர்களுடைய வாசஸ்தலமாகிய ஆரியாவர்த்தம் என்பது நமது கண்டத்தின் வடபாகம் என்பது இயற்கையமைப்பின் வளம் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதற்கு வடக்கு எல்லை இமயமலையாகும். தெற்கு எல்லை விந்திய மலையாகும். ஆதலால், அப்பாகத்தை அன்னியநாட்டார்கள் எதிர்த்தது வடமேற்குப் பாகத்திலின்றுதான் என்பதும் முதற் பாகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இனி விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள நமது பரத கண்டத்தின் எஞ்சிய பாகத்தைப் பற்றிய விசேஷவரலாறுகள் வரையப்படவேண்டும். இப்பாகத்துக்கும் வடபாகத்திற்கும் அடிக்கடி சம்பந்தம் ஏற்பட்டிருந்திருப்பினும் இப்பாகத்தைப் பற்றிய சில முக்கியக் குறிப்புகளைத்தான் இந்நூலின் முதற் பாகத்தில் ஆங்காங்கு கூறுவதற்கு இடமிருந்தது. தென் பாகத்தின் வரலாறு சுருக்கமாகவாவது வெளியாக்கப்

படாவிடின், பூர்ண கிரஹணத்தின் பொருள் புலப்படாது. மேலும் வட பாகத்தைக் கைப்பற்றிய அன்னிய நாட்டார்கள் வடமேற்குப்புறமாய் இக் கண்டத்தினுள் நுழைந்து தென் பாகத்தை ஒருவாறு ஆக்கிரமித்தனர் என்பதும் ஆனல் தென்பாகத்தைத் தென்மேற்கு மூலமாய் மேல் நாட்டார் கள் அடைந்தது மன்றி வடபாகத்தை முற்றிலும் ஆக்கிர மித்துக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கவை. இவ்வாறு இக்கண்டம் முழுவதும் அன்னிய நாட்டார்களால் பிடிக்கப்பட்ட சம்பவம் பூர்ண கிரஹணமென்பதற்குக் காரணம் முடிவில் காட்டப்படும். அதன்பிறகு அப்பூர்ண கிரஹணத்தினின்றும் விடுதலை என்பதன் பொருளும் ஸ்வ ராஜ்யம் என்பதன் கருத்தும் அதன் முறையும் வெளி யிடப்படும்.

அத்தியாயம் :—1.

தக்ஷிணம்.

முதல் சருக்கம்.

தக்ஷிண மன்னர்.

நமது பரதகண்டத்தில் விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள எல்லாப் பாகமும் தக்ஷிணம் என்றே கூறப்படலாம். ஆனால், இயற்கை யமைப்பின் பாகுபாடுகளுக்கிணங்க அப் பிரதேசம் இரண்டு தனிப்பாகங்களை யுடையதாய்க் காணப்படுகின்றது. அவைகளுள் ஒருபாக மானது உயர்ந்திருக்கின்றமையால் தக்ஷிண பீடபூமி என்கிற பெயரினால் விளங்குகின்றது. அதற்குத் தென்புறத்தில் கன்னியாகுமரி வரை உள்ள சமவெளியானது தென்னாடு அல்லது திராவிடம் என்கிற பெயரினால் வியவகரிக்கப்படு கின்றது.

தக்ஷிண பீடபூமியைத் தக்ஷிணம் என்று வடமொழி யிலும் தக்கணம் என்று தென்மொழியிலும் தக்கண் என்று ஹிந்தி முதலிய சில பாஷைகளிலும் வியவகரிப்பதுண்டு. தக்கண் என்கிற மொழிதான் டெக்கான் (Deccan) என்று மேனாட்டார்களால் உச்சரிக்கப்படுகின்றது. அப்பாகம் தக்ஷிணாபதம் என்றும் சில வடமொழி நூல்களில் காணப்படுகின்றது. உதாகரணங்கள் மார்க் கண்டேய புராணம், வாயு புராணம், மத்ஸ்ய புராணம் முதலியவைகளாகும். இந்தப் பாகம் நர்மதாநதி முதல்

கிருஷ்ணாநதி வரையிலுள்ளது. அதை இரண்டு பாகங்களாய்ப் பிரித்து மேற்குப் பாகத்தை மஹாராஷ்டாம் என்றும் கிழக்குப் பாகத்தைத் தெலுங்காணம் என்றும் கூறலாம். முற்காலங்களில் தக்ஷிணத்திலிருந்த முக்கிய மாகாணங்கள் இவைகள்தான் என்று சுட்டிக் காட்டுவது கடினம். ஆயினும், ஆந்திரர்கள் எனப் படுவோர்களின் பூர்வ ராஜ்யம் கீழக்கடல் பக்கத்திலுள்ள கலிங்கம் (ஒரிஸ்ஸா) முதல் மேற்குக் கடலோரத்தில் கொங்கணம் என்கிற மஹாராஷ்டரர்களுடைய நாடுவரை பரந்து நின்றது என்பதற்குச் சந்தேகமில்லை. தற்காலத்தில் நிஜாம்ராஜ்யம் எனப்படுவது தக்ஷிணத்திலுள்ளதுதான். தற்காலத்திய மைசூர் மாகாணத்தின் சில பாகங்களும் தக்ஷிணத்திலுள்ளதுதான்.

தக்ஷிணத்தில் வசித்த மன்னர்களின் வரலாறு பற்பல ஆதாரங்களைக் கொண்டு தெரிந்து கொள்ளத்தக்கது. ராமாயணம், மகாபாரதம், மேலே காணப்பட்டிருக்கும் புராணங்கள், உள்நாட்டுக்கதைகள், வீரஸ்தம்பங்கள், புத்தர்களுடைய விஹாரங்கள், ஜைனராலயங்கள் நாணயங்கள், சிலாசாசனங்கள், உலோகப் பட்டயங்கள் ஆகிய அரிய வஸ்துக்கள் நமக்குச் சரித்திரக் கண்ணாடிகளாகும். அவைகளுதவியினால் பெறத்தக்க சரித்திர ஞானம் அடியிற் காணப்பட்டிருக்கின்றது. அதற்கு உதவியாய் நிற்பது தக்ஷிணபதம் என்கிற படம் ஆகும். (பி. தி. ஓ.*) அப்படத்தில் காணப்படும் எண்கள் 7, 8-வது பக்கங்களில் விவரிக்கப் பெற்றிருக்கின்றன.

---

* பின்புறத்தைத் திருப்பி ஓதுவீரரக.


நமது
பரதகண்டம்
தக்ஷிண
பதம்
விந்தியமலை
கோதாவரி
இந்து மஹா ஸமுத்திரம்
S.V.V. Brothers.

நெ.	தக்ஷிணமன்னர் குலப்பாகுபாடுகள்.	முக்கிய ஸ்தானம்.	காலவரை முறை (சுமார்)
			கி. மு. கி. பி.
1	(முற்காலத்திய) ஆந்திரர்கள் (மத்திய மாகாணம்)	ஸ்ரீகாகுளம் தனகாகடம் அமராவதி	250—250
2	கலிங்கர்கள் (ஒரிஸ்ஸா)	......	
3	கடம்பர்கள் (மைசூர்)	வனவாஸி ஜயந்தி வை ஜயந்தி	200—600
4	கீழ்த்தேசக் காங்கர்கள் (ஒரிஸ்ஸா)	ஜகன்னாதம் (புரி)	கி. பி. 200—1550
5	மேற்குக் காங்கர்கள். (மைசூர்)	தலைக்காடு	200—1000
6	(மேற்கு) க்ஷத்திரபர்கள் (மாளவம், கூர்ஜரம், கொங்கணம்)	உஜ்ஜயினி	1—400
7	(வடக்குப்) பல்லவர்கள் (மத்திய பாகம்)	வடபி (பாதாமி) வெங்கி (எல்லூர்)	300—600
8	(தெற்குப்) பல்லவர்கள் (தமிழகம்)	காஞ்சீபுரம்	300—750
9	(மேற்குச்) சளுக்கியர்கள் (நிஜாம்ராஜ்யம்)	வடபி (பாதாமி)	550—750

நெ.	தக்ஷிணமன்னர் குலப்பாகுபாடுகள்.	முக்கிய ஸ்தானம்.	காலவரை முறை (சுமார்)
			கி. பி.
10	(கீழ்த்தேச) சளுக்கியர்கள் (ஒரிஸ்ஸா, கோதாவரி)	வெங்கி ராஜமகேந்திரம்	615—1127
11	ராஷ்டிர கூடர்கள் (மஹாராஷ்டர தேசம்)	மோர்கண்ட் (மால்கேத்)	750—975
12	சளுக்கியர்கள் (நிஜாம்ராஜ்யம்)	கல்யாணபுரம் (கல்யாண்)	975—1200
13	ஹொய்ஸாலர் (மைசூர்)	துவார சமுத்திரம் (ஹலேபித்)	1000—1300
14	காகதீயர்கள் (ஆந்திர தேசம்)	ஒருங்கல் (வாரங்கல்)	1100—1425
15	கலாசுரிகள் (நிஜாம் ராஜ்யம்)	கல்யாணபுரம் (கல்யாண்)	1130—1190
16	யாதவர்கள் (காண்தேஷ்)	ஸெண்ணு தேசம்	1200—1318
17	(பிற்காலத்திய) ஆந்திரர்கள்	விஜயநகரம்	1336—1565

இரண்டாவது சருக்கம்.

ஆந்திரர்கள்.

முதல் சருக்கத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் இனத்தார்களுள் சிலர்களின் வரலாற்றை ஈண்டு எடுத்துக்கொள்வோமாக.

நமது பரத கண்டத்தில் ஆரியர்களுடைய குடியேற்ற காலத்தில் தக்ஷிணத்தில் திராவிடர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தனர் என்றும் ஆரியர்கள் கலிங்க நாட்டைக் கைப்பற்றிய காலத்தில் ஆந்திரர்கள் தோன்றியிருக்க வேண்டும் என்றும் அந்த ஆந்திரர்கள் திராவிடர்களுடைய கிளை இனத்தோர் என்றும் சொல்வதுண்டு. கிரேக்கர்கள் இக் கண்டத்தை எதிர்த்த காலத்தில் ஆந்திரர்களுடைய ஆட்சி வலிவுற்றிருந்தது என்றும் அசோகர் அரசு புரிந்த காலத்தில் ஆந்திரர்கள் மகத ராஜ்யத்துக்குள்பட்டிருந்தனர் என்றும் கூறப்படலாம். புத்தமத பிரசார காலத்தில் ஆந்திர ராஜ்யத்தில் அம்மதத்திற்கு நல்வரவு ஏற்பட்டிருந்தது என்பது புத்த மத கிரந்தங்களினுலும் பல கட்டிடங்களினுலும் சாசனங்களினுலும் தெரிந்துகொள்ளப் பாலது. முக்கியமாய் சந்திரகுப்த மௌரியன் காலத்திய ஆதாரங்களினுலும் வேறு சில நாணயங்களினுலும் மற்றும் சில ஸ்தூபிகளிலுள்ள எழுத்துக்களினுலும் ஆந்திரர்களுடைய சிறப்பும் அதிகாரமும் அறிந்து கொள்ளக்கூடியனவாம். அவர்கள் மௌரிய வம்சத்திய அரசாட்சிக்குள்ளடங்கியிருந்தனர் என்பதும் தெரிகின்றது. அசோகனிறந்த பிறகு தனி அரசாங்கமாய்ப் பிரிந்துகொண்டது மன்றி கோதாவரியின் உற்பத்தி ஸ்தானத்திலிருக்கும் நாஸிக்வரையும் ராஜ்யத்தை விருத்திசெய்து கொண்டனர். ஆனல், அவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்புறத்திலிருந்த கலிங்கர்களால் பிற்காலங்களில் ஒருவாறு அடக்கப்பட்டனர். இக்கலிங்கர்களும் அசோகனுக்குப் பிறகு தனித்து நின்று விட்டவர்களே.

ஆந்திரர்கள் சுமார் கி.மு. 28-வது ஆண்டில் மகத ராஜ்யத்தின் கடைவம்சத்தவர்களாகிய கண்வர்களை நாசம்செய்து விட்டனர். சாதகர்ணி என்கிற பட்டப் பெயர்கொண்ட

மன்னர்கள் தனி அரசு செலுத்தினர். அக்காலத்தில்தான் பார்த்திபர்கள் முதலிய அன்னியநாட்டார்கள் பரதகண்டத்தில் தங்குவதற்கு இடம் பெறலாயினர். கி.பி. முதலாவது நூற்றுண்டில் மேற்கு மலைத்தொடர்ப் பக்கங்களிலுள்ள மகாராஷ்டிர நாடுகளில் பிரசித்திபெற்றவன் நாஹபாணமகா க்ஷத்திரபன். இவனை ஆந்திர மன்னனுகிய கௌதமீபுத்திர சாதகர்ணி ஜயித்து க்ஷத்திரப ஆட்சியை ஒடுக்கிவிட்டான். அவனுக்குப் பிறகு அரசுபுரிந்த புலுமாயி, யக்ஞஸ்ரீ முதலிய ஐந்தாறு ஆந்திரர்கள் காலத்திய நாணயங்களும் சிலா சாஸனங்களும் கிடைத்திருக்கின்றன. ஆனுல், புராணங்களால் ஏற்பட்டமட்டில் சுமார் *முப்பது ஆந்திர மன்னர்கள் நானூற்றைம்பது ஆண்டுகள் ராஜ்யம் புரிந்தனர் என்பது தெரிகின்றது. அவர்களுக்குப்பின் பல அன்னிய நாட்டார்கள் ஆரியாவர்த்தத்தையும் தக்ஷிணத்தையும் எதிர்த்த வண்ணமாய் நின்றனர். அவர்களைப் பற்றிய விசேஷங்கள் ஒன்றுமில்லை என்றே புராணங்கள் மௌனமாய் நின்று விட்டன போலும்.

ஆதிகாலத்தில் ஆந்திரர்களின் ஆட்சியில் முக்கியமாய்க் கவனிக்கக் கூடியது வியாபாரச் சிறப்பு. பருககசம் (பரோச்) என்கிற துறைமுகப் பட்டிணத்தினின்று பல சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாயின. தக்ஷிணத்தில் பிரதிஸ்தானம் (பைதன்) கல்யாண், நாஸிக், தானியகேது, பானவாஸி (மைசூர்) ஆகிய நகரங்களின் சிறப்பும் வியாபாரிகளின் நிலைமையும் உயர்ந்த தசையை யடைந்திருந்தன. இராதாகமால் முகர்ஜி என்கிற சரித்திராசிரியர் அவருடைய அருமையான நூல் ஒன்றில்பரதகண்டத்தின் கப்பல் வியாபா

* விவரம் அனுபந்தத்தில் காட்டப்படும்.

ரத்தைச் செவ்வனே வர்ணித்திருக்கின்றனர். அக்காலத்திய செல்வத்தைக் காட்டி நிற்பவை புத்த மதஸ்தரின் சைதன்னியம் என்கிற மலைக்குகை மடங்களாகும். அவைகளின் வேலைத் திறமையும் இன்றும் காணப்படலாம். பம்பாய்க்குச் சமீபத்திலுள்ள கார்லி என்கிற இடத்திலுள்ள ஒரு மண்டபத்தைப் பார்த்தால் போதுமானது. அக்காலத்தில் தனநிதிகள் அதாவது பாங்குகள் (Banks) ஏராளமாய் விருத்தியாயிருந்தன. வட்டி 100.க்கு 5 அல்லது 6-க்கு மேல்வாங்கக் கூடாதென்கிற சட்ட மிருந்தது. நகர பரிபாலன சபைகளும் வியாபாரக் கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன. அவைகளினால் தனநிதிகளின் சூதுகளும் வஞ்சனைகளும் அடிக்கடி கண்டிக்கப்பட்டன.

பிற்காலத்திய ஆந்திரர்களைப் பற்றிய சில விவரங்கள் முதற்பாகத்தில் (பக்கங்கள் 178-182) "விஜயநகரம்" என்கிற அதிகாரத்தின் கீழ் வரையப் பட்டிருக்கின்றன. இப்பாகத்திலும் காகதீயர்கள் என்கிற அதிகாரத்தில் அவர்களைப்பற்றி மீண்டும் சில வரலாறுகள் கூறப்படும். மேலே குறிப்பிடப்பட்ட தக்ஷிண மன்னர்களின் ஜாபிதாவில் காணப்படும் ஹொய்சாலர்களைப்பற்றி முதற் பாகத்தில் (157-160 பக்கங்களில்) விசேஷமாய்க் காணலாம்.

பல்லவர்கள்

ஆந்திரர்கள் ஆட்சி முடிவு பெற்றகாலத்தில் தலையெடுத்த அன்னிய நாட்டார்களுள் சாகர்கள், பார்த்திபர்கள், யவனர்கள் ஆகிய மூவர்கள் சிறந்து நின்றார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சி முறைகள் அன்னிய நாட்டார்களுடையதே என்பதற் கையமில்லை. அக்காலத்தில் வலிவடைந்து

ஓங்கி நின்ற பல்லவர்கள் என்கிற ஒரு ஜாதியாரின் ஆட்சி அடிக்கடி காணப்படுகின்றது. அவர்களின் ஜாதியைப் பற்றியும் குலத்தைப் பற்றியும் பற்பல கதைகள் இருக்கின்றன. பல்லவர் என்கிற மொழியின் பொருளும் வரலாறும் வெவ்வேறு விதங்களாய்க் கூறப்படுகின்றன. அவர்கள் பற்பல நாடுகளில் வெவ்வேறு காலங்களில் விருத்தியா யிருந்தனர் என்று தெரிகின்றது. அவர்கள் வெளிநாட்டினின்றும் வந்த பார்த்திபர்கள் என்று சிலரும் உள் நாட்டிலிருந்த **நாகர்** இனத்தோரைச் சேர்ந்தவர்கள்தான் என்று வேறு சிலரும் கூறுவர்.

தக்ஷிணத்தின் மேற்குப் பாகத்தில் வடபி (பாதாமி) என்கிற தலை நகரிலும், அதன் கிழ்ப் பாகத்தில் வெங்கி என்கிற தலை நகரிலும், தமிழகத்தில் காஞ்சீபுரம் என்கிற தலை நகரிலும் அரசு புரிந்தனர் என்பது நன்கு புலப்படுகின்றது. எவ்வாறெனின் இவ்வினத்தார்கள் கோவில்கள் நிர்மாணஞ் செய்வதில் வெகு அக்கரை உடையவர்கள். தென் ஆற்காடு, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் பல்லவர்களால் கட்டப்பட்ட தேவாலயங்கள் இன்றைக்கும் அழியாமலிருக்கின்றன. சென்னைக்குத் தெற்கிலுள்ள மகாபலிபுரத்திற்கு நேராய்க் கடலில் முழுகி யிருப்பதைப்போல் காணப்படும் கட்டிடங்களின் முனைகளும் நிலத்தில் நிற்கும் கல் தேர்களும், மண்டபங்களும், யானைகளும், மாடுகளும், விக்கிரகங்களும், உயிருடையனபோல் காணக் கிடக்கின்றன.

சீனயாத்திரைக்காரரான ஹையூன் தஸாங் பல்லவ ராஜ்யத்தைப் பற்றியும் அவர்களுடைய அரசைப்பற்றியும் விவரித்திருக்கின்றார். காஞ்சீபுரத்தில் மட்டில் எண்பது

ஆலயங்கள் தாம் கண்டதாய்க் கூறுகின்றனர். பல்லவ அரசர்கள் புத்த சன்னியாசிகளையும், ஜைனர்களையும், பிராம்மணர்களையும் வித்தியாசமின்றி நடத்தினதாயும் குடிகளும் தைரியமுள்ளவர்களாயும், உண்மையுரைப்போராயும், நன்னெறி உடையவராயும் வாழ்ந்தனர் என்றும் வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர் அதே சீனயாத்திரிகர்.

இந்தப் பல்லவர்கள் தக்ஷிணத்திலும் தமிழகத்திலும் எக்காலத்திலும் அக்கம்பக்கத்திலுள்ள ராஜ்யங்களை ஜயிக்க முயன்றதனுல் அனேக நூற்றுண்டுகள் இடைவிடாமல் போர்கள் நடைபெற்றன. அவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் அடிக்கடி யுத்தம் நடந்தது. சாளுக்கியர்கள் ராஜபுத்திர வம்சத்தவர்கள் என ஏற்கனவே ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறோம். சாளுக்கியர்களும் பல்லவர்களைப்போல் பல நகரங்களில் அரசு புரிந்தவர்கள். பல்லவர்கள் வசித்த தேசங்களையே அடிக்கடி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர்.

ராஷ்டிர கூடர்கள்.

இந்த சாளுக்கியர்களும் ராஷ்டிர கூடர்களும் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தனர். ராஷ்டிரர்கள் என்பவர்கள் மகாராஷ்டிரர்களுக்கு மூலபுருஷர்கள் என்று கூறுவதுண்டு. அவ்வாறெனின் அவர்கள் ஆரியர்கள் எனப்படலாம். கூடர்கள் என்றுல் ஒன்றுகூடியவர்கள் என்பது பொருள் போலும். இவர்கள் முதன் முதலில் மயூரகண்டிக்கும் (மோர்கண்ட்) பிறகு தற்காலத்தில் நிஜாம் ராஜ்யத்திலுள்ள மல்கேத் (அக்காலத்திய பெயர் மானிய கேடம்) என்கிற இடத்திற்கும் மாறிவிட்டனர். இவர்களைப்பற்றி அராபிய வியாபாரிகள் அடிக்கடி பிரஸ்தாபம் செய்திருக்கின்றனர். ஏனெனின்,

அராபியர்களை அவர்கள் ஆதரித்தனர். ராஷ்டிர கூடர்களின் சரித்திரத்தில் முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கூடியது எல்லோராவில் பெரிய கற்பாறைக்குள் நிர்மாணஞ் செய்யப்பட்டிருக்கும் கைலாசர் கோவில்தான். இதன் மகிமை எத்தகையதெனின் அதைக் கட்டிவைத்த சில்ப சாஸ்திரியே "இதை எவ்வாறு நான் செய்ய வல்லவன்!" என்று ஆச்சரியப் பட்டனன். இக் கட்டிடம் நிர்மாணஞ் செய்யப்பட்ட தெய்வீகவரலாறு ஜனங்களால் இன்றைக்குங் கூறப்பட்டு வருகின்றது.

அஜண்டா கிராமத்தில் ஒரு அரசனிருந்தான். அவனுக்குக் கண்பார்வை மலினமடைந்தது. யாவரேயாயினும் கண்ணை சுவஸ்தஞ் செய்யும் பக்ஷத்தில் தனது ராஜ்யத்தில் பாதியுங் கொடுக்கத்தயாராயிருப்பதாய்ப் பறையறைவித்தான். வைத்தியர்களுள் பலர் தம்மாலியன்றதைச் செய்தும் பலனில்லை. கண் ஒளி பூராவும் போய்விட்டது. அவன் மனத்தளர்ச்சி யடைந்த காலத்தில் ஒரு சன்னியாசி தான் சௌக்கியம் செய்து விடுவதாய் அரண்மனையை யடைந்தான். ஆனால், அவன் அவ்வரசனிடத்தில் "நான் யாதொரு விதமான இறையும் வாங்கமாட்டேன். ஆனால், ஒரு இரவும் பகலும் நுமது அரியணையில் நான் உட்கார்ந்து ராஜ்யாதிகாரம் செய்யவேண்டும்." என்றான். "இது சுலபமான விஷயம்" என்று அரசன் ஒப்புக் கொண்டான். சன்னியாசியும் தாம் கொண்டுவந்த பச்சிலையினால் கண்ணை நல்லொளி உடைத்தானதாய்ச் செய்துவிட்டான். அரசனும் வாக்குக் கொடுத்தவாறே சிம்மாசனத்தில் சன்னியாசியை யமர்த்தினான். பகற்காலம் முடிந்தது சூரியன் அஸ்தமனமானான். ஆனால், உரியகாலம் வந்தும் சந்திரவன் கிளம்பவில்லை. ஊரே இருளில் தத்தளித்தது. இவ்வாறு ஒரு வாரம்

சென்றது. ஒரு மந்திரிக்குத் திடீரென ஒரு வாக்குண்டாயிற்று. அஃதாவது அவ்விடத்திலிருந்த ஒரு மலையின் உச்சியில் ஏழு பெயர்கள் தாரை ஊதவேண்டும் என்பதே. அவ்வாறே நடத்தப்பட்டது. சூரியனும் வெளிக்கிளம்பினன். ஆனுல், சன்னியாசி காணப்படவில்லை. அந்த மலைகளில் அனேக கோவில்களும் விக்கிரகங்களும் சித்திரப்படங்களும் குகைகளுள் நிர்மாணம் செய்யப்பட்டிருந்தன. இம்மாதிரியான ஆச்சரியம் கதையாயினும் சாத்தியமாயினும் தற்காலத்தில் எல்லோராவில் காணப்படும் அற்புதங்கள் அமானுஷியமானவைகளாய்த் தோன்றுகின்றன. ஒரு கற்பாறையைக் குடைந்து அக்கற்பாறையினுள்ளே வேருெரு கல்லின் உதவியில்லாமல் சகல வேலையும் நடத்தப்பட்டிருக்கிறது. இது கிருஷ்ணராஜன் சிவபூஜை செய்வதற்காக ஏற்பட்டது.

அவனுக்குப் பிறகு அரசுபுரிந்த துருவன் என்பவன் காங்கர்களின் மன்னனைச் சிறையிலடைத்துக் காஞ்சியில் வசித்த பல்லவ மன்னனை அவமானஞ் செய்துவிட்டு அவனிடமிருந்து அனேக யானைப் படைகளைக்கைக்கொண்டு விந்திய மலைக்கு வடக்குப் பாகத்தினுட் புகுந்து வத்ஸராஜனை வென்று அவனது தலைமை நகராகிய கோசாம்பியைக் கைப்பற்றி அரசனைத்துரத்தி விட்டு அவனது ராஜ்யத்தின் குடையையடைந்து பிறகு கோஸலமன்னனைப் புறக்கணித்து ஏராளமான பொருள்களை யானைகளின் மேலேற்றிக்கொண்டு தன் நகரையடைந்தான் என்பது அவன் காலத்திய வரலாறு.

அவனுக்குப்பிறகு அரசுபுரிந்த கோவிந்தன் பல வெற்றிகள் பெற்றுத் தன் தலைமை நகரை மானிய கேடம் என்கிற மல்கேத் (நிஜாம்ராஜ்யம்)துக்கு மாற்றிக்கொண்டான். அவனுல் ஏற்பட்ட தர்மங்களும் தானசாஸனங்களும் இப்பொழுது அளிக்கப்பட்டனபோல் காணப்படுகின்றன.

ராஷ்டிரகூடர்களுள் சுமார் அறுபத்திரண்டு ஆண்டுகள் ராஜ்யம் படைத்தவன் அமோகவர்ஷன். இப்பெயர் காரணப் பெயர் போலும். ஏனெனின் அவனது கொடை மாரிபோல் விளங்கிற்று. மாளவம், வேங்கி ஆகிய இரண்டு நாடுகளுக்கும் மகாராஜாவாய் இருந்தனன். அவனது ஜைன குருவாகிய ஜினஸேனனின் கிரந்தங்களில் அமோகவர்ஷன் கீர்த்தி விளங்கா நிற்கின்றது. "அரசனுக்குரிய வெண் கொடைகள் மூன்று, சங்கம், கருடமுடி, பாலித்துவஜம், கங்கை யமுனையின் திருவுருவம்" ஆகிய அடையாளங்களைப் பெற்றது அவனது ஆட்சி. அவன் நீண்டகாலம் அரசாண்டபின் தானே தனது இளவரசுக்குப் பட்டம்சூட்டிவிட்டுத் தனிமையாய் வானப்பிரஸ்தாசிரமத்தில் வாழலாயினன். இந்த மன்னன் கி. பி. 815—877 வரை அரசு புரிந்தவன். அரப் வியாபாரியாகிய ஸுலேமான் வரைந்துள்ள யாத்திரைவரலாற்றில் "உலகத்தில் நான்கே சக்கிரவர்த்திகள், அவர்கள் பக்தாதின் கலீபா, சீன சக்கிரவர்த்தி, ரூம் (கான்ஸ்டாண்டிநோபுள்) சக்கிரவர்த்தி, வல்லபராய் என்பவர்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வல்லபராய் என்பது அமோகவர்ஷனுக்குப் பட்டப்பெயர். இந்த மன்னனுக்குப் பிறகு சில ஆண்டுக்களுக்குள் ராஷ்டிரகூட ராஜ்யம் சளுக்கியர்களது வசமாய்விட்டது. ஆயினும், பல சிறு ராஷ்டிரகூட மன்னர்கள் இங்கும் அங்கும் காணப்பட்டனர்.

சளுக்கியர்.

சளுக்கியர்கள் ராஜபுத்திர வம்சத்தவர்கள் என்றும் அக்கினி குலத்தவர் என்றும் சர்த்பர்தாய் கவி கூறுகின்றனர் என்று ஏற்கனவே ஒரு முறை கூறியுள்ளோம். அவர்

கள் அயோத்தியையிலிருந்த சூரிய குலத்திய வம்சஸ்தர் களென்றும் கூறப்படுவதுண்டு. அல்லது அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து இக் கண்டத்துக்கு வந்த ஒரு கலப்பு ஜாதியார் என்றும் சில வரலாறுகள் காட்டுகின்றன. உத்தம கவியான பில்ஹணரால் இயற்றப் பெற்ற விக்கிரமாங்க சரித்திரத்தினுல் சளுக்கியர்களின் உற்பத்திஸ்தானம் பிரம் மாவின் *சுளுகம் என்று ஏற்படுகின்றது. அல்லது துரோணு சாரியாருடைய உள்ளங் கையினின்றும் அல்லது வடதே சத்து முனிவரான ஹாரீத பஞ்சசிகர் என்பவருடைய உள் ளங்கையினின்றும் தோன்றினர் என்றும் கூறுவாருளர். மேலும் பண்டார்க்கர் அவர்களுடைய ஆராய்ச்சிகளில் சளுக்கியர்கள் கூஜர் (கூர்ஜரர்?) குலத்தைச் சார்ந்தவர்கள் என்பது காணப்படுகின்றது.

---

*சுளுகம் என்பது வடமொழி. பிராம்மணர்கள் ஆசமனம்† செய் வதற்காகக் குவித்துக்கொள்ளும் உள்ளங்கையாகும். பிரம்மதேவன் ஸந்தியா வந்தனம் (அதாவது காலை மாலைகளில் செய்ய வேண்டிய கர்மம்) செய்துகொண்டிருக்கையில் அவருடைய சுளுகத்தில் (உள்ளங் கையில்) உற்பத்தியான வீரன் ஒருவனுடைய வம்சத்தவர்கள் சுளுகர் கள் என்று கூறலாம். இம்மொழியானது பலவிதமாய் மாறிமாறி விட்டது. சௌளுக்கியர், சாளுக்கியர், சளுக்கர், சலிக்கியர், சோலங்கியர், சோலகி, ஆகிய பல மொழிகள் சரித்திர ஆதாரங்களில் காணப்படுகின்றன.

†ஆசமனம் என்பது அந்தணர் ஒவ்வொருவரும் புற அவயவங் களைச் சுத்தி செய்துகொள்ளும் ஒவ்வொரு தருணத்திலும் அகத்தைச் சுத்தி செய்வதற்காக வலது உள்ளங்கையைக் குவித்துக்கொண்டு அதில் சுத்தஜலத்தின் சில துளிகளை மட்டில் எடுத்துக்கொண்டு விஷ்ணுவினுடைய ஆயிர நாமங்களுள் முக்கியமான மூன்று நாமங் களாகிய அச்சுத, அனந்த, கோவிந்த என்பவைகளை ஒவ்வொன்றாய்க் கூறி உள்ளங்கைக ஜலத்தை தனித்தனியாய் மூன்று முறை உட்கொள்ளும் முறையாகும்.

அதனுல் ஆத்மசுத்தி ஏற்படும் என்பது ஆரியர்களின் கொள்கை.

2

சளுக்கியர்களுடைய மூலஸ்தானம் ஸவ்வாலாக் பர்வதத்தைச் சார்ந்த ஸபாதலக்ஷத்துத்தலை நகராகிய அஹிச்சந்திரமென்றும் காணப்பட்டிருக்கின்றது. சளுக்கியர்கள் அயோத்தியிலிருந்தனர் என்றும் பிறகு கங்கையைத் தாண்டி தெற்கே நோக்கலாயினர் என்றும் பில்ஹணர் கூறுகின்றனர். எஃது எவ்வாறிருக்கினும் தக்ஷிணத்திலிருந்த சளுக்கியர்கள் *வடபிபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டிருந்தனர் என்பது திண்ணம்.

சீனயாத்திரைக் காரர்களுள் ஒருவர் சளுக்கியர்களது கீர்த்தியையும் பெருமையையும் பற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். ஹர்ஷமன்னன் நர்மதாநதியைத் தாண்ட வொட்டாமல் படைகளை யமைத்து வைத்திருந்த சளுக்கியத் தலைவனை புலிகேசியைப்பற்றிப் புகழ்ச்சியுடன் மகிழ்ந்து களி கூறியிருக்கின்றனர். இப் புலிகேசியின் சகோதரனாகிய குப்ஜவிஷ்ணுவர்த்தனன் கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகளின் தீரத்திலுள்ள வேங்கி நாட்டை ஜயித்து கீழைச் சளுக்கிய நாடு ஒன்றை ஸ்தாபித்தனன். ஆயினும், கி. பி. எட்டாவது நூற்றாண்டுமுதல் கி. பி. பதினோராவது நூற்றாண்டுவரை சளுக்கியர்களுடைய வலுமை ராஷ்டர கூடர்களால் ஒடுக்கப்பட்டது. ஆனால், மறுபடியும் அவர்கள் தைலபன் என்கிற தலைவன்கீழ் தலை எடுக்கலாயினர். இத் தைலபன் மாளவ தேசத்தரசனாகிய முஞ்சனைக் கைதுசெய்ததினால் முஞ்சன் வம்சத்தைச் சார்ந்த போஜன் தைலபனை வென்று கொன்றுவிட்டான் என்று ஒரு வதந்திஉண்டு. இந்த போஜனின் கீர்த்தியும் அடிக்கடி விக்கிரமாதித்தியன் என்பவன் சரித்திரத்தில் காணப்படலாம்.

* இப்புரம் தற்காலத்தில் நிஜாம்ராஜ்யத்தில் பாதாமி என்று அழைக்கப்படுகின்றது.

நிற்க ; தைலபன் வம்சத்திலுதித்த ஆறுவது விக்கிரமாதித்தியன் (கி. பி. 1076-1127) சரித்திரம் மிக மேன்மையுற்றது. அவன் பெயரால் குறிப்பிடக் கூடிய சாஸனங்கள் சுமார் நூற்றைம்பதுக்குமேல் காணப்படுகின்றன. விக்கிரமாதித்தியன் பெயர் இப்பாரதகண்டத்தில் பிரசித்தி பெற்றது. விக்கிரமாதித்தியன் என்கிற பெயரோ பல சாசனங்களில் பல காலங்களில் காணப்படுகின்றது. இம்மாதிரியான விஷயம் ஒரு பெரும் தர்க்கத்துக்குத் தாய்வீடு. சளுக்கிய விக்கிரமாதித்தியன் என்பவனைப் பற்றிய ஆதாரங்கள் பலகாணப்படுகின்றன. அவனது காலத்திய சரித்திரத்தைச் சரித்திர போதகாசிரியராகிய அ. வா. வெங்கடராமய்யர் அவர்கள் வெகு நேர்த்தியாய்த் தமிழ் வியாசம் ஒன்றில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதினின்றும் அவன் பிறந்த தேதி முதலிய வியவகாரங்களைக் கண்டு கொள்ளலாம். அதனால் பல நுண்ணிய விஷயங்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

விக்கிரமாதித்தன் பட்டத்திற்கு வருமுன்னரே சில போர்களில் ஜயம் பெற்று சோழமன்னர்களைப் பன்முறை அவமானப் படுத்தி கங்கைகொண்ட சோழபுரத்தை வென்று பூப்பிரதக்ஷணம் செய்து தன் நாட்டின் எல்லைக்கு வருங்கால் அவன் தந்தை ஆஹவமல்லன் இறந்து போய்விட்டனன். அவனது தமையன் அரியணை பெற்றகாலத்தில் அவன் இளவரசனாக இருந்த போழ்து ராஜநீதி முறை தவறி நடந்ததனாலும், கர்வமடைந்ததனாலும், பல அதிக வரி விதித்ததனாலும், சபைகளைக் கவனிக்காததனாலும் குடிகளால் வெறுக்கப்பட்டனன். அதனால் விக்கிரமாதித்தன் ராஜேந்திர சோழன் முதலிய பலருதவியினால் தமயனைத் துங்கபத்திராநதிச் சண்டையில் கைதுசெய்து விட்

டான். உடனே கிரீடம் பெற்றனன். அவ்வருஷம் முதல் சளுக்கிய விக்கிரமாதித்திய ஸம்வத்ஸரம் ஆரம்பித்தது. இச்சகாப்தம் சுமார் நூறு ஆண்டுகள்தான் விளங்கிற்று.

விக்கிரமாதித்தனது ராஜ்யமானது அநேக மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டலேசுவரர் அதிகாரத்துக்குள் இருந்தது. அவனது காலத்தில் குடிகளின் விசுவாஸத்தை விளக்கக்கூடிய உதாகரணம் ஒன்றைக் கூறுவாம். 'ராஜனுக்குப் புத்திரப் பேறுண்டாயின் தன் தலையைப் பிரம்மனுக்குச் சுழலை யாட்டத்தில் அர்ப்பணம் செய்து விடுவதாக ஒரு இடையன் பிரார்த்தனை செய்து கொண்டான். வித்துவான்களுக்கு அளித்த ஆதரவைப்பற்றிய அத்தாக்ஷி பில்ஹணகவியாவர்-காஷ்மீரம் முதல் நர்மதை நதிக்கரைவரை வித்துவான்களை யாதரிக்கும் வள்ளல் ஒருவனுமில்லை யென்றே பில்ஹணர் இம்மன்னன் சன்னதியை யடைந்தனர். இவன் காலத்திலிருந்த மல்லிதேவன் என்னும் மல்லிகார்ஜுன ஸோமேசுவர பண்டிதர் ஞாபகசக்தியில் இணையற்றவர் என்றும், சதாவதானம் செய்யக்கூடியவரென்றும், எத்துணைக் கதைகள் யார்சொன்னாலும் திருப்பிச் சொல்லக்கூடியசக்தி வாய்ந்தவர் என்றும், கவிசாதுரியம் பெற்றவர் என்றும், கணித வித்துவான் என்றும் சொல்லப்படுகின்றனர். சங்கீதத்தில் கீர்த்திபெற்ற ரவி தேவன் அக்காலத்தில் வசித்தவன்.

சளுக்கியர் காலத்திய அரசியல்முறை மிகச்சிறப்புற்றது. தெய்வத்திற்கஞ்சி குடிகள் மன்னனைப் போற்றியதும், மன்னன் குடிகளின் நோக்கத்தைத் தழுவி நின்றதும் பாரத பூபர்களின் மேன்மையை விளக்குகின்றன. அவனது மந்திரிசபை, இராணுவம், யுத்ததருமம், சமாதான ஏற்பாடுகள் முதலியவைகளும் அர்த்த சாஸ்திர விதிகளுக்கு உதாகரணங்களாய் நின்றன.

அக்காலத்திலும் கிராம ஸ்தலசுய ஆட்சியே முக்கிய மான முறையாயிருந்தது. ஒரு கிராமத்தில் பன்னிருவர்க் கத்தினர் முக்கியமானவர். அவர்கள்: மணியக்காரன் (படேல் அல்லது கவுண்டன்), கர்ணன் (கணக்கன்), உபாத்தியாயர், நீர்ப்பாசன அதிகாரி (நீர்கிரந்தி), தலையாரி, தோட்டி, ஜோதிஷன் (ஜோஸியன்), கொல்லன், தட்டான், குயவன், வண்ணான், அம்பட்டன் என்பவர்கள் அவரவர்கள் தங்களு டைய தொழிலைப் புரிவதற்காக மானியம் பெற்றிருந்தனர். கிராம விசாரணைக்குப் பஞ்சாயத்து ஏற்பட்டிருந்தது. ஆத லால் ஒவ்வொரு ஊரின் நியாயஸ்தல காரியங்களும் அந்த அந்த ஊரிலேயே நடந்தமையால் அக்கிரமங்களுக்கு அதிக இடங் கிடைத்திருந்திராது. வியாபார விஷயத்தில் தக்ஷி ணத்தின் நிலைமை மிக்க சிலாக்கியமாயிருந்தது. நாட்டு வளப்பத்தினாலும், விளை பொருள்களின் க்ஷேமத்தினாலும், நெல், வெண்கரும்பு, தென்னை, வாழை, கமுகு முதலியன ஏராளமாய்க் குடிகளுக்கு மிஞ்சி வெளிநாடுகளுக்கும் அனுப் பப்பட்டன.

ஆரியாவர்த்தத்திலிருந்து அசுவங்களும், கோளத்தி லிருந்து கல்பூரமும், மேற்குக் கடல்வழியாய் மிளகும் லவங்கமும் ஜாதிக்காய் முதலியவைகளும் இறக்குமதியா யின. கப்பல் வியாபாரத்திற்கும் கப்பல் பிரயாணத்திற் கும் யாதொரு குறைவுமில்லை.

வியாபாரத்திற்கு ஏற்றவாறு தனமும் விருத்தியா யிற்று. அதற்குச் சான்றுகள் நாணயங்கள், பத்மடங்கா என்ற தாமரை உருவம் கொண்ட நாணயம், நிஷ்கா முத லிய பொன் காசுகளும், ஹண பண என்ற தாமிரக்காசு களும் நடைபெற்றன.

ஆந்திர ராஜ்யத்தில் கூறப்பட்டதேபோல் சளுக்கிய ஆட்சி காலத்திலும் வர்த்தக சங்கங்கள் பல இருந்தன. தொழிலாளர் கூட்டங்களும் விருத்தியாயிருந்தன. நாம் தற்காலத்தில் செட்டி என்று வழங்குகிறபட்டம் சிரேஷ்டி என்ற வர்த்தக சங்கத் தலைவனின் பட்டமாகும். அச் சிரேஷ்டிகளின் மேம்பாட்டினாலும் அச்சங்கங்களின் அங்கத்தினர் முயற்சியினாலும் எத்துணையோ தர்மங்கள் செய்யப்பட்டன. ஆலயங்கள், மடங்கள், விக்கிரகங்கள், புத்தர் பிரதிமைகள் முதலியன வெகுபணச் செலவிட்டு ஏற்படுத்தப்பட்டன.

மகாஜனங்களின் கூட்டமும் செவ்வனே நடைபெற்று வந்தது என்று சில தானசாஸனங்கள் வெள்ளிடைமலை போல் இன்றைக்கும் விளக்கிக் காட்டுகின்றன.

குடிகளின் குடும்ப வாழ்க்கையைப்பற்றி விவரிக்குமிடத்து அவர்களின் உறைவிடம், உடை, உணவு, பாத்திரம், பண்டம் முதலியன நாகரிகத்தை விளக்குகின்றன. முகம் பார்க்கும் கண்ணாடிகள், கிரீடாகிருகங்களிலும் அந்தப்புரங்களிலும் காணப்பட்டன. சிவப்புக் கற்களமைத்த சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சூரியகாந்தக் கற்கள் அமைக்கப்பட்ட கிரகங்களிருந்தன. குடும்பத்திற்குதவியான பல வகைச் சாமான்கள் வேலைத்திறம் பெற்றவைகளாய்க் காணப்பட்டன. தண்ணீர் இறைப்பதற்குச் சிலவித சூட்சுமமான இயந்திரங்கள் உபயோகப் படுத்தப்பட்டன.

சலவைக் கற்களின்மேல் வரையப்பட்ட சித்திரங்களினால் அறைகள் அலங்கரிக்கப் பெற்றிருந்தன. ஆயுதங்கள் வெகு கூர்மையானவைகளாயும், பிரகாச முற்றவைகளாயுமிருந்தன. அவைகளைத் தீட்டுவதற்குச் சாணைக் கற்கள் உபயோகப் படுத்தப்பட்டன. எழுதுவதற்கு மஷி (ink) யும்

இருந்ததாம். எந்த வஸ்துவின்பேரில் எழுதினார்கள் என்பது மட்டும் தெரியவில்லை. ஓலையும் எழுத்தாணியும் இந்நாட்டில் வெகு நூற்றாண்டுகள்வரை எழுதுவதற்குச் சாதனங்களாயிருந்தன என்பதற்கு ஐயமில்லை.

அக்காலத்திய கல்வி முறைப்படி பள்ளிகளில் வித்தியைப் பயிற்சி செய்யப்பட்டது. பிராம்மணர்கள் வேதாப்பியாசம் செய்யும்பொருட்டும், வேதாங்கங்கள் கற்பதற்கும், உபநிஷத்துக்களை யுபதேசிப்பதற்கும் தானங்கள் செய்யப்பட்டிருந்தன. ஸ்மிருதிகள் (சட்டங்கள்) செவ்வனே ஆராய்ச்சி செய்யப்பட்டன. கணிதசாஸ்திரம் விருத்தி யடைந்து கொண்டிருந்தது. கணக்கு முறைகளும் வாய்ப்பாடுகளும் நீட்டல் அளவை முதலியவைகளும் வஸ்துக்களின் கனத்தை காட்டுவதற்கு உதவியான கருவிகளும் பல இருந்தன. அக்காலத்தில் குடிகளது ஆசார வியவகாரங்கள் வர்ணாசிரம தர்மங்களைப் பின்பற்றியே நின்றன. பில்ஹணர் இவ்விஷயத்தை வற்புறுத்திக்காட்டி யிருக்கின்றனர். பலமத வேறுபாடுகளும் அனுஷ்டானங்களும் பரவி நின்றன. ஆயினும், குடிகள் மதவிரோதமில்லாமல் வாழ்ந்தனர் என்பதற்கையமில்லை. எல்லாவிதமான மதங்களுக்கும் கோவில்களுக்கும் அரசன் தானம்செய்தனன். சைவம், வைஷ்ணவம், ஜைனம், பௌத்தம், முதலிய ஆசாரங்கள் சில இடங்களில் வழுவடைந்திருந்திருப்பினும் பொதுவாய் அந்தந்த மதம் நல்ல நிலைமையிலிருந்ததென உரைக்கப்படலாம். ஆனால், ஜைனமும் பௌத்தமும் க்ஷீணதசையை யடைந்திருந்தன என்று சொல்வதற்கு மிடமுண்டு. உற்சவாதிகள் வெகு விமர்சையாய் நடைபெற்றன.

இம்மாதிரி குடிமக்களின் சமாதானமும் ஐசுவரியமும் பெற்று நின்றது தக்ஷிணம்.

எல்லாவற்றிற்கும் மேலாய் நம்மனத்தில் நிறுத்திக் கொள்ளவேண்டியது மிதாக்ஷரம். இது ஒரு சட்டநூல், யாக்ஞவல்க ஸ்மிருதிக்கு விரிவுரையாகும். அதன் கிரந்த கர்த்தராகிய விக்ஞானேசுவரரின் சட்ட ஊக்கம், நீதி நெறிமுறை, புத்தி நுட்பம், முதலியன இன்றைக்கும் அறிவாளிகளின் மனத்துக்கு விருந்துகளாம். அவர் விக்கிரமாதித்தனைப்பற்றிப்புகழ்வதாவது "இவ்வுலகில் கல்யாண புரத்தைப்போல் ஒரு நகரமும் விக்கிரமாதித்தனைப்போல் ஒரு அரசனும் எக்காலத்திலும் இருந்ததில்லை. இனியும் இருக்கப் போவதில்லை" என்பதே. ராஷ்டிர கூடர்கள், கதம்பர்கள், யாதவர்கள், ஹொய்ஸாலர்கள், காங்கர்கள், கலாசுரிகள் ஆகிய ராஜபுத்திர மன்னர்களும் சளுக்கியர்களுக்கு அடங்கி வாழ்ந்திருந்தனர் என்பதும் தெரிகின்றது. விக்கிரமாதித்தனுக்குப் பிறகு சில ஆண்டுகளுக்குள் தக்ஷிணத்தின் வடபாகம் தேவகிரி யாதவர்களாலும், தென்பாகம் ஹொய்ஸாலர்களாலும் (பன்னிரண்டாவது நூற்றாண்டில்) பாகம்செய்து கொள்ளப்பட்டன.

கலாசுரிகள்.

தக்ஷிணத்தில் வசித்த கலாசுரிகளின் காலத்தில் முக்கியமாய்க் கவனிக்கக்கூடிய விஷயம் லிங்காயத்துக்கள் என்கிற ஒரு மதக்கோட்பாட்டினரின் உற்பத்தியாகும். அது பிஜ்ஜாலன் என்கிற மன்னனால் போஷிக்கப்பட்டது. அதன் வரலாறுகள் பஸவ புராணத்திலும் சென்ன பஸவ புராணத்திலும் காணப்படுகின்றன. தற்காலத்தில் இந்த மதஸ்தர்கள் மைசூர், பெல்காம், தார்வார், பீஜபூர், கோஹலாபூர், முதலிய இடங்களில் அதிகமாய்ப் பரவி நிற்கின்றனர்.

ஆதியிலிம்மதத்தைக் கிளப்பியவர் பஸவர், அவருக்குப்பின் சென்ன பஸவர். அவர்களைப்பின்பற்றிய குருமார்

கள் ஜங்கமர்கள் எனப்படுவார். அவர்கள் மதத்தைக் கைப் பற்றினவர்கள் லிங்காயத்துக்கள். அவர்களுக்குத் தெய்வம் சிவன்தான். ஆனால், தாங்கள் வீரசைவர்கள் என்று சொல்கின்றனர். ஏனெனின் அவர்கள் சிவனைத் தவிர வேறு தெய்வத்தைக் கண்ணெடுத்தும் பாரார். லிங்கமும் நந்தியும் அவர்களுக்கு முக்கிய அங்கங்களாகும். ஆதலால், அவர்களை லிங்கதாரிகள் என்றும் சொல்வதுண்டு. அவர்களது ஆதிகுரு பிராம்மணன் என்று கூறப்படுவதுண்டு. ஆனால், அவர் பிராம்மண துவேஷியாம். பிராம்மணர்களது ஆசாரங்கள் அவருக்குச் சரியெனத் தோன்றவில்லையாம். அவர் பூணூல் சடங்கு (உபநயனம்) செய்துகொள்ள மாட்டேனென்று எட்டாவது வயதில் மறுத்து விட்டனராம். சைவ சமய நெறிகளை மட்டில் பின்பற்றினராம். ஆதலால், இக்காலத்தும் சில லிங்கதாரிகள் பிராம்மணன் நின்ற இடத்தையும் சுத்திசெய்துவிட்டே மறுகாரியம் பார்க்கின்றனர்.

பஸவருடைய மாமன், பிஜ்ஜாலமன்னனுக்கு மந்திரியாயிருந்தவன். அவன் தனது குமாரத்தியைப் பஸவனுக்கு மணம் புரிவித்தான். பஸவனேவெனின் எக்காலத்தும் சைவ நூல்களை யாராய்ச்சி செய்துகொண்டு பிராம்மண ஆசாரங்களை வெறுத்துப் பறையறைந்து நின்றமையால் பிராம்மணர்கள் அவருக்கு இடையூறுகள் செய்தனர். ஆதலால், அவர் ஊரைவிட்டோடித் தனிமையாய்த் தங்கி சிவபூஜை செய்து கொண்டிருந்தனர்.

சில ஆண்டுகள் சென்ற பின்னர் பிஜ்ஜாலன் மந்திரி இறந்துவிட்டபடியால், பஸவரை அரசன் தருவித்து அவருக்கு மந்திரிஸ்தானத்தை யளித்தான். ஆனால், பஸவன், ராஜ்யத்தின் தனத்தை ஜைனர்களுக்கு விரோதமாயும்

ஜங்கமர்களுக்குச் சகாயமாயும் செலவிட்ட படியால், அவருக்கும் பிஜ்ஜாலனுக்கும் விரோதம் ஏற்பட்டது. பஸவரும் சென்ன பஸவரும் ஊரைவிட்டோடலாயினர். பிஜ்ஜாலன் கொலை செய்யப்பட்டான். தேசத்தில் கலகம் நேரிட்டது. கல்யாணபுரம் பாழடைந்தது. சாளுக்கியர்களால் வெல்லப்பட்டது. பிறகு சுமார் கி. பி. 1183-ல் ஹொய்ஸாலர்களாலும் வெல்லப்பட்டது.

கலாசுரிகளுள் பெரும்பாலோர் சங்கீதத்திலும் நிருத்தத்திலும் பிரஸித்தி பெற்றவர்கள். இராணிகளும் தர்ப்பார்களில் பாடினார்களாம், நர்த்தனஞ் செய்தார்களாம். அரசர்கள் சங்கீத ஞானம் செவ்வனே பெற்றவர்களாயிருந்தனர். இம்மாதிரியே ஹொய்ஸாலர்களும் ஸங்கீத பிரியர்களாயிருந்தனர்.

காகதீயர்கள்.

காகதீயர்கள் என்பவர்கள் ஆந்திரர்களுக்குப் பின் தெலுங்கு நாடுகளுள் தெலுங்கானு என்று சொல்லப்படும் *உவாரங்கல் என்ற ராஜ்யத்தில் வாழ்ந்தவர்கள். இதற்கு வடக்கில் கலிங்கர்களும், மேற்கில் (தேவகிரி) யாதவர்களும், தெற்கில் (துவார ஸமுத்திர) ஹொய்ஸாலர்களும் அரசு செலுத்தி வந்தனர். காகதீயர்களைப் பற்றிய விருத்தாந்தம் ஹனுமகொண்டா என்கிற மலையின்பேரில் விளங்காநிற்கும் ஒரு கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் செதுக்கப்பட்டிருக்கும் ஒரு வடமொழிச் சாசனத்தில் காணப்படலாம்.

* இது ஒரு கல்லால் சூழப்பட்ட மதிலையுடைய பட்டணம் என்று பொருள்தரக்கூடிய ஏகசிலாநகரம் என்றும் அது கணபதி தேவனால் ஏற்பட்ட நகரம் என்றும் கூறப்படுகின்றது. வாரங்கல் என்பது ஒருங்கல்லு என்பதன் சிதைவாகும்.

அது கி. பி. 1162-ல் ருத்திர தேவனால் கட்டப்பட்டதென்றும் செல்லப்படுகின்றது.

காகதீயர்கள் சூரிய வம்சத்தைச் சார்ந்தவர்களெனக் கூறப்படுகின்றனர். ரகு வம்சத்தைச் சார்ந்தவர்களின் பெயர்களான பகீரதன், இக்ஷுவாகு முதலியன அடிக்கடி காணப்படுகின்றன. ஆனால் நெல்லூர் முதலிய இடங்களில் காணப்படும் சாஸனங்களால் அவர்கள் க்ஷத்திரியர்கள் அல்ல என்றும் சூத்திரர்கள் என்றும் ஏற்படுகின்றனர்.

காகதீய மன்னர்களுள் ஒருவனாகிய பிரதாபருத்திரன் அரசுக்குத் தக்கவயது வாராதவனா (மைனரா) யிருந்த காலத்தில் அவனது பாட்டியாராகிய ருத்திராம்பா என்பவள் செங்கோல் செலுத்தினள். அம்மாதின் அரசியலைப் பற்றி மார்கோபோலோ என்கிற மேனாட்டுப் பிரயாணியும் புகழ்ந்திருக்கின்றனர். பிரதாபருத்திரனுக்குத் தகுந்த வயது வந்தபிறகு ராஜ்யம் செய்தகாலத்தில் முஸ்லிம்களுடைய படையெடுப்புக்கள் அதிகரிக்கலாயின. கி. பி. 1294 முதல் 1323 வரை அடிக்கடி தக்ஷிணம் தாக்கப்பட்டது. வாரங்கல் பிடிக்கப்பட்டது. காகதீய மன்னர் க்ஷீண தசை பெற்றனர். பிறகு, வாரங்கல், சிலகாலம் டெல்லி பாதுஷாவுக்கும், சிலகாலம் பஹாமனி சுல்தானுக்கும், சில காலம் விஜயநகர ராஜாவுக்கும் உள்ளடங்கியே காலம் தள்ளலாயிற்று. அது பிற்காலங்களில் சிறு சிறு ஜில்லாக்களாகப் பிரிக்கப்படலாயிற்று. அவைகளுள் ஒன்றுதான் தற்காலத்திய குண்டூர் (கொண்டவீர்). நெல்லூரும் மற்றொன்றாகும். இப்பாகங்களில் ரெட்டிகளது ஆட்சி பின்னர் ஏற்பட்டது.


நமது
பரதகண்டம்
மஹாராஷ்டர
ராஜ்யம்
தேசம்
சாந்தூர்
நாஸிகம்
கோ தா வரி நதி
கோலகோண்டா
பிஜபுரம்
கோபால்
கோவா
பல்லாரி
வடபெண்ணை
அங்கோலா
கோலார்
பங்களூர்
மைஸுர்
தஞ்சாவூர்
அரபிக்கடல்
வங்காளக்குடாக்கடல்
சமுத்திரம்
சிவாஜிபிதரார்ஜித
ஜஹாகிர்
சிவாஜி ஸ்வயார்ஜிதம்
மஹாராஷ்டரபிராந்தம்

அத்தியாயம் :—2.

மஹாராஷ்டரர்கள்.

முதல் சருக்கம்.

கால நிலைமை.

தக்ஷிணாத்தின் மேற்குப் பாகத்திலிருக்கும் அஸ்த கிரிக்கும் அராபிக் கடலுக்கும் இடையிலுள்ள கோங்கணம் என்கிற நாடு பண்டைக் காலம் முதல் ராஷ்டரர்கள் என்கிற இனத்தாருக்குரிய மலைநாட்டுப் பிரதேசமாகும். இராமாயணத்தினின்றும் தெரிந்து கொள்ளக் கூடியமட்டில் தண்டகாரண்யம் என்று சொல்லப்படுவதே மஹாராஷ்டரம் என்று ஏற்படு கின்றது. மஹாராஷ்டர நாட்டிலுள்ள பிராம்மணர்கள் செய்துகொள்ளும் ஸங்கல்பத்தில் "தண்டகாரண்ய தேசத்தில்" என்று கூறப்படுகின்றது. மேலும் ராமர் தங்கி யிருந்த பஞ்சவடி என்று குறிப்பிடப்படக்கூடிய நாசிகம் இந்தப் பிரதேசத்தில்தானுள்ளது. இந்த நாடு ஆரியர் களால் ஆக்கிரமிக்கப்பட்டதுதான் என்பதற்கு ஐயமில்லை. ஆனால், தற்காலத்திலுள்ள மஹாராஷ்டரர்கள் எனப்படு வோர் ஸிதியர் அல்லது ஸ்குதியர் எனப்படும் தார்த்தார் தேசத்தவர்களின் வம்சஸ்தர்கள் எனப்படுகின்றனர். அவர் கள் கலப்பு ஜாதியார்கள் என்றும் கணக்கிடப் பட்டுக் கின்றனர்.

மஹாராஷ்டரம் என்கிறமொழி மஹாரராஷ்டரம் என்பதன் சிதைவு என்பாருமுளர். அவ்வாறாயின்

மஹாார் என்பதன் பொருள் பறையர். ஆகையால், பறையர் ராஜ்யம் மஹாராஷ்டர ராஜ்யம் என்பது ஒப்புக்கொள்ளத் தக்கதா என்கிற ஸந்தேகம் ஏற்படுகின்றது. நிற்க; இயற் கையமைப்பு சீதோஷ்ணஸ்திதி முதலிய குணங்களினால் கொங்கணத்தில் வசித்த குடிகள் ஐரோப்பாவிலுள்ள *ஸ்விஸ் ஜனங்களைப்போல் சரீரதிரடமும் ஆரோக்கியமும் பெற்றவர்களாயிருந்தனர். உழைப்பிலும் விடா முயற்சி யிலும் சுருசுருப்பிலும் சிறந்தவர்கள். தேசாபிமானம் அவர்களுக்கு உடன் பிறந்தது. அவர்களுடைய சமூக வாழ்க்கையில் யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் சமபாவத்துடன் சமாதானமாய் வாழ்ந்திருந்தனர். கி. பி. 7-வது நூற்றாண்டில் சுற்று பிரயாணஞ் செய்த சீனயாத் திரைக்காரர்களுள் ஒருவர் "அவர்கள் கம்பீர குணமுள்ள வர்கள். யுத்த வீரர்கள். செய்நன்றி பாராட்டுகிறவர்கள். ஆனால், விரோதிகளைப் பழிக்குப்பழி வாங்குந் தன்மை யோர்." என்றுரைத்திருக்கின்றனர்.

தக்ஷிணத்தின் மத்திய பாகங்களிலும் அவர்களுடைய தேசம் பரந்து நின்றது. கி. பி. பதினான்காவது நூற்றாண் டில் முஸல்மான்கள் தக்ஷிணத்தை எதிர்த்துத் தாக்கின வரை அவர்களுக்கு யாதொரு குறைவின்றிருந்தது. ஆனால், அலாவுத்தீன், மாலிக்காபூர், முதலியவர்களின் சைன்னியம் மேல் மேல் தக்ஷிணத்தை அடைந்த காலத்தில் அவர்கள் மகாராஷ்டரர்களால் தடுக்கப்படக் கூடவில்லை. ஆயினும், தேசாபிமானம் அவர்களுடைய அந்தரங்கத்தில் புகைந்து கொண்டிருந்தது. இம்மாதிரி சில நூற்றாண்டுகள்

*உலக சரித்திரம் XVI அத்தியாயம், ரூ. ஷை. வே. சகோதரர் கள், தபாற் பெட்டி 408, திருவல்லிக்கேணி. விலை ரூ. 1-4-0.

சென்றன. அவைகளுக் கிடையில் முஸ்லிம் சைன்னியத்தில் மகாராஷ்டரர்கள் உத்தியோகம் பெறலாயினர். உத்தியோகத்தைச் செலுத்துவதில் ஊக்கமும் விடா முயற்சியும் உள்ளவர்களாயிருந்தனர். அதனால் பலர் உயர்ந்த பதவிகளை யடைந்து வந்தனர். தங்களது சூரத்தனத்தின் பயனாய் ஜாஹ்கீர்களைப்பெற்று சில குடும்பங்கள் அதிக அந்தஸ்து அடைந்திருந்தன.

இவ்வாறு மேன்மையடைந்த குடும்பங்களுள் பான்ஸ்லே குடும்பம் ஒன்று. கி. பி. பதினேழாவது நூற்றாண்டில் கீர்த்திபெற்ற ஷஹாஜி பான்ஸ்லே என்பானுக்கு சிவாஜி என்கிற ஒரு அருமைப் புதல்வன் பிறந்தான். சிவாஜி பிறந்த காலம் (1627 எப்பிரல்) முதல் ஷஹாஜி தன் புதல்வனையும் மனைவியையும் தானே கவனிக்காமல் தனது ஜஹாகீரை மேன் பார்வை செய்துவந்த தாதோஜி கோண்டதேவ் என்கிற பிராம்மணனுடைய அதிகாரத்தில் விட்டுவிட்டுத் தனக்குப் பிரியமுள்ள வேறொரு மனைவியுடனும் அவளுடைய புத்திரனுடனும் தென்னாடுகளில் நடந்த யுத்தங்களில் தளகர்த்தனாக வாழ்ந்து கொண்டிருந்தான். ஆதலால், அனேக விஷயங்களில் சிறு பிராயம் முதல் சிவாஜி சுவயேச்சையுடையவனாய்ப் பெருகலாயினன். அவனுக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கப்பட்டதோ இல்லையோ என்கிற சந்தேகம் இன்னும் தீரவில்லை.

வித்தியை என்பது எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வதுதான் எனின் அவனுக்கு அது ஏற்பட்டிருக்க இடமில்லை. ஆனால், யுத்தப் பயிற்சியும் உலக ஞானமும் கல்வி எனின் அவ்விஷயங்களில் இருபது வயதுக்குள் அவனுக்கு ஏற்பட்ட தேர்ச்சி ஆச்சரியகரமானது. குதிரை சவாரியிலாவது

அக்காலத்திய ஆயுதங்களிலாவது அவனை வெல்லவல்லவர் எவரும் இருந்திலர். பரதகண்டத்தின் பூர்வீக சரித்திர ஆதாரமான இதிகாசங்களின் உண்மையான கருத்து அவனுக்குத் தெரிந்திருந்தது. பூர்வகாலத்திய அரசியல்களும் பரதகண்டத்தின் நீதி நியாயங்களும் அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிகளாய் நின்றன. இவைகளை யெல்லாம் அவன் எவ்வாறு தெரிந்துகொண்டனன் என்பதை இதர நாட்டார்கள் ஊகிக்க முடியாது. ஆனல், பாரதமக்களுக்குத் தெரிந்தவிஷயமே. அது பின்வருமாறு:—

முற்காலங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் இராமாயணம், மகாபாரதம், புராணம் முதலியவைகள் தெருத் திண்ணைகளிலும் கோவில்களிலும் குளக்கரைகளிலும் ஆற்றோரங்களிலும் விவாக காலங்களிலும் உற்சவ சமயங்களிலும் வேறெந்த விசேஷ சந்தர்ப்பங்களிலும் பிராம்மணர்களால் பாராயணஞ் செய்யப்பட்டுவந்தன. அடிக்கடி அவைகளைப்பற்றிய பிரசங்கங்கள் நிகழ்ந்தன. அவைகளின் பொருள் தேசீயப் பாஷைகளில் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் நாடகங்களாயினும் தெருக் கூத்துக்களாயினும் வீரர்களுடைய சரித்திரங்கள்தான் ஜனங்களுக்குப் பிரியமானவைகளா யிருந்தன.

தவிர, ஒவ்வொரு வீட்டிலும் கிழவர்கள் குழந்தைகளைத் தங்கள் மடியிலும் பக்கத்திலும் வைத்துக்கொண்டு அவர்களுக்குப் புண்ணிய சரித்திரங்களைச் சொல்லுவது தான் அவர்களுடைய காலப் போக்குக்குரிய தர்மமாயிருந்தது. குழைந்தைகள்குடித்த தாய்ப்பாலிலும் வீரபுருஷர்களின் சரித்திரம் ஊறியிருந்தது. தொட்டில் தாலாட்டுப் பாட்டுகளும் மகாபுருஷர்களின் பெருமையையே கூறிக் குழந்

தைகளை உறங்கச்செய்தன. நிற்க; இந்நாட்டில் ஒரு மனிதன் வாழ்க்கையென்பது இவ்வுலக வாழ்க்கையை மட்டில் பற்றிய தன்று; மறுவுலகத்தையும் முக்கிய நோக்கமாய்க் கொண்டது. பாரத மக்களுக்குத் தெய்வம் என்பது தனி நிலைமையில் பரலோகத்தில் வீற்றிருக்கும் பரமண்டலத்துப் பிதா மட்டில் அல்ல. ஆனால், எக்காலத்திலும் எவ்விடத்திலும் "அங்கிங்கெனுதபடி" மக்களுடன் கூடி பிரத்தியக்ஷமாயும் மறைவாயும் நிறைந்து நிற்கும் பரம் பொருள் கடவுள். "அவனன்றியோரணுவும் அசையாது." ஆனபடியால் உலகில் அற்புதச் செயல்களை நடத்துகின்றவர்கள் எல்லோரும் பிரத்தியக்ஷமாய் தேவாம்சம் பெற்றவர்கள். ஆதலால் ராமன், கிருஷ்ணன், ராமகிருஷ்ணன் முதலியவர்கள் அவதார புருஷர்கள். அவர்கள் எக்குடியில் பிறந்திருப்பினும் எவ்வர்ணத்தோராயினும் பூஜிக்கத்தக்கவர். அவர்களுடைய சரித்திரம் சாதாரண மனுஷியர்களுக்கு வழிகாட்டியாய் நிற்கின்றது. அதனால் அது பாரத மக்களுக்குத் தெய்வீக சரித்திரமாகும். அதின்பால் செலுத்தப்படும் மனது புண்ணியத்திற்குப் பாத்திர மாவதுமன்றி இவ்வுலகில் தேசஸேவை, சமூக ஊழியம் முதலிய நற்றொழில்களுக்கும் இடங்கொடுக்கின்றது.

நிற்க; இக்கண்டத்தில் பிறந்த பல்லாயிரம் மகாத்மாக்களும் சாதுக்களும் தெய்வீக விஷயங்களையும் ராஜீய விஷயங்களையும் கலந்துகலந்தே கீர்த்தனங்களாகவும் சுலோகங்களாகவும் பாடல்களாகவும் இயற்றி அவைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தனர். பஜனைகளும் நர்த்தனங்களும் பிரதி தினத்திலும் நடைபெறுவது வழக்கம். இவைகள் எக்காலமும் சாதாரணமாய் எல்லோருடைய காதிலும் பட்டுக் கொண்டேயிருந்தன. ஆனால், சிறு பிராயத்தினின்றே மக்கள்

தெய்வபக்தியில் ஆழ்ந்து கிடப்பது இயல்பே. 'தெய்வ மிகமேல்', 'அறஞ்செயவிரும்பு', என்ற மகாவாக்கியங்களே அரிச்சுவடிகளில் காணப்பட்டனவே யன்றி "உன்னைத்தவிர இதரர் ஹீதன்ஸ் (Heathens) புறச்சமயிகள்" "தனக்கு மிஞ்சினுல் தர்மம்" (Charity begins at home) என்பவை காணப்படவில்லை. ஆதலால் சிவாஜியின் மன நிலைமை ஆதிமுதல் தெய்வபக்திக்கும் க்ஷத்திரிய தர்மத்துக்கும் ஈடுபட்டு விட்டது. ஆதலால்தான் *பிரமரகீட நியாயத்தினுல் இறுதியில் சிவாஜியும் அவதார புருஷனுய்க் கொண்டாடப் படலானுன் போலும். இதை மேனுட்டார்களும் அவர் மனப்பாங் குடையவர்களும் அன்னிய மதஸ்தர்களும் ஒப்புக்கொள்வது கடினம். ஆயினும் அதுதான் ஆரியதர்மத்தின் கொள்கை. சிவாஜியினுடைய ஸம காலத்திய இதர சிறுவர்களைக் காட்டிலும் மஹா மேதாவியானபடியால் தான் தெரிந்துகொண்ட விஷயத்தைத் தைரியமாய் நடத்திக்காட்டவும் துணிவு பெற்றிருந்தான்.

மேலும் அவனுடைய மனப்பாங்குக்கும் அவனுக்குப் போஷகனுகிய தாதோஜியின் மனப்பாங்குக்கும் அடிக்கடி வித்தியாசம் தோன்றலாயிற்று. ஏனெனின் தாதோஜி சாமானிய தர்மத்தில் ஒழுங்காய் நின்றவன். அஃதாவது தனது ஜீவனத்திற்கு வேண்டிய முறைமையைப் பின் பற்றியவன். தன் காரியத்திற்கு விரோதம் ஒன்றும் வாராத

---

*பிரமரம்=வண்டு, கீடம்=புழு, புழுக்களை வண்டுகள் தம் கூட்டில் அடைத்து ரீங்காரம் செய்வதனுல் அப் புழுக்களும் வண்டுகளாய் மாறிவிடுகின்றன என்பது வேதாந்த சாஸ்திரத்தின் உபமானம். ஒருவன் தான் எதைச் சிந்திக்கிருனே அதுவாகவே ஆய்விடுகிருன் என்பது கருத்தாகும்.

படி கடமையைச் செலுத்தினவன். தனக்குச் சம்பந்தப் பட்டாலன்றி ஊரிலுள்ளவர்களைப் பற்றிய கவலை அவனுக் கில்லை. மஹாராஷ்டரர்கள் அன்னிய நாட்டார்களது ஆட்சிக் குட்பட்டிருந்தனரே என்கிற கவலை அவனுக்குக் கிடை யாது. "ராமனாண்டாலென்ன? ராவணனாண்டாலென்ன?" என்கிற பழமொழியைப் பின்பற்றுகின்றவர்களுக்குத் தேச ஊழியம், ஊராருக்குழைத்தல், தேசாபிமானத்தை வளர்த்தல், சுயநலம் பாராட்டாமை ஆகிய உயர்ந்த கருத்துக்கள் அவர்களுடைய இருதயத்தில் நுழையா. ஆதலால் சிவாஜியை யடிக்கடி தாதோஜி கண்டித்துத் தனக்குத் தோன்றிய நற்போதனைகளைச் செய்வது வழக்கம். புதிய புதிய எண்ணங்களைக்கொண்டு பழைய வழிகளைத் திருத்தஞ் செய்யவேண்டும் என்பது ஆபத்துக்கிடமென் றும் முன்னோர்கள் செய்ததையே தொடர்ந்து கொண் டிருக்கவேண்டுமென்றும் உலகத்தில் மேன்மைதரக்கூடிய செல்வத்தையும் அந்தஸ்தையும் கவனிக்கவேண்டும் என் றும் போதனைகள் செய்வது வழக்கம். அவைகளெல்லாம் விசேஷ தர்மத்தைக் கைக்கொண்ட சிவாஜியின் காதில் நுழையவில்லை. அவன் மனத்தினுள் குடிகொண்டிருந்தவை யாதெனின் அக்காலத்திய முஸல்மான்கள் மகாராஷ்டர தேசத்தை வென்றதும் சுவதேசிகளை யடிமையாக்கிக் கொண்டதும் அவர்களுடைய ஆரிய மதத்துக்கு விரோத மான இஸ்லாம் மதத்தை வற்புறுத்தியதும் தேவாலயங்களை அழித்ததும் ஆகியவைகளே. அவைகளினால் ஏற்பட்ட ஆரிய மதக்குறைவும் மகாராஷ்டர தர்மச்சிதைவும் அவன் உள்ளத் தில் கொதித்துக் கொண்டிருந்தன. தம் நாட்டைப் பிடித்துக்கொண்டிருந்த அன்னிய நாட்டுக் கிரஹணம் எக் காலம் விமோசனம் ஆகுமோ ? என்று ஏங்கி நின்றான்.

அக்காலத்தில் ஏற்கனவே துகாராம், ராமதாஸ் ஆகிய இருஸாதுக்களும் மதச் சீர்த்திருத்தம்செய்ய அவதரித் திருந்தனர். வடமொழியிலுள்ள வேதம், வேதாந்தம் தத்துவம் முதலிய நூல்களின் நுட்பமான கருத்துக்கள் சாதாரண ஜனங்களுக்கும் எளிதில் புலப்படுமாறு தேச பாஷையாகிய பிராகிருதத்தில் அவர்களால் புண்ணிய கீர்த்தன ரூபங்களாக வெளியிடப்பட்டிருந்தன. ஆரிய மதத்தின் உண்மைக்கருத்து எவருக்கும் எட்டக்கூடியதா யிருந்தது.

மேலும் பரதகண்டத்திய சாமான்னிய ஜனங்களுக்கு இஸ்லாமியர்களுடைய தெய்வபக்தியும் சமாதானக் கோட் பாடுகளும் புலப்படவில்லை. தத்துவ இஸ்லாத்துக்கு மாறு பாடாய் சாமான்னிய முஸ்லிம்கள் ஆசரித்துவந்த போர் களும் அவர்களுடைய மதப்பொருமையும் பல மதத்துவே ஷங்களுக்குக்காரணம் என்பதை அக்காலத்திய மன்னர்கள் உணரவில்லை. ஆரியர்களுடைய ஆசாரத்துக்கும் அவர் களுக்கு வேற்றுமைப்பட்ட முஸ்லிம்களுடைய ஆசாரத்துக் கும் முரண் ஏற்பட்டது. ஆனால் உண்மைப் பொருளாகிய பொதுக்கடவுள் என்பவருக்கு மத வித்தியாசம் கிடையா தென்பதை உண்மையாய் உணர்கின்றவர்கள் எந்த மதஸ்தர் களிலும் குறைவுதான் என்பது நிச்சயம். ஆதலால் எப் பொருளை அல்லாஹ் என்று முஸ்லிம்கள் கருதுகின்றனரோ அப்பொருளே விஷ்ணு என்று நினைத்த பெரியார் இரு மதஸ்தர்களுள்ளேயும் இருந்திருந்தனர். இக்கருத்தை வெளி யிட்டவர் கபீர்தாஸ். ஆனால் விக்கிரகாராதனை, கடவுளின் அவதாரம் முதலியவைகளை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளா விடினும் ஆரியர்களுள் ஸாதுக்கள் தமது கொள்கைகளையும் கைவிடாமல் முஸ்லிம் கொள்கைகளின் ஸாரத்தையும் கிர

இத்துக்கொண்டனர். யார் யார் எந்தெந்த தெய்வத்தை எவ்வாறெவ்வாறு வணங்குகின்றனரோ அவ்வாறவ்வாறே நின்று ஒரே கடவுள் ஜீவர்களுக்குக் கருணை புரிகின்றனர் என்பது ஆரியமத ஸித்தாந்தம். எனெனினும் சாமான்னிய ஜனங்களுக்குச் சாந்தமான உபதேசம் செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றதாதலால் இருமதஸ்தர்களும் இடையிடையே துவேஷம் பாராட்டி நின்றனர்.

முக்கியமாய் ஔரங்கஜீப் காலத்தில் மதக் கலகங்கள் அதிகமாயின. முஸ்லிம்களுக்குள்ளேயே ஏற்பட்டிருந்த ஸுன்னி ஷிய்யா முதலிய வித்தியாசங்களை அந்த மன்னன் பெருக்கிவிட்டனன். அதனால்தான் தக்ஷிணத்திலுள்ள பீஜபூர் அதில்ஷாஹி சுல்தானையும் கோலகுண்டா சுல்தானையும் எதிர்த்துத் தாக்கலாயினன். அவர்களை வென்று அந்த இரண்டு தேசங்களையும் தனது ராஜ்யத்திற்குள் சேர்த்துக்கொண்டான். அக்காலத்தில் அவ்விடங்களிலுள்ள முஸ்லிம்கள் கலகலத்துப் போய்விட்டனர். அவர்கள் பலகீனமடைந்திருந்த காலத்தில் மஹாராஷ்டரர்கள் தங்களுக்கு ஏற்பட்ட குறைகளை நீக்கி மஹாராஷ்டர தர்மத்தை மீண்டும் ஸ்தாபித்துக் கொள்ள முயற்சி செய்தனர். அம்முயற்சிக்குத் தலைவன் சிவாஜிதான்.

தக்ஷிணத்தின் காலஸ்திதி மாறிக்கொண்டிருக்கையில் கி.பி. 1647-ல் தாதோஜி இறந்துவிட்டான். அதுவரை சிவாஜியின் சாமர்த்தியத்தால் ஏற்கனவே அவனுக்கு ஒரு சிறு சைன்னியபலம் ஏற்பட்டிருந்தது. தன் பிதாவுக்குச் சொந்தமான ஜஹாகீர்களில் இருந்த தைரிய புருஷர்களான பலருக்குச் சிவாஜியே தலைவனாக நின்றிருந்தான். சில காலங்களில் அவன் தகப்பனாராகிய ஷஹாஜிக்குப் பதி

லாக சிவாஜியின் பெயரிலேயே சில உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. ஏனெனின் ஷஹாஜி தன்னுடைய சுல்தானுடைய யுத்தங்களில் திரிந்துகொண்டிருந்தான். நிற்க; சிவாஜி தன் முன்னோருக்குரியதாய் இருந்ததும் முஸ்லிம்களால் பிடித்துக்கொள்ளப்பட்டதும் ஆகிய பழைய ஜஹாகீரைக் கைப்பற்றிக்கொண்டிருந்தனன். ராயகட் (ராஜ்கர்) என்கிற இடத்தில் ஒரு கோட்டையும் கட்டிக்கொண்டிருந்தனன்.

மேலே குறித்த வண்ணம், தாதோஜி இறந்தவுடனும் தனக்குப பூரண சுவதந்திரம் கிடைத்தவுடனும் தனது ஜஹாகீர்களுக்குப் பக்கத்திலுள்ள தோரணு முதலிய அனேக கோட்டைகளைக் கைவசஞ் செய்து கொண்டான். ஒரு வருஷத்திற்குள் அவன் செய்த சாகச காரியங்கள் பீஜபூர் சுல்தானுக்கு எட்டிவிட்டன. மகன்செய்த குற்றத்திற்குத் தந்தையே பொருப்பாளி என்றெண்ணி ஸுல்தான் ஷஹாஜியைக் கைது செய்துவிட்டனன். அதைக்கேட்ட சிவாஜி தந்தையின் கதியை நோக்கிப் பலவித தந்திரங்களினுல் அவனைச் சிறையிலிருந்து மீட்டிவிட்டு ஐந்தாறு ஆண்டுகள் யாதொருவிதமான வெளிப்பகட்டின்றி தான் ஜயித்த இடங்களை ராஜதந்திர நீதிக்கிணங்கக் காப்பாற்றிக் கொள்ளலாயினன். சுத்த வீரனுகிய சிவாஜி கொஞ்சகாலம் அடங்கிநின்று பிறகு தமது கோரிக்கையை நிறைவேற்றத் தயங்கிநின்றது அவனுடைய ராஜதந்திரப் புகழ்ச்சிக்கு அஸ்திவாரம் ஆகும். சில சமயங்களில் மகாபலேசுவரத்திற்கு யாத்திரை செய்வதைப்போல் சென்று கொங்கண தேசத்தின் நிலைமையைக் கவனித்து நிற்பது வழக்கம். அவ்வாறு காலஞ் செல்லுங்கால் ஒரு தருணத்தில் கொங்கணத்தின் சில பாகத்தைக் கைப்பற்றி விட்டனன். இம்

மாதிரி செய்யுங்கால் பல யுத்தவீரர்களையும் தனது சைன்னியத்தில் சேர்த்துக் கொண்டனன். செல்வமும் விருத்தியாயிற்று. தனக்கு இஷ்ட தேவதையாகிய துளஜாபூர் பவானியம்மன் தனக்குச் சமீபத்திலேயே நிற்கும்படி அத்தெய்வத்திற்கு ஒரு கோவிலைக் கட்டி அதைச்சுற்றி பிரதாபகர் என்கிற அரண் ஒன்று கட்டிக்கொண்டான்.

இவ்வாறு அவனது முப்பதாவது ஆண்டினுள் சுமார் நாற்பது கோட்டைகளுக்கு எஜமானனாய் வாழ்ந்தனன். காலாட்படை குதிரைப்படை முதலியவைகள் ஒவ்வொன்றும் பதினாலாயிரத்திற்குமேல் பலப்பட்டுவிட்டன. தனது அதிகாரத்திற்குள்பட்ட பிராந்தியங்களை ஆட்சி செய்வதற்கு வேண்டிய அதிகாரவர்கத்தினரை ஏற்படுத்திக் கொண்டனன். அவைகளைப் பற்றி விரைவில் பேசுவாம்.

ஆனால் சிவாஜியின் பலம் பெருகப்பெருக அவனது ஜயங்கள் டெல்ஹி சக்கிரவர்த்தியாகிய ஔரங்கஜீப்பின் தர்பாருக்கு எட்டிவிட்டன. டெல்ஹி சக்கிரவர்த்தி தக்ஷிணத்தில் புரிந்த யுத்தம் முதற்கொண்டு (கி. பி. 1657) அச்சக்கிரவர்த்தியை ஆக்ரா (Agra) தர்பாரில் பார்த்த காலம் (1666) வரை நடந்த போர்களையும் யுத்த தந்திரங்களையும் பராக்கிரமச் செயல்களையும் பற்றி அனேக நூல்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவைகள் மகாராஷ்டர பாஷையில் காணக்கிடக்கின்றன. அவைகளை யாராய்ச்சி செய்த சரித்திரா சிரியர்களுடைய அபிப்பிராயங்களுள் சிலவற்றை இந்த அத்தியாயத்திற்கு ஆதாரமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம். நிற்க; மேற்குறிப் பிடப்பட்ட ஆக்ராவில் சிவாஜி சிறைப் படுத்தப் பட்ட பிறகு சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு தன் சுவதேசம் சேர்ந்ததும்

ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்டான். 1674ஹு ஜூன்மீ 6வ முதல் ஒரு புதிய சகாப்தம் ஏற்படுத்தப் பட்டது. அதன் பிறகு பல நாடுகளை வென்று மகாராஷ்டர ராஜ்யத்தை ஸ்தாபனஞ்செய்தான். அவன் கி. பி. 1680-ல் இறந்தவரை நடத்திய அற்புதங்கள் ஆச்சரியமான விருத்தாந்தங்களாகும். அவைகளை ஈண்டு விவரிப்பதற்கு இடமில்லை. ஏனெனின் நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது அவனால் ஏற்படுத்தப்பட்ட ஸ்வராஜ்ய முறையாகும்.

இரண்டாவது சருக்கம்.

சிவாஜியின் ஸ்வராஜ்யம்.

சிவாஜிக்குக் கிடைத்த பிதரார்ஜித ஜஹாகீர்களுள் பூனாவைச் சுற்றியிருந்த பிராந்தம் ஒன்று. மற்றொன்று மைசூரிலுள்ளது. இவைகளைத் தவிர சிவாஜியால் ஜயிக்கப் பட்ட ஜில்லாக்கள் சுமார் பதினைந்கு நின்றன. அவ்விடங் களில் சுமார் இருநூற்றெண்பது அரண்கள் கட்டப்பட்டிருந் தன. இவைகளையும் தவிர சிவாஜி சாம்ராஜ்யத்தைக் காட்டுகின்ற (28-வது பக்கம்) படத்தில் கண்டிருக்கிறபடி அக்காலத்திய மகாராஷ்டர தேசத்தின் விஸ்தீரணத்தில் அவனது அதிகாரம் சென்றிருந்தது.

தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட பாகங்களில் உள்ள பல கிராமங்களை ஒன்றுகூட்டி ஒரு மஹால் (இப்பொழுது தாலுகா) என்றும், இரண்டு மூன்று மஹால்களைச் சேர்த்து ஸுபா என்றும் பாகுபாடுகள் செய்தான். அவைகள் ஒவ் வொன்றுக்கும் தக்க அதிகாரிகள் நியமிக்கப் படலாயினர். எந்த உத்தியோகமும் ஒரு வம்ச பரம்பரையில் தங்கி நிற்கக்கூடாதென்று தீர்மானித்து உத்தியோகத்துக்குத்

தகுந்த மனிதனை நியமனம் செய்தான். அவன் காலத்திற்கு முந்தி உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஊதியத்திற்காக ஜஹாகீர்கள்தான் அளிக்கப்பட்டிருந்தன. அந்த ஏற்பாட்டினால் ராஜ்யத்திற்குப் பலவித குறைகள் நேரிட்டுவந்தன என்று ஊகித்துக்கொண்டு அரசாங்கத்தைச் சேர்ந்த எந்த உத்தியோகஸ்தனாயிருப்பினும் அவன் மாதச் சம்பளம்தான் பெறவேண்டும் என்கிற புதிய சீர்த்திருத்தம் தொடுத்தான். அக்காலங்களில் இது ஒரு நூதன முறையாயிருந்தது. சிவாஜி தனது ராஜ்யஸ்தாபனஞ் செய்வதற்கு முந்தியே அரசாங்கமுறையை இங்குமங்கும் ஆரம்பித்திருந்தான்.

அவன் மகாராஜா என்கிற பட்டத்துடன் ஸர்வாதிகாரியாய் வாழ்ந்தான். அதனால் அவனைக் கொடுங்கோன்மன்னன் என்று மேனாட்டார்கள் கூறுவதுண்டு. ஆனால் அவனுடைய ஸமகாலத்தில் இரண்டொரு சிறு நாடுகளைத் தவிர உலகமெங்கும் அம்மாதிரி அரசாட்சியே ஓங்கிநின்றது. ஆனால், இங்கிலாந்தில் குடிகள் அரசாங்கத்தில் தமக்கு அதிக உரிமை வேண்டுமென்று ஸ்டுவேர்ட் மன்னர்களுடன் போராடிக் கொண்டிருந்தனர் என்பது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத்தக்கது. நமது பரதகண்டத்தில் குடிகள் அவ்வித உரிமைக்குப் போராட இடமில்லை. ஏனெனின் சிவாஜி காலத்தில் அநேகமாய் ஒவ்வொரு அரசனும் ராமராஜ்யம் என்கிற "இறுதிக் கோள்கை"யைக் கைப்பற்றி வந்தனன். தொழிலாளர் போராட்டம் என்பதும் வேலையில்லாமல் திண்டாட்டம் என்பதும் முற்காலத்தில் இந்நாட்டில் இல்லை. ஏனெனின் குடிகளுள் பெரும்பான்மையோர் தத்தம் குலத்தொழிலைச் செவ்வனே புரிந்துகொண்டு ஜீவனஞ்செய்தகாலம்போக எஞ்சிய காலத்

தைத் தெய்வபக்தியிலும் பஜனைகளிலும் பாராயணங்களிலும் செலுத்தினர். மேலும் அக்காலத்திய வியாபார விசேஷமும் உள்நாட்டுத்தொழில்களின் மேன்மையும் விவசாய முறையும் உயர்ந்த நிலைமையிலிருந்தமையால் செல்வத்திற்குக் குறைவில்லை. மேனுடுகளைப்போல் போட்டி முறைகள் இந்நாட்டில் கிடையாது. உள்ளதைக்கொண்டு திருப்தியடைவது இயற்கை. பேராசை பிடித்து அலைந்தனரில்லை. க்ஷத்திரியர்கள் தவிர இதரர்கள் யுத்தத்தை நினைக்கவில்லை. அவர்கள் குடிகளைக் காப்பாற்றுவதில் ஜாக்கிரதையாயிருந்தனர். குடிகளும் தைரிய முள்ளவர்களாயிருந்தனர். ஆண்மை படைத்திருந்தனர். ஆதலால் குடிகள் சுகமே வாழ்ந்திருந்தனர்.

சிவாஜி கொடுங்கோன் மன்னனுயிருந்திருப்பின் தனக்கு அஷ்டபிரதான் என்கிற எட்டு மந்திரிக்குழாம் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்ததற்கு அவசியமிருந்திராது. அந்த மந்திரிகளுடைய கடமையும் அவரவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த நிலைமையும் அவர்களுக்கு இடப்பட்டிருந்த (*வடமொழிப்) பெயர்களிலேயே விளங்குகின்றன. முக்கிய பிரதான்—பேஷ்வா—.பந்த அமாத்தியன், பந்த ஸசிவன் என்கிற இரண்டு மந்திரிகளிடம் வரவுசெலவு கணக்கு நின்றது. அரசனுக்குப் பக்கத்துணையாய் நின்றவன் மந்திரி. அவர்கள் ஒவ்வொருவரும் சக்கிரவர்த்திக்கு உத்தரவாதிகளாய் நின்றனர். ராஜ்யங்களில் அதிகாரவர்க்கத்தினர் குடிகளுக்கு உத்தரவாதிகளாய் இருக்கவேண்டும் என்கிற எண்ணம் பதினேழாவது

* அக்காலத்தில் உத்தியோகத்தின் பெயர்கள் பாரஸீக பாஷையிலிருந்தன. அவைகளை வடமொழிப் பெயரால் மாற்றிவிட்டான் சிவாஜி மன்னன்.

நூற்ருண்டின் முறைமையல்ல வென்பதும் உண்மையை யுரைக்கவேண்டின் அம்முறை பத்தொன்பதாவது நூற்ருண்டின் முறைமை என்பதும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய விஷயங்கள். மேலும் குடிகளுக்கு உத்தரவாதிகளான மந்திரிகளை அரசன் நியமித்துக் கொள்ளும் முறைக்கு ஆதாரமான ஜனபிரதிநிதி தேர்ச்சி முறை பத்தொன்பதாவது நூற்ருண்டில் கி.பி. (1832) வரை பெருங்குழப்பத்தில் இருந்தது என்பது ஆங்கில நாட்டின் அரசாட்சி வெளிப்படுத்துகின்றது. இருபதாவது நூற்ருண்டில் நாகரிகமுள்ள பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ்வாழும் இந்நாட்டில் இன்றைக்கும் அம்முறையைக் காணேம். அம்முறை சிவாஜியின் காலத்தில் இக்கண்டத்தில் காணப்படவில்லை என்று அவனதரசாட்சியைக் குற்றஞ் சாட்டுவது சரித்திரத்திற்கு உடன்பாடற்றது.

மேலும் சிவாஜி மகாராஜன் தானே நேரில் குடிகளின் நன்மையைத் தேடினமையால் அதிகாரவர்க்கத்தினரின் கொடுமை யொன்றும் தோன்றவில்லை. அவன் காலத்திலும் பிராம்மணர்கள், பிரபுக்கள், சூத்திரர்கள், ஆகிய ஜாதிப்பொருமைகள் இருந்தன. உத்தியோக முறைமைகளில் அவைகளும் காணப்பட்டன. ஆனல் எந்தெந்த ஜாதியார்களுள் எந்தெந்தத் தொழிலுக்குரிய வேலைத் திறமை, கல்வி, குணம், முதலியவைகள் காணப்பட்டனவோ அவைகளை அங்கீகரித்துக் கொண்டமையால் வகுப்புவாரி பிரதிநிதித்துவப்பொருமைகள் தலைகாட்டவில்லை. குடிகள் ஜாதிவித்தியாசம் பாராட்டாமலிருக்குமாறு ராமதாஸ் துக்காராம் முதலிய ஸாதுக்கள் எத்துணையோ பொது ஜன ஊழியங்கள் செய்திருந்த போதிலும் தொன்றுதொட்டு உடன் பிறந்ததுபோல் நிலை பெற்றிருக்கும் மனே வித்தி

யாசம், ஆசார வித்தியாசம், நடைஉடை பாவனை வித்தியாசம், பரம்பரைத்தொழில் வித்தியாசம், பொருள் வித்தியாசம், அந்தஸ்து வித்தியாசம், உயர்வுதாழ்வு வித்தியாசம், "தான் முதல்" என்கிற அகம்பாவ வித்தியாசம் முதலிய பல்லாயிரம் மானிட இயற்கைக்குணங்கள் அக்காலத்திலும் இருந்தன. இக்காலத்திலும் இருக்கின்றன. எக்காலத்திலும் இருக்கும். ஆயினும் சிவாஜி சமரச பாவத்துடன்

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்
தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி"

என்கிற குறளடியைப் பின்பற்றி அரசுபுரிந்தான். அவனது ஆட்சியில் மஹாராஷ்டரர்களுள் ஏற்பட்டிருந்த பிராம்மணர்கள் முதலிய ஜாதிவித்தியாசம் நிலைநின்றிருந்த போதிலும் அவர்கள் எல்லோரும் அரசாங்க விஷயத்தில் சமமாய்ப் பாவிக்கப் பட்டிருந்தனர். அவனது ஆளுகைக் குட்பட்டிருந்த முஸ்லிம்களும் சுகமாய் வாழ்ந்திருந்தனர்.

மஹாராஷ்டரர்களைப்பற்றி இனி அடிக்கடி பிரஸ்தாபம் செய்ய நேரிடும். இப்பாகத்தை முடிக்குமுன்னர் அவர்களுடைய சரித்திர மூலாதாரங்களைப்பற்றிய ஒரு விஷயம் இவ்விடத்தில் குறிப்பிடப் படவேண்டிய தவசியம் என்று கருதுகின்றோம்.

முஸ்லிம்கள் ஒழுங்காய்ச் சரித்திரம் எழுதிவைக்குங் குணமுடையோரானதால் அவர்களால் குறிக்கப்பட்ட ஆதாரங்கள் நமக்கு எட்டியிருக்கின்றன. மேனாட்டார்களும் அவர்களுக்குத் தோன்றிய விஷயங்களைவரைந்து வைத்திருக்கின்றனர். மஹாராஷ்டரர்களால் கௌரவத்

துடன் காப்பாற்றி வைக்கப் பட்டிருக்கும் ஆதாரங்களையும் நாம் செவ்வனே பரிசோதித்துக் கொள்ளலாம்.

முதலில் கூறப்பட்ட ஆதாரங்களுள் பெரும்பான்மை யானவை மதத்துவேஷம் பெற்றவை. அவ்வாறே மஹாராஷ்டரர்களின் ஆதாரங்கள் ஸ்வராஜ்யப் பற்றுள்ளனவாய்க் காணப்படுகின்றன. மேனாட்டார்களின் வர்ணனைகளுல்பல கீழ் நாட்டுவிஷயங்களைப் பரிகாசஞ் செய்வதற்காக எழுதியவைபோல் தோன்றுகின்றன. ஏனெனின் நாம் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறபடி நமது நடை உடை பாவனைகளைத் தெரியாதவர்கள் நம்முடைய ஆசாரங்களின் உட்கருத்தை எவ்வாறு வெளியிடக்கூடும்? இக்கண்டத்தில் அனேக நூற்றுண்டுகள் சுவதேசிகளைப்போல் வாழ்ந்த முஸ்லிம்களும் ஆரியர்களும் ஒருவரை மற்றொருவர் முற்றிலும் தெரிந்து கொள்ளக்கூடவில்லை. ஏனெனின் மதப்பொருமை குறுக்கே நின்றுகொண்டிருந்தது. உதாகரணமாய்ப் பாருங்கள். சிவாஜி இறந்த தேதியைக்குறிப்பிடுவதற்காக ஏற்பட்ட ஒரு வசனத்தைக் கேளுங்கள். "காபிர் பா ஜஹான்னம் ரப்த்" என்ற இவ்வசனத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்துக்கும் ஒரு சங்கியை அல்லது எண் ஏற்பட்டிருக்கும் முறைப்படி கணக்கிட்டால் 1091 என்பது கிடைக்கின்றது. அது ஹிஜரி காலவரை முறையாகும் (மேனாட்டு முறைப்படி கி. பி. 1680). ஆனல் அதன் வெளிப்படையான பொருள் "மதமற்றவன் (காபிர்) நரகமடைந்தான்." இதனல் மதத்துவேஷம் நன்கு புலப்படுகின்றதல்லவா?

சிவாஜியை ஜன்மப்பகைவன் என்று நடத்தி அவனை "மலை எலி" என்றழைத்த ஔரங்கஜீப்பும் "சிவாஜி ஒரு உண்மையான தளகர்த்தன்; பெரிய யுத்தவீரன்; ரணதீரன்."

என்று உரைத்திருக்க மேனாட்டார்கள் அவனைக் கொள்ளைக் கூட்டக்காரரின் தலைவன் என்று நிர்ணயித்திருப்பது தவறாகும். மேலும் "சிவாஜி ஒரு பெரிய கலகக்காரன் என்று பறையறையப்படினும் தன்கையிலகப்பட்டவர்களைக் கௌரவமாய் நடத்தினான். அவனிடத்தில் இழிவான செயல்கள் ஒன்றும் காணப்படவில்லை. அவன் கையில் சிக்கிக்கொண்ட முஸ்லிம் பெண்மக்களும் குழந்தைகளும் மிக ஆதரவுடனும் கண்ணியத்துடனும் மரியாதை செய்யப்பட்டனர்" என்று ஒரு முஸ்லிம் சரித்திராசிரியர் கூறியிருக்கின்றார்.

சிவாஜி துரோக சிந்தனையுள்ள கலகக்காரன் என்று ஆங்கில சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். அவ்வாறாயின் சரித்திர நியாயஸ்தலத்தில் பல வீரர்களைப் பழிக்குப்பழி வாங்கலாம். மன்னன் ஜானிடம் மகாசாசனம் (Magna Charta) பெற்றவர்கள், மகாஜனசபையை (Parliament) ஸ்தாபித்த ஸைமன்டிமாண்டுபோர்ட், பிம், ஹாம்டன், கிராம்வேல், முதலியவர்கள் எல்லோரும் கலகக்காரர்களே. இம்மாதிரியான அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. இடலி தேசத்திய தேசாபிமானியாகிய மஜினி போன்றவர்களை என்னென்றுரைப்பது? இடலி தேசத்தை உத்தாரணம் செய்வதற்கு யுத்தவீரனான ஒரு கிரிபால்டி தோன்றினான். ராஜதந்திரத்தை நடத்துவதற்கு காவூர் என்பவன் கங்கணங் கட்டிக் கொண்டான். ராஜ்யத்தை வகிப்பதற்கு விக்டர் இமானுவேல் தயாராயிருந்தான். இம்மாதிரி நால்வர்கள் சேர்ந்தே ஒரு இடாலிய அரசைச்சென்ற நூற்றாண்டில் ஸ்தாபனஞ் செய்தார்கள். ஆனால், ஒரே சிவாஜி தேசாபிமானம், யுத்தப்பயிற்சி, ராஜ்யதந்திரம், செங்கோல் அரசு, ஆகிய யோக்கியதைகளைப் பெற்றிருந்தமையால் மஹாராஷ்டிர ராஜ்யமும் ஸ்வராஜ்யமும் தோன்

றின என்று பாரத சரித்திர சிகாமணிகளுள் ஒருவர் கூறுகின்றனர்.

சிவாஜியினிடத்தில் ஒரு அபூர்வமான குணந்தோன்றி யிருந்தது. அதை அன்னிய மதஸ்தர்கள் எவரும் நன்கு மதிப்பது கஷ்டசாத்தியம். ஆரியமதப் போக்குள்ளவர்கள் தான் அக்குணத்தைப்பாராட்டுவார். அஃதாவது "துறவறம்." ரகு வம்சத்தில் பிறந்த அரசர்களைப்பற்றிப் புகழ்ந்த காலத்தில் அவர்களது ஆயுளின் கடைப்பாகத்தில் சிம்மாசனத்தை விட்டுக் காட்டுக்குச் செல்வது வழக்கம் என்றுரைத் திருக்கின்றோம். அவ்வாறே ராஜ்யஸ்தாபனஞ் செய்த பிறகு துறவறம்பற்ற மூன்று முறைகள் முயன்றனன். ஆனால் அவனுடைய குருவாகிய ராமதாசும் மந்திரிவர்க்கங் களும் அவன் குடிகளுக்குச் செலுத்தவேண்டிய கடமைகள் பூர்த்தியாகவில்லை என்று அவனைத்தடுத்து ராஜ்யத்தை நடத்துமாறு வற்புறுத்தினார்கள். அதனால் அவனுடைய தெய்வபக்தி ஆரியமதத்திற்குரியது என்று விளங்குகின்றது. அவன் செய்த யுத்தங்கள் தேசசேவை செய்வதற்காகவே யன்றி தன்னுடைய பெருமைக்காக வல்ல என்பதைக் குறிக் கக்கூடிய உதாகரணங்கள் மஹாராஷ்டரர்களால் ஞாபகத் தில் வைக்கப்பட் டிருக்கின்றன.

அவன் யுத்தஜயம்பெற்ற காலங்களில் கருணையையே நிலைநாட்டினன். உலகசரித்திரத்தில் காணப்படுவதேபோல் நெஞ்சில் ஈரமில்லாமல் கொலைகள் செய்யவில்லை. குழந்தை களையும் கிழவர்களையும் வியாதிஸ்தர்களையும் ஸ்திரீகளையும் தேவாலயங்களையும் நாசமாக்கவில்லை. அம்மாதிரியான சுத்தவீரனை யாருடன் ஒப்பிடக்கூடும்?

சிவாஜி நெபோலியனுக்குச்சமமானவன் என்று சில சரித்திராசிரியர்கள் கூறுவது வழக்கம். இது காலவரை முறையைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்படின் தவறெனப்புலப் படும். ஆகையால் நெபோலியன் சரித்திரத்தில் அவன் சிவாஜிக்குச் சமானமானவன் என்று வரைவது சரியான முறையாகும். ஆதலால் சிவாஜி நிகரற்றவன் என்று நினைக் கும் மஹாராஷ்டரர்கள் அவனை அவதார புருஷன் எனப் போற்றி வருகின்றனர். அது தவறன்று.

மூன்றாவது சருக்கம்.

மதக்கிளர்ச்சிகள்.

ஔரங்கஜீப் அரசாட்சியில் மதக்கிளர்ச்சிகளின் கார ணத்தை முன்னிட்டு மஹாராஷ்டரர்களைப்போல் வேறு இயக்கங்களும் கலகங்களும் தோன்றின. ஆரியாவர்த்தத்தி லுள்ள மதுரை (Muttra) ஜில்லாவில் வசித்த வியவசாயி களான ஜாத் என்கிற ஜாதியார்கள் கோகுலன் என்கிற ஒரு தலைவனுக்கடங்கி அவ்விடத்திய முஸ்லிம் தளகர்த்தனைக் கொன்றுவிட்டார்கள். இது 1669-ல் நடந்தது. உடனே அது அடக்கப்பட்டுவிட்ட போதிலும் ஔரங்கஜீப் ஜீவ தசை (1707) வரை அடிக்கடி போராடிக்கொண்டிருந்தனர்.

நிற்க; 1672-ல் ஸத்நாமிகள் என்கிற ஆரியமதாபிமானக் கக்ஷிக்காரர்களின் கிளர்ச்சி ஒன்று தோன்றிற்று. அவர்கள் இரத்த வெறி பிடித்தவர்கள். அவர்களுடைய கூட்டத்தில் கலகப்பிரியர்களும் தோட்டிகளும் சக்கிலியர்களும் தச்சன் கருமான் முதலிய தொழிலாளிகளும் முக்கியமாய் சேர்ந்தி ருந்தனராம். தாங்கள் கடவுளின் உண்மையான நாமங் களை யுச்சரித்ததனால் மனிதனால் ஆக்கப்பட்ட ஆயுதங்கள்

ஒன்றும் தங்களை யண்டாதென்று நம்பினார்கள். ஆதலால் சுமார் ஐம்பதாயிரம் பெயர்கள் கூடிக்கொண்டு மொகலாய சைன்னியங்களை ஹிம்சை செய்து வந்தனர். ஔரங்க ஜீப்பும் குர் 'ஆனின் வாக்கியங்களைத் தன் கையால் எழுதிச் சிப்பாய்களின் கொடிகளில் சீட்டுக்கட்டிவிட்டான். இதனால் மதப்போர் விருத்தியாயிற்று.

மேலும் அக்காலத்தில் ஸீக் என்கிற ஜாதியார்கள் விருத்தியாய்க் கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தலைவரானதேக் பஹதூர் என்கிற ஒன்பதாவது குரு 'இஸ்லாம் மதத்தைத் தழுவ வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டனர். அவ்வாறு அவர் செய்யாமையால் ஔரங்கஜீப்பினால் அவர் சிறையிலடைக்கப் பட்டனர். அக்காலத்திய கதையொன் றுண்டு. அஃதாவது மொகல் சக்கிரவர்த்தியின் ஜனானாவைத் தேக் பஹதூர் எட்டிப் பார்த்த தாய்க் குற்றஞ் சாற்றப் பட்டவுடன் "நான்தங்கள் ஜனானாவைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால் அதன் பர்தாவை நீக்கி ராஜ்யத்தைச் சின்னாபின்ன மாக்குவதற்காக வந்து கொண்டிருக்கும் ஐரோப்பியர்களின் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்." என்றாராம். ஏனெனின் 1675க்குள் மேனாட்டார்களின் கிறிஸ்தவ ஆட்சி இந் நாட்டில் இங்குமங்கும் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது. இவ் வாறு பதிலளித்ததற்காக உடனே கொலை செய்யப்பட்டனர் (கி. பி. 1675). இதன் பயன் இயாதெனின் அந்த ஸீக் இனத்தார்களின் மதப்பொறாமை யதிகரித்தது. ஏனெனின், அந்த இனத்தார்கள் முக்கியமாய் ஆரியதர்மப் பற்றுள்ளவர்கள். ஆரியதர்மத்தை நிலை நிறுத்துவதற் காகவே பதினைந்தாவது நூற்றாண்டில் தோன்றிய நானக் என்கிற ஒரு தீர்க்கதர்சியின் சிஷியர்கள் அவர்கள். ஸீக்

என்கிற மொழிக்கே சிஷியர்கள் என்பது பொருள். கபீர் தாஸரைப்போல் ஆரிய தர்மத்தையும் இஸ்லாம் மார்க்கத்தையும் ஸமரஸப்படுத்தி ஜாதிதுவேஷத்தையும் மதத்துவேஷத்தையும் நீக்க முயற்சி செய்தவர். அதனால்தான் அக்பர் காலத்தில் வசித்த நான்காவது குருவுக்கு அமிருத ஸரஸ்ஸில் உள்ள அழகிய குளத்தையும் பொற்கோவிலையும் உடைய புலம் அச்சக்கிரவர்த்தியினால் அளிக்கப்பெற்றது. அது அன்றுமுதல் இன்றுவரை ஸீக் மதஸ்தர்களுக்குப் பரிசுத்தமான இடமாய் விளங்கா நிற்கின்றது. ஆயினும் காலப்போக்கில் நானக் அவர்களின் மதஸ்தாபனமானது தேசீயக்கிளர்ச்சியையும் பின்பற்றலாயிற்று. ஐந்தாவது குருவான அர்ஜுனன், ஜஹாங்கீர் ஆட்சியில் குஷ்ருவுக்கு உதவியாய் நின்றதனால் அவர் அபராதம் விதிக்கப்பட்டனர். அவர் அதைச் செலுத்த மறுத்தனர். அதனால் 1606ல் படுகொலைக் குட்படுத்தப் பட்டனர். அவர்காலத்தில் ஏற்பட்டதுதான் ஸீக் மதஸ்தர்களுக்கு ஆதாரமான "ஆதிகிரந்தம்" என்கிற அழியாவேதம்.

பிறகு ஆறாவது குருவான ஹர் கோவிந்த் என்பவரின் முக்கிய நோக்கம் யுத்த சம்பந்தமான பயிற்சியாக மாறிற்று. இதற்காக ஸீக்கர்களை ஒரே சகோதர பாவத்துக் குள்படும்படி செய்தனர். இம்முறை இஸ்லாமியர்களைப் பற்றிய தென்பதற்கு ஆக்ஷேபமில்லை. அதனால் மொகல் சக்கிரவர்த்திகளுக்கும் ஸீக்கர்களுக்கும் விரோதங்கள் ஏற்பட்டன. ஆனால் எல்லோருக்கும் மேலான பத்தாவது குரு கோவிந்த ஸிங் என்பவரால்தான் இப் பரதகண்டத்தில் முஸ்லிம் ஆட்சிக்குக் குறை ஏற்படலாயிற்று. ஏனெனின் ஸீக் இனத்தார்களுள் ஜாதி வித்தியாசத்தைப் போக்கடிப்பதற்கான வழிகளைத் தேடினர். சமூக வாழ்க்கையின்

சீர்திருத்தங்கள் செய்தனர். யுத்தத்தில் ஆவேசமும் தைரியமும் வீரியமும் தோன்றும்படியான யுக்திகளைச் செய்தனர். அன்றுமுதல் இன்றுவரை ஸீக்கர்கள் யுத்தத்தில் கீர்த்தி பெறுவதற்குக் காரணம் அவருடைய பெருமையே. அதனால் தான் அவர் இறந்த பிறகு குருபீடத்தில் யாதொரு மனிதனையும் ஏற்றுக் கொள்ளாமல் **ஆதிகிரந்தம்** என்கிற வேதத்தையே வைத்துப் பூசிக்கின்றனர் ஸீக் இனத்தார்கள். இவ்வினத்தார்களைப் பற்றி இனியும் பேசச் சமயம் வரும். இனி கி. பி. பதினாறுவது பதினேழாவது நூற்றாண்டுகளில் நமது பரதகண்டத்தில் மட்டில் மதக்கிளர்ச்சிகள் தோன்றவில்லை. அச்சமயங்களில் மேனாடுகளிலும் சமயக்கிளர்ச்சிகள் உற்பத்தியாய்ப் பெருகிக் கொண்டிருந்தன. கிறிஸ்தவ மதத்தில் வெளிப்படையான பாகுபாடுகளில்லை என்பது போய் இரண்டு விபாகங்கள் தொன்றின. ஏனெனின் கிறிஸ்தவ மதத்தில் பல துராசாரங்கள் புகுந்தன என்று அவைகளைக் களைய வேண்டி ஒரு சீர்திருத்தக்கக்ஷி புறப்பட்டது. அது "பிராடஸ்டண்டு" மதம் என்று தற்போது வியவகரிக்கப் படுகின்றது. பழையவழியில் அபிமானம் பெற்றவர்களுக்கு "காதோலிக்" என்று பெயர். சீர்திருத்தக் கக்ஷி தோன்றிய காலம் முதல் அதற்குள் பல கக்ஷிகள் தோன்றின. பியூரிடன்ஸ் (Puritans) இண்டிபெண்டண்ட்ஸ் (Independents) ஸெபரேடிஸ்ட்ஸ் (Separatists) நான் ஜூரர்ஸ் (non-jurors) ஆகியவைகள் சில உதாகரணங்களாகும். அவைகளால் ஏற்பட்ட அரசாங்க சட்டதிட்டங்களும், ராஜவம்ச மாறுபாடுகளும், சதியாலோசனைகளும், கொலைகளும், ராஜீயப்போர்களும், தேசீயப் போர்களும் ஹநுமார் வால்போல் வளர்ந்துக் கொண்டிருந்தன. "முப்பதாண்டு யுத்தம்," "ஹியுகினோ யுத்தம்,"

முதலிய வைகளுக்குக் குறைவேயில்லை. பிரான்சில் நான்காவது ஹென்ரி என்பவனுக்குச் சகாயமாய் நின்ற ஒரு ஸ்திரீயினுல் தோன்றிய மதப் பொருமைகள் அதிகமாயிருந்தன. ஔரங்கஜீப்புக்குச் சமகாலத்திய லூயிமன்னனின் மதக் கொடுமைகளைக் கூறவும் வேண்டுமோ!

ஆனுல் நமது பரதகண்டத்தில் மேற்கூறப்பட்ட ஜாத்துகள், ஸத்நாமிகள், ஸீக்கர்கள் முதலியவர்களின் மதக் கிளர்ச்சிகளும் மதாபிமானங்களும் தோன்றியிருந்தபோதிலும் மேனுடுகளைப்போல் படுகொலைகள் நடக்கவில்லை என்று சரித்திர ஆதாரங்களினுல் நிரூபிக்கக்கூடும். அக்காலத்தில் தோன்றிய பாரத மதகுருமார்கள் முஸ்லிம்களையும் பாரத மக்களையும் ஒருமைப்படுத்தவே முயன்றனர் என்பது அவர்களுடைய மதக்கோட்பாடுகளினுல் வெளியாகின்றது. மதத்திற்காகப் போருண்டாக்குவது பாரதமக்களுக்கு உடன் பிறந்த தர்மமல்ல.

நிற்க; மஹாராஷ்டரர்களின் தலைவனுகிய சிவாஜி அவனது சிறுபிராயத்திலிருந்து இறக்குந்தருவாய்வரை அவனுடைய இனத்தோரை அன்னிய இனத்தோர்களின் ஆட்சியினின்றும் நீக்கித் தன் இனத்தோர்களின் உதவியைக்கொண்டே ஆரியதர்மத்தைப் பின்பற்றி ராஜ்யம் புரிய வேண்டும் என்கிற தேசாபிமானம் கொண்டிருந்தான். ஒரு நாட்டில் அன்னியநாட்டார்களின் ஆட்சி நடைபெறுங் காலத்தில் உள்நாட்டு மதத்துவேஷம் ஒருபக்கம் நிற்க அன்னிய நாட்டு மதத்துவேஷமும் சேர்ந்துக் கொள்வதுமன்றி இனத்துவேஷம் வர்ணத்துவேஷம் முதலியவைகளும் தோன்றுகின்றன. ஒரு தேசத்துக்குடையவர்களே அத்தேசத்தின் அரசாங்கத்தை நடத்தினுல் ஜனநாயகம் ஏற்

படும் என்பது உலகசரித்திரத்தின் அனுபவமாகும். அதனுல் ஏற்படும் நன்மைகளும் துன்மைகளும் தம்முடைய கர்மங்களின் பயன்களெனவே கருதி, குடிகள் அவைகளை அனுபவிப்பது மக்களுக்கு இயற்கைக் குணம். நம்முடைய செயல்களால் ஏற்படும் நஷ்டத்தை யாதொரு மனக்குறைவின்றி மௌனமாய் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனுல் பிறரால் அணுவளவு நஷ்டம் ஏற்படினும் வியாஜ்ய வியவகாரம் தொடுக்கின்றோம். ஒரு வாயினுள் நுழையுங்கால் தலையிலிடித்தால் கைகளால் தலையை அழுத்திக்கொண்டு உட்காருகின்றோம். ஆனுல் பிறருடைய விரல் நம்பேரில் பட்டாலும் சச்சரவு தொடுக்கத் தயாராகின்றோம். பாரதமக்களுடைய ஆட்சியில் ஒரு முஸ்லிமுக்கு யாதானும் ஒரு குறைநேரிட்டால் அந்த ஆட்சியையே ஒழித்துவிட முயல்வதும் முஸ்லிம்களுடைய ஆட்சியில் ஒரு பாரதப்புதல்வனுக்கு யாதேனும் தீங்கு நேரிட்டால் அந்த ஆட்சியை அழித்துவிடவேண்டும் என்று முயலுவதும் இருவருக்கும் சகஜம். இக்காரணம் பற்றியே மஹாராஷ்டரர்கள் முஸ்லிம்களின் ஆட்சியில் தங்களுக்கு இடுக்கண்கள் விளைந்தன என்றும் தங்களுடைய ஆட்சியே தங்கள் நாட்டில் மீண்டும் நடைபெறவேண்டுமென்றும் ஆவல் கொண்டிருந்தனர். அக்காலத்தில் மஹாராஷ்டரர்கள் ஒருமைப் பாடடைந்து தங்களது ராஜ்யஸ்தாபனம்செய்ய யத்தனம் செய்ததை ஸ்வராஜ்ய முயற்சி எனப்பெருமை பாராட்டலாயினர்.

சிவாஜியினுல் வளர்க்கப்பட்ட ஸ்வராஜ்யக் கிளர்ச்சி மொகலாய சக்கிரவர்த்தியினுல் ராஜத்துரோகம் என்று கருதப்பட்டது. முஸ்லிம்கள் இந்நாட்டையே தாய்நாடாய் நினைத்து இதில் தங்கிவிட்டிருந்தபோதிலும் முஸ்லிம்களின் ஆட்சி ஆரியர்களால் வெறுக்கப்பட்டது. முக்கியமாய் ஔ

ரங்கஜீப் சக்கிரவர்த்தியினுடைய செயல்கள் அக்பரைப் போன்றவர்களுடைய தாராளச்சிந்தையின் நெறிபோலன்றி நடைபெற்றமையால் மதத்துவேஷம் அதிகரித்து. மேலும் முஸ்லிம் மதத்தவர்களுள்ளேயே பிளவுகள் ஏற்பட்டிருந்தன. ஔரங்கஜீப் பிடிவாதம் பெற்றஸுன்னி. அதனுல் இதரமுஸ்லிம்களுடைய கொள்கைகள் ஒழுங்கீனங்களாய்க் கருதப்பட்டன. இவ்வாறு அநேகவிதமான மதத்துவேஷங்கள் குடிகொண்டிருந்தபோதிலும் முஸ்லிம்கள் இந்நாட்டையடைந்த காலத்தில் காட்டிய கொடுமைகள் அநேகமாய்க் குறைந்துவிட்டன என்பதற்குப் பல முகாந்தரங்களுள்ளன. ஔரங்கஜீப் காலத்தில் இஸ்லாம் மதப்பற்றினுல் செய்யப்பட்ட வினைகள் முஸ்லிம்களுக்கும் பாரதமக்களுக்கும் பலவாறு அதிர்ப்தியை விளைத்தமையால் மொகல் அரசாட்சிக்குப் பல கினத்தை உண்டாக்கின. அக்காலத்தில் முஸ்லிம்களும் பாரதமக்களுடன் கலந்து கொண்டிருந்தனர் என்பது சரித்திரத்தினுல் விளங்குகின்றது. இவ்விரு இனத்தார்களும் ஒருவரையொருவர் நன்ருய்த் தெரிந்துகொண்டு வேற்றுமையற்று ஒன்று கூடுவதற்கிடையில் கிறிஸ்தவ மதமும் தோன்றலாயிற்று.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு நூற்ருண்டுகளுள் மதவித்தியாசங்களினுல் எழுந்த பொருமையைப் பெருக்கக்கூடிய வியாபாரப்போட்டிகளும் அழுக்காறுகளும் மேனுடுகளில் தோன்றலாயின. அக்கினிக்கு வாயுசகாயம் ஆயிற்று போலும். மேனுட்டார்கள் வியாபாரத்தை முன்னிட்டுக் கீழ்நாடுகளுக்குப் புதிய மார்க்கத்தைக் கண்டுகொள்ள நேரிட்டமையால் அவர்கள் சென்ற விடங்களுக்குத் தங்களுடைய மதப் போர்களையும் கப்பலேற்றிச் சுமந்து சென்றனர். நமது பரதகண்டத்துக்கு நூதனமார்க்கத்தைக்

கண்டுபிடித்த போர்த்துகீஸார் தங்களது ராஜ்ய ஸ்தாபனத்திற்குக் கிறிஸ்தவமத போதனையின் பிரசாரத்தையே அஸ்திவாரமென நினைத்துக்கொண்டிருந்தனர். ஆதலால் இக்கண்டத்தின் தெற்குப்பாகத்தில் மேற்குக் கடற்கரையோரத்தில் கிறிஸ்தவ ஆட்சியை உற்பத்தி செய்தனர். போர்த்துகீஸ் அரசாங்கத்தாரால் குடிமக்களையும் கிறிஸ்தவர்க ளாக்கிக் கொள்ள வேண்டிய மார்க்கங்கள்—அவைகள் நியாயமாயினு மிருக்கட்டும் அக்கிரமமாயினு மிருக்கட்டும் அயோக்கியத்தனமாயு மிருக்கட்டும்—ஸ்தாபிக்கப்பட்டன. அவர்களுடைய ராஜ்யம் விஸ்தாரமாய்ப் பரவியகாலத்தில் வியாபாரத்தையும் மதபிரசாரத்தையும் விருத்தி செய்ய வேண்டிய பாதிரி மார்கள் முஸ்லிம் அரசர்களிடம் அனுப்பப்பட்டனர். அக்காலத்தில் முஸ்லிம் மன்னர்கள் தங்களுடைய இனத்தார்களும் பாரத மன்னர்களும் தங்களுடைய ஆட்சிக்குச் சத்துருக்கள் என நினைத்தார்களேயன்றி அன்னிய நாட்டார்கள் தங்களுக்கு எதிரிகள் என்று நினைத்தனரில்லை போலும். தவிர மேனாட்டார்கள் கொலை பாதகத்துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் வைத்துக்கொண்டு சத்துருக்களை வெல்ல முயன்றதனால் அவைகளுடைய சகாயத்தால் உள்நாட்டுச் சத்துருக்களை ஜயிக்கத்துணிந்தார்களேயன்றி ஸீக்கர் குருவான தேக்பஹதூர் பின்வருவதை முன்னுரைத்த உண்மையை உணரவில்லைபோலும். இவ்வறியாமையினால் விளைந்த பலன் இனி விவரிக்கப்படும் சரித்திரத்தில் புலப்படும். அக்காலத்திலிருந்த தென்னாட்டின் நிலைமையை யறிந்து கொள்வதற்கு அப்பாகத்தின் வாலாற்றை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போமாக.

அத்தியாயம் :—3.

தமிழகம்.

முதலாவது சருக்கம்.

சரித்திர ஆராய்ச்சி.

தமிழகம் என்பது தமிழ்ப் பாஷையைத்தாய்ப் பாஷையாய் உடைய ஒரு இனத்தவரின் (அதாவது தமிழரின்) இருப்பிடம் ஆகும். அத்தமிழகத்தின் பண்டைக் குடிமக்களாகிய திராவிடர்களைப்பற்றி ஏற்கனவே (முதற்பாகம் 39—47வது பக்கங்களில்) அவசியமான விஷயங்களைக் கூறியுள்ளோம். அந்தத் திராவிடர்களின் உட்பிரிவினர்தாம் தமிழர், தெலுங்கர், மலையாளர், கன்னடர் என்பது பாஷா ஞானிகளின் துணிவு எனும் விஷயத்தையும் கூறியுள்ளோம். இந்த அத்தியாயத்தில் தமிழர்களைப்பற்றிய கோட்பாடுகளையும் வரலாறுகளையும் எடுத்துரைப்போம். அவைகளை ஆராய்ச்சி செய்யுங்கால் முதற் பாகத்தில் (20—27வது பக்கங்களில்) முன் எச்சரிக்கையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஒவ்வொரு கருத்தையும் வாசகர்கள் தம் உள்ளத்தில் உறுதிப் படுத்திக் கொள்ளல் வேண்டும்.

ஒரு நாட்டினரின் வரலாற்றை அறிய விரும்புவோர் அவர் நாட்டின் இருப்பிடத்தை அதாவது அதன் எல்லைகளை நன்றாய்த் தெரிந்து கொள்ளல் வேண்டும். தமிழகத்தின் எல்லையை மொத்தமாய் (ஸ்தூலமாய்) கூறுவதெனின் இமயமலை முதல் தக்ஷிணத்தின் தென் எல்லையீறாக உள்ள நாட்டை நீக்கி எஞ்சியபாகம் அது என்று சொல்லலாம்.

அதற்கு வட எல்லை வேங்கடமலையும் தெற்கு எல்லை குமரியும் கிழக்கும் மேற்கும் பாரத மஹாசமுத்திரமும் ஆகும். குமரியானது ஓர் யாற்றின் குறி என்று தமிழ் நூல்களினின்றும் தெரிந்து கொள்ளற் பாலது. அக்குமரி யாற்றுக்குத் தெற்கில் பரந்து கடந்த நாடனைத்தும் கடலுக்கு இரையாய் விட்டது என்று சொல்வதற்கு மிடமுண்டு. மேலே குறிப்பிடப்பட்ட வேறு எல்லைக் குறிகளும் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தன என்பதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழ் நூலாராய்ச்சிகளால் இதுவரை நமக்கு எட்டியிருப்பதைக்கொண்டு தமிழ் நாட்டின் பரப்பும் உட்பிரிவுகளும் ஒருவாறு குறிப்பிடப்படலாம். ஆனால் அந்த நூல்களியற்றப்பெற்ற காலத்திற்கு முந்திய நிலைமை ஒன்று உண்டு என்பது நிச்சயம். ஆகையால் அக்காலத்தின் வரலாற்றைப் பற்றிய ஆதாரங்களைத் தேடிக்கொண்டிருப்பது சரித்திராசியர்களின் கடமை. அவ்வாறு செய்து இதுவரை கிடைத்திருக்கும் பற்றுக்கோடுகளுள் சிலவற்றை ஆராய்ச்சி செய்வோமாக.

ஒரு நாட்டினரின் பண்டைக்கால சரித்திரத்தை விளக்கக் கூடியவை அவர்களால் உபயோகப் படுத்தப்பட்ட பண்டங்கள் ஆகும். தமிழர்களின் தொன்மையை உணர்த்தக் கூடிய சாமான்களைப் பற்றிய விவரங்கள் பல வெளியாக்கப் பட்டிருக் கின்றன. மேனாட்டார்களுள் பல வித்துவான்கள் இத்தொண்டில் ஈடுபட் டிருக்கின்றனர் என்பதை நாம் மறக்கலாகாது. நம் நாட்டாரும் சில ஆண்டுகளாய் இவ்விஷயத்தைப் பரிசோதித்து வருகின்றனர். அவர்களுடைய முயற்சியின்பயனாய் விளங்கிருக்கும் ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி ஜில்லா) பெரும் பெயர் பல்லாவரம் (செங்கற்பட்டு ஜில்லா) பலமனேர் (சித்தூர் ஜில்லா) கொல்லூர் (தென் ஆற்காடு

ஜில்லா) கோயம்புத்தூர், நெல்லூர், ஹைதராபாத் முதலிய பல இடங்களில் காணப்படும் சவக்குழிகளைப் பற்றிய விவரங்கள் (முதற்பாகம்) 43—44வது பக்கங்களில் காணப்படும். பல ஆயுதங்களும் ஆபரணங்களும் கிடைத்திருக்கின்றன. அவைகள் நமது நாட்டின்கண் காணப்படும் பொருட்காட்சி சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை ஆதாரமாய்க் கொண்டும் இக்கண்டத்துக்கு அப்புறமுள்ள மெஸ்பொடாமியா, அஸைரியா, பாபிலோனியா முதலிய பல நாடுகளில் கிடைக்கப்பெற்ற பண்டைக் காலத்திய சாமான்களைக் கொண்டும் திராவிடர்களுடைய மூலஸ்தானத்தைப் பற்றிய தர்க்கங்கள் பல நடந்து கொண்டிருக்கின்றன. இனியும் நடக்க வேண்டியிருக்கின்றன. திராவிடர்கள் மத்திய தரைக்கடலின் பக்கத்திலிருந்து ஸிந்து நதிக் கரைகளில் பரவியிருந்து, பிறகு தக்ஷிணத்திலும் பிறகு தென்னாட்டிலும் பரவினர் என்று சிலரும், பரதகண்டத்துக்குத் தென்புறத்திலிருந்த லெமூரியா கண்டத்திலிருந்தவர்களின் வம்சஸ்தர்கள் என்று வேறு சிலரும் சொல்லிக் கொண்டிருக்க இந்நாட்டிலேயே தோன்றி வளர்ந்து மேன்மையுற்றிருந்த சுவயம் ஜாதியார் திராவிடர் என்று சில தேசாபிமானிகள் கூறு நிற்பர். இந்த விஷயமான கோட்பாடுகளுள் எது உண்மையாயிருப்பினும் இருக்கட்டும். ஆனால் இக்கண்டத்தில் ஆரியர்கள் தோன்றிய காலத்தில் திராவிடர்கள் எனப்படுவோர் வசித்திருந்தனர் என்பதற்கையமில்லை. அக்காலத்தில் திராவிடர்களின் நிலைமையைப்பற்றி நமக்கென்ன தெரியும்? என்பதுதான் கேள்வி.

கிறிஸ்து சகாப்தத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்குமுன் திராவிடர்களின் நாகரிக நிலைமை மிகவும் வியக்கத்தக்கதாயிருந்தது. அவர்கள் உழவு தொழிலில் மிகக்கைதேர்ந்தவர்,

சமூக வாழ்க்கைக் குரிய அங்கங்களை அடைந்திருந்தனர். நல்லவனதாட்சியும் அமைதியுற்ற அரசாங்கமும் பெற்றிருந்தனர். வாணிகஞ் செய்வதிலும் சீர்பெற்றிருந்தனர். கி. மு. 500-க்கு முன்னரே, அக்காலத்தில் நாரிகத்தில் சிறந்த பினீஷியர்கள், எகிப்தியர்கள், பாரஸீகர் ஆகியவர்களுடன் ஏராளமான வியாபாரஞ் செவ்வனே செய்துவந்தனர். தனித்தமிழ் பாஷை பெற்றிருந்தனர். எழுத்துக்களும் பெற்றிருந்தனர். அவர்களால் நூல்களும் இயற்றப்பெற்றிருக்கவேண்டும். விவாக விஷயத்தில் தனித்துறை உடைத்தாயிருந்தனர். அவர்களுடைய நடை உடை பாவனைகள் சிறப்பாயிருந்தன. ஆகையினால் அவர்கள் நாகரிகம் பெற்றவர்கள் எனப்படுகின்றனர். அவர்கள் துரானியர் என்பவர்களுடன் சில ஆண்டுகள் கலந்து நிற்க நேரிட்டது. ஆயினும் திராவிடர்களுடைய தனி நிலைமையும் சுவதந்திரமும் அவ்வளவாய்க் குன்றவில்லை. மீண்டும் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஆரியர்கள் எனப்படுவோர் அவர்களை அடிக்கடி எதிர்க்கலாயினர். திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்கும் நடந்த போராட்டம் பலமாயிருந்தது. அந்த இரண்டு ஜாதியார்களும் நீண்டகாலம் கழித்து ஸமரச பாவத்துடன் ஒன்று கலக்கலாயினர். இம்மட்டில் சரித்திர விஷயமாய் ஆசிரியர்களுக்குள் விவாதம் ஏற்படக் காரணமில்லை.

ஆனால் அவ்விரு இனத்தாரும் கலந்துகொள்ள நேரிட்டகாலத்தில் யார் யாருக்கு எம்மட்டில் கடன்பட்டிருந்தனர் என்கிற விஷயத்தில்தான் தர்க்கம் நேரிடக் கூடும். ஆரியர்கள் திராவிடர்களுக்கு அதிகமாய்க் கடைப்பா டுடையவர் என்றும் ஆரியர்கள் கிளம்புவதற்கு முன்னரே திராவிடர்கள் தனிநிலைமையில் நிற்க வல்லமை

வாய்த் திருந்தவர்களாதலால் ஆரியர்கள் திராவிடர்களுடைய நாகரிகத்தைத் தம்முடையதாய்ச் செய்து கொண்டு பிறகு தம்முடைய சொந்த நாகரிகத்தைப்போல் திராவிடர்களிடையில் ஒரு கலப்பு நாகரிகத்தை உண்டாக்கி விட்டனர் என்பது ஒரு சார்பார் கூற்று. மற்றொரு சார்பாரோ 'ஆரியர்தான் சிறந்தவர், அவர்களுடைய பாஷை தேவ பாஷை, அவர்களுடைய சமூகவாழ்க்கையின் வர்ணாசிரம அமைப்பு தெய்வீகக் கட்டளையைப் பின்பற்றியது, அவர்களுடைய நடை உடை பாவனைகள் சாஸ்திரங்கள் ஆசாரங்கள் முதலியன மேம்பாடுற்றவை. ஆதலால் அவர்கள் திராவிடர்களிடம் யாதொன்றையும் எதிர்பார்த் திருந்திருக் கவில்லை' எனக்கூறுப. பாஷை, கல்வி, ஜாதி, மதம், ஆசாரம், அரசாங்கம், ஆகிய விஷயங்களுள் எந்தெந்தது ஆரியருடையது எந்தெந்தது திராவிடர்களுடையது என்கிற பாகப்பிரிவினைக் கோட்பாடுகள் இக்காலத்தில் அதிகமாய்க் கொண்டு வருகின்றன. அவைகளை இனி வரும் பக்கங்களில் சமயத்துக்கேற்ப வர்ணிப்பாம். ஆனால், இம்மாதிரியான கக்ஷிகளினால் தற்காலத்திய முன்னேற்றம் பல துறைகளில் தடைபெற்று வருகின்றது என்பதை யாவரும் உணரக்கூடும்.

எந்த பிரதேசத் திலாயினும் இரண்டு ஜனங்கள் எவ்விதம் கலந்துகொள்ளக்கூடும் என்கிற விஷயத்தைக் குறித்து உலக சரித்திரத்தை உற்றுநோக்கும் அறிவுடையோருக்குப் பல கக்ஷிகளுக் கிடையில் ஒரு நடுநிலைமைகொண்ட அபிப்பிராயம் தோன்றும் என்பதற்கையமில்லை. கி. பி. பதினொன்றாவது நூற்றாண்டில் இங்கிலாந்தை ஜயித்த நார்மன் பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் சுமார் நான்கு நூற்றாண்டுகள் பாஷை ஆசாரம் முதலியவைகள் விஷயமாய்

ஒருவருடன் ஒருவர் போராடிப்போராடிக் கொண்டுநின்று காலக்கிரமத்தில் கலந்துகொண்டார்கள். இப்பொழுதும் "நான் சுத்தமான ஆங்கிலோ ஸாக்ஸன் (Anglo Saxon)" என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் ஆங்கிலர்கள் இருக்கின்றனர் என்பதும் மறுக்கத்தக்கதன்று. இம்மாதிரி அனுபவங்கள் உலகத்தில் பல காணப்படுகின்றன. ஒரு ஜாதியார் இன்னொரு ஜாதியாருடன் சம்பந்த மடைய நேரிடுங்காலத்தில் கால தேசங்களுக்கு யோக்கியமான அளவு இயற்கையாய்ச் சில தோன்றல்களும் திரிதல்களும் சம்பவிப்பது நியாயமேயாகும். வருஷம் மாதம் தேதி நிமிஷம் ஆகிய கால நிர்ணயத்துடன் சரித்திரம் எழுதி வைக்கப்பட்டிருந்திருப்பினும் இரண்டு இனத்தார்களுடைய நாகரிகத்தின் அளவுதல் கணக்குக் குட்படாது என்பதும் அதற்கோர் அளவு கருவி ஏற்படுத்துவது அசாத்தியம் என்பதும் மலையிலக்குகளே.

மேலும் ஆரியர்களுடைய பூர்வ சரித்திரமும் திராவிடர்களுடைய பூர்வ சரித்திரமும் இன்னும் அனுமானத்தினால்தான் கண்டுகொள்ளக்கூடிய நிலைமையில் நிற்கின்றன. அவைகளுக்குரிய கால தேச வரை முறைகளும் இன்னும் ஊகித்தறிந்துகொள்ள வேண்டியனவாகவே இருக்கின்றன. காலத்தைப்பற்றிய வாக்குவாதம், கி. மு. கி. பி. ஆகியவைகளைப் பின்பற்றியது. இம்முறை ஒன்றையொன்று பற்றுதல் என்று சொல்லப்படும் அளவை நூல் நியாயத்துக்கு உதாரணமாய் நிற்கும்.* இவ்வாறிருக்க, அவ்விரு இனத்தோர்களின் கலப்பு நாகரிகப்பாகுபாடு செய்வது தகுதியன்று.

*வடமொழியில் "அன்னி யோன்னியா சிரய தோஷம்" எனப்படும். உதாரணம்: விவாகமானால் பைத்தியம் தெளியும். பைத்தியம் தெளிந்தால் விவாகமாகும்.

ஆயினும் ஆரியாபிமானிகள் ஆரியர்களும் அவர்களுடைய நாகரிகமும் காலத்தில் முந்தியவைகளாகும் என்று சொல்லிக்கொண்டிருக்க திராவிடாபிமானிகள் திராவிடர்களும் அவர்களுடைய நாகரிகமுமே காலத்தில் முந்தியவை என்று சொல்லிக்கொள்கின்றனர். ஆனால் தற்காலம் நாம் செய்யக்கூடியது யாதெனின் "அவ்விரு இனத்தோர்களும் நாகரிகத்தில் சிறந்தவர்கள்தான். அவரவர்களுக்கும் தனி நாகரிகமிருந்தது. அவ்விருவர்களும் கலந்துகொள்ள வேண்டிய காலம் ஒன்று நேர்ந்தது. அக்காலத்துக்குத் தகுந்தவாறு ஒருமைப்பாடடைந்தனர். அவ்வாறே தற்காலத்துக் கேற்றவாறும் அவ்விரு இனத்தோரும் ஒன்று கூடி முன்னேற்ற மடைய வழியைத்தேட வேண்டும்" என்று துணிவு பெற்று தேச ஊழியம் புரிவதே.

இரண்டாவது சருக்கம்.

தமிழரும் ஆரியரும்.

நமது பரதகண்டத்தில் வசித்த ஆரியர்களுடைய சரித்திரத்துக்குச் சரீரம் வேதம்; உயிர்நிலை உபநிஷத் (வேதாந்தம்); அதற்கு இராமாயணமும் மஹாபாரதமும் இரண்டு சுவாசப்பைகள்; அதன் இரக்தாசயம் அல்லது இருதயம் மனுஸ்மிருதி. புராணங்கள், கதைகள் முதலியன எலும்புக்கூடு. ஆகமங்கள், சாஸ்திரங்கள், மந்திரங்கள், சடங்குகள் முதலியன நரம்புகள். மதங்கள் கொழுப்பு. ஜாதி என்பது தோல். அந்த சரீரத்தை நாம் ஆராய்ச்சி செய்து தத்துவத்தைக் கண்டுகொள்ளல் வேண்டும். அதனால் திராவிடர்களைப்பற்றிய மட்டில் கூறப்புகின் வேதத்தினின்றும் ஏற்படுவது, ஆரியர்களுடன் போராடிய தஸ்யுக்கள், தஸ்ஸுக்கள், தாசர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்

கள், சபரர்கள், புலிந்தர்கள், நிஷாதர்கள், ஆகிய பல சுவதேசிகளைப்போல் திராவிடர்களும் ஒருவர் என்பதே. திராவிடர்களுடைய நிலைமையைப்பற்றி வேறொன்றும் அறிந்து கொள்ள இடமில்லை என்றே கூறவேண்டும்.

இராமாயணம், மஹாபாரதம், ஆகிய நூல்களில் தென்னாட்டைப் பற்றிய சில விஷயங்கள் காணப் படுகின்றன. தண்டகாரண்யம், ஜனஸ்தானம், கிஷ்கிந்தை, ஆந்திரம், புண்டரம், சோளம், பாண்டியம், (கபாடபுரம்) கேரளம் ஆகிய நாடுகளையும் அவைகளின் குடிமக்களைப்பற்றியும் இராமாயணத்தில் பிரஸ்தாபம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்விடங்களிலிருந்த ரிஷிகள், ராக்ஷஸர்கள், வானரர்கள் ஆகியவர்களைப்பற்றியே அதிக வரலாறு காணப்படுகின்றது. ஆனால் குடிகளின் நாகரிகத்தைப்பற்றிய விசேஷங்கள் அதிகம் காணப்படுகின்றதில்லை. ஆயினும் இந்நூலை இன்னும் பரிசோதித்துப் பார்க்கவேண்டியிருக்கின்றது என்பது நம்முடைய கொள்கை. ஏனெனின் மஹாபாரதத்தில் காணப்படும் தென்னாட்டினர் நாகரிகத்தில் சிறந்தவர்கள் என்பது நன்றாய்த் தெரிகின்றது. உதாகரணமாய், ராஜசூய யாகத்திற்கு முந்தி ஸஹாதேவன் புரிந்த திக்விஜயத்தில் பாண்டிய நாடும் குறிப் பிடப் பட்டிருக்கிறது. ஸஹாதேவன் ஜயித்த அரசர்கள் சாதாரணமானவர்களல்லர். மேலும் துரௌபதி சுவயம்வரகாலத்தில் ஒரு பாண்டிய மன்னனும் போட்டியிட விஜயம் செய்திருந்ததாய்த் தெரிகின்றது. அக்காலத்திய பாண்டியர்களும் சோழர்களும் செல்வத்தில் சிறந்தவர்கள் என்பதும் அரசாட்சியில் தேர்ச்சியுடையவர்கள் என்பதும் அவர்கள் ராஜ்யத்தில் வெளிநாட்டு வியாபாரங்கள் அதிகம் நடந்தன என்பதும் ஏற்படுகின்றன. மேனாட்டார் சரித்திர ஆராய்ச்சி

முறைப்படி மஹாபாரதக்கதை முந்தி நடந்ததென்றும் ராமாயணக்கதை பிந்தி நடந்ததென்றும் சொல்வது ஒப்புக் கொள்ளத்தக்கதாயின் முந்திய காலத்தைக்காட்டிலும் பிந்திய காலத்தில் நாகரிகம் குறைந்தவர்கள் திராவிடர்கள் என்று ஊகிக்க நேரிடும். ஆனால் வேறு சான்றுகளால் திராவிடர்கள் நாகரிக தசையினின்றும் ஒருகாலும் நழுவ வில்லை என்று நிரூபிக்கக்கூடும். ஆகையினால் மகாபாரதம் இராமாயணம் ஆகிய இரண்டு கிரந்தங்களின் ஆராய்ச்சி இன்னும் நடைபெற வேண்டியிருக்கின்றது என்றுரைப்பது தவறாகாது.

அடுத்தபடியில் மனுஸ்மிருதியை எடுத்துக்கொண்டால் திராவிடர்கள் ஒருகாலத்தில் சிறந்த க்ஷத்திரிய ஜாதியைச் சார்ந்தவர்கள் என்றும் பிறகு அவர்களுடைய செயல்களி னால் பலர் நான்காவது வகுப்பினராய் மாறிவிட்டனர் என்றும் சொல்லப்படலாம். முக்கியமாய் சோழமன்னர் களும் கேரளமன்னர்களும் பல இதர மன்னர்களைப்போல் அவர்களுடைய க்ஷத்திரிய நிலைமையினின்றும் ஸகரமகா ராஜாவினால் நீக்கப்பட்டனர் என்று ஹரிவம்சத்தில் கூறப் பட்டிருக்கின்றது. திராவிடர்களின் ஆசாரங்கள் ஆரியர் களுக்குப் பிடித்தமாயில்லை என்பது புராணங்களினால் புலப்படுகின்றது. தமிழகத்தின் பெருமையை விளக்கக் கூடியவை ஸ்காந்த புராணமும் ஹாலாஸ்ய மாஹாத்மியமும் ஆகும். ஆனால் இவைகளின் சான்றுகளை எம்மட்டில் சரித்திராசிரியர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்பதும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டி நின்கின்றது. ஆரியர்கள் தங்களுடைய வர்ணாசிரம தர்மங்கள், யாகங்கள், தெய்வீகச் சடங்குகள், முதலியவைகளை அனுஷ்டிக்காதவர்களை மிலேச் சர்கள் என்றே கருதினர். பிறகு வேதாந்த ஞானத்தைப்

பெற்றிருந்த ஆரியர்கள் தங்களுடைய கோட்பாடுகளையே இதரர்களிடத்தும் எதிர்பார்த்தனர் போலும். ஏனெனின் தெய்வீக உணர்ச்சிபெற்ற மானிடர் தாம்கண்டுகொண்ட உண்மையையே பிறரும் கண்டுகொள்ள வேண்டும் என்கிற ஆற்றலுடையவராய்ப் பிறருடைய கோட்பாடுகளைப் புறக்கணித்துத் தம்மதத்தையே வற்புறுத்துவது அவர்களுக்கு இயல்பு. (திராவிடர்களுடைய மத உணர்ச்சியைப் பற்றி இவ்வத்தியாயத்தின் இறுதியில் கூறுவாம்.)

ஆரியர்களுடைய சரித்திர ஆதாரங்கள் ஒருபக்கல் நிற்க, ஆரியர்களுடைய இடையில் புத்தர் அவதாரம் செய்த பிறகு தோன்றிய பௌத்த மன்னர்கள் பௌத்த ஜாதகக் கதைகள், நூல்கள், கல்வெட்டுகள் ஆகிய ஆதாரங்களைக் கொண்டும் திராவிடர்களுடைய வாழ்க்கையைக் கண்டு கொள்ளலாம். அசோகருடைய கீர்த்திஸ்தம்பங்களில் தமிழ் நாட்டின் சிறப்பு குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஸிம்ஹளத் தீவினர்களின் கதைகளிலும் வம்சாவளியிலும் மஹாவம்சத்திலும் தமிழகத்துக்கும் இலங்கைத்தீவுக்கும் அனேக நூற்றாண்டுகளுக்கு முன் நடைபெற்றுவந்த ஸம்பந்தம் வெளியாக்கப் பட்டிருக்கின்றது. அவைகளைத் தவிர உரோமர், கிரேக்கர், ஆகிய மேனாட்டார்களும் தென்னாட்டைப்பற்றிய சில வியவகாரங்களை நமக்கு அளித்திருக்கின்றனர். டாலமி என்பவரின் பூகோள சாஸ்திரமும், பெரிப்ளஸ் என்கிற சுற்றுப்பிரயாண நூலும் சான்றுகளாம். இன்னுமோர் முக்கிய ஆதாரம் தமிழ்ப் பாஷையாகும். ஒரு பாஷையின் வரலாறுக்கும் அப் பாஷையைப்பேசும் மானிடர்களின் வரலாறுக்கும் உள்ள சம்பந்தத்தை யுணராதார் இலர் என்று நினைக்கிறோம். பாஷை, எழுத்து, கல்வி, ஆகிய மூன்று விஷயங்களில்

மானிடர் முன்னேற்றத்தை பிரபஞ்சதாரை* எனும் நூலில் விவரித்துள்ளோம். தமிழ்ப்பாஷையின் வரலாற்றை ஆராய்ச்சி செய்த தமிழபிமானிகள் மேனாட்டாரும் நம் நாட்டாரும் பலருளர்.

பிப்ளியாக்ரபி (Bibliography) என்று ஆங்கிலத்தில் கூறப்படும் நூல்கள் நூலாசிரியர்கள் ஆகியவைகளைக் காட்டும் ஜாபிதா ஒன்றை நமது பரதகண்டத்தின் இறுதியில் கூட்டநினைத்து இத்துறையிலுழைக்கும் பெரியார்களின் பெயரையும் ஆதாரங்களையும் ஈண்டு எடுத்துக்கூறவில்லை.

முத்தமிழினின்றும் அறிந்துகொள்ளக்கூடிய தமிழர் வரலாற்றைச் சில தலையங்கத்தின்கீழ் இனி விரைவில் வரைவாம்.

மூன்றுவது சருக்கம்.

தமிழகத்தின் படம்.

தமிழர் வரலாற்றை யறிந்துகொள்ள விரும்புவோர் தமிழர்களுக் கிருப்பிடமான தென்னாட்டின் எல்லைகளையும் உட்பிரிவுகளையும் அவைகளின் மாறுதல்களையும் காண்பிக்கக் கூடிய படம் ஒன்றைத் தயார் செய்துகொள்ளல் வேண்டும். அப்படத்தை வரைவதற் குதவியாய் நிற்பவை "வடவேங் கடந் தென்குமரி, ஆயிடைத்தமிழ்கூறு நல்லுலகத்து"1 "வேங்கடங்குமரி தீம்புனற் பௌவமென், றிந்நான்கெல்லை தமிழது வழக்கே"2 "வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும், வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென், றிந்நான் கெல்லை யகவயிற்கிடந்த நாலது முறைமயே வாலிதின் விரிப்பின்."3 ("1, 2, 3" 68-வது பக்கத்தைப் பார்க்கவும்.)

---

*135—136 பக்கங்களைப் பார்க்கவும்.



எண்களின் விவரத்தை 68-வது பக்கத்தில் நக்ஷத்திர
*அடையாளத்தில் காண்க.

"பஃறுளியாற்று டன்பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங்கொண்டு
தென்றிசையாண்ட தென்னவன் வாழி."4
"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்."5

மேற்கூறப்பட்ட பாடல்களில் சில சங்கைகளுக் கிடங்களுமிருக்கின்றன. செந்தமிழ் நாடென்பது எந்த நாடு? பாண்டிய நாடா? சோழ நாடா.? "செந்தமிழ் நாட்டையன்றி பன்னிரண்டு நாடுகளிருந்தனவா? *அல்லது மொத்தம் பன்னிரண்டு நாடுகளா? குமரிக்குத் தெற்கில் மூழ்கிப்போன மேல்பரப்பு யாது? ஆதலால் இவைகளைக் குறிப்பிட்டுப் படம் வரைவது சிரமம். ஆயினும் கூடியவரையில் ஒரு படம் தயார் செய்யப்பட்டிருப்பதை 67-வது பக்கத்தில் காண்க.

நான்காவது சருக்கம்.

தமிழரசர்கள்.

தமிழரசர்களின் வரலாறுகளைக் கண்டுகொள்வதற்காதாரமான தமிழ் நூல்களையும் ஸிம்ஹளத்தீவின் சரித்திர சம்பந்தமான மஹாவம்சத்தையும் தமிழர் சரித்திர காலத்துக்குரிய தாம்பிர சாஸனங்கள், கல்வெட்டுகள், முதலியவைகளையும் அவைகளுள் முக்கியமாய் பாண்டிய மன்னர்கள் சோழ மன்னர்கள் ஆகியவர்களுடைய சிலா சாஸ

---

1. பனம்பாரனார், 2. சிகண்டியார், 3. காக்கை பாடினியார், 4. சிலப்பதிகாரம், 5. தொல்காப்பியம்.

*"தென்பாண்டி[6] குட்டங்[8] குடங்[11] கற்கா[9] வேண்[7] பூழி[12],
பன்றி[5] அருவா[3] வதன்வடக்கு[1]—நன்றாய,
சீத[10] மலாடு[2] புனனாடு[4] செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டெண்."

னங்களையும் இதர நாட்டார்களால் குறிப்பிடப்பட்ட விருத் தாந்தங்களையும் நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

தென்னாட்டில் சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், ஸத்தியபுத்திரர் ஆகிய நான்கு இனத்தோரின் அரசுகள் இருந்தன என்பது அசோகரின் காலத்திய ஒரு கற்பாறைச் சாஸனத்தின் கூற்று. அவைகளுள் ஸத்தியபுத்திரர் என் பவர் சேரருக்குப் பக்கத்தில் இருந்தனர் என்பதுமட்டில் நமக்குத் தெரியவருகின்றது. கேரளபுத்திரர் என்பவர் கள் சேரர்கள் என்பதும் தெரியவருகின்றது. ஆனால் காலப்போக்கில் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவர் களின் ஆதிக்கியமே எஞ்சி நின்றதுபோலும். ஏனெனின் அவர்களைப்பற்றியே பல வரலாறுகள் நமக்கு எட்டி யிருக் கின்றன. மேலும் அவர்களுள் பாண்டியர்கள் மிகத் தொன் மையும் சிறப்பும் வாய்ந்தவர்கள் என்பது புலப்படுகின்றது. பாண்டியர் என்கிற மொழியே பண்டு (தொன்மை) என்கிற மொழியினின்று தோன்றிற்று என்பாரும் உளர். ஆகை யால் அவர்களுடைய வரலாற்றை இவண் விசாரிப்பது பொருத்த முடைத்து.

பாண்டியர்கள்.

தென்னாட்டில் கீர்த்திபெற்ற நகரங்களுள் *மதுரை மிகச் சிறப்புற்றது. இதைத் தலைமை நகராய்ச் செய்து கொண்ட பாண்டியர்களின் மகிமை வால்மீகியினாலும் அவ ருடைய இராமாயணத்தில் குறிப் பிடப் பட்டிருக் கின்றது.

* மதுரை என்பது எவ்விடத்திலிருந்தது? தற்காலத்தில் காணப்படுவதே பண்டைக் காலத்தில் குறிப் பிடப் பட்டதா? கபாட புரம் என்று கூறப் படுவதும் மதுரைதானா? இம்மாதிரியான சந்தே கங்களிருக்கின்றன.

அவர்களால் ஆளப்பட்ட பாண்டிநாடானது தங்கமும், முத்துக்களும், ரத்தினங்களும் அபரிமிதமாய்ப் பெற்ற நன்னாடு என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. மகா பாரதத்தில் ஸஹாதேவனின் திக்குவிஜயத்தில் பாண்டிய நாடும் ஜயிக்கப் பட்டதாய் 63-வது பக்கத்தில் கூறியுள்ளோம். காத்தியாயனருடைய வார்த்திகத்தில் பாண்டுக்களுடைய வம்சத்தி லுதித்தவர்கள் பாண்டியர்கள் என உதாகரணம் செப்பப் பட்டிருக்கின்றது. மேலும் பாண்டியர்கள் எனப்படுவோர் பஞ்சவர் என்றும், சந்திர வம்சத்தவர் என்றும் அடிக்கடி பல நூல்களில் காணப்படுகின்றனர். தென்னாட்டினுள் வடநாட்டு ஆரியர்களின் பிரவேசம் ஆன விஷயம் மறுக்கப் பாலதன்று. அசோகரின் கீர்த்தி ஸ்தம்பங்களில் காணப் படும் பிரதேசங்களில் பாண்டிய நாடும் ஒன்றாகும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். மேலும் கிறிஸ்து பிறப்பதற்கு அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே பாண்டியர்கள் மேனாட்டார்களுடனும், கீழ்நாட்டார்களுடனும் வியாபாரஞ் செய்து வந்திருக்கின்றனர். இவ்விஷயமாய் இலங்கைத் தீவில் பாரத மன்னர்களின் ஆட்சியைப்பற்றி வரைந்திருக்கும் சருக்கத்தில் காணப்படும்வரலாறுகள் வாசகர்கள் மனத்தில் இருக்கலாம். (முதற் பாகம்: பக்கங்கள் 106—115.)

சந்திரகுப்த மன்னன் காலத்தில் இருந்த கிரேக் ராஜபிரதிநிதியான மகஸ்தனீஸின் விருத்தாந்தமும் இப் பாண்டிய நாட்டின் வரலாற்றைக் காட்டுகின்றது. அவனது காலத்திலே ஒரு மாதுசிரோமணி மதுரையில் அரசு புரிந்தனள் என்றும், அவன் ஹெராக்ளீஸ் என்கிற கிரேக் கருக்கு 'இந்தியாவில்' பிறந்தபெண் என்றும், அவளுக்குப் பண்டையா என்ற பெயரிடப் பட்டிருந்த தென்றும், அவ

ளுக்குப் பிரதிதினமும் ஒவ்வொரு கிராமமும் கப்பங் கட்டுவதற்காக 365 கிராமங்கள் திட்டம் செய்யப்பட்டன என்றும் சொல்லப் படுகின்றன.

அக்காலத்தில் வட நாட்டில் பரவிவந்த புத்தமதம் தென்னாட்டிலும் பரவலாயிற்று என்பதைப் பல புத்த விஹாரங்களில் காணப்படும் சாசனங்களினால் தெரிந்து கொள்வோமாக.

எகிப்தியர்களும், உரோமர்களும், கிரேக்கர்களும் பாண்டியநாட்டுடன் வியாபாரஞ் செய்தனர் என்பது பூகோள சாஸ்திரிகளாலும் சரித்திராசிரியர்களாலும் பறைபறையும் வரலாறாகும். கி. மு. இருபதாம் ஆண்டில் அகஸ்டஸ்ஸீஸருடைய சன்னிதானத்தில் பாண்டியநாட்டின் ராஜதூதனிருந்ததாய் உரோம சரித்திரத்தினால் வெளியாக்கப் படுகின்றது. இப்பொழுது கூறப்பட்ட உரோம சக்கிரவர்த்திகாலம் முதல் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டு முடிய (அதாவது ஜீனோ (Zeno) வின் அரசாட்சிவரை) ஏற்பட்ட உரோம நாணயங்களின் வரலாற்றைச் சென்னைக் காக்ஷி சாலைபோன்ற இடங்களில் காணலாம். அந்த நாணயங்கள் எங்கெந்த ஊரிலிருந்து எங்கெந்தச் சமயத்தில் யார் யாரால் கண்டுபிடிக்கப்பட்டன என்கிற ஒரு ஜாபிதாவைப் படித்துப் பார்த்தாலே அவ்விஷயம் நமக்கு நன்கு விளங்கும். மீண்டும் சீன யாத்திரிகரான ஹையூன்தஸாங்கும் தென்னாட்டைப்பற்றிய வரலாறுகள் சிலவற்றை அவருடைய நூல்களில் வெளியிட்டிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிற்க; தமிழ் நூல்களில் காணப்படும் ஆதாரங்களை ஆராய்ச்சி செய்யின் புதிய புதிய விஷயங்கள் புலப்படுகின்

றன. இவ்விஷயமாய் மேனாட்டார்களும், நம்நாட்டார்களும் செய்திருக்கும் முயற்சிக்காக அவர்களுக்கு நாம் கடைப்பாடுடையவரா யிருக்கக்கடவோமாக. நமது நாட்டில் தமிழபிவிர்த்திக்காகப் பாடுபடும் சரித்திர மாணவர்கள் தாம் படிக்கும் ஒவ்வொரு நூலையும், ஒவ்வொரு நூலில் காணப்படும் விஷயங்களையும், மொழிகளையும் ஆதியோடந்தமாய்ப் படித்து யோசித்துப்பார்த்து அவைகளினின்றும் கிடைக்கக்கூடிய தத்துவங்களைக் கவனிக்கின் சரித்திர விஷயமான ஆச்சரியங்கள் இன்னும் அதிகமாய்க் காணப்படலாம்.

உதாகரணமாய், சிலப்பதிகாரத்தைப் படித்த ஒரு புத்திமான் அதில் கயபாகு எனப்படுவோன் இலங்கைத் தீவில் ஆட்சி புரிந்த முதலாவது கஜபாகு (கி. பி. 135) தான் என்று சொன்னதனால் அது முதற்கொண்டு வேறு சில பண்டிதர்கள் அதையாராய்ச்சி செய்யலாயினர் என்பதைக் குறிப்பிடலாம். அதன் உண்மை பலரால் ஒத்துக் கொள்ளப் படாவிடினும் அதனால் சரித்திர ஊக்க மதிகரித்து வருகின்றது என்பது கவனிக்கப் பாலது.

மேலும் புராணத்தமிழ் நூல்களைக் காலவரை முறைகளுக்குட்படுத்த வேண்டிய பல யத்தனங்களால் தமிழ்ச் சங்கங்களின் வரலாறும் அவைகளின் காலப் பாகுபாடுகளும் அவைகளுக் குள்பட்ட நூல்களும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் காலவரை முறைகள் இன்னும் சரியாக ஏற்படாவிடினும் அவைகளைப் பரிசோதனை செய்வதனால் தமிழ்ப்பாஷை யபிவிருத்திக்கு இடமுண்டு. ஆயினும் இந்த ஆராய்ச்சிகளெல்லாம் தனித்தனி நூல்கள் வாயிலால் மேனாட்டுப்பாஷைகளில் தோன்றுவனபோல் தமிழிலும் வெளிக்கிளம்ப வேண்டும். தற்காலத்தில் காணப்படும்

தமிழ் வெளியீடுகள் இன்னும் சரியான முறைகளிலில்லை. ஏனெனின் நமது நாட்டினர் ஆங்கிலத்தில் வரைகின்றனரே யல்லாது தமிழில் வரையத் துணிவடைகின்றனரில்லை. ஆதலால் ஆங்கிலம் கற்காதவர்களுக்கு அவர்களுடைய அபிப்பிராயம் புலப்படக்காரணமில்லை. ஆதலால் சரித்திர ஆராய்ச்சிகளுக்கு ஆதாரமான பொருள்கள் யாவும் தமிழிலேயே வெளிப்படுத்தப் படவேண்டும். சுவதேச பாஷையிலே சரித்திரங்கள் நவீன சாஸ்திரங்கள் முதலிய அறிவு நூல்களின்மையினால்தான் அன்னிய நாட்டுக்கிரஹணம் இன்னும் விமோசனமாகவில்லை. ஆகையால் மீண்டும் தமிழ்ச்சங்கங்கள் தோன்றல் வேண்டும்.

பாண்டியர்களுடைய வம்சாவளிகள் பல தானசாஸனங் களினின்றும் பட்டயங்களினின்றும் கண்டு கொள்ளப் படலாம். சின்னமனூர்சாஸனங்கள், வேள்விக்குடிசாசனங் கள் எனப் பெயரிடப் பட்டிருக்கும் ஆதாரங்கள் உதாகரணங் களாய்க் கூறப்படலாம். அவைகளினின்றும் ஆதி பாண்டி யர்களுள் தெரிந்து கொள்ளக் கூடியவன் தலையாலங் கானத் துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்று சொல்லப்படுகின்றான். அவனுக்கு முந்தி ஐந்து மன்னர் களை அனுபந்தத்தில் பாண்டிய வம்சாவளியில் காண்க. அக்காலத்திய பூகோள சாஸ்திரமும் குடிகளுடைய நிலைமையும் சிலப்பதிகாரத்தினின்றும் அதனுரையினின் றும் தெரிந்துகொள்ளப்பாலன. அவைகள் விரிப்பிற் பெருகும். இவன் ஆரியர்களை வென்றவன். கோவலனைக் கொலைசெய்ய உத்தரவளித்தவன் இம்மன்னனென்பதும், இவன் கண்ணகியின் துயரத்தைக் கேட்டபின் தானே உயிரைப் போக்கடித்துக் கொண்டனன் என்பதும் தெரிய வருகின்றன.

பல பட்டப் பெயர்களைக் கொண்ட இன்னொரு பாண்டிய மன்னன் நெடுஞ் சடையன் பராந்தகன் என்பவன் சிறு பிராயத்திலேயே தனது யுத்தப் பயிற்சியின் திறமையையும், வீரத் தன்மையையும் காட்டினன். அவன் சிங்காசனமடைந்த காலத்தில் அநேக ராஜாக்கள் கூடிப் பாண்டிய ராஜ்யத்தை அழித்துவிட வேண்டுமென்று போர்புரிந்த காலத்தில் சத்துருக்கள் முறியடிக்கப்பட்டனர். இவன் சேர ராஜனை வென்று முசிறி என்ற துறைமுகப் பட்டினத்தைப் பிடித்துக்கொண்டனன். நாகர்கள் என்றவருடைய வசத்திலிருந்த சாலையூர் பட்டணத்தையும் கைப்பற்றினன். நக்கீரர் அவனது பெருமையைப் புகழ்ந்திருக்கின்றனர்.

மேற்கூறப் பட்டவர்களின் பெயர்களும், காலமும் பல்வித வேற்றுமைகளுடன் பல சரித்திராசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றன. அவைகளைப்பற்றிய விவரங்களை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு தனிப் புத்தகந்தான் வெளிப்படுத்த வேண்டும். சரித்திராசிரியர்களின் அபிப்பிராயங்களைப் பின்பற்றிச் சில மன்னர்களின் பெயர்களையும், குறிப்புக்களையும், வம்சாவளி அத்தியாயத்தில் பார்க்க. சுமார் ஏழாவது நூற்றாண்டுவரையிருந்த பல மன்னர்களைப்பற்றி விசேஷம் இதுவரை தெரியவில்லை. ஆனல் ஏழாவது நூற்றாண்டுமுதல் பத்தாவது நூற்றாண்டுவரை அரசு செய்தவர்களின் வரலாறு சரித்திர காலத்துக்குட்பட்டிருக்கின்றது எனக் கூறலாம். அதற்குமேல் இருநூறு வருஷங்களில் நடந்த பாண்டியநாட்டு விருத்தாந்தம் இதர ராஜ்யங்களினின்றும் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கின்றது. பனிரண்டாவது நூற்றாண்டுமுதல் பதினேழாவது நூற்றாண்டுவரை அநேக அரசர்களின் நாமதேயங்களைக் கணக்கிடக் கூடும். அவர்களுள் பலர் சில சமயங்களில் சோழர்களுக்

குள்பட்டும், வேறு சில காலங்களில் விஜய நகர ராஜ்யத்திற்குள்பட்டும் இருந்தனர் என்று பொதுவாய்க் காணப்படுகின்றனர்.

நிற்க; நெடுஞ் சடையன் என்பானின் காலத்துக்குப் பிறகு தக்ஷிணத்திலிருந்த பல்லவர்கள் பெரியதோர் ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டிருந்தனர். ஆனால் பல்லவ மல்லன் என்கிற சக்கிரவர்த்தி இறந்தபின் பல்லவ ராஜ்யம் சிதறுண்டுபோயிருந்தது. வடபியில் வசித்த சளுக்கியர்களுடைய அரசு தாழ்வுற்றமையால் ராஷ்டரகூடர்களும் காங்கர்களும் வன்மைபெற்றிருந்தனர். சோழ மன்னர்கள் தங்களுடைய செங்கோல் எட்டியமட்டில் ராஜ்யத்தைப் பரத்தவேண்டி நல்ல காலத்தை எதிர்நோக்கி நின்றனர். நெடுஞ் செழியன் இறந்தபிறகு அவன் வம்சத்திலுதித்தவர்களுள் வரகுணவர்மன் காலத்தியவரலாறு மஹா வம்சத்தினின்றும் அறிந்துகொள்ளலாம். அவனுடைய போர் வீரத்தன்மை புகழத்தக்கதாயிருந்தது. சோழ ராஜ்யத்துக்கும் பாண்டிய நாட்டுக்கும் அடிக்கடி யுத்தங்கள் நேர்ந்தன. தஞ்சாவூர் ஜில்லாவை ஜயிக்கவேண்டி அவன் வம்சத்தினர் பத்தாவது நூற்றாண்டுவரை சோழ ராஜ்யத்தை எதிர்த்துத் தாக்கிக்கொண்டிருந்தனர்.

பத்தாவது நூற்றாண்டி னிறுதியில் ராஜ ராஜ சோழன் சேரரையும் பாண்டியரையும் மலைநாட்டில் முறியடித்தான். அதுமுதல் ராஜ ராஜ பாண்டிநாடு என்கிற பெயரிடப்பட்டது. ஒரு சோழ மன்னனும் சோழபாண்டியன் என்கிற பட்டப் பெயருடன் அரசுபுரிந்துளான். கலிங்கத்துப்பரணியில் இச்சம்பவம் ஒருவாறு காணப்பட்டிருக்கின்றது.

பிறகு பன்னிரண்டாவது நூற்றாண்டில் பாண்டிய ராஜ்யம் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்தது. ஜடாவர்மன்,

ஸ்ரீ வல்லப தேவன், பராக்கிரம பாண்டியன், வீரபாண்டியன் ஆகிய பெயர்களைக்கொண்ட சாஸனங்களினால் அவர்களுடைய காலத்திய வரலாறு ஒருவாறு வெளிப்படுகின்றது.

சுமார் (கி. பி.) 1251-ல் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் என்பான் அரியணை யடைந்தான். அவன்காலத்திய மதுரையின் கீர்த்தி உலகப் பிரசித்தமானது. அவனுடைய அரசு சிறப்புற்றோங்கி நின்றது. அவன் சந்திரகுலமணி என்றும் மதுரைத் திலகன் என்றும் கேரள சத்துரு என்றும் இலங்கையை வென்ற இரண்டாவது இராமன் என்றும் சோழ வம்சத்துக்கு இடியேறு என்றும் காகதீய மன்னனாகிய கணபதிக்குச் சிங்கம் என்றும் காடக மன்னனுக்கு அங்குசம் என்றும் பல்வாறு புகழப் பெற்றவன். கர்னாடகத்தில் அரசுபுரிந்த ஹொய்ஸாலரிடமிருந்து ஸ்ரீரங்கத்தை அவன் வென்றான். கொங்குநாடு அவன் வசம் ஆயிற்று. தமிழகமே அவனுக்குள் பட்டுவிட்டது என்றால் போதுமானது.

அக்காலத்திய சரித்திரத்துக்கு உதவியாளர் முஸ்லிம்களும் ஆவர். அவர்களுள் ஒரு சரித்திராசிரியரால் குறிப்பிடப்படும் *மஆபர் என்கிற பிரதேசம் பாண்டிய நாடுதான் என்றும் கூறப்படுவதுண்டு. அவ்வாறாயின் குவிலானுக்கும் நெல்லூருக்கும் இடையிலுள்ள நாடு முற்றிலும் அக்காலத்தில் பாண்டிய ராஜ்யத்தைச் சார்ந்தது என்று சொல்வதற்கிடமுண்டு.

சிதம்பரம் (பெரும்பெற்றப்புலியூர்) புதுக்கோட்டை திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் காணப்படும் பல

* மஆபர் என்பது யாது எனும் விவகாரம் இன்னும் முடிவு பெறாதது.

சாசனங்கள் ஜடாவர்மன் வீரபாண்டியனின் வரலாற்றை விளக்குகின்றன.

இரட்டை மீனையும் கோதண்டராமனையுங் கொண்ட ஒரு நாணயமும் வேறு பல அடையாளங்களையும் கொண்ட நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. அவைகளும் சரித்திர வரலாறுக்கு உபயோகமானவைகளாகும்.

மீண்டும் வேறு ஒரு ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் என்பானின் வரலாறும் கிடைத்திருக்கின்றது. அவனுடைய காலத்தில்தான் மார்கோபோலோ என்கிற அன்னியநாட்டு பிரயாணி விஜயம் செய்திருந்தனன் போலும். அவனுடைய காலத்தில் சோழ வம்சத்தவர் அரசாட்சியைக்குறிக்கும் விவரங்கள் கிடைக்கவில்லை. ஒருகால் அவர்கள் குன்றிவிட்டனர் போலும். சில ஆண்டுகளுக்குப் பிறகு மஹாவர்மன் குலசேகர பாண்டியன் ராஜ்யம் செய்த காலத்தில் அன்னிய நாட்டார் இந்நாட்டில் தலையையுங் காட்டக்கூடவில்லை என்று சில முஸ்லிம்கள் வரைந்திருக்கின்றனர். அக்காலத்திய செல்வத்தை அவர்கள் வர்ணித்திருக்கின்றனர். மலிக்காபூர் தெஹ்லிக்கு வாரிக்கொண்டு போன செல்வமே அதற்குச்சான்றாகும். அதுமுதல் பாண்டியர் செல்வம் சிதைவுற்றது என்று கூசாமல் கூறுவோம். அதுவும் இந்நாட்டைப்பிடித்த ஒரு கிரஹணமாகும். [1311 (கி. பி.) ஏப்ரல் மாதம்]. அக்காலத்திலிருந்த ஒரு சுந்தரபாண்டியன் தன் இராணிமார்களுடனும் எஞ்சி நின்ற தனத்துடனும் மதுரையை விட்டே ஓடின சம்பவம் முதல் பதினேழாவது நூற்றாண்டின் ஆரம்பம் வரை பல பாண்டிய மன்னர்களின் சாதாரண விருத்தாந்தங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளைப் பற்றிய நூல்களும் இரண்டு மூன்றுவெளியாக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்தாவது சருக்கம்.

சோழர்கள்.

சோழர்களின் ராஜ்யம் சோழமண்டலம் எனப்படுவதுண்டு. அதன் விஸ்தீரணமும் எல்லைகளும் அடிக்கடி மாறுதல்களடைந்திருந்தன. ஆயினும் "கடல் கிழக்குத் தெற்குக் கரை பொரு வெள்ளாறு, குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில் ஏணாட்டுப் பண்ணையிருப்பது நாற்காதஞ் சோணாட்டுக்கெல்லையெனச் சொல்" என்கிற ஒரு பாட்டுண்டு என்பதைமட்டில் கூறுவாம். அவ்வாறே தலைமை நகர்களும் மாறிக்கொண்டிருந்தன. அவைகளுள் உறந்தை (உறையூர்) என்பதையும் புகார் (காவிரிப்பூம்பட்டினம் அல்லது காகந்தி அல்லது சம்பாபதி) என்பதையும் குறிப்பிடலாம். சோழ மன்னர்களின் வம்ச விருத்தாந்தமும் அங்ஙனமே பல வேற்றுமைகளுக் குள்பட்டதாகும். பரதகண்டம் என்கிற பெயருக்கே காரணமாகிய துஷ்யந்தன் வம்சத்திலுதித்த ஆச்சிரதன் என்பானின் குமாரன் சோழன் என்பான் சோழ நாட்டை முதலில் ஸ்தாபித்தவன் என்றும், இவன் முதலீகச் சோழவம்சம் உண்டாயிற்று என்றும் சொல்வது வழக்கம். அவன் வம்சத்தில் உதித்தவர்களுள் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியின் புதல்வனாகிய * கரிகாலன் முதன்முதலில் பிரசித்தியடை

---

* இப்பெயர்கொண்ட மன்னர்கள் வேறு சிலரும் இருந்திருக்கின்றனர். அவர்களுள் பராந்தகச் சோழன் குமாரன் ஒருவன். இப்பராந்தகன் காலத்தில்தான் உறையூர் மண்மாரியால் நாசம் செய்யப்பெற்றது. வேறொரு கரிகால சோழன் பட்டினப் பாலை கொண்டவன். வேறொருவன் வீரபாண்டியருடன் போரிட்டவன். சேர மன்னனையும் பாண்டிய மன்னனையும் வெண்ணில் என்ற இடத்தில் ஜயித்தவன். கருங்குழலாதனால் பாடப்பெற்றவன்.

ந்த மன்னன். அவனது அரசாட்சியைப்பற்றிய விவரங்கள் சில நமக்கு எட்டியிருக்கின்றன.

சிலப்பதிகாரம் என்கிற நூலில் இவ்வரசனின் அரசாங்க மேன்மையும் ஐசுவரியமும் காணக் கிடக்கின்றன. அவன் பிறப்பதற்குமுன்னரே அவன் தகப்பன் இறந்துவிட்டமையால் சிறு பிராயத்தினின்று சத்துருக்களால் பீடிக்கப்பட்டான். அவன் குழந்தையாயிருக்கும்பொழுது அவன் தகப்பனின் ராஜ்யத்தைக் கைப் பற்றிக் கொண்ட அரசன் ஒருவனின் கொடுமையால் ஓரிரவில் அக்குழந்தை தூங்குங் காலத்தில் அவனிருந்த வசதி தீக்கு இரையாக்கப்பட்டது. ஆனால் அவனது செவிலித் தாய் அவனைக் காப்பாற்றிவிட்டனள். அக்காலத்தில் காலில் ஏற்பட்ட தீயின் வடுவினால் கரிகாலன் என்ற பெயர் தோன்றலாயிற்று என்று கூறுவது வழக்கம். அவன் சில கஷ்டங்களுக்குள்ளாய் நின்று பின்னர் தக்க வயது பெற்றகாலத்தில் தனது பூர்வீகருடைய சிங்காஸனத்தைக் கைப்பற்றலாயினன். உடனே பாண்டியர்களுடனும் சேரர்களுடனும் யுத்தம் செய்யவேண்டி நேரிட்டது. சேர ராஜன் அவமானமடைந்து இறந்தனன். பிறகு அனேக மன்னர்களுடன் யுத்தம் புரிந்தான். அவன் நடத்திய யுத்தங்களில் ஜயமடைந்தான். காஞ்சீபுரம்வரை அவன் ராஜ்யம் பரவிற்று.

அவன் அரசுபுரிந்த காலத்தில் காவிரியாறு குடிகளுக்கு உபயோகப்படுமாறு அதினின்றும் சில கிளைகளும் கால்வாய்களும் பிரிக்கப்பட்டன. அந்நதியின் வெள்ளத்தினால் சேதம் ஏற்படாமல் இருக்கும்படி சுமார் நூறு மைல் தூரம் இரு கரையும் உயர்த்தப்பட்டு பலப் படுத்தப்பட்டது. இவ் வேலைக்கு உதவியாயிருந்தவர்கள் இலங்கைத் தீவில் நடந்த ஓர் யுத்தத்தில் கைது செய்யப்பட்ட போர்வீரர்களாகும்.

அந்நதியின் முகத் துவாரத்திலுள்ள காவிரிப் பட்டினம் வெளி நாட்டு வியாபாரத்திற்குத் தகுதியான இடமென்று அதைத் தலைமை நகராக்கிக்கொண்டான். ஏனெனின் திருச்சிராப்பள்ளியிலுள்ள தலைமை நகர் (உறையூர்) மிகவும் உள்நாடு. ராஜதானித் தலைமை நகரை மாற்றினதனால் ராஜ்யத்தின் செல்வம் அதிகரித்துக்கொண்டிருந்தது.

அவனது கல்வி யபிமானம் சில நூல்களில் புகழப்பெற்றிருக்கின்றது. பண்டிதர்களுக்கும் வித்தியார்த்திகளுக்கும் பொருளுதவி செய்தான். அவன் கரிகாற் பெருவளத்தான் என்ற பட்டப் பெயரால் பாடல்பெற்றவன் ஆனான்.

கரிகால சோழனுக்குப் பிறகு கிள்ளிப் பெயர்பூண்ட பலர் அரசாண்டிருப்பதாய்ப் பல கவிகளின் கூற்றினால் ஏற்படுகின்றது. நெடுமுடிக்கிள்ளி, கழற்கிள்ளி, இளங்கிள்ளி, நலங்கிள்ளி, கிள்ளிவளவன், பெருநற்கிள்ளி என்பவர் உதாரணங்களாவர். இவர்களுள் சிலருக்கு வேறு பெயர்களும் உண்டு. நெடுமுடிக்கிள்ளிக்கே வடிவேற்கிள்ளி, வெல்வேற்கிள்ளி, மாவண்கிள்ளி எனப் பல பெயர்கள் உண்டு என்பது தெரிகின்றது. அவர்கள் எல்லோரும் தமிழகத்தின் பெருமையை வளர்த்துவந்தனர் என்பதற் கையமில்லை.

மேற்கூறப் பட்டவர்களுள் கிள்ளிவளவன் ஒருவன் பாண்டியர்கள், சேரர்கள் முதலிய ஒன்பது அரசாங்கங்களுடன் அடிக்கடி போரிட்டுக்கொண்டு நின்றான் என்பது பல கவிகளால் வெளிப்படுகின்றது. பெருநற்கிள்ளி என்பவனால் நடத்தப்பட்ட யாகத்தின் விவரம் ஔவையார் பாடல்களில் காணக்கிடைகின்றது.

சுமார் கி. பி. நான்காவது நூற்றாண்டு முதல் ஒன்பதாவது நூற்றாண்டு முடியும்வரை சோழநாடு பிளவுபட்டுப்

பல பல்லவ அரசர்களுக்குள் அடங்கியிருந்தது. மறுபடியும் விஜயாலயன் என்பவனால் சோழராஜ்யம் தனி அரசாய் விளங்கலாயிற்று. அவனது வம்சத்தவர் சுமார் *இருபத்தைந்து மன்னர்களின் வரலாற்றைக் குறிப்பிடலாம். இவ்வம்சத்தில் தோன்றியவர்களுள் சிலர் ராஜபுத்திர வம்சஸ்தர்களாகிய சளுக்கிய ராஜ்யத்தையும் கைப்பற்றியிருந்தனர். இவ்விருராஜ்யங்களுக்கும் நடந்த யுத்தங்களிலடைந்த வெற்றிகளையும் தோல்விகளையும் காட்டக்கூடிய சாஸனங்கள் இருதரத்திய மன்னர்களாலும் பல வெளியாக்கப்பட்டிருக்கின்றன. பல்லவர்களுடைய கடையரசனாகிய அபராஜிதனைச் சோழ வம்சத்திய ஆதித்தியன் ஜயித்தது முதல் சோழநாடு முஸ்லிம்களால் பிடிக்கப்பட்டவரை சில அரசர்களின் சரித்திரத்தை எடுத்துரைப்பாம்.

முதன் முதலில் ஆதித்தியன் மகனான பராந்தகன் மதுரையை வென்று இலங்கைக்குப் போய் அவ்விடத்திலும் ஜயம் பெற்றான் என்பதும் அவனது ஆட்சியில் கிராமபஞ்சாயத்து ஓங்கிவளர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இவ்வம்சத்தில் பத்தாவது அரசனாகிய ராஜ ராஜன் கீர்த்தி மிக அரியது. ஏனெனில் அவன்தான் தமிழகத்திலுள்ள நாடுகளையும் இலங்கைத்தீவையும் முதன் முதலில் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்தவன். சுமார் இருபத்தெட்டு ஆண்டுகள் அவன் அரசு புரிந்து இறக்குந்தறுவாயில் சோழராஜ்யம் உத்தம நிலைமையிலிருந்தது. தஞ்சையில் காணப்படும் பிரஹதீசுவரர் கோயில் இவனது முயற்சியின் பயனெனின் வேறென்ன கூறவேண்டி நிற்கின்றது. கோயில் சுவர்களின் கற்களில் வெட்டப்பட்டிருக்கும் விருத்தாந்

*சோழவம்ச விருக்ஷம் அனுபந்தத்தில் காணப்படும்.

தங்களைப் படிக்கக் கேட்டவர்களுக்கு மேற்கூறப்பட்ட விஷயங்களின் தத்துவம் விளங்கும்.

இம்மன்னனின் குமாரத்தி குந்தவ்வையார் கீழச் சளுக்கிய விமலாதித்தியனை மணம் புரிந்து கொண்டதனால் அவர்கள் வம்சத்தில் தோன்றிய (பதினேழாவது சோழன்) குலோத்துங்க சோழன் சென்னை ராஜதானியின் வட எல்லை வரையிலும் ஒருகால் அரசு புரியலாயினன். ராஜ ராஜனின் நன்கொடைகள் பலவுள. அவன் சைவசமயத்தில் ஆழ்ந்தவனாயினும் நாகையில் புத்தர்களுக்கும் கோவில் கட்டுவித்தான். அதைப் பதினைந்தாவது நூற்றாண்டு வரை வெளிநாட்டார்கள் தரிசனஞ் செய்து கொண்டிருந்தனராம். அதன்பிறகு அது பின்னமாய்க் கிடந்ததைக் கண்ட பாதிரி மார்கள் அவ்விடத்திலேயே 1867-ல் ஒரு மாதா கோவில் ஸ்தாபித்தனராம். அந்நகரத்தில் புத்தர் ஆலயம் இருந்த தென்பதற்குச் சான்றுகள் இன்று கிடைத்திருக்கும் 292 புத்த விக்கிரங்களாகும். இந்த விக்கிரங்கள் நாகை வெளிப் பாளயத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் நியாயஸ்தலத்தின் எதிரில் பரந்து நிற்கும் விளையாட்டுப் புலனில் வெட்டி யெடுக்கப் பட்டதாகும். அவ்வகளாக்கப்பட்ட உலோகம், அவைகளுடைய உருவம், அளவு முதலியவைகளின் கணக்குகள் அவைகளின் அறிகுறிகள், ஆகியவைகள் இனி ஆராய்ச்சிசெய்யப் படவேண்டி யிருக்கின்றன.

பதினொன்றாவது சோழனான ராஜேந்திரன் வங்காளக் குடாக்கடலையுந் தாண்டி பர்மா தேசத்தில் சில பாகங் களையும் அண்டமன் முதலிய சில தீவுகளையும் ஜயித்தனன் என்றால் அவனது கப்பற்படை விசேஷத்தைக் கவனித்துப் பாருங்கள். வடக்கில் கங்காநதி தீரம்வரை சென்று வங்காள த்திலும் யுத்தஞ்செய்து வென்றதனால் கங்கை கொண்டான்

என்ற பட்டந்தரித்துத் திரும்பி வந்தவுடன் கங்கைகொண்ட சோழபுரம் என்கிற ஒரு நகரத்தையும் திருச்சி ஜில்லாவில் ஸ்தாபித்தனன். அதனருகிற் கட்டப்பட்ட பெரிய ஏரி ஒன்று மிக நாகரிக தசையை யடைந்தவர்களேயும் வியப்புறச் செய்யும்.

மேற் கூறப்பட்டிருக்கும் குலோத்துங்கன் முதன் முதலில் சளுக்கிய ராஜனுய் விளங்கினன். பிறகு சோழ ராஜ்யத்தையும் அடைந்தனன். இங்கிலாந்தை வென்ற நார்மன்-பிரஞ்சு என்கிற இனத்தாரின் தலைவனுன உவில்லீயம் (முதலாவது) என்பானுக்குச் சமகாலத்தவன். இவ்விருவரும் அரசுபுரிந்த காலத்தில் [சுமாராய் கி. பி. 1086-ல்] இங்கிலாந்திலும் தமிழகத்திலும் பூமியளவு (ஸர்வே) செய்யப்பட்டதுமன்றி வரி முதலியவைகள் நில விஸ்தீரணத்திற் கேற்றவாறு விதிக்கப்பெற்றன. இது ஒரு சரித்திர சம்பந்தமான ஒற்றுமை பெற்ற ஆச்சரிய சம்பவம்.

இவனது வெற்றிகள் பல உள்ளன. இவனுக்கு உதவியாய் நின்ற சேனுதிபதியான கருணுகர பல்லவனது வீரப் போர்களேக் கலிங்கத்துப்பரணியில் காணலாம். கலிங்கத்துப் பரணி கருணுகரத் தொண்டமான்மீது ஜயங்கொண்டானுல் பாடப்பட்டது. அது கலிங்கத்தில் ஆனேயாயிரம் அமரிடை வென்ற அரசனது ஜயத்தைப்பற்றிப் புகழ்கின்றது. அவனுக்குத் தொண்டைமான் என்ற பட்டம் அரசனுல் அளிக்கப்பட்டது. கருணுகர பல்லவனுக்குச் சொந்த மாகாணம் செங்கற்பட்டு ஜில்லாவில் இப்பொழுது வண்டலூர் என்று கூறப்படும் வண்டை நகரத்தைத் தலைமை நகராயுடைத்து. அதே ஜில்லாவிலுள்ள காஞ்சியில்தான் குலோத்துங்கனும் அரசுசெய்தான்.

அக்காலத்தில் சைவ மதமே தழைத்தோங்கி நின்றது. ஆதலால் ஸ்ரீரங்கத்தில் வசித்த வைஷ்ணவாசிரியரான ஸ்ரீ ராமானுஜருக்குச் சில தீங்குகள் ஏற்பட்டன. அவர் ஹொய்ஸால ராஜ்யத்தில் அடைக்கலம்பெற்ற வரலாறு முன்னரே (முதற்பாகம் 159, 160-வது பக்கங்களில்) கூறப்பட்டிருக்கின்றது.

குலோத்துங்கனுக்குப்பின் ஒருவர் பின்னொருவர் இருநூறு ஆண்டுகள் சோழ மண்டலத்தில் நல்லரசு செலுத்தினர். பதினான்காவது நூற்றாண்டில் இம்மண்டலம் சிற்றரசுகளாய்ப் பிரிந்துவிட்டது. பாளையக்காரர்கள் என்கிற பொதுப் பட்டப் பெயர்களுடன் அக்காலத்தில் செங்கோல் செலுத்திய விஜயநகர ராஜ்யத்திற்கு உள்பட்டு வாழ்ந்திருந்தனர். ஆனால் விஜயநகரத்தின் வலுவு குன்றிய காலத்தில் முஸல்மான்கள் தலை எடுக்கலாயினர். அல்லாவுத்தின் கல்ஜி சக்கிரவர்த்தியா யிருந்தகாலம் முதல் அடிக்கடி தென்னாடு எதிர்க்கப்பட்டது. அதிலுள்ள நாடுகள் ஒன்றன்பின்னொன்றாய் நவாப் ஸம்ஸ்தானங்களாய் மாறிவிட்டன. அவைகள் இம்மாதிரி காலவளவில் அன்னிய நாட்டுக் கிரஹணத்துக்குள் பட்டுவிட்டன.

சேரர்கள் (கேரளர்கள்).

கிறிஸ்தப்தத்தின் முதலாவது நூற்றாண்டில் பாண்டிய நாட்டின் ஒரு பாகமாகிய திருவனந்தபுரம் (டிராவன்கூர்) வேணாடு என்று பெயர் பெற்றிருந்தது. மேற்குமலைத் தொடர்களின் தென்கோடியாகிய சில பாகங்கள் சேரம் (கேரளம்) என்ற பெயருடனிருந்தன. இவைகளெல்லாம் கூடிய ஒரு ராஜ்யம் ஐந்து மாகாணங்களைக்கொண்டிருந்தது. வடக்குப் பழனிமலை, கிழக்குத் தென்காசி; மேற்குக் கோ

ழிக்கோடு, தெற்குக் கடற்கரை இந்த எல்லைகளுக்கிடையில் பதிநான்காத வழிகொண்ட நாடு என்று சொல்வது வழக்கம். மேனுடுகளுடன் வியாபாரம் செய்வதற்குத் துறைமுகப் பட்டினங்கள் கேரளத்தில்தான் அதிகமாயிருந்தன. அராபியர்கள் அவ்விடங்களிலிருந்து மிளகு முதலிய சாமான்களை ஏற்றுமதி செய்துகொண்டிருந்தனர்.

இந்தக் கேரள தேசம் சோழர்களால் அடிக்கடி எதிர்க்கப்பட்டிருந்தபடியால் சில சாசனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் மூலமாய் வஞ்சி (வாஞ்சி அல்லது கரூர்) என்பது முதலில் தலை நகரமாயிருந்ததாகவும், பிற்காலத்தில் திருவஞ்சிக்களம் தலைமை நகராயிருந்ததாகவும் தெரிகின்றது. சில சமயங்களில் சேரநாடு வேறு, கேரளம் வேறு என்று பொருள்படும் சாசனங்களும் காணப்படுகின்றன. மேலும் சேரன் செங்குட்டுவான் என்பவன்தான் தெரிந்தமட்டில் முதல் அரசன் எனக் கூறப்படலாம் என்று சிலரும் ஆதன் என்பவன் முதல் அரசன் என்று வேறு சிலரும் கூறுகின்றனர். மேலும் ஆதிசேரர்கள் என்று ஐந்து பெயர்களையும் குறிப்பிடுவதுண்டு.

ஆயினும் தெரிந்தவரை கி. பி. 1125 முதல் சில மன்னர்களைக் குறிப்பிடக்கூடிய விஷயம் திருவனந்தபுர ராஜ்யத்திய ஆதாரங்களில் காணப்படலாம். அவைகளின் 'சமகாலத்திய சோழ மன்னர்களது ஆட்சியைப்போலவே சேர ராஜ்யமும் ஓங்கி நின்றது என்று பொதுவாய்த்தான் தற்காலம் கூறக்கூடும்.

ஆறுவது சருக்கம்.

தமிழகத்தின் நாகரிகம்.

பாரத வர்ஷத்தில் எக்காலத்திலும் கிராமங்கள்தான் ஆட்சிமுறைக்கு முதற்படிகளாய் நின்றன. ஆரியர்களா

யினும் திராவிடர்களாயினும் இம்முறையைத் தழுவி நின்ற னர். அதுதான் இந்நாட்டுக்குரியது என்பதற் கையமில்லை. கிராமங்களுக்குள்ளடங்கியன சேரிகள் எனப்படும். தென் ஞட்டில் தனியூர்கள் என்ற சில நகரங்களும் ஆட்சி முறை க்கு ஆதாரங்களாய் நின்றிருக்கின்றன.* அனேக கிராமங் களும் தனியூர்களும் சேர்ந்த ஒரு பிரதேசத்துக்கு நாடு (தாலூக்கா) என்று பெயரிடப்பட்டிருந்தது. அனேக நாடு களைக்கொண்ட ஒரு தேசத்துக்கு வளநாடு (ஜில்லா) அல்லது கோட்டம் என்று பெயர். அனேக வளநாடுகள் கொண்டது ஒரு மண்டலம் (சோழ மண்டலம், சேரமண்டலம் உதா கரணங்களாம்) இம்மாதிரியான பாகுபாடுகளைக் குறிக்கக் கூடிய எல்லைகள் அனேகமாய் மலைகள், குன்றுகள், ஏரிகள், ஆறுகள், வாய்க்கால்கள், பாதைகள், ஆகிய இயற்கைப் பொருள்களாகும். தமிழகம் சிறப்படைந்த காலத்தில் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதைப்போல் பூமியளவு செய்யப் பட்டுக் கிராம எல்லைகளில் கல்கள் (கண்டக்கல், காணிக்கல் முதலியவை) அமைக்கப்பட்டன. மேலும் நீண்ட காலமாய் ஏற்பட்ட ரஸ்தாக்களும் எல்லைகளாய் விளங்குவதுண்டு. இவைகளுக்கு உதாகரணங்கள் ஆங்காங்கு இன்றைக்கும் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பாகுபாடுகளுக் கிணங்க கணக்குப் புஸ்தகங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அவைகள் அக்காலத்திலிருந்தபடியே இக்காலத்தில் காணப் படாவிடினும் சில சாஸனங்களிலும் பட்டயங்களிலும் சில உதாகரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளுள்

*சில கிராமங்களைக் கொண்ட தனிப்பாகத்திற்கு சதுர்வேதி மங்கலம் என்கிற பெயரும் உளது. ராஜ ராஜ சதுர்வேதி மங்கலம் உதாகரணமாகும்.

சுமார் முப்பதே கிராமங் களையுடைய கக்கனூரும் எழுவை லக்ஷங் கிராமங்களையுடைய ரட்டப் பாடியும் கூறப் படலாம்.

நிற்க; கிராமங்களாயினும் நகரங்களாயினும் பெருக வேண்டியதற்கு வேண்டிய முன் ஏற்பாடுகள் இருந்தன. ஒரு கிராமத்தைச் சுற்றிலும் புது வீடுகள் கட்டப்பட வேண்டிய தற்காகக் காலி பூமிகள் விடப்பட்டேதான் பயிர் முதலிய வைகள் செய்வதற்குப் பூமிகள் திருத்தப் பட்டிருந்தன. கிராமத்தில் வசிக்கும் ஒவ்வொரு தொழிலாளிகளுக்கும் தனித் தனி தெரு ஏற்பட்டிருந்தது. ஏனெனின் அந்தந்த தொழில் செய்பவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு அவரவர்களுக்கு ஆகவேண்டிய விஷயங்களைக் கவனித்துக் கொள்ள சௌக்கியமாயிருந்தது. மேலும் ஒவ்வொரு கிராமமும் சிறு சிறு பாகங்களாக (வார்ட்டு)ப் பிரிக்கப் பட்டிருந்தன. ஏனெனின் சபைகளுக்குப் பிரதி நிதிகள் தெரிந் தெடுக்க வேண்டிய காரியங்களுக்கு அது அனுகூலமாயிருந்தது.

கிராமங்களில் போக்குவரவுக்கு வேண்டிய பாதைகள் ஒதுக்கப் பட்டிருந்தன. சவங் கொண்டுபோவதற்குத் தனி மார்க்கம் ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஒவ்வொரு இனத் தோருக்கும் இடுகாடுகள் தனித் தனியே ஏற்பட்டிருந்தன. குடிப்பதற்குச் சுத்த ஜலாதாரமும் குளிப்பதற்குக் குளங் களும் தனித் தனியே ஏற்படுத்தப் பட்டிருந்தன. ஆடு மாடு கள் மேய்ப்பதற்குப் புல் மைதானங்கள் விடப் பட்டிருந்தன. அவைகளுக்கு நிழல் கொடுக்க மரங்கள் வைக்கப்பட் டிருந்தன.

கிராமங்களில் கடை வீதிகள் நேர்த்தியாயும் ஒழுங்காயும் நிர்மாணஞ் செய்யப்பட்டிருந்தன. கிராமக் காப்பாளர்கள், நகரக் காப்பாளர்களுக்குப் பொது ஸ்தலங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

"கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது பழமொழியானதனால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோவிலாவதிருந்ததென அறிந்துகொள்க. தென்னாட்டின் கோவில்களின் அழகையும் ஆராதனைகளையும் கண்ணால் கண்டவர்களுக்கு ஆனந்தம் உண்டாகும். அவைகளை அழிக்கத் தலைப்பட்ட முஸ்லிம்களும் நாளடைவில் அவர் வழக்கத்தை நிறுத்திவிட்டனர். அவைகளுள் சிலவற்றிற்கு "மானியம்" "இனம்" "நவாப் சாஸனம்" முதலியவைகளும் அளிக்கப்பட்டன. அவைகள் பல இன்றைக்கும் கோவில்களுக்கு ஆதாரங்களாயிருக்கின்றன.

கோவில்கள் கட்டப்பட்டிருக்கும் முறையே வைதீக மத சம்பந்தம் பெற்றது. அவைகளின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு தத்துவத்தை விளக்கிக் காட்டுகின்றது. கோவில்களின் விமானம், கோபுரம், மண்டபம், கர்ப்பக்கிரகம், பிராகாரம் ஆகிய ஒவ்வொன்றும் கணக்காய்க் கட்டப் பட்டிருப்பதுடன் அவைகளுள் சில உண்மைகளும் பொதிந்துகிடக்கின்றன. அவைகளில் அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்களும் பக்தர்களின் திருவுருவங்களும் எத்தனையோ ஜீவாத்மாக்களுக்கு நல்ல வழியைக் காட்டி நிற்கின்றன. அவைகள் மதப் பற்றில்லாதவர்களுக்கும் அன்னிய மதஸ்தர்களுக்கும் சில காலங்களில் பரிகாசத்திற்கிடங்களாயிருக்கின்றன. ஆனால் எத்தனை கோடி மனிதர்கள் அவைகளால் ஆனந்த சாகரத்தில் மூழ்கி நன்னெறி

பற்றிக்கடைத்தேறியுள்ளார் என்பதை ஊன்றிப்பார்த்தால் அவைகளினால் தோன்றும் நன்மைகள் அதிகம் காணப்படும். நாகரிகத்தில் சிறந்தவர் எனப்படும் மேனாட்டு மதப் பற்று கொண்டவர்களும் மாதாகோவில் மதிலில் ஒரு வெடிப்புக் கண்டாலும் அதைச் செம்மைப்படுத்தத் தன நிதி ஏற்படுத்துகின்றனர். அவைகள் மானிடர்களுக்கு இன்றியமையாதவை. ஒரு ராஜ்யத்தில் அவைகள் குன்றிடில் குடிகளுக்கு மதப்பற்று குறையும், அமைதி ஏற்படாது. அக் கோவில்களில் பூஜை செய்வதற்கும் தொண்டு செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள் ராஜேந்திர சோழனுடைய கணக்குகளிலிருந்தும் கண்டுகொள்ளலாம். இக்காலத்திலும் முற்காலத்திய முறைப்படி நடக்கும் ஆலயங்கள் பல இருக்கின்றன. ஆனால் கி. பி. பதினோராவது நூற்றாண்டில் பாரத மக்கள் செய்திருந்த நடவடிக்கைகளையறிந்துகொள்வது நமது அறிவீனத்தைப் போக்கும். அதற்கொரு சான்றுரைப்பாம்.

கோவில்களின் ஆட்சிமுறையில் சிறந்த பொற்சபையென விளங்கும் சிதம்பரம் நடராஜர் கோவிலின்கண் நடைபெறும் தினசரிகைகளையும் உற்சவங்களையும். ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ஸ்வராஜ்யம் என்பதன் லக்ஷணம் செவ்வனே விளங்கும். தில்லைவாழந்தணர்களின் சபைகளும் அவைகளின் அதிகாரங்களும் சட்ட திட்டங்களும் தண்டனை முறைகளும் தெரிந்துகொள்ளப் படவேண்டிய அம்சங்களாகும்.

மேலும் கோவில்களின் அமானத்தைச் சரிவர நடத்த வேண்டிய தர்ம கர்த்தர்கள் கிராமத்தோரால் நியமிக்கப் பட்டிருந்தனர். அனேக ஆலயங்களில் காணப்படும் தான சாஸனங்களில் தர்மத்தின் விவரங்கள் குறிக்கப்பட்டிருக்

கின்றன. விக்கிரகத்துக்குப் பூஜை செய்வதற்காக ஏற்பட்ட அன்னம் பரதேசிகளுக்கும் வேலையாளர்களுக்கும் பங்கிடப் படவேண்டியதற்காகவே. கோவில்களில் வேதாத்தியயனஞ் செய்வதற்கும், வியாகர்ணம் முதலிய சாஸ்திரப் பயிற்சி செய்வதற்கும் தானங்கள் ஏற்பட்டிருந்தன. கல்வியை விருத்தி செய்வதற்காக கோவில் சன்னதிகளில் வித்துவான்களின் சபைகளில் உயர்ந்த நூல்கள் அரங்கேற்றுதல் செய்யப்பட்டன. அக்காலத்தில் நூலாசிரியர்களுக்குப் பரிசுகளளிக்கப்பெற்றன.

மேலே கூறப்பட்ட தர்ம காரியங்களைச் சரிவரச் செய்யாதவர்களையும், தர்ம சொத்துக்களைத் துர்விநியோகம் செய்தவர்களையும் கிராம சபையார்கள் விசாரணை செய்து தண்டிப்பது வழக்கம்.

இம்மாதிரியான கிராம சபைகள் அழிந்து போனதால் தான் அனேக கோவில்களின் தர்மங்கள் பாழாய் விட்டன. அவைகளை மேன்பார்வை பார்க்கும் அதிகாரிகள் இட்டது சட்டமாய் விட்டது.

தமிழகத்தின்கண் தோன்றிய கல்வியும் உத்தமமான நிலைமையிலிருந்தது. அரசர்களால் ஆதரிக்கப்பெற்ற கவிவாணர்களின் வரலாறுகளுக்குக் குறைவில்லை. மேதாவிகளான வித்துவான்கள் அரசனுக்கு நெருங்கிய பதவியிலிருந்தனர். ஒருகால் அக்காலத்திலும் தரித்திரத்தில் ஆழ்ந்த கல்விமான்களிருந்திருக்கலாம். ஏனெனின் வறுமையின் கொடுமையை விளக்கிக்காட்டும் பாடல்கள் எத்தனையோ காணக்கிடக்கின்றன. ஆயினும் பொதுவாய் அவர்களுக்கு ஆதரவு ஏற்பட்டிருந்ததென்பதற்கையில்லை. கவிகளுக்குக் கனகாபிஷேகம் செய்த மன்னர்களும் பிரபுக்களும் எத்தனையோ பெயரிருந்தனர். இவைகள் கட்டுக்

கதைகளென்று நகைக்கும் அறிவாளர்கள் தமிழரசர்களின் சில சாசனங்களைப் பரிசோதித்துப் பார்க்கக் கடவாராக.

இனி அரசாங்க முறையையும் அதிகார வர்க்கத்தினரையும் பற்றிச் சில விஷயங்கள் கூறுவாம்.

அரசனே ராஜ்யத்திற்குத் தலைவனு யிருந்தான். ஆயினும் மகாஜன சபைகளே அரசாங்கச் சட்டதிட்டங்களைக் கவனித்து வந்தன. சபைகள் காலதேசங்களுக்குத் தக்கவாறு ஏற்பட்டிருந்தமையால் அவைகளுள் சில வித்தியாசங்களும் ஏற்பட்டிருந்தன. நமக்குத் தெரிந்த வரையில் கணப் பெருமக்கள் அல்லது கணவாரியப் பெருமக்கள் என்பவர்களின் குழாம் நியாய இலாகாவைக் கவனித்தது. ஸ்ரீகோயில் வாரியம் என்பது மத சம்பந்தமான விஷயங்களை மேன்பார்வை செய்தது. கிராமகாரியக்குழாத்தின் அலுவல் அதன் பெயரினுலேயே விளங்குகின்றது. மேலும் சில சபைகளின் பொருள் இன்னும் சரியாய் நமக்கு விளங்கவில்லை. அவைகளின் பெயர்களைமட்டில் சுண்டு காட்டுகின்றோம். அஞ்சஷ்டசபை, உதாசினப் பெருமக்கள், பட்டர் ஆகியவைகள் உதாகரணங்களாம். ஆரியாவர்த்தத்தில் சந்திரகுப்த மகாராஜன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாதிரியாயும் அனேக சபைகள் தென்னுட்டி லிருந்திருப்பதாய் அடியில் காணப்படும் விவரத்தினுல் தெரிந்து கொள்க.

(1) ஒரு கிராமத்தின் முக்கிய குடிகளைக்கொண்ட சபை.

(2) கிராமப்பொது சபை.

(3) வியாபாரிகளின் சபை.

(4) வளநாட்டுச் சபை.

ஒரு சபைக்கு அங்கத்தினராய் நிற்கவேண்டியவர்களுக்கு அம்சங்களாவன :—

(1) தீர்வை செலுத்தப்படக்கூடிய நிலம் கால் வேலிக்கு மேலிருக்கவேண்டும்.

(2) சொந்தப் பூமியில் கட்டப்பட்ட சொந்த வீடு இருக்கவேண்டும்.

(3) வயது 35க்கு மேல் 70க்குள் இருக்கவேண்டும்.

(4) மந்திரபிராம்மணந் தெரிந்தவர்களாயிருக்கவேண்டும்.

(5) யாராவது ஒருவேதம் கற்றுக்கொண்டும் ஒரு பாஷியத்தில் தேர்ந்தவனுயிருந்தால் அரைக்கால் வேலியிருந்தாலும் போதும்.

(6) மேற்கூறப்பட்ட நிபந்தனைக்குள்பட்டிருப்பதுடன் கிராமப்பொதுவேலையிலூக்கமும் சட்ட அறிவும் உள்ளவனுயிருக்கவேண்டும். அவனுடைய சொத்துக்கள் நல்லவழியில் சம்பாதிக்கப் பட்டிருக்கவேண்டும். அவன் மனம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். தேர்ந்தெடுப்பதற்கு முன் மூன்று வருஷங்களுக்குள் எந்த சபையிலும் அங்கத்தினராயிருந்திருக்கக்கூடாது.

யார் சபைகளில் அங்கத்தினராயிருக்கக் கூடாதென்றும் விதிகள் ஏற்பட்டிருந்தன. அவைகள் ஒரு பெரிய ஜாப்தாவாய்க் காணப்படுகின்றன. பழைய குற்றவாளிகள், ஏற்கனவே சபையிலிருந்த காலத்தில் கணக்குகள் சரிவர கொடுக்காதவர்கள், சமூகத்தாரால் பகிஷ்காரஞ் செய்யப்பட்டவர்கள், பிடிவாதக்காரர்கள், பிறருடைய சொத்தை அபகரித்தவர்கள், வர்ணாசிரம தர்மத்திலிருந்து நழுவினவர்கள், அல்லது பாவங்களைப்புரிந்து பிராயச்சித்தம் செய்து

கொண்டவர்கள், துர்நடவடிக்கைகளுள்ளவர்கள், பரத்தையர்களுடன் உறவாடுகின்றவர்கள், ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

இனி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தைக் கவனிப்போமாக. ஒவ்வொரு கிராமத்தின் பிரிவினைகளிலுள்ள முக்கிய இடத்தில் ஒரு பானை வைக்கப்பட்டிருந்தது. அது உண்டியல்போல் சிறிய துவாரத்தையுடையதா யிருந்தது. அந்தத்துவாரத்தின் வழியாய் பனை ஓலைச் சீட்டுகள்போட இடமிருந்தது.

தேர்ந்தெடுக்கும் மனிதர்கள் (ஓட்டர்கள் வாக்காளிகள்) பனை ஓலைச்சீட்டில் பேர் எழுதிப்போட்ட பின்னர் அந்தப்பானையிலுள்ள சீட்டுகள் மகாஜன சபைகள் கூடுமிடத்தில் வேறொரு காலிப்பானையில் குலுக்கிப் போடப்பட்டன. அச்சமயம் கிராமத்திலுள்ளவர்கள் எல்லோரும் ஆஜராயிருந்தனர். அவர்களுள் ஒரு சிறுபிள்ளையால் அப்பானையிலிருந்து ஒரு சீட்டு எடுக்கப்பட்டது. அச்சீட்டிலுள்ள பெயரைப்படித்தவுடன் கிராம புரோகிதர்கள் அப்பெயரைக் கூக்குரலிட்டுச் சொல்லலாயினர். அம்மாதிரியே ஒவ்வொரு கிராமத்துக்கு ஏற்பட்ட அங்கத்தினர்கள் அந்தந்த வகுப்புப் பானையினின்றும் எடுக்கப்பட்ட சீட்டுகளால் ஏற்படுத்தப்பட்டனர்.

அதற்குப்பின் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் உபசபைகள் (Sub Committee) ஏற்படுத்தப்பட்டன. அவைகள் சுமாராய் எட்டு எனப்படலாம்.

வருஷவாரி மேன்பார்வை செய்வதற்கு ஒரு சபை. இதிலுள்ள அங்கத்தினர்கள் தோப்புகளையும் குளங்களையும் மேன்பார்வை பார்ப்பதினால் அனுபவம் பெற்றவர்களாவர்.

தங்கம் வகைராவைக் கவனிப்பதற்கு ஒரு சபை. நிலங்களேயும் பஞ்சவாரங்களேயும் மேன்பார்வைசெய்ய ஒரு சபை. ஒவ்வொரு கிராமத்தின் ஒவ்வொரு வகுப்பையும் கவனிப்பதற்குச் சபை ஒன்று. நியாயத்தீர்ப்பு விஷயமான சபை ஒன்று.

இந்தச் சபைகளெல்லாம் பிரதி வருஷம் மாற்றப்பட்டு வந்தன. ஆனல் மூன்று வருஷங்களுக்குப்பின் ஒருதரம் அங்கத்தினராயிருந்த ஒருவர் திரும்பி அங்கத்தினராய்த் தேர்ந்தெடுக்கப்படலாம்.

இதனல் கிராம ஆட்சிமுறை அநேகமாய் எல்லோருக்கும் தெரியலாயிற்று என்பது திண்ணம். இதனல் ஒவ்வொருவனுக்கும் கிராம விஷயங்களில் ஊக்கம் உண்டாயிருந்திருக்கும் என்பதற்கையமென்னே? கிராமசமுதாய விஷயங்களேக் கண்ணுங்கருத்துமாய்க் கவனித்திருந்தனர்கள் குடிகள் என்பது நிச்சயம். ஸ்வராஜ்யம் என்பது அக்காலத்தில் சர்வசாதாரணமாயிருந்ததென்பது எலெக்ஷன், ஓட், பாலட், கம்மிட்டீ, மீடிங், ஆகிய மொழிகளில்லாவிடினும் அக்காலத்துக்குத் தக்கவாறு அம்மொழிகளால் பொருள்படும் நடவடிக்கைகள் நடந்தேறிவந்தன என்பதைப் பறையறைவோமாக.

மீண்டும் எக்காலத்தில் பழைய முறைகள் புதிப்பிக்கப்படும் என்பதை யாம் அறியோம். பழையபடியே முற்றிலும் மாறிவிடவேண்டுமோ எனச் சிலர் கேட்கலாம். முற்றிலும் மாறிவிடவேண்டுமென்பது அவசியமில்லே. தற்காலத்திய விசேஷங்களேயும் எம்மட்டில் வேண்டுமோ அம்மட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டியது மகா ஜனங்களின் அபிப்பிராயத்தைப் பொருத்ததாயிருக்க வேண்டும்.

ஆனால் அம்முறைகள் கிராம வாசிகளால் அவர் அவர் வசிக்கும் கிராம நிலைமைக்குத் தக்கவாறு அவரவர்களுடைய சபைகளில் ஏற்படுத்தப்படும் சட்ட திட்டங்களுக்குத் தக்க படி நடைபெறவேண்டுமேயல்லாது, இமயமலைச் சார்பிலாவது டேம்ஸ் நதிக் கரையிலாவது ஒரு இயந்திரம்போன்ற அதிகாரிகளால் கிரஹண காலத்திய இருளில் உண்டாக்கப்பட்ட சட்ட திட்டங்களினால் நிர்மாணஞ் செய்யப்பட்டவைகளாயிருக்கக்கூடாது. கிரஹண விமோசனமான பிறகு சூரியனுடைய ஒளியில் ஜன நாயகத்திற்கேற்ப ஸ்வ ராஜ்யம் தோன்றி அதனால் வெளியாக்கப்பட்டதாயிருக்க வேண்டும்.

மீண்டும் ஆட்சிமுறைக்கு மேன்மையை யளிக்கக்கூடிய கிராம சபைகளில்தான் நியாயம் விளங்கும். ஏனெனின் ஒரு ஊரில் நடந்த குற்றத்தை அவ்விடத்திலிருந்து இரு நூறு முன்னூறு காதத்துக்கு அப்பாலும் அல்லது ஆறுயிரம் மைலுக்கு அக்கரையிலும் மாதக் கணக்குகளுக்குப்பின் விசாரிக்கப்படின் உண்மை வெளியாகாது. குற்றம் நடந்த இடத்திலேயே சூட்டோடு சூடாய் விசாரணை செய்யப் படின் யாதொரு விஷயங்களையும் மறைக்கமுடியாது. களவு நடந்த இடத்தை நேரில் பார்த்தால் கன்னக்கோல் சாத்தின இடந்தெரியும். அனேக உண்மைகள் நியாயாதிபதிக்கு விளங்கா நிற்கும். தற்காலத்தில் குற்றம் நடந்த இடத்தைப் பார்ப்பவன் சாதாரண அறிவுள்ள ஸ்வல்ப சம்பளமுடையவன். அவனது வறுமையினால் எத்துணையோ ஆசைகளுக்கு இடமுண்டு. அவனது விசாரணை எத்துணையோ வாசப்படிகளுள் நுழைந்து புறப்படுவதற்குள் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடியும். அந்தச் சமாசாரத்தை நியாயாதிபதி விசாரிக்கும்போது அவர்

காதில் படுவது ஒன்று. வியவகாரம் நடப்பது ஒரு பாஷை யில். விசாரணை செய்யப்படுவது வேறொரு பாஷையில், சாக்ஷி களது பாஷை வேறொன்று, அவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யுங்கால் பிசகுகள் பல தோன்றுகின் றன. மேலும் காயிதத்தின் மேலிருப்பது மற்றொன்று. வக் கீல்கள் யுக்திகள் வேறொன்று. அதிகாரவர்க்கத்தினர் பாடு வது எல்லாவற்றிற்கும் அன்னியமானது. இவ்வாறிருக்கின் குற்றம் ஓரிடத்தில்தான் நியாயம் வேறிடத்தில்தான். இந்த தைரியத்தினால் தான் குற்றங்கள் அதிகரித்து விட்டன. நாகரிகங்கள் புதிதாய்க் கிளம்பியதேபோல் நாகரிகம் பெற்ற குற்றங்களும் நடைபெறுகின்றன. நாகரிகம் பெற்ற நியாயத் தீர்மானங்களும் தோன்றுகின்றன.

முற்காலத்தில் குற்றமேயில்லை என்றும் நடந்தவை யெல்லாம் நியாயமேயென்றும் யாம் நினைப்பதாய்க் கருதற்க. பண்டைத்தமிழர் நீதிமுறையைத் தமிழ்க்காவியங்களே வற் புறுத்திக் காட்டுகின்றன. தமிழ் இலக்கியத்தை ஆராய்ச்சி செய்கின்றவர்கள் எத்துணையோ மேற்கோள்களை எடுத் துரைக்கலாம். அவைகளால் குற்றங்கள் நடந்தன என்பது நிச்சயம். ஆனால், குற்றம் நடந்தவிடத்திலேயே விசாரிக்கப் பட்டதினால் நியாயம் அதிகமாய்ப் புலப்பட்டது என்பதை யாவர் மறுக்கக்கூடும்? முற்காலத்தில் ஜனங்கள் குறைவு. அதனால் அம்முறை அக்காலத்துக்கு ஏற்றவாறு இருந்த தெனலாம். அன்று; முற்காலத்திய முறைகளை தொடர்ந்து வந்திருந்தால் இக்காலத்தில் குற்றங்கள் குறைந்திருக்கும். ஏனெனின் குடிகளுக்கு இக்காலத்தில் குளிர்விட்டு விட்டது. குற்றங்கண்டுபிடிப்பது கஷ்டம் என்றும் குற்றஞ் செய்தவன் தான் தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய தந்திரங்கள் சட் டங்களில் காணப்படுகின்றன என்றும் முதல் முதல் கடைசி

வரை தனத்தை வீசி எறிந்து விட்டால் அவ்வலையில் எல்லாம் சிக்கிக்கொள்ளும் என்றும் குற்றவாளிகள் தைரியங் கொண்டிருக்கின்றனர். ஆனால் முற்காலங்களிலோ ஞாயம் பெறுவதற்குச் செலவுகள் கிடையா. மீண்டும் இக்காலத்தில் குற்றவாளிகள் தண்டனையடைந்தால் சிறைச்சாலை மாமியார் வீடென்கின்றனர், அல்லது அரசனின் விருந்தாளி எனக் கருதிகின்றனர். ஏனெனின் சிறைவாசம் என்பது தற்காலத்தில் சுக ஜீவனந்தான். இவ்விஷயமாய் நம் முழு அபிப்பிராயத்தை வேறொரு சந்தர்ப்பத்தில் கூறுவாம்.

முற்காலத்திய தண்டனைகள் குற்றத்தையும் மிஞ்சி மிகக் கொடுமையா யிருந்தன என்றும் அநாகரிகங்களாயும் இருந்தன என்றும் கூறுவதுண்டு. ஏனெனின் திருடர்கள் கொலைசெய்யப்பட்டனர். அல்லது மாறு கை மாறு கால் வாங்கப்பட்டனர். அதனால்தான் திருட்டுக்கள் அதிகம் காணப்படவில்லைபோலும்.

ராஜதுரோகிகள் யானைக்காலினால் இடறுண்டனர். இதரநாட்டு ரகசிய சாரணர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இவைகள் அரசுமுறையில் எக்காலத்திலும் காணப்படுகின்றன.

தெய்வத்தைநம்பி அக்கினி, கொதிக்கும் எண்ணெய், முதலியவற்றின் சம்பந்தமாகச் செய்யப்படும் சத்தியங்களை நம்பிய காலமானதால் முற்காலத்திய நியாயம் மூடத் தன்மையானதென்றும் கூறுவதுண்டு. இவைகளை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால் தெய்வத்தை நம்பினவர்களுக்கு இறைவன் அருள் செய்வான் என்பதை நியாயஸ்தலத்தினர் ஒத்துக்கொள்ளாததனால்தான் இன்றைக்கு தெய்வத்தை நம்பிச்செய்யும் சத்தியத்திற்குப் பயனில்லை

போலும். மேலும் தெய்வத்தின் சக்தியினால் உலகம் நடைபெறுகின்றதெனின் குற்றவாளியில்லாவதனைக் குற்றவாளியாய் ஆக்கிவிட்ட சமயத்தில் கடவுள் ஏன் அவனுக்குச் சகாயஞ் செய்யமாட்டார்? அந்நியாயத்தீர்ப்புகள் செய்தவர்களும் கடவுளால் தண்டிக்கப்பட்டனர் என்கிற நம்பிக்கையிருந்த காலத்தில் நியாயாதிபதிகளும் பயபக்தியுடன் விசாரணை செய்தனர். தமிழ்நாட்டில் அரசனே பெரும்பாலும் நியாயாதிபதியாயிருந்தான். அரசன் தெய்வத்தின் அம்சம் படைத்தவன். சில அரசர்கள் தங்களுக்கு உண்மை விளங்காத காலத்தில் இரவும் பகலும் கடவுளைப் பிரார்த்தனை செய்து வரப்பிரசாதம் பெற்றிருந்தனர் என்பதற்கு ஐயமில்லை.

இவைகளைப்படிக்கின்ற மேனாட்டு மனப்பாங்கையுடைய மேதாவிகள் நம்மைக்கண்டு நகைக்கலாம். ஆனால் மானிடர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சட்டத்தை முற்றிலும் பரீக்ஷைகள் செய்து அவைகளின் குறைகளைக் கண்டவர்களுக்கு நம்கருத்து அவ்வளவு மூடபக்தியுடைத்தெனப் புலப்படாது. மேலும் பாரதமக்களுக்குத் தெய்வீகத் தீர்ப்பில் நம்பிக்கையதிகம். ஆதலால் வியவகாரம் செய்கின்றவர்களின் அபிப்பிராயத்துக்கிணங்க தற்காலத்திலும் சில சமயங்களில் கற்பூரத்தையவிக்கும். ஸத்தியம் நியாயஸ்தலங்களில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இப்பொழுது நாம் கூறுவது யாதெனின் நியாயத்தைக் கண்டுபிடிக்கப்படும் முறைகளுள் தெய்வ சக்திக்கும் இடமிருக்கவேண்டும் என்பதே. தெய்வத்தை நம்பி நடவடிக்கை நடத்த வேண்டும். சட்டங்களில் ஏற்பட்டிருக்கும் குறைகளைக் கொண்டு தப்பித்துக் கொள்ளலாம் என்கிற

ஓட்டைகள் அடைக்கப்படவேண்டும். "Legal Technicalities". என்பதை முக்கியமாய் அனுசரிக்கக் கூடாது. அதாவது சட்டபரிபாஷைகளின் வார்த்தைகளை எழுத்தெழுத்தாய்க் கணக்கிட்டுப் படித்துக்கொண்டு ஒரு எழுத்து சற்று கோணலாய் அச்சிடப் பட்டிருப்பின் சட்டமே தவறென்று கூறும் வக்கீல்களின் பேதமையை ஒழித்துவிடவேண்டும் என்பதுதான் நம் முக்கிய நோக்கம். முற்காலத்திலும் சட்டங்கள் இருந்தன என்பதை ஸ்மிருதிகளால் கண்டுகொள்வோமாக. ஆனால் காலதேசபாத்திரம் ஆகிய சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு புண்ணிய பாவத்திற்கிடமிருந்தது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறோம்.

நிற்க; ஆதிகாலத்தில் பாரத வர்ஷத்தில் ஜாதி வித்தியாசங்களுக்குத் தக்கபடி தண்டனைகள் மாறிநின்றன என்கிற குறையுமுண்டு.* ஆம், ஆனால் அது இடையில் வந்ததென்பதற்கையமென்னே? இந்நாட்டில் இப்பொழுது காணப்படும் பழைய சட்டங்கள் காலத்திற்குத்தக்கவாறும் தேசத்துக்குத்தக்கவாறும் மாறிக் கொண்டு வந்தவை என்பதை அவைகளினால் தெரிந்துகொள்ளலாம். அவைகள் காலத்திற்குத் தக்கபடி சீர்திருத்தங்கள் பெற்றிருந்தன. இந்நாட்டின் இடம் பொருள் ஏவல் மாறிக்கொண்டு வந்தகாலத்தில் நமது முன்னோர்களும் சீர்திருத்தம் செய்துகொண்டிருந்தனர் என்பதை யாம் ஒருகாலும் மறுக்கமாட்டோம். மேனாட்டார்களின் சம்பந்த மில்லாத காலத்தில் அவர்

---

* இவ்விஷயமாய் இக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்தவர் எனப்படும் ஆங்கிலர் ஆட்சியில் வெள்ளையர்க்குச் சில விசேஷ விதிகள் இருக்கின்றன என்பதை யாம் வற்புறுத்திக் காட்டுகின்றோம். உலகமுற்றிலும் ஜாதி வித்தியாசமும் இன வித்தியாசமும் வர்ண வித்தியாசமும் இன்றைக்கும் இருக்கின்றன என்பதை யறியாதாரிலர்.

களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே நம் நாட்டில் நடைபெற்றிருந்த ஸ்மிருதிகளைப் படித்தவர்களுக்கு யாம் அதிகம் கூறுவது அனாவசியமாய்த் தோன்றும். அவைகளைப் படிக்காதவர்களுக்கு யாம் கூறுவது தற்புகழ்ச்சி பெற்ற பழைய கதை என்று தோன்றும். ஆதலால் நமது நாட்டிலுள்ளவர்கள் அதிக சிரத்தையுடன் பழைய நூலாராய்ச்சி செய்யவேண்டும்.

ஆதிகாலத்தில் தென்னாட்டில் நடைபெற்ற சில நியாய சபைத் தீர்மானங்கள், பழைய சாசனங்களினால் நன்கு காப்பாற்றப் பட்டிருக்கின்றன. அவைகளுள் சில ஆங்கில நாட்டில் வெற்றிபெற்ற முதல் வில்லியம் என்கிற நார்மன் பிரஞ்சு அரசாட்சிக்குச் சம காலத்தில் நடைபெற்றன என்றும் வேறு சில, நியாய சிம்ஹம் என்கிற பெயர்பெற்ற ஹென்ரிக்குச் சம காலத்தில் நடைபெற்றன என்றும் சரித்திராசிரியர்கள் கூறா நிற்பர்.

ஜம்பை என்கிற ஊரின் வியாபாரி ஒருவன் ஒரு தாசியினிடம் உறவாடிக்கொண்டிருக்கையில் நாவலூரான் ஒருவன் அவளையே நாடியதனால் முதலில் கூறப்பட்ட வியாபாரியினால் அந்த நாவலூரான் கொல்லப்பட்டான். விசாரணைக்குப் பின் குற்றவாளி ஜம்பை கோவிலில் ஒரு தங்க விளக்கு வைத்து எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானஞ் செய்யப்பட்டது. இது 1012-13ல் நடந்திருக்கவேண்டும். அதே காலத்தில் மேனாடுகளிலும் இம்மாதிரியான முறைகள் இருந்தன. உதாகரணமாய் மாதாகோவில்களில் மெழுக்குவத்தி ஏற்றி வைக்கத் தீர்மானங்க ளிருந்திருக் கின்றன.

சுமார் கி. பி. 1054-ல் ஒரு கிராமாதிகாரி வரி விதிக்கப்படும் நிலைமையிலில்லாத ஒரு ஸ்திரீயை வரி கொடுக்கு

மாறு வற்புறுத்தினன். அவளுக்கு வரி கொடுக்கும் சக்தி யின்மையை விளக்குமாறு விஷத்தையுண்டு சத்தியஞ் செய்யவேண்டும் என்று தீர்மானஞ் செய்தான். அவள் சம்மதித்து அவ்வாறே செய்தாள். அதனால் இறந்தனள். அதையறிந்த மஹா ஜனங்கள் கிராமாதிபதியினுடைய நடவடிக்கை அக்கிரமம் என்று எண்ணிச் சுமார் பதினெட்டு ஜில்லாக்களிலுள்ளவர்கள் கூடி அவன்மீது குற்றஞ்சாட்டி விசாரணை செய்து அவனைத் தண்டித்தனர். இதனால் மகா ஜனங்களுக்கு இருந்த அதிகாரம் இன்னதென்பதும், தெய்வத்தினிடம் அதிகாரிகள் முற்றிலும் நம்பிக்கை வைத்துவிடக்கூடாது என்பதும், அந்த ஸ்திரீ அவனால் வற்புறுத்தப்பட்டனள் என்பது தெரிந்ததனால் வரி வசூல் செய்த அதிகாரி பொது ஜனங்களால் தண்டிக்கப்பட்டனன் என்பதும் பெறரும். இங்கிலாந்தில் இரண்டாவது ரிச்சார்டு அரசுபுரிந்த காலத்தில் புதிதாய் விதிக்கப்பட்ட வரி வசூல் செய்யச் சென்றவன் வாட் டைலர் என்பானின் மகளை அவமானப்படுத்தினன் என்று (1381-ல்) செய்த கலகத்தைப்போல் தமிழ் மக்கள் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார் அதே நூற்றாண்டில் ஒரு சூத்திரன் வேட்டையாடியகாலத்தில் குறி தப்பி ஒரு வேளாளனைக் கொன்றுவிட்டனன். எழுபத்தொன்பது ஜில்லாக்களில் வசித்த வேளாண்மைத் தொழில் புரிந்தவர்கள் ஒன்றுகூடிய சபையில் அவன் குற்றஞ் சாட்டப்பட்டனன். அறுபத்தினலு பசுக்களைக் கோவிலுக்குத் தானஞ் செய்யக் கட்டளையிடப்பட்டனன். குறிதவறிக் கொலை செய்ததற்காக அவன் தலையைக் கத்தியால் வீசிவிடவில்லை. அல்லது விடுதலையும் செய்துவிடப் படவில்லை.

பன்னிரண்டாவது நூற்றாண்டில் ஒருவன் தன்மனைவியைத்தள்ளினான். அவள் கீழே விழுந்து இறந்து விட்டனள். அவன் கிராமச்சபையில் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டனன். "என்மனைவியை நான் கொன்றேன், என்னை யார் கேட்பது?" என்று அவன் நினைக்கவில்லை. தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தினான்.

ஒரு வேளாளனும் வேறொருவனும் வேடிக்கையாய்த் தமது சாமார்த்தியத்தை விளக்குவதற்காக ஆயுதச் சண்டை செய்தனர். வேளாளனுக்கு உறவினனான வேறொருவனும் தன் சாமர்த்தியத்தைக் காட்ட விரும்பி வேடிக்கைப் போர்செய்ய இரண்டாவது மனிதன் கொல்லப்பட்டனன். இறந்தவன் பந்துக்களுள்பட பல ஜாதியார்கள் சபைகூடிக் குற்றவாளியைத் தண்டிக்கலாயினர். இதனால் வேடிக்கைகளிலும் உயிர்ச்சேதம் செய்யக்கூடாதென்று ஏற்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் பத்தொன்பதாவது நூற்றாண்டுவரை மேனாடுகளில் நடந்துவந்த துவந்துவயுத்தத்தைக் (Duels) குறிப்பிடத்துணிகின்றோம். அதாவது இரண்டு மனிதர்களுக்கு ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டால் தாங்களே நேரிலாகிலும் அல்லது தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகவாயினும் அவர்கள் சண்டையிட்டுக் கொள்வது வழக்கம் அதனால் விளைந்த தீங்குகள் கொலைகளாயினும் அந்த யுத்தம் சட்ட விரோதமல்ல என்று கருதப்பட்டது. நமது கண்டத்தில் மேனாட்டார்கள் வியாபாரஞ் செய்யத் தொடங்கின காலத்தில் அம்முறையைத் தங்களுடன் சுமந்து வந்தனர். முதல் கவர்னர் ஜெனரல் எனப்படும் உவாரன் ஹேஸ்டிங்க்ஸ் என்பவரும் அவருடைய ஆலோசனை சபையிலிருந்த அங்கத்தினரான

பிரான்ஸிஸ் என்பவரும் "டியூயல்ஸ்" என்கிற அந்தச் சண்டை முறையைக் கல்கத்தாவில் அனுஷ்டித்தனர்.

ஒரு ஸ்திரீ தன்மகளின் பேரில் ஒரு கோலை எறிந்தனள். அக்கோல் வேறொரு சிறுபெண்ணைத் தாக்கியது. காயம்பட்டவள் இருபதாம் நாள் இறந்தனள். ஆதலால் அந்தஸ்திரீ குற்றஞ் சாட்டப்பட்டனள். அதற்காக அவள் புருஷன் முப்பது பசுக்களைக் கோவிலுக்கு தானஞ் செய்யத் தீர்மானமாயிற்று.

மேற்குறிப்பிடப் பட்டவைகளால் பலவித குற்றங்களும் கிராம மகா ஜனங்களால் கவனிக்கப் பட்டன என்பதும், கோவில்களுக்கு அபராதம் செலுத்தப்பட்டன என்பதும், இந்தமாதிரியான அபராததனம் அரசாங்கத்தைச் சேரவில்லை என்பதும் தெரிகின்றன. கோவில்களுக்கு அபராதஞ் செலுத்தப்பட்டதன் காரணம் யாதெனின் ஒருகால் தீர்மானங்கள் மானிடர் புத்திக் குறைவினால் ஏற்பட்டவைகளாயின் தெய்வ வசத்தில் விட்டுவிடப்படின் முடிவான நியாயம் ஏற்படும் என்பது பாரத மக்களின் நம்பிக்கையாகும். இதேமாதிரி அனேக உதாகரணங் களைக்கொண்ட சாசனங்களைக் கூறலாம்.

நிற்க; பிராம்மணன் குற்றஞ் செய்தால் அவனுக்குத் தண்டனைகளே யில்லை, அல்லது தண்டனை மிக சுவல்பம் என்று பெரிய கூப்பாடு ஒன்றுண்டு. அது அக்காலத்திய சந்தர்ப்பத்தைப்பற்றிய உலகமுறையாகும். உதாகரணமாய் ஆங்கில நாட்டில் பதினைன்காவது நூற்றாண்டு வரை குற்றஞ் செய்தபாதிரிகள் மத சம்பந்தமான விசாரணைக் குட்பட்டே தண்டனைகள் சுவல்பமாய் அடைந்து கொண்டிருந்தனர். மேலும் பைபிளிலிருந்து சில வாக்கியங்களைப் படிக்கத்

தெரிந்து கொண்ட குற்றவாளிகள் அனேகமாய் மன்னிக்கப் பட்டனர். ஆதலால் படித்தவர்கள் குற்றஞ்செய்திடின் அவர்களுக்கு சுவல்ப தண்டனையும் அதிக அவமானத்தைத் தரும் என்று நினைத்தனர் போலும் பண்டைக் காலத்திய அறிவாளிகள்.

தமிழரசர்களின் ஆட்சி முறை வல்லரசன்று. சிலப்பதிகாரத்தில் காணப்படும் ஐம்பெருங் குழுவின்விவரம்* அடியார்க்கு நல்லாருரையில் காணப்படுவதாயினும் அல்லது வேறுயாதாயினும் ஜனங்களின் உதவியைக்கொண்டே அரசன் ராஜ்யம் செய்தான். மேலும் எண்பேராயம் என்கிற ஒரு சபையுமிருந்தது†

தென்னாட்டில் காணப்படும் சில சாஸனங்களினின்றும் ஆதிகாலத்தில் அதிகார வர்க்கத்தினரின் தொழிலைப் பற்றிச் சில விஷயங்கள் முக்கியமாய் வெளிப்படுத்தவேண்டியவை இனி வருமாறு:

அரசனுக்கு முதலுதவி மந்திரிக்குழாம் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். உடன்கூட்டம் என்பது மன்னனுடன் கூடவே நிற்கும் உதவியாளர்கள் என்பது பொருளாகும். பள்ளிச்சிவிகையார் அஃதாவது பல்லக்குச் சுமக்கும் போயிகள், திருமுன்கோட்டி அஃதவது அரசனுக்குக் முன் சென்றுகொண்டிருக்கும் தாரை ஊதித் தப்பட்டம் கொட்டுவோர், போர்வீரர்கள், தலை எடுப்பார் அஃதாவது

---

* "அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தவாத் தொழிற்றூதுவர், சாரணர் என்றிவர் பார்த்திபர்க் கைம்பெருங் குழு வெனப் படும்."

† மாசனம், பார்ப்பார், மருத்தர், நிமித்தர், அமைச்சர், கரணத்தியலவா, கரும விதிகள் கனகச்சுற்றங் கடைகாப்பாளர், நகரமாந்தர், நனிபடைத்தலைவர் யானை வீரரிவுளி மறவ, ரினையரெண்பேராயமென்ப.

அரசுக்கொடி, தங்கத் தடி முதலிய ராஜ பிருதுகளைக் கொண்டுபோகப்பட்டவர், கட்டியக்காரர்கள் அஃதாவது கத்திகளைக் கையில் பிடித்து ராஜ சன்னிதானத்தைக் காப்பாற்றுவோர் ஆகியவர்களும் அரசனைச் சார்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆவர்.

அரசன் ஸ்நானஞ் செய்து கொண்டிருப்பினும் பூஜை செய்து கொண்டிருப்பினும் போஜனஞ் செய்து கொண்டிருப்பினும் தாம்பூலம் போட்டுக் கொண்டிருப்பினும் எக்காலத்திலும் அவனது கட்டளையை உடனுக்குடன் எழுதி வைக்கவேண்டிய கடமையைக் கொண்டவர்களுக்கு திருவாய்க்கேள்வி என்று பெயர். நகரபரிசோதனை காலங்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களை அரசன் கட்டளையிட்டவுடன் தக்ஷணமே ஓலையில் எழுதிவிடவேண்டியது அவர்களுடைய வேலையாகும்.

கோவில்களையும், கலாசாலைகளையும், கட்டிடங்களையும் பற்றிய சீர்திருத்த உத்தரவுகள் ஆங்காங்கு உடனுக்குடன் குறிப்பிடப்பட்டு யார் யார் எதைப் புரியவேண்டும் என்பது திருமந்திர வோலையால் வெளியாக்கப்பட்டது. இத்திருமந்திர ஓலையென்பது அரசனும் அரசனது சபையோராலும் தீர்மானஞ் செய்யப்பட்ட (காபினட் Cabinet) உத்தரவுகளாம். திருமந்திர ஓலை என்பதன் பொருளைப் பாருங்கள். திரு என்பது ஸ்ரீ என்பதாகும். அது ஆன்றோர்களுக்குரிய மரியாதை மொழியாகும். மந்திரம் என்பது ஆலோசனை சபையாகும். ஓலை என்பது பனை ஓலையாகும். இதனால் அரசன் நின்றபடி கட்டளையிட்டது அவன் இஷ்டப்படி செய்யப்பட்டதாய்க் கருதுவதற்கு இடந் தராது. "ஒருகால் இக்காலத்தில் சில இடங்களில் நடப்பதைப்

போல் பேருக்கு இவ்வொழுங்குகளெல்லாம் எழுத்திலிருக்கலாம். உண்மை வேறு யிருக்கலாம்'' என்று யாவரேனும் குறைகூற இடமுண்டு. அது உண்மையாயினும் நாகரிகம் பெற்ற இக்காலத்தில்தான் மந்திராலோசனை முறைகளிருக்கின்றன என்றும் முற்காலத்தில் கண்மூடித்தனமாயிருந்தனர் என்றும் கூறுவோருக்கு இது ஒரு வாய்ப்பூட்டாகும்.

ராஜ்யத்தின் வருவாய்களைக் கணக்கு வைத்துக் கொண்டிருந்த இலாகாவில் வேலை செய்தவர்களுள் **கங்காணி** என்பவன் கணக்கு வைப்பவன். **நாயகம்** என்பவன் கணக்குத் தணிக்கை செய்பவன். அதன் பெயரேடு வைப்பவனுக்கு **முகவெட்டி** என்று பெயர். **வரிப்புத்தகம்** தயாரித்து வைத்துக் கொள்ளுவதற்கு ஒரு அதிகாரியுமிருந்தனன். அதற்கு அட்டவணை ஒன்று மிருந்தது. அதற்கு **வரி ஏடு** என்று பெயர். அதைத் தயாரிக்க ஒரு அதிகாரி இருந்தனன். **பட்டோலை** என்பது ராஜாங்க உத்தரவுகளுக்கு அசல் என்று கூறப்படலாம். இவைகளுக்குப் பெரியதோர் சான்று ராஜேந்திரசோழனின் சாஸனம் ஒன்றாகும்.

கோலாரிலுள்ள ஒரு பிடாரியார் கோவிலுக்கு அம்மன்னனல் அளிக்கப்பட்ட சாஸனத்தினின்றும் பல விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட விஷயம் அரசனல் வெளியிடப்பட்டவுடன் திருமந்திர ஓலைக்காரர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அதிகார முறையில் வரிசைக்கிரமமாக வரிக்கணக்கு முதலிய புஸ்தகங்களில் அதைப் பதிவு செய்து அதனல் வரக்கூடிய வருமானங்களைத் தீர்மானஞ் செய்து அதை மத்தியஸ்த்தர்கள் முன்னிலையில் தீர்மானஞ் செய்வதற்குள் ஆறு வருஷங்கள்

ஆய்விட்டன. ஆயினும் அரசனுல் தானஞ் செய்வதாய் வாக்குத்தத்தம் செய்த நிமிஷம் முதல் கோவிலுக்குச் சேரவேண்டிய வரும்படி கொடுக்கப் பட்டுவிட்டது. அதில் கையெழுத்து செய்திருக்கும் அதிகாரிகள் ஸர்வக்கிரதுயாஜி, ஸோமயாஜி, பட்டர் என்கின்றவர்கள் கற்றறிந்தவர்கள் என்றும் வைதிக வம்சத்தில் பிறந்தவர்கள் என்றும் அவர்களும் நன்னட வடிக்கையுள்ளவர்களென்றும் நமக்குத் தெரிகின்றது.

மேற் குறிப்பிட்டிருக்கும் சாஸனத்திஞல் அக்காலத்தில் வழங்கிவரப்பட்ட அளவைகளும் இடைகளும் வெளியாகின்றன. பிரக்கம்பள்ளி என்ற கிராமத்தின் வரும்படிகளான 176 கலம் ஆறு குறுணி நான்கு நாழி மூன்று ஆழாக்கு நெல்லும், 132 களஞ்சு மூன்று மஞ்சாடி ஆறுமா ஒரு காணி தங்கமும் கொடுக்கப் பட்டதாம். இம்மாதிரி வேறு சில சாஸனங்களில் வேறுவகையான அளவைகளும் காணப்படுகின்றன. அவைகளைக் கொண்டும் தமிழ்வாய்ப்பாடுகளைக் கொண்டும்

ஐந்து செவுடுகள் (சோடுகள்) .... ஒரு ஆழாக்கு
இரண்டு ஆழாக்குகள் .... ஒரு உழக்கு
இரண்டு உழக்குகள் .... ஒரு உரி
இரண்டு உரிகள் .... ஒரு நாழி
எட்டு நாழிகள் .... ஒரு குறுணி
இரண்டு குறுணிகள் .... ஒரு பதக்கு
இரண்டு பதக்குகள் .... ஒரு தூணி
பன்னிரண்டு குறுணிகள் (அல்லது மூன்று தூணிகள்) .... ஒரு கலம்

என்று தெரிந்துகொள்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் நாம் இன்னுமொன்று அறிந்து கொள்ளக்கடவோமாக. அஃதாவது அக்காலத்திய அளவு களுக்குள்ள பெயர்களுள் சில காரணப் பெயர்களாகும். மரக் கால் என்பது மரத்தினுல் ஆக்கப்பட்டது. இந்த அளவும் ஒவ்வொரு மண்டலத்தில் ஒவ்வொரு பெயரை உடைத்து. அப்பெயர்கொண்ட அளவே அந்தந்த நாட்டில் பிரதானமா யிருந்தது. ஆதவள்ளன் என்பது ஒரு அரசன் பெயரைக் குறிக்கின்றது. திருமறைக்காடன் (வேதாரணியம்) என்பது வேதாரண்ணியத்தில் உபயோகப்படுத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் சாஸனத்தில் கண்ட தங்க நிறை வெள்ளி தாம்பிரம் முதலிய உலோகங்களுக் கும் பொதுவானது.

இரண்டு குன்றிமணிகள் .... ஒரு மஞ்சாடி
இருபது மஞ்சாடிகள் .... ஒரு கழஞ்சு
மஞ்சாடியில் பத்தில் ஒரு பாகம் .... ஒருமா
மஞ்சாடியில் நாற்பதில் ஒரு பாகம்.... ஒரு காணி

அக்காலத்திலும் தங்கத்தைப் பரீட்சை செய்வதற்கு உரைகல் இருந்தது என்பதற் கையமில்லை. இடை போடு வதற்குத் தராசுகளு மிருந்தன.

மேலும் முற்காலத்திய கூலியையும் விலை வாசிகளையும் காட்டக்கூடிய சில சாஸனங்களுமிருக்கின்றன. ஆதிகாலம் முதல் தங்க நாணயங்கள் வழங்கி வந்தன என்பதற்குப் புற நானூறு முதலிய நூல்கள் சாக்ஷிகளாகும். "காணம்" என்கிற நாணயமும் ஒரு சான்ருகும். உள்நாட்டு நாணயங் கள் தவிர ரோமன் நாணயங்கள் காணப்பட்டன என்பதை முன் ஒருமுறை கூறியுள்ளோம். "காசு" என்பது பொற் காசுதான் என்று தற்காலத்திலும் வியவகாரத்திலிருக்கின்

றது. அக்காலத்தில் நாணயங்களிருந்தபோதிலும் மாற்றுப்பொருள்களால்தான் உள்நாட்டில் அதிக வியாபாரம் நடைபெற்றது. வெளிநாட்டார்களுக்கு வேண்டிய மிளகு, சுக்கு, ஏலக்காய், கிராம்பு, லவங்கப்பட்டை முதலிய திரவியங்களுக்குப் பதிலாய் மேனுட்டு நாணயங்கள் இந்நாட்டில் குவியலாயின. இந்நாட்டிலுள்ள பட்டு, தங்க நகைகள், முத்து மாலைகள் ஆகிய வஸ்துக்கள் கீர்த்திபெற்றவையானதால் அவைகள் மேனுடுகளில் ஒன்றுக்கு நூறுய் விலை ஏற்றி விற்கப்பட்டன. இந்நாட்டில் வெகு காலமாய் வழங்கிவரப்படும் ஆபரணங்களின் ஜாபிதாக்கள் வட மொழியிலும் தென் மொழியிலும் காணப்படுகின்றன. அவைகளை இந்நூல் இறுதியில் கணக்கிட்டுக் காட்டுவாம்.

இவ்விஷயங்களைக் குறித்து நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதொன்றுண்டு. அஃதாவது நகைப்பைத்தியம் கீழ்நாட்டார்களுக்கு அதிகம் என்று மேனுட்டார் கூறுவதே. இவ்விஷயமாய் ஏற்கனவே கூறப்பட்டிருக்கும் மானிடர் முன்னேற்றத்தில் 59-60வது பக்கங்களில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கவும்.

நிற்க ; நவரத்னங்களும் நிதிகளும் பொருந்தியது இந்நாடு என்பதை யறியாதார் யாவர் ?

தமிழரசர்களின் சைன்னிய முறை நமதுபாரதகண்டத்துக்குரிய ரத கஜ துரக பதாதிகளைக் கொண்டதே. முற்காலத்திய தமிழர்கள் யுத்தவீரர்கள். அவர்கள் யுத்தத்தில் அடைந்த வடுக்கள்தாம் மதிப்பற்ற அவர்களுக்கு அலங்காரங்களெனக் கருதப்பட்டன. யுத்தத்தில் அடிபட்டு வீழ்ந்தவன் முன்புறம் காயம் பெற்றுனு பின்புறம் காயம் பெற்றுனு என்றே கேட்பது அக்காலத்திய வழக்கம்.

பின்புறம் காயமடைந்தவனைப் பெற்றதாயும் விரும்பாள். பெண்டிரும் விரும்பாள். முன்வைத்தகாலைப்பின் வாங்காதவன் வீரன் எனப்புகழப் பெற்றனன். அமர்க்களத்தில் அபஜயம் அடைந்தவன் தன் ஆயுதத்தாலே தன் ஆயுளை அழித்துக் கொண்டானேயன்றி மீண்டும் நாட்டில் தலை காட்டத்துணிந்தானில்லை. செருக்களத் தினின்று ஓடின வன் பேடியெனப் பெயரிட் டழைக்கப் பட்டவனுப்ச் சமூக வாழ்க்கையில் இடம் பெற்றானில்லை.

விளையாட்டுக் களிலும் போர்வீரத்தனத்தையே பயின்றனர் அக்காலத்திய தமிழர். வில் முதலிய ஆயுதங் களை வெகுசாமர்த்தியமா யுபயோகப்படுத்தினர்கள். மேலும் தற்காப்பு ஆயுதங்கள் பல இருந்தன என்பதற் கையமில்லை.

யுத்த முறைகள் தர்மத்தையே பின்பற்றியவைக ளென்பது புறநானூறு முதலிய பல நூல்களினின்றும் நாம் தெரிந்து கொள்கின்றோம். ஆடுமாடுகள், ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிகர்கள், வியாதிஸ்தர்கள், பிராமணர் கள், ஆகியவர்களுக்கு யுத்தத்தினால் தீமைகள் விளையாதிருக்குமாறு பறையறைவது முதற்கடமையென்றிருந்தனர் போர்புரிந்தமன்னர்கள்.

தமிழரசர்கள் காலத்தில் ஏற்பட்டிருந்த வரிகளை இனிக் கவனிப்போமாக. நிலத்தீர்வை தான் ஒரு அரசாங்கத்துக்கு முதன்மையான வரியாகும். அக்காலத்திய தீர்வைகள் மேல்வாரமென்றும் கீழ்வாரமென்றும் குடிவாரமென்றும் பாகுபாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வாரங்கள் அல்லது காணிக்கடன் ஒரு அளவுற்ற பூமியில் விளையும் தானியத் திற்குத் தக்கபடி நிர்ணயிக்கப்பட்ட குத்தகையாகும்.

விளைந்த நிலத்துக்குத்தான் வரியேயன்றி விளையாத நிலத்துக்கும் விளையாத காலத்துக்கும் தீர்வை கிடையாது. ஆனால் ஒருகால் விளையக்கூடிய பூமி பயிர் செய்யப்படாம லிருப்பின் தீர்வை தள்ளிக் கொடுக்கப்படவில்லை. அத் தகைய பூமி அரசனால் தக்க காரணத்தை முன்னிட்டு வேறு பயிர் செய்பவர்களுக்குக் கொடுத்து விடப்பட்டது. மேலும் நிலத்தீர்வை வசூல் செய்யப்பட வேண்டிய முறை, அளவு, காலம், நிலத்தின் தரம், நிலப்பாகு பாடு (நஞ்சை, புன்செய், தோப்பு, துரவு முதலியன) ஜல ஆதாரம், ஜல சௌகரியம், மழை முதலிய அனேக அம்சங்கள் விதிக்கப் பட்டிருந்தன. இத்தீர்வைகளை வசூல் செய்தவர்களுக்குக் காணியாளர் என்ற பெயரிடப் பட்டிருந்தது. இக்காணி யாளர்கள் கிராமக் களஞ்சியத்தில் கூட்டிவைத்த நெல்லைக் காப்பாற்றி அரசனுக்குக் கடமையைச் செலுத்தி வந்தனர். பர்வத்திற் கேற்ப பயிர் செய்யாத குடிகளைப்பற்றி யரச னுக்குத் தெரிவிக்க வேண்டியது காணியாளர் கடமை. ஆயினும் இக்காணியாளர் கிராம சபைகளின் மூலமாய்த் தெரிவித்தே பூமிகளை மாற்றவேண்டி யிருந்தது. இதனால் அரசனை வஞ்சித்த குடிகள் மிக்க் குறைந்தவர்களே.

அதனால் குடிகளுக்குத் தங்கள் நிலத்தை போக்கி யம், ஈடு, கிரயம் முதலியவைகள் செய்யப் பாத்தியமில்லை என்று நாம் நினைக்கக்கூடாது. அரசனுக்கு இருந்த ஸர்வ சுவதந்தரத்தைக் காட்டக்கூடியது முற்காலத்திய முறை. முற்காலத்திய சாஸனங்களினால் பத்திரங்களும் அரசாங் கத்தாரால் (ரிஜிஸ்டர்) பதிவு செய்யப்பட்டன என்று தெரியவருகின்றது. ஆனால் ரகசியமாய் இக்காலத்தில் ரிஜிஸ்டர் செய்யப்படுவதைப்போல் அக்காலத்தில் நடை பெறக்காரணமில்லை. ஏனெனின் சப் ரிஜிஸ்டரார் ஆபீஸ்

(Sub Registrar's Office) என்பது ஒரு மூலையிலிருக்க ஐம்பது மைலுக்கப்பாலிருக்கும் ஒரு குடியானவனும் கிராம அதிகாரிகளும் அல்லது கூலி எழுத்துக்காரர்களும் ஒன்று கூடி இரண்டு சாக்ஷிகளுடன் தம்முடையதல்லாத இதரர் களின் நிலத்தை வஞ்சகமாய் யாரோ ஒரு வழிப்போக்க னுக்குப் பராதீனஞ்செய்துவிட்டால் அது பதிவுபெற்று விடுகின்றது. அதனால் விளையுந்தீங்கு இன்னதென்று சொல்ல வேண்டுவதில்லை. இக்காலத்திய கோர்ட்டு வியாஜ் யங்களுக்கெல்லாம் ஆதாரம் இப்பத்திரப்பதிவு முறையே யாகும். ஆதிகாலத்திலோ விற்கிறவன் வாங்குகிறவன் சாக்ஷி எல்லோரும் கிராம சமுதாய சபைகளில் அதிகாரிகள் முன்னிலையில் ஏற்பாடு செய்யவேண்டி யிருந்தமையால் கிருத்திரமத்திற்கும் போக்கிரித் தனத்திற்கும் இடமில்லை. ஒருகால் "அக்காலத்தில் ஜனக்குறைவு ஏற்பட்டிருந்ததால் காரியங்கள் சுலபமாய் நடந்தன" என்ற பழைய பாடம் யாவரேனும் படிக்கலாம். யாம் கூறுவது யாதெனின் அயோக்கியத் தனத்திற்கு இடமில்லாமல் பகிரங்கமாய்க் கடன் வாங்குவோரும், கொடுப்பவரும், விற்கின்றவர்களும், வாங்குகின்றவர்களுமிருந்திடின் பத்திரங்கள் ஜாஸ்தியாக மாட்டா. வியாச்சியங்களும் விருத்தியாகா. ஆனால் பத்தி ரங்கள் இப்பொழுது ரிஜிஸ்டர் செய்யும் மாதிரியினால் போட்டிக்கிடமுண்டாய் விற்கின்றவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கின்றதென்றும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு சௌக் கியமுண்டென்றும் நாட்டின் செல்வம் அதிகரிக்குமென்றும் சொல்வதுண்டு. இவைகளைப்பற்றிச் சொல்லவேண்டியது ஒன்றே. யோக்கியமாயும் பகிரங்கமாயும் செய்யப்படும் நடவடிக்கைகளினால் கஷ்டம் நேரிடினும் அது மேன்மையே யாகும். அயோக்கியமாயும் ரகசியமாயும் செய்யப்படும்

நடவடிக்கைகளினுல் லக்ஷம் லாபம் பெறுவதும் சமூக வாழ்க்கைக்குக் குறைவாகும். ஒரு ராஜ்யத்தின் குடிமக்கள் எவ்வளவு அசுத்தமாயிருக்கின்றனரோ அவ்வளவும் ராஜ்யத்திற்கு உறந்தையை விளக்கும். சொத்துக்களைப் பராதீனம் செய்வதில் அரசாங்கத்தார் தலையிட்டுக்கொள்ளக்கூடாதென்றும் அதனுல் குடிகளுடைய சுவதந்திரத்துக்குக் குறைவு ஏற்படும் என்றும் சமாதானம் கூறுவது சரியல்ல. சுவதந்தரம் என்கிற விஷயத்தைப் பற்றி ஸ்வராஜ்யத்தை விவரிக்கும் பாகத்தில் ஆராய்ச்சி செய்வோமாக. ஆனுல் நாம் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு அதாவது இம்முறையினுல் மேனுடுகளில் யோக்கியமான நடவடிக்கைகளும் நன்னெறியும் ஏற்பட்டிருக்கலாம். அவைகளை யாமறியோம். அம்முறை நம்நாட்டுக்குத் தகுந்ததல்ல என்பதைமட்டில் யாம் வற்புறுத்திக் காட்டுகிறோம். இந்நாட்டினரின் நோக்கத்திற்கும் மேனுட்டாரின் நோக்கத்திற்கு மிடையில் விஸ்தாரமான ஒரு கடல் இருக்கின்றது.

மீண்டும், நிலவரிக்குள்ளாக்கப் படாத பல புலங்களிருந்தன. அறத்திற்கு விட்ட இறையிலி நிலங்கள் நீங்க, ஊர்நத்தம், குளம், ஓடை, ஊருணி, ஆறு, படுகை, கம்மாளச்சேரி, வண்ணுரச்சேரி, பறைச்சேரி, வெள்ளான் சுடுகாடு, பறைச்சுடுகாடு, பிணம் போகும் பாதை, பறைச்சேரி நத்தம், தீண்டாச்சேரி, குடியிருக்கை, ஊரிருக்கை, ஈழச்சேரி (சாணுருடையது) மனை, கடைத்தெரு, மீன்பயில் பள்ளம், தேன்பயில்பொதும்பு, களம், மேய்ச்சல்தரை, காடு, களர், உவர்; ஆகியவைகளாம். இவைகளெல்லாம் குடிகளுக்குச் சௌகரியமான அரசாட்சி தர்மங்களாகும். எல்லாவற்றிற்கும் மேலாய் நீர்ப்பாய்ச்சன முறையைக்

குறிப்பிடலாம். காவேரியினின்று பிரிக்கப்பட்டிருக்கும் பல ஆறுகளும் வாய்க்கால்களும் தமிழ் மன்னர்களுக்கு இறவாப் புகழைக்கொடுத்து நிற்கின்றன. ஆறுகளில்லா விடங்களில் ஏற்பட்டிருக்கும் ஏரிகளும் ஜலாதாரங்களும் அநேக ஜில்லாக்களில் இன்றைக்குங் காணப்படுகின்றன. பஞ்சத்தைத் தடுப்பதற்கு நீர்ப்பாய்ச்சனத்தைத் தவிர வேறில்லையென்பதைப் பாரத மக்கள் தெரிந்துகொண்டு அனுஷ்டித்தனர்.

முற்காலங்களிலும் தொழில் வரி, வியாபார வரி, முதலியவை ஏற்பட்டிருந்தன என்பதைக் காட்டக்கூடிய ஆதாரங்களும் காணப்படுகின்றன. கடமை, இறை, ஆயம், வரி, முதலிய பதங்களே குடிகள் ஏன் வரி கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன. குசக்காணம், வண்ணாரப் பாறை, தரி இறை, தட்டாரப்பாட்டம், இடைப் பாட்டம், செக்கிறை, ஆகியவைகள் உதாகரணங்களாகும்.

வியாபாரஞ்செய்தவர்களின் லாபத்திற்கிணங்க வரி வசூல் செய்யப்பட்டது. இம்மாதிரியாய் அநேகம் தொழில் வரிகளைக் குறிப்பிடலாம்.

தமிழர்களின் நாகரிகத்தைப்பற்றி இதுகாறும் நாம் ஆராய்ச்சி செய்தது தமிழ் மக்களின் அரசாங்க முறையைக் குறித்தேயாகும். அம்முறை முற்றிலும் தமிழருக்குரியதா? அல்லது ஆரியர்களுடையதா? அல்லது அவ்விரு இனத்தார்களுடைய கலப்பு முறையா? கலப்பு முறையாயின் எந்த இனத்தார் எந்த இனத்தாருக்கு அதிகம் ஈடுபட்டிருக்கின்றனர்? என்கிற கேள்விகளினால் பல கோட்பாடுகள் தோன்றியிருக்கின்றன. ஆரியர்களுடைய நூல்களில் காணப்படும் திராவிடர்களது விஷயங்கள் ஏற்கனவே

குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவ்வாறே திராவிடர்களுடைய தமிழ் நூல்களிலும் ஆரியர்களைப்பற்றிய குறிப்புகளிருக்கின்றன என்று விளக்கிக் காட்டக்கூடும்.

தமிழ் நூல்களைக் காலப்பகுதிகளுக் குள்படுத்தக் கூடிய ஆராய்ச்சிகளைச் செய்துவரும் ஆசிரியர்களுக்குச் சங்க நூல்களும் பல அரசர்களின் சாஸனங்களும் மூலாதாரங்களாகும். சாஸனங்களைப் பற்றிய சில விஷயங்கள் முன்னமே கூறியுள்ளோம். இனி சங்க நூல்களை எடுத்துக் கொள்வோம். சங்கம் (ஸංவடப:) என்பது அகஸ்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்டதோர் பெரிய புலவர் ஸபையாகும். அது, முதல், இடை, கடை, ஆகிய முச்சங்கங்கள் எனப்படும். அந்த மூன்று சங்கங்களிருந்த இடமும், காலமும், அவைகளை இருத்தியவரும், அவர்களின் வரலாறுகளும், அச்சங்கங்களின் அங்கத்தினர்களாகிய புலவர்களும் அவர்களுடைய நூல்களும், வரலாறுகளும் வேற்றுமைப் படுமாறு கூறப்படுகின்றன. ஆயினும் அவைகளால் தெரிந்துகொள்ளக் கூடிய அளவு சரித்திரவரலாறு தமிழறிஞர்களால் பல நூல்களின் வாயிலால் வெளியிடப்பட்டு வருகின்றன. அக்காலத்திய இயற்றமிழின் சிறப்பு வியக்கத் தக்கது. மேனுடுகளில் நூல்களால் சிறப்புற்றோங்கிய காலத்தை "அகஸ்டன் ஏஜ்" (Augustan Age) என்று கூறுவது வழக்கம். அதைப்போல் நம் நாட்டில் இயற்றமிழ் வளர்ந்து நின்ற காலத்தை அகஸ்தியன் காலம் என்று கூறலாம். அகஸ்தியர் இன்றைக்கும் பொதிகை மலையில் வசிக்கிறார் என்கிற நம்பிக்கை நம் நாட்டாருக்கு உண்டு. ஆகையால் தமிழ் இன்றைக்கும் சிறப்புற்றோங்கி நிற்கக் கூடும் என்று எதிர்பார்ப்போமாக.

அகஸ்தியருக்கும் தமிழ்ப்பாஷைக்கும் உள்ள இடைவிடாப்பற்று புராணப்புகழுடைத்து. அவருடைய பன்னிரு மாணவர்களுள் முக்கியரான தொல்காப்பியனார் வடமொழியிலும் தென்மொழியிலும் நிபுணர். அவரது இயற்பெயரே வடமொழியான திருண தூமாக்கினி* யாகும். அவர் வம்சப்பெயர் ஜமதக்னியாகும். தொல்காப்பியனார் என்பது அவரது குடிப்பெயரால் தோன்றியதாகும். அவரியற்றியது தொல்காப்பியம் எனப்படும். நமக்குத் தெரிந்தவரை அதுதான் பண்டைக்காலத்திய தமிழ் நூல். அதற்குமுன் தமிழ் நூல்களில்லை என்பதில்லை. ஏனெனின் அந்நூல் இலக்கணம். இலக்கியமன்றி இலக்கணமன்று. அது ஐந்திரவியாகரணம் நிறைந்ததென அகஸ்தியருடைய வேறொரு மாணாக்கராகிய பனம்பாரனார் கூறியுள்ளார். மேலும் அரசர் அந்தணர் வணிகர் வெள்ளாளர் என்கிற தொழிற் பாகுபாடுகளுக்குரிய ஜாதிகளும்† அதில் குறிக்கப் படுகின்றன. ஆதலால் வடமொழிக் கலப்புத் தோன்றிய காலத்துக்கு முந்திய தனித்தமிழ் நூல்களை இனி நாம் காண வேண்டி நிற்கின்றோம். ஆரியர்களுடைய சம்பந்தத்திற்கு முந்திய திராவிடர் நிலைமையைக் கண்டுகொள்ள ஆதாரங்கள் காணோம். கபிலரகவலிலும்

---

* திருணம்=புல், தூமம்=புகை, அக்கினி=நெருப்பு.

† ஜாதி பேதங்கள் திராவிடர்களினிடையில்தான் முதலில் தோன்றின என்று ஒரு ஆங்கிலர் சில ஆண்டுக்களாய் கூறிவருகின்றனர். திராவிடர்களுள் மந்திரவாதிகளிருந்தனர் என்றும் அவர்கள்தான் பிராம்மணர்களாய் மாறிவிட்டனர் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வபிப்பிராயம் எம்மட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடியதென்பதைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் நிர்ணயிக்க வேண்டும்.

"முற்படைப் பதனில் வேறுகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந் நாட்டினில் நாட்டினீர்"

என்பது காணப்படுகின்றமையால் ஆரியர்களுடைய நான்கு ஜாதிகள் தென்னாட்டிலும் புகுந்தன என்று தெரிந்து கொள்ளுகிறோம். ஒரு சோழ மன்னனாலும் ஒரு சேர மன்னனாலும் ஆரியர்கள் ஜயிக்கப்பட்டனர் என்பது முல்லைப் பாட்டில் ஒருவாறு கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஆரியர்களுடைய ஆசாரங்களை அனுசரித்த அரசர்களின் ஆட்சி முறை பார்ப்பனவகை என்று குறிப் பிட்டுக் காட்டும் சங்க நூல்களிருக்கின்றன. பதிற்றுப்பத்து முதல் திருக்குறள் ஈறாக நூல்களைச் சோதிக்குமளவில் ஆரியர்களுடைய சம்பந்தம் பலவிதத்திலும் தோன்றுகின்றது. திருக்குறள் ஆரியர்களுடைய ஸநாதன தர்மந்தான் என்று கூறல் தகும். அரசியல் பகுதியைப் படிக்குங்கால் ஆரியர்களுடைய பண்டைக்காலத்திய நூல்களின் எதிர் ஒலியே கேட்கின்றது. அதற்குப்பிறகு ஆரியர்களுடைய ஆதிக்கியம் தென்னாட்டில் மிகுதியும் காணப்படுகின்றது. தமிழ் நூல்கள் ஆரியர்களின் நூல்களுள் பெரும்பான்மையைத் தன்னுள் கொள்ளலாயின.

ஆயினும் ஆரியர்களுடன் சம்பந்தம் ஏற்பட்டவரை திராவிடர்களுக்குரிய தனி அரசாட்சி முறை இல்லை என்று யாவர் கூறத்துணிவார்? ஏனெனின் அக்காலத்தில் திராவிடர்கள் சமூக வாழ்க்கையி லிருந்தனர். சமூக வாழ்க்கையில் தங்கும் நிலைமையை யடைந்த எந்த மனிதர்களும் ஒரு தலைவனன்றித் தங்களைச் சத்துருக்களிடமினின்றும் காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஒரு தலைவனுக் குள்பட்டு அவனது வழியில் நிற்கும் குடிகள் ஒரு ஆட்சி முறைக்குள்

பட்டவர்களெனப்படுவர். திராவிடர்களும் அம்மாதிரிதான் இருந்திருக்க வேண்டும். ஊர், சிற்றூர், பாடி, பள்ளி, சேரி, குறிச்சி ஆகிய முற்றுக்களுடைய தமிழ்ப்பெயர்கள் கொண்ட தலங்களில் தலைவர்களிருந்திருக்கின்றனர். காலவளவில் பாக்கம், பட்டினம், நாடு ஆகிய பெரிய பிரதேசங்களும் உண்டாயின. அங்ஙனமே தலைவர்களும் அவர்களுக்கு மேல் குறுநில மன்னர்களும் அவர்களுக்குமேல் முடிவேந்தர்களும் தோன்றினர். அவர்களும் மனிதர்களானபடியால் மனிதர்களுக் குரிய பகுத்தறிவுக்கு எட்டிய மட்டில் நன்னெறி முறைகளைக் கைப்பற்றி யிருந்தனர் என்றே கொள்ளல் வேண்டும்.

வடநாட்டில் ஆரியர்களும் கிராமங்களையே ஆட்சி முறையாய்க் கொண்டிருந்தனர். கிராமாதிபதிகளும் ஏற்பட்டிருந்தனர். பிறகு நகரங்களும், தேசங்களும், மண்டலங்களும் உண்டாயின. நகராதிபதிகளும், தேசாதிபதிகளும், மண்டலாதிபதிகளும் தோன்றினர். ஆகையால் ஆரியர்கள் தென்னாட்டையடைந்த காலத்தில் அவர்களுடைய ஆட்சி மொழிகள் பிரதி பதங்களாய் விளங்க ஆரம்பித்தன. நாட்டுக்கும் வேந்தனுக்கும் அவனுடைய ஆட்சி முறைகளுக்கும் இன்று பல பெயர்கள் காணப்படுகின்றன. ஆரியர்களுடைய ஆட்சி முறையை முதற்பாகத்தில் விளக்கியுள்ளோம். திராவிடர்களுடைய ஆட்சி முறையை இதுவரை கூறியுள்ளோம்.

இவ்வாறு இரு இனத் தோருக் குரிய நாகரிகத்தை முற்றிலும் பரிசோதிக்கப்புகின் தற்காலத்தில் புறப்பட்டிருக்கும் இனப்பொருமைக்கு இடமிராது என்று நமக்குத் தோன்றுகிறது.

கிற்க; தமிழ் பாஷையின் உற்பத்தியைப் பற்றிய விவாதங்களுள் ஆரியர்களின் வடமொழியி னின்றுதான் திராவிட மொழிகள் தோன்றின என்கிற கோட்பாடு ஒன்றுண்டு. அது முற்றிலும் தற்காலத்திய பாஷாஞானிகளால் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. வடமொழி யினின்று பல மொழிகளைத் தமிழர் ஏற்றுக்கொள்ளலாயினர் என்பதற்கு யாதொரு கோட்பாடுந் தேவையில்லை. ஆனால் தென்மொழி யினின்றும் வடமொழியானது எத்துணைப் பதங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பது இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டி யிருக்கின்றது. வடமொழிப் பதங்கள் எனத் தோன்றுகின்ற வருணன், ருத்திரன், சிவன், துர்க்கை, கிருஷ்ணன் (கண்ணன்) முக்தம் (முத்து) கர்மர (கருமான்) முதலிய சில வார்த்தைகள் தனித்தமிழ் மொழிகளின் சிதைவுகள்தான் என்றும் அவைகள் ஆரியர்களுடைய ஆதிநூல்களில் காணப் படவில்லை என்றுங் கூறுவாருமுளர்.

மேலும் "வடமொழியானது தமிழ் மொழிபோடு கலக்கப் புகுமுன்னரே, முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. ஏட்டுவழக்கொன்றுமேயுள்ள பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷை யொன்று கூடியியங்கப் புகுமாயின் முன்னதன் சொற்களை பின்னதன்கட் சென்று சேருமேயன்றிப் பின்னதன் சொற்கள் முன்னதன்கட் சென்று சேரா. இது பாஷை நூலின் உண்மைகளுளொன்று. இதுவே வழக்காற்று முறை. இம்முறை பற்றியே வடசொற்கள் பல தமிழின்கட் புகுந்தன. தமிழ்ச்சொற்களிற் சில தாமும் வடமொழியின்கண் ஏறுமற்

போயின."* இக்கொள்கையின் உண்மை ஆராய்ச்சி செய்யப் பாலது. நம் நாட்டுச் சரித்திரத்தின் காலப்பாகுபாடு விஷயமாய் நம்முடைய அபிப்பிராயத்தை முதற்பாகத்தில் கூறியுள்ளோம். அதனால்தான் கி.மு. கி.பி. தேதிகள் இத்தமிழகத்தில் அதிகம் காணப்படா.

மீண்டும் வடமொழி எக்காலத்தில் பேச்சு வழக்கற்று மரித்த பாஷையாயிற்று எனத் தீர்மானிப்பதரிது. ஆரியர்களும் தமிழர்களும் அநேக நூற்றுண்டுகள் போராடிக்கொண்டிருந்தனர் என்பது மட்டில் ஊகித்துக்கொள்ளத் தக்கதேயன்றி வேறு கால நிர்ணயம் ஏற்பட ஏதுவில்லை. ஏட்டுவழக்காய் மட்டிலிருந்த ஊமைப் பாஷையினின்று பேச்சு வழக்கத்திலிருந்த பாஷையை யுடையவர் கடன் வாங்கவேண்டிய அவசியமென்னை? பேச்சு வழக்கத்தில் பெருக்கமடைந்து கொண்டிருக்கும் ஆங்கில மொழிகள் சில அங்குமிங்கும் நம் நாட்டுப்பேச்சு மொழிகளுடன் கலந்து கொள்வதை நாம் காண்கின்றோம். ஆனால் அவைகள் இன்னும் நூல்களில் ஏற்றுக்கொள்ளப் படுகின்றனவில்லை. இவ்வாறிருக்க மரித்த பாஷை உயிர்ப்பாஷைக்குள் எவ்வாறு நுழைதல் கூடும்? இக்கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லக்கூடியது சரித்திர ஆராய்ச்சிதான். அம்முறை நம் நாட்டில் இன்னும் விருத்தியாதல் வேண்டும். வடமொழி மரித்த பாஷையாய் நின்ற காலம் இன்னும் கண்டுபிடிக்கக் கூடவில்லை.

மொழிகளின் இலக்கண மாறுபாடுகளைக் கொண்டு சிலர் கூறுவதாவது: ஆரியர்கள் ஸிந்து நதிக்கரையை யடைந்தகாலத்தில் அவர்களுடைய பாஷை கோச்சையாகத்

* "தமிழ் மொழியின் வரலாறு" வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ., இயற்றியது.

தானிருந்தது. அந்தப்பாகத்தில் அக்காலத்தில் வசித்த நாகரிகத்திற் சிறந்த திராவிடர்களின் சம்பந்தத்தினுல் தான் ஸம்ஸ்கிருதம் செம்மைபட்டது. அதன் பிறகு வடமொழியாளர் தமிழர்களுடைய ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப் பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்ம நூற்பயிற்சி மிக்குடையாராயும், கலையுணர்ச்சி சான்றவராயுமிருந்தமை பற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர். இவ்வாறு "தமிழரிடத்திலிருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தனபோலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தனபோலவும்" வடமொழியாளர் காட்டினர். இதுவும் மேற்கூறிய ஆசிரியர் கருத்து. பருத்த எழுத்தில் காட்டப்படும் விஷயத்திற்கு ஆதாரம் இன்னும் தேடவேண்டி நிற்கின்றோம்.

அவ்வாறே காவிய லக்ஷணம், அலங்காரம், முதலிய வைகளைக் கொண்டும் திராவிட பாஷை சிறப்புற்றதென்றும் ஆரியபாஷை அதற்குச்சிறிது குறைந்த நிலைமையிலுள்ளது என்பவர்களு மிருக்கின்றனர். அதற்குதாகரணமாய் வட மொழியில் துக்க முடிவுகொண்ட இலக்கியம்* இன்மையைக் கூறித் தமிழில் காணப்படும் சிலப்பதிகாரத்தைச் சிறப் பித்துப் பேசுகின்றனர் திராவிடாபிமானிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாய் பாஷைக்கும் ஜாதி வித்தி யாஸம் கூறுவதுண்டு. ஸம்ஸ்கிருதம் தேவபாஷையாம். தமிழ் பிராம்மணரல்லாதார் (சூத்திர) பாஷையாம்†.

* Tragedy (டிராஜடி) † பிரபஞ்சதாரை 150-151 வது பக்கங்களைப் பார்க்க.

ஆனால் தமிழ் சிவபிரானாலளிக்கப்பட்டது என்றும் அது தான் தேவபாஷை என்றும் சிலர் கூறுவர். "ஆரியமும் செந்தமிழும் ஆனான் கண்டாய்" முதலிய மேற்கோள்காட்டி இவ்விருபாஷைகளும் தேவபாஷைகள் என்றே ஒரு முடிவு பெறக்கூடும். இரண்டு பாஷைகளுக்கும் காலவரைமுறை கூறுவதிலும் கீர்வாணபாஷை (வடமொழி) அனாதி என்று அப்பாஷாபிமானிகள் கூறுநிற்பர். முறையே தமிழ்ப் பாஷைதான் காலத்தில் முந்தியது என்று திராவிடாபிமானிகள் பறைச்சாற்றுகின்றனர். இரண்டு பாஷைகளைப் பேசும் மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடி வாழ நேரிடின் அந்த இரண்டு பாஷைகளின் மொழிகள் கலந்துகொள்வது இயல்பு என்பது தற்காலம் நம் நாட்டில் உபயோகப்படுத்தப் படும் அன்னிய நாட்டு மொழிகளால் கண்டுகொள்ளப் பாலது.

தமிழ் தனித்தமிழாயிருக்க வேண்டுமென்றும் இதர பாஷைகளின் கலப்பு கூடாதென்றும் ஏற்கனவே ஏற்பட்டுள்ள கலப்புக்களை யழிக்க வேண்டுமென்றும் பிடிவாதம் பிடிப்போமேயாகில் தற்காலத்திய நூதன அபிவிருத்திக் குற்றவாறு பல நவீன கலைகளையும் புதினங்களையும் நம் பாஷையில் வெளிப்படுத்துவது அவ்வளவு சுலப சாத்திய மில்லை. சாத்தியமாயின் நலத்தினும் நலமே. பண்டைக் காலத்தில் வடமொழியினின்றும் வார்த்தைகளை அங்கீகாரஞ்செய்துகொண்ட புலவர்களின் அடிச்சுவடுகளை நாமும் பின்பற்றுவதுதான் அவர்களுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். இக்காலத்துக் கேற்றவாறு கூடியமட்டில் தேவையான பதங்களை மேனாட்டுப் பாஷைகளினின்றும் எடுத்துக்கொள்வது தவறாகாது.* அவ்விருபாஷைகளின் ஆராய்ச்சியினால்

---

*இவ்விஷயத்தைப்பற்றிய எமது கருத்துகள் தமிழ்நூற் பெருக்கம் எனும் சிறிய வியாசத்தில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. (விலை நாலணா.)

இதுவரை ஏற்பட்டிருக்கும் கொள்கைகளாவன:—அவைகள் தனித்தனியே தோன்றியவை; அநேக நூற்றாண்டுகள் தனித்தனியே வளர்ந்து கொண்டிருக்குங்கால் இரண்டு பாஷைகளும் சந்திக்க நேரிட்டது; அக்காலத்தில் இயல்பாய் ஒன்றுடன் மற்றொன்று உறவாடலாயிற்று; அவைகளின் காலவரையை அறுதியிடுதல் சாத்தியமில்லை; அவைகளுள் மரித்தமொழி யெனப்படும் ஸம்ஸ்கிருதம் எக்காலத்தில் அக்கதி பெற்றது என்பது அறியக்கூடியதா யில்லை; வடமொழியினின்று தென்மொழி பெற்றுக் கொண்டவை வெளிப்படையாய்க் காணப்படுகின்றன; ஆனால் தென்மொழியினின்று வடமொழி பெற்றுக்கொண் டவை அவ்வாறு விசதமாய்ப் புலப்படவில்லை; என்பவை களே.

நாகரிகத்துக்குரிய மற்றுமுள்ள துறைகளிலும் தமிழர் களின் முன்னேற்றத்தைக் கூறப்புகின் வியாபாரம் என்பது முதலில் நம் முற்படுகின்றது. இவ்விஷயமாய்த் தமிழர் களுக்கு அன்னிய நாட்டார்களுடன் ஏற்பட்ட சம்பந்தத் தைக் குறிக்கும் ஆதாரங்களைப் பன்முறை கூறியுள்ளோம். வியாபாரத்தினால் ஒரு நாட்டுக்கு விளையும் செல்வத்தின் பெருமை கணக்கிடத்தக்கதன்று. அந்த வியாபாரமும் ஸ்வ ராஜ்ய முறைப்படி நடைபெறின் உள்நாட்டுத் திரவியம் காவிரி யாற்றின் நீர்வளம் பெற்ற பூமியின்கண் பழுத்துக் கொழிக் கும் தானிய மணிகளுக்கு மேலாய்க் குவியும். அன்னிய நாட் டரசு முறைப்படி அவரது நாட்டுச் செல்வத்தை விருத்தி செய்து கொள்வதற்கு அவரது தேசாபிமான மேலீட்டால் வியாபாரம் நடைபெறின் கொள்ளிடத்தின் நீர் கடலுக்குள் புகுவதைப்போல் உள்நாட்டுச் செல்வம் வெளி நாட்டினுள் பாயும்

தமிழரசாட்சியில் நடைபெற்ற கப்பல் வியாபாரங்களைக் குறிக்கக் கூடிய அறிகுறிகள் பல நிற்கின்றன. தமிழ் நூல்களில் காணப்படும் நெய்தல், கலங்கரை விளக்கம், பட்டினம், ஓடம், முதலிய மொழிகளும் கடலாடு காதை போன்ற நூலதிகாரங்களும் திரைகடலோடியும் திரவியம் தேடு என்பதைப்போன்ற பழமொழிகளும் கூறப்படலாம். சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய 'பட்டினப்பாலையில்' வர்ணிக்கப்பட்டிருக்கும் புகார் பட்டினத்தின் பெருமை அதற்குப் பெருஞ் சான்றாகும். தொண்டி, முசிறி, வைக்கரை, கொற்கை, குமரிக்கோடு ஆகிய துறைமுகப் பட்டினங்களிருந்தன.

வெளிநாட்டு வியாபாரத்தில் சிறந்த நாடு உள்நாட்டு வியாபாரத்திலும் வளர்ந்துகொண்டிருந்தது என்பது சொல்லாமலே விளங்கும். அவ்வாறு வெளிநாட்டு வியாபாரமும் உள்நாட்டு வியாபாரமும் நம்நாட்டுக்குதவியாய் வலுமை பெற்றிருந்தமையால் முற்காலத்தில் தமிழர்களுக்குள் செல்வப்பெருக்கம் ஏற்பட்டிருந்தது. பரதகண்டத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் நம்நாட்டு ஒளி வீசிற்று. அதனால் அன்னிய நாட்டுக்கிரஹணம் பிடித்தது. தென்னாட்டின் மக்களுக்குப் பிழைக்கும் வழிக்குரிய தொழில்கள் பல இருந்தன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலத்தில் ஐவகைப் பாகுபாடுகளுக்கிணங்க, குறுஞ்சியில் வேடர்களும், முல்லையில் ஆயர்களும், மருதத்தில் உழவர்களும், நெய்தலில் நுளையர்களும், பாலையில் மறவர்களும் காணப்பட்டனர்.

பூமிக்குள்ளினின்றும் கிடைத்த தாதுவர்க்கங்களை உபயோகத்துக்குக் கொண்டுவரக்கூடிய தொழிலாளர்களு

மிருந்தனர். இரும்பு, பித்தளை, வெண்கலம், தாம்பிரம் ஆகிய வேலைகளைச்செய்த கருமான்கள், தங்கம் வெள்ளி ஆகிய பொருள்களை வேலை செய்த தட்டான்கள், பஞ்ச உலோகங்களினுதவியால் விக்கிரங்கள் செய்த சிற்பிகளும் (ஸ்தபதிகளும்) இருந்தனர். அவர்களின் பணிக்களறிகள் ஏராளமாயிருந்தன.

மரவேலை செய்த தச்சர்கள், கறுங்கல் வேலை செய்த தச்சர்கள், செங்கல் ஓடு முதலியவைகள் சூளையிட்டவர்கள் ஆகிய கட்டிட வேலைக்காரர்களிருந்தனர். வஜ்ரலேபம் என்கிற ஒரு கல் ஒட்டியின் உதவியைக்கொண்டு கல் பிம்பங்களின் உடைந்த பாகங்களை ஒன்று கூட்டும் ஆச்சரிய சக்தியை உடைத்தாயிருந்தனர்.

கடலுக்குள்ளினின்றும் முத்து, சங்கு, சோழி முதலிய பல உபயோகமுள்ள பொருள்கள் வெளி யேற்றப் பட்டன.

சமூக வாழ்க்கைக்குரிய வண்ணான் அம்பட்டன் குயவன் முதலிய பல தொழிலாளிகளுமிருந்தனர். அவர்கள் குடிகளின் ஆதரவினுலும் அரசாங்கத்தாலும் ஊதியமும் மானியமும் பெற்றிருந்தனர்.

மேற்கூறப்பட்ட தொழிலாளர்களின் யுக்திகளும் புத்தி சாதுரியங்களும் வேலைத் திறமைகளும் நன்கு மதிக்கப்பெற்றன. அநேக நூற்றுண்டுகளுக்கு முன் கட்டப் பட்ட கோவில்களும் விக்கிரகங்களும் கட்டட அமைப்புகளும் சித்திர வேலைகளும் இன்றைக்கும் உயிருடன் நிற்கின்றன. தமிழகத்தில் காணப்படும் சில தேவாலயங்களில் சூரியபூஜை என்கிற நாட்கள் பிரதி வருஷத்திலும்

தோன்றுவதுண்டு. அதாவது அந்த நாட்களில் சூரியனுடைய கிரணங்கள் அதின் மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தின் சிரத்தில் சுமார் கால்மணி நேரம் காலையிலாவது மாலையிலாவது விழுவதுண்டு. அப்படி விழும்படிச்செய்வது கோபுர வாயிற்படி அமைக்கப்பட்டிருக்கும் கணக்கு முறையே காரணமாகும்.*

தமிழ் மக்கள் ஜீவனம் செய்வதற்குத் தேவாலயங்களும் ஆதாரங்களாகும். பூஜைசெய்யும் குருக்கள் முதல் மெய்காவல்காரன் வரை அநேக தொழிலாளிகள் தேவையானதனுல் பலரும் பிழைக்க இடமுண்டு. பிழைக்கும் வழிகளுள் வைத்தியமும் ஒன்று. மக்களதுடலுக்குரிய பல பிணிகளைத்தீர்க்க மருத்துவர்களும் தேவை. ஐம்பெருங்குழுவில் அவர்களுக்குமிடமிருந்தது என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அகஸ்தியர்தான் வாகட குரு. அவர் பெயரால் நம் நாட்டில் தோன்றியிருக்கும் வைத்திய நூல்கள் இன்னும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியிருக்கின்றன. நிமித்தர் எனப்படும் ஜோதிடர்களுக்கும் பிழைப்புண்டு. தென்னுட்டு மக்களுக்கு எக்காலத்திலும் ஜோசியத்திலுள்ள நம்பிக்கை அளவிடத்தக்கது. தமிழகத்தில் குறி, கணி, என்று சொல்லும் மந்திரவாதிகளும் தந்திரவாதிகளும் பலர் எக்காலத்தும் இருந்திருக்கின்றனர். தவிர மக்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கிப் பிழைக்கும் கூத்தாடிகள், பாடகர்கள், வேஷதாரிகள் ஆகியவர்களுமிருந்தனர்.

கருமவினைஞர் என்று சொல்லப்படும் புரோகிதர்கள் தமிழர் சமூக வாழ்க்கையில் அரண்மனை அந்தப்புறத்திலும்

*இம்மாதிரி தலங்களின் பட்டி ஒன்று சேகரித்து இந்நூலின் முடிவில் கூட்ட முயற்சி செய்கின்றோம்.

இடுகாட்டிலும் இன்றியமையாதவர்களாய் வாழ்ந்திருந்தனர். இப்பொழுதும் அப்படியே இருந்து வருகின்றனர். அவருடைய தொழிலும் ஒரு பிழைக்கும் வழியே. அவர்களுக்கு முற்காலத்தில் ஏற்பட்டிருந்த நிலைமை பல சங்க நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் அதிகாரத்தில் அமர்ந்து பிழைத்தவர்களைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

இனிக் கல்வியும் பிழைக்கும் வழிகளுள் ஒன்றெனக் கூறுவாம். தமிழகத்தின் கல்வியைப்பற்றி (இப்பாகம் 90-வது பக்கத்தில்) குறிப்பிட்டுள்ளோம்.

தமிழர்களின் கல்வி சிறப்புற்றோங்கி வளர்ந்த காலம் தமிழ்நாடு ஸ்வராஜ்யம் பெற்றிருநத காலம் என்பதை வற்புறுத்துகின்றோம். புலவர் புகழ்ச்சிக்கு இலக்காய் விளங்கின மன்னர்களின் பரம்பரை அளவுக்கு மிஞ்சியதாகும். மண்டலங்களையாண்ட முடிவேந்தர்களும் கூற்றங்களை யாண்ட குறுநில மன்னர்களும் பிரபுக்களும் தனவந்தர்களும் தம் சக்திக்கு மிஞ்சி புலவர்களுக்குதவி புரிந்தனர். கவிகளுக்குக் கனகாபிஷேகம் சொரிவது சர்வ சாதாரணமாயிருந்தது. கரிகால் சோழன் கடியலூர் உருத்திரங் கண்ணனாருக்கு அளித்த பொன் குவியல் கலிங்கத்துப் பரணியில் காணப்படும். நன்னன் வேண்மான் புலவர்களுக்களித்த பரிசுகள் இன்றைக்கும் மறக்கப்படாதவை. மதுர கவிகள் மாட்டு செலுத்தப்பட்ட மரியாதைகள் மட்டற்றவை. பெருஞ்சேரலிரும் பொறையைப்பாடிய மோசிகீரனாருக்கு அவர் உறங்குங்கால் அவ்வரசன் செய்த தொண்டு தமிழ் நாட்டிலன்றி வேறெந்த நாட்டில் நடைபெற்றிருக்கும்? சங்கம் வளர்த்தோங்கிய பாண்டி நாட்டரசர்களின்

கொடைகள் கணக்கிடத்தக்கவையன்று. அன்றேல் எவ்வாறு ஆயிரக் கணக்கான புலவர்கள் அக்காலத்தில் தோன்றியிருக் கக்கூடும்? தற்காலத்தில் முற்காலத்திய வித்துவான்களைப் போல் காணமுடியாதென்பது தவறு. அவர்களைப் போற்றுவாரற்றே அவர்கள் பெயரையும் காணேம். முற் காலத்தைப்போல் இக்காலத்திலும் இசை, கவி, ஓவியம், நவீன சாஸ்திரம் முதலிய பல கலைகளிலும் சிறந்தவர்கள் எவ்விடத்திலும் தோன்றல் கூடும். அவர்களுக்குதவியாய் தமிழ்த் தெய்வத்திற்குக் கோவிலென விளங்கக்கூடிய பல் கலைக்கழகங்கள் பல தென்னாட்டில் தோன்றித் தழைத் தோங்கல் வேண்டும்.

இனி **மதவிஷயத்தை** எடுத்துக்கொள்வோம். தற் காலத்தில் நமக்குத் தெரிந்தமட்டில் திராவிடர்களின் **பூர்வீக மதம்** இன்னதுதான் என்று சுட்டிக்காட்ட ஆதாரங் கள் இல்லை. உலகத்தில் நாகரிகத்தில் முன்னேற்றமடைந் திருக்கும் எந்த இனத்தோரும் மத உணர்ச்சி இல்லாம லிருக்கவில்லை. ஆகையால் திராவிடர்களுக்குச் சொந்த மெனக்கூடிய ஒரு மதக்கோட்பாடு இருந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்வோமாக. ஆனால் இப்போழ்து காணப்படும் மதாசாரங்களைச் சீர்தூக்கிப்பார்க்கின் தமிழகத்தின் மத உணர்ச்சி பல்விதக் கொள்கைகளின் கலப்புற்றது என்று புலப்படுகின்றது.

இந்நாட்டில் திராவிடர்களுக்கு முந்தி வசித்தவர்கள் **நாகர்கள்** என்று சொல்லப்படுகின்றனர். நாகூர், நாகை, என்கிற ஊர்ப்பெயர்கள் அவர்களுடைய பூர்வீக வாசஸ் தலங்கள் என்று சிலர் நினைக்கின்றனர். அவர்களின் வம்சத் தவர் ஆஸ்ஸாம், சோடா நாகப்பூர், முதலிய பல இடங்

களில் இன்றைக்கும் இருப்பதாய்த் தெரிகின்றது. பாரத மஹா சமுத்திரத்தில் உள்ள தீவுகளில் இருப்பவர்களுள் சில இனத்தார்களின் நடை உடை பாவனைகளினால் அவ்விடங்களில் அவர்கள் பரவிநின்றிருந்தனர் எனக் கூறலாம்.

நாகத்தை அதாவது பாம்பைப் பூஜை செய்தவர்கள் என்று அப்பெயர் பெற்றனர் போலும். அல்லது ஆதிசேஷனுக்குச் சகோதரனான வாசுகியென்கிற நாகர் குலத்தில் பிறந்தவர்களென்று புராணக்கதையும் கூறப்படலாம். நாகர்கள் தமிழகத்திலும் இருந்திருக்கவேண்டுமென்றும் அவர்களுடைய வழியைத் திராவிடர்கள் ஒருவாறு பின்பற்றினர் என்றும் நாக பிரதிஷ்டை செய்தல், நாகபஞ்சமி விரதம் பூணல், பாம்புப்புத்துக்குப் பால் வார்த்தல், ஆகிய ஆசாரங்களால் அறிந்து கொள்ளப்பாலன. மணிமேகலை முதலிய பண்டைய நூல்களில் காணப்படும் சமூக வாழ்க்கையின் இடையில் நாகர்களின் பெயரும் காணப்படுகின்றது. பலமரக்களின் ஆசாரங்களும் காணக்கிடக்கின்றன. மிருக பலியளித்தல் உடலை விட்டுப்பிரிந்த உயிர்களுக்கு (அதாவது பிரேத ஜீவன்களுக்கு)ப் பூஜையிடல், மரித்த யுத்தவீரர்களுக்கு வீரக்கல் நாட்டி அதை வணங்கல், அவர்களது சிலை உருவங்களுக்குக் கோவில் கட்டி வைத்தல் ஆகியவைகள் கலப்பு ஒழுக்கங்கள் எனக் கருதப்படுகின்றன. பிசாசு மந்திரங்கள் ஓதல், பேயோட்டல், சூன்னியம் வைத்தல், ஆவேச ஆட்டங்கள், ஆகியவைகள் திராவிடர்கள் பால் காணப்படுவன அக்கலப்பின் பயனெனக் கருதப்படலாம்.

நம் நாட்டினில் விக்கிரகாராதனை தோன்றியது திராவிடர்களுடைய சொந்த ஆசாரம் என்றும் அதுதான் ஆரியர்களால் அனுசரிக்கப்பெற்றதென்றும் ஒரு கோட்பா

டுளது. ஆனால் சரித்திர ஆராய்ச்சிக் கெட்டியவரை புத்தர்களுடைய ஆசாரம் அது என்று கூறப்படல்வேண்டும். புத்தர்களும் ஜைனர்களும் தென்னாட்டில் தோன்றிய காலத்தில் அவர்களுடைய நாகரிகம் தமிழகத்தில் உளதிற்று. அவர்களால் இயற்றப்பட்ட பல தமிழ் நூல்களும் அவர்களைப்பற்றிப் பேசும் நூல்களும் அனேகமிருக்கின்றன. திருவள்ளுவர் ஜயினர் என்றும் அவருடைய மதக்கொள்கை ஜயினம் என்றும் தற்பேழ்து சில அறிஞர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. ஆயினும் அவருடைய மதத்தை அறுதியிட்டு உறுதிமொழி கூறுவது கடினம். பிறகு ஆரியர்கள் தமிழகத்தில் நிலை பெற்று நிற்க நேரிட்ட காலம் முதல் மொழிக்கலப்பு ஆசாரக்கலப்பு முதலியவைகள் ஏற்பட்டதேபோல் தெய்வ வணக்க முறைகளின் கலப்பும் எற்பட்டது. பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆகிய மும்மூர்த்திகளும் அவர்கள் மனைவிமார்களும் மக்களும் சூரியனும் அக்கினி முதலிய அஷ்டதிக் பாலர்களும் ஆரியர்களின் தேவதா பரம்பரைகள் என்று அனேக ஆண்டுக்களாய்க் கூறப்பட்டு வந்தனர். ஆனால் தற்காலம் சில ஆண்டுக்களாய் திராவிடர்களைப் பற்றிய ஆராய்ச்சியின் பயனாய் சிவன், ருத்திரன், உமை, சுப்பிரமணியன், வருணன், இந்திரன், ஆகிய சில தெய்வங்கள் திராவிடர்களுடைய சிருஷ்டிகள் என்றும் அவைகள் ஆரியர்களுடைய மதாசாரங்களுள் புகுந்தன என்றும் கூறப்படுகின்றன. இம்மாறுதல்களுக்கு ஆதாரங்கள் அம்மொழிகளின் வரலாறு எனப்படுகின்றது. செம்மல் என்கிறமொழியினால் சிவன் என்கிற வடமொழிப் பெயரும் செம்மை வர்ணத்தினால் ருத்திரன் என்கிற வடமொழிப் பெயரும் தோன்றின என்றும் கொற்றவை என்கிற தமிழ்த் தெய்வம் உமை என்கிற ஆரிய

தேவஸேனையாக்கப் பட்டனள் என்றும் மலையரசனுக்கும் கொற்றவைக்கும் மகனான முருகன் ஆரியர்களுக்கு சுப்பிர மணியனாய் விட்டான் என்றும் கோட்பாடுகள் கிளம்பி யிருக்கின்றன. இவைகளுக்குப்போதுமான ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றே யாம் கருதுகின்றோம். ஏனெனின் அம்மொழிகளின் ஆராய்ச்சி முறை நிலைபெற வில்லை. நிற்க; தேடப்படுதற்குரிய பொருள் எனப் பொருள்படும் வடமொழியான மிருக்ய: என்பதன் சிதைவு தான் முருகன் எனும் மொழியோ என்கிற ஐயம் நமக்குண்டு. இம்மாதிரியான மொழிஉச்சரிப்பு மாறுதல்கள் தோன்று வது இயல்பு. இது ஆரிய மதாபிமானம் எனக் கருதப் படாமல் தேடப்படும் சரித்திரப்பொருள் எனக் கருதப்பட வேண்டும்.

இம்மாதிரியான விஷயங்கள் சரித்திர ஆதாரங்க ளெனக் கொள்ளப்படுவதற்கு இன்னும் சரியான ஆராய்ச்சி கள் தோன்றவேண்டும் என்பதற்கையமில்லை.

மேலும் முற்காலத்திய தமிழர்களின் தனி மத விஷய மாய் ஒரு கோட்பாடுரைப்பது தற்போழ்து கூடுமான தன்று. இதுவரை தெரிந்தமட்டில் திராவிடமதம் என்ப தொன்று தென்படவில்லை. திராவிடர்களுடைய நாகரிகத் தை அறிவிக்கும் தமிழ் நூல்களினின்றும் யாதொரு ஆதா ரத்தையும் காணக்கூடவில்லை. ஆனால் ஆரியர்களுடைய ஆதிக்கியம் ஏற்பட்டது முதல் அவர்களுடைய மத உணர்ச்சி யே அதிகமாய்க் காணப்படுகின்றது. வேதங்கள், ஸ்மிருதி கள், வர்ணாசிரமதர்மங்கள், புராணங்கள் ஆகிய பல ஆரிய தர்மங்களும், திராவிடர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சைவம், வைஷ்ணவம், வேதாந்தம், ஆகிய கோட்பாடுகளும் அவைகளுள் தோன்றியிருக்கும் பாகுபாடுகளும் உட்பாகு

பாடுகளும் தமிழகத்தில் காணப்படுகின்றன. தமிழ்ப் பாஷையிலும் காணப்படுகின்றன. அவைகள் அக்காலத்தில் வேற்றுமைப்பாடின்றி அந்தரங்கக் கொள்கைகள் எனக் கருதப்பட்டன. வேற்றுமை தோன்றியது சரித்திர மத்திய காலமெனப்படலாம்.

ஒருகால் திராவிடர்களுடைய மதத்துக்கு ஆரியர்களுடைய மதம்போன்ற உடையளித்திருப்பினும் இருக்கட்டும். அம்மாதிரியான மதத்தில் ஆரியர்களுடைய தர்மங்களே பெரும்பாலும் காணப்படின் குறையென்ன? அக்காலத்திய திராவிடர்களும் ஆரியர்களும் அறிந்தும் அறியாமலும் பல விதத்திலும் ஒருமைப்பாடும் அமைதியும் அடைந்தனர் எனின் அதில் குற்றமென்ன? ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் ஏற்பட்ட கலப்புக்களுள் மதத்தில் ஏற்பட்டுள்ளதே அதிகம் காணக்கிடக்கின்றது. ஆதலாலன்றோ பரதகண்டத்தின் மத உணர்ச்சியை ஹிந்துயிஸம் (ஹிந்துமதம்) என்று கூறுமல் ஆரிய தர்மம் என்று பெயரிட்டழைத்திருக்கிறோம். ஆனால் இப்பெயர் ஆரியர்கள், திராவிடர்கள் எனும் வேற்றுமையைக் கிளப்பும் தன்மையை யுடைத்து எனக் கருதி “திராவிடர் ஆரியர் என்னும் வேற்றுமையை மறக்கச்செய்யும் ஆற்றல் ஹிந்து என்னுஞ் சொல்லிலிருப்பதால் ஒருமைப்பாடு நோக்கி அதைக்கொள்வது தவறாகாது” என்று “நமது பரத கண்டத்தின்” முன்னுரையாசிரியர் வலியுறுத்துகின்றனர். கவீந்திரராகிய ரவீந்திர நாதரும் ஒரு தருணத்தில் அவ்வாறே குறிப்பிட்டனர். ஆனால் ஹிந்துயிஸம் போய்ப்பெயர் என்பது தவறாகாது. அதை எவ்வாற்றானும் நீக்கவேண்டும் என்பது எம் கருத்து. ஆனால் பெயரில் என்ன இருக்கின்றது? என்கிற வியவகாரம் ஒருபக்கல் நிற்க, அந்நியநாட்டு மனப்பாங்குக்கு ஈடுபட்டுத்

தம் நாட்டையும் அதின் உரிமைகளையும் மறந்த நம் நாட்டினர்களின் உள்ளத்தை மாற்றுவதற்காகப் பொய்ப்பெயர்களாகிய இந்தியா, ஹிந்துக்கள், ஹிந்துமதம், என்பவைகளை அறவே மாற்றவேண்டு மென்று, முறையே பரதகண்டம், பாரதமாக்கள், ஆரிய தர்மம் என்று நாமகர்ணம் சூட்டினோமே யன்றி வேத சம்பந்தமானதன்று என்று நினைத்துக் கூறவில்லை. ஆனால் சரித்திர சம்மதமன்றெனக் கருதினோம்.

ஒருகால் பாரததர்மம் என்று ஏன் கூறியிருக்கக் கூடாதெனின், அதற்குப்பல காரணங்களிருக்கின்றன. பாரத என்கிற அடைமொழியை ஸமஷ்டியாக (அதாவது ஓரே மொத்தமாக)ப் பேசுங்கால் இந்நூலில் அதை உபயோகித்திருக்கிறோம். அதாவது இந்நாடு முழுவதையும் குறிக்குங்காலத்தில் பரதகண்டம் என்றும் தனித்தனி பாகத்தை அதன் பெயரால் குறிப்பிட்டிருப்பதைப்போல் இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களையும் அதைச் சொந்த நாடாய்ச் செய்து கொண்டவர்களையும் மொத்தமாய்க் குறிப்பிடுங்காலத்தில் அவர்கள் எல்லோரையும் பாரதமக்கள் என்றே வியவகரித்து வருகிறோம். தனித்தனியாய்ப்பேசுங் காலத்தில் தனித்தனிப் பெயராலேயே வியவகரித்து வருகிறோம். ஆரியர்கள், திராவிடர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், புத்தர்கள், உதாகரணங்களாம். ஆனால் மத உணர்ச்சியைப்பற்றிப் பேசும்போழ்து இந்நாட்டினர் அனேகமாய் எல்லோரும் ஹிந்துமதம் எனப்படும் ஆசாரங்களை அனுசரிப்பதனாலும் அது ஆரியதர்மம் எனப்படும் முறையைப் பெரும்பாலும் தழுவிநிற்கின்றமையாலும் திராவிட மதம் என்று தனி மதம் ஒன்று காணப்படாததனாலும் ஆரியதர்மம் என்பதையேயாம் வற்புறுத்துகின்றோம். முன்னுரை யாசிரியர் நன்மொழி கூறியிருப்பதைப்போல் அந்நிய

நாட்டுப் பெயருக்கிணங்குகின்றவர்கள் ஆரிய தர்மத்தைப் பின்பற்றி வரும் ஆரியர்கள் என்று சொல்லிக்கொள்ள என் ஒருப்படு கிறாரில்லை? தமிழர் மதம் என்பது வெளிப்படும் வரை ஆரியதர்மம் என்பதைச் சரித்திர ஆதாரத்தைப் பின்பற்றி என் ஏற்றுக்கொள்ளக்கூடாது? ஆயினும் வேற்று மையை யொழிக்கும் ஆற்றலுடையது பாரததர்மம் அல்லது வேதாந்தம் எனும் உள்ளன்புதோன்றிவிடின் ஆரியதர்மம் என்கிற பெயர் தானும் நழுவி விடும். அக்காலத்திற்கு முகமன் கூறுவோம். எவ்விதமாயினும் அந்நிய நாட்டுப் பொய்ப்பெயர் மறைந்துவிடவேண்டும் என்பது எம்முடைய அந்தரங்க ஆர்வம்.

தமிழகத்தின் மத உணர்ச்சியின் தத்துவங்களை ஈண் டெடுத்துக் கூறுவதற்கு இடமில்லை. புறச்சமயங்களை நீக்கித் தற்காலத்தில் தென்னாட்டில் காணப்படும் மதங்களுள் சைவ மதமே பெரும்பான்மையோருடையது. அதைச் சுமாராய் முக்கால்பங்கு என்று கணக்கிடலாம். பாக்கியுள்ள கால் பங்கு வைஷ்ணவம் எனப்படலாம். சைவ சமயக்குறவர் களும் வைஷ்ணவாசாரியர்களும் பலர் தோன்றி என்று மிறவாவண்ணம் அவர்களுடைய மார்க்கங்களை உலகத் தோருப்யுமாறு அருளியிருக்கின்றனர். சைவ மறைகளும் வைஷ்ணவ பிரபந்தங்களும் ஞானக்கடல்கள் என்பதை யாவர் அறியார்? அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவசித்தாந்தம் எனப்படும் வேதாந்தப்பாகு பாடுகளும் தமிழர்களுள் காணப்படுகின்றன.

தென்னாட்டு மத உணர்ச்சியைப்பற்றிய விசேஷக் கூற்று ஒன்று யாதெனின் சிற்றறிவினர் முதல் பேறறிவினர் ஈறாக உள்ள மனிதர்கள் யாவருக்கும் அவரவர்களுடைய மனோநிலைமைக்கேற்றபடி படிப்படியாய் பக்தி மார்க்கமும்

ஞானமார்க்கமும் புகட்டப்பட்டிருக்கின்றன. பேய் பிசாசுகளுக்குப் பயப்பட்டுப் பலி பூசை படைப்பவர்களுக்கும் பிரம ஞானம், வேதாந்தம், சந்நியாசம், மோக்ஷம், ஆகியவைகள் பெயருக்கு மட்டிலாவது தெரியாமலில்லை. தவிர, ஆஞ்ஞானத்தில் எத்துணை ஆழ்ந்திருப்பவர்களுக்கும் பல தெய்வங்களை வணங்குகிறவர்களுக்கும் கடவுள் ஒருவர் உண்டு என்பது தெரியாமலில்லை. ஆனால் ஒரு கடவுளுக்குத் தான் பல நாமங்களா அல்லது உண்மையிலேயே பல ரூபங்களுடன் அவர் விளங்குகின்றனரா அல்லது தனித்தனி தேவதைகளுக்கு மேலாய் அவர் வீற்றிருக்கின்றனரா அல்லது யார் யார் எப்படி எப்படி நினைக்கின்றனரோ அப்படி அப்படி தோன்றித் தோன்றி மறைந்து விடுகின்றனரா ஆகிய பல பிணக்குற்ற பாகுபாடுகளை விசாரணை செய்துத் தீர்மானஞ் செய்கின்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே.

பக்தியிலும் ஞானத்திலும் சிறந்த சிவனடியார்கள் ஆழ்வார்கள் முதலியவர்களின் வரலாறுகள் பல புராணங்களின் வாயிலால் அறிந்து கொள்ளப்பாலன. தென்னாட்டு மன்னர்களுள் எத்துணையோ பெயர்கள் பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், குருபரம்பரா பிரபாவம், ஆகிய கிரந்தங்களில் காணப்படுகின்றனர். மனுமுறை கண்ட சோழன், பொற்கையான் மாறன் பாண்டியன், குலசேகர ஆழ்வார், ஆகியவர்கள் உதாகரணங்களாவர்.

மேலும் தமிழ் வேதங்கள் எனக் கூறப்படும் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி ஆகிய பக்தி நிறைந்த தமிழ் நூல்கள் தென்னாட்டு மதப்பற்றின் சரித்திர நிதிகளாகும். அவைகளைப் புதையலெனக்கண்டு ஆராய்ச்சிசெய்து விரிவாய் வெளியாக்கிவரும் ஆசிரியர்கள் பலருளர். அவர்களுள் தமிழ் வரலாறு என்பதன் கிரந்த கர்த்தா ஸ்ரீமான்

ஸ்ரீநிவாஸம் பிள்ளை அவர்களின் ஆர்வம் போற்றத்தக்க தாகும். அதில் தமிழ்நூல்களின் காலப்பாகுபாடுகள் வரன் முறைகளுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேற் கூறப்பட்டவைகள் தவிர தற்காலத்திய கவிகள் எனப்படுவோர் எண்ணிலாதிருக்கின்றனர். அவர்களைப் பற்றிய பலவரலாறுகளும் அவர்களின் நூல் விசேஷங்களும் இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவேண்டி நிற்கின்றன.

இதுவரை தமிழர் நாகரிகத்தைப்பற்றி நாம் விவரித்து வந்தது போதுமானதென்று நாம் நினைக்கின்றோமில்லை. ஆனால் அதை ஒருவாறு குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு இனியும் உண்மையை உசாவுதல் தமிழர்களுடைய கடமை யாகும். உதாகரணமாய் பண்டைக்காலத்திய பெண்மக்க ளின் நிலைமை, கல்வி, ஒழுக்கம், வீரம், தீரம், உரிமை ஆகியவைகள் ஆராய்ச்சி இன்னும் செய்யப்பட வேண்டும்.

அதனால் சரித்திர ஞானம் வளருவதுடன் அன்னிய நாட்டுக் கிரஹணமும் தானும் விலகி சூரிய கிரணமும் மீண் டும் பரவலாகும். தமிழகத்தின்கண் தமிழ்ச்சங்கங்களும் புலவர்களும் வெளிக்கிளம்புவதற்கிட முண்டாகும். தமிழ் நூற் பெருக்கம் ஏற்படும். தமிழர்களின் உரிமை தழைத் தோங்கும். தமிழ் நாட்டுக்கல்வி முறை மீண்டும் தோன்றும். அக்காலத்தில் பாரத மக்கள் ஸ்வராஜ்யப்பேறு பெறுவர்.

அத்தியாயம் :—4

போர்த்துகீஸர்கள்.

முதல் சருக்கம்.

நவீன மார்க்கக் கிளர்ச்சிகள்.

நமது பரதகண்டத்தைப் பிடித்த அன்னிய நாட்டுக் கிரஹணத்தைப்பற்றி இதுவரை கூறப்பட்டதோர் பக்கல் நிற்க, இனி ஐரோப்பியர்களின் கண்ணோட்டத்தையும் அதனால் தோன்றிய லாப நஷ்டங்களையும் ஆராய்ச்சி செய்வோமாக. மேனாட்டார்களுக்கும் இந் நாட்டார்களுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்திற்குரிய பல காரணங்களுள் சிலவற்றை யேனும் இதுகாறும் இந்நூலைப்படித்தவர்கள் அறிந்து கொண்டிருக்கலாம்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே அக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்த கிரேக்கர்கள், உரோமர்கள், எகிப்தியர்கள், பாரஸீகர்கள், ஸுமேரியர்கள், ஆகிய பல இனத்தார்கள் இப்பரத கண்டத்துடன் வியாபாரஞ்செய்து கொண்டிருந்தமையால் இக்கண்டத்தின் சிறப்பை வெளி நாட்டார்கள் செவ்வனே தெரிந்துகொண்டிருந்தனர் என்பது பல ஆராய்ச்சிகளால் தெரிகின்றது எனப் பலமுறை கூறியுள்ளோம். ஆரியா வர்த்தத்தை எதிர்த்துத் தாக்கிய டேரியஸ், அலெக்ஸாண்டர் என்பவர்களின் வரலாறுகள் ஒருவாறு கூறப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குப் பின் ஒருவர்க்குப் பின் ஒருவராய்த் தோன்றிய பல இனத்

தோர்களின் சரித்திரமும் விளக்கப்பட்டிருக்கின்றது. இறுதியில் முஸ்லிம்களின் ஆட்சியைப் பற்றியும் விவரிக்கப் பட்டிருக்கின்றது. அன்னிய நாட்டார்களினால் இவ்வாறு ஏற்பட்ட கலப்பு நாகரிகமும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பிறகு முஸ்லிம்களுக்குப்பின் கிறிஸ்தவர்கள் இக்கண்டத்தை யடைந்த விருத்தாந்தத்தை எடுத்துக்கொள்ளுமுன் முஸ் லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மேனாட்டில் ஏற்பட் டிருந்த சம்பந்தத்தை விளக்கவேண்டியது அவசியம். ஏனெனின் அச்சம்பந்தத்தினால் தான் மேனாட்டார்கள் கண்ணோக்கம் இந்நாட்டின்மேல் அதிகமாய் ஏற்பட லாயிற்று.

முஸ்லிம்கள் முஹம்மது நபி அவர்களின் மார்க்கத் தைப் பின்பற்ற ஆரம்பித்தது முதல் அவர்கள் ஜனத்தொகை யிலும்ஒற்றுமையிலும்யுத்தப்பயிற்சியிலும்வளர்ந்ததுமன்றி கும்பற்கூடி தங்களுடைய மதத்தைப் பிரசாரம்செய்வதற் கும் அன்னிய மதங்களைக் கொட்டுவதற்கும் வெகு ஆதுரங் கொண்டவர்களாய் அதிக பரபரப்புடன் தேனீ, வண்டு, செங்கொளவி ஆகியவைகளைப்போல் நான்கு திசைகளிலும் பறக்க ஆரம்பித்தனர். ஆதிமுதல், மதவிஷயமாய் முஸல் மான்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஜன்மப்பகை ஏற்பட லாயிற்று. கி. பி. பதினோராவது நூற்றாண்டில் யாத்திரை ஸ்தலங்களைச் சேவிக்கும் ஊக்கம் அதிகமாய்க் கொண் டிருக்குங்கால் துருஷ்க்கர்கள் கி. பி. 1099 (ஹி. 492)ல் கிறிஸ்தவர்களுக்குப் புண்ணிய பூமியாகிய எருஸலேத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டனர். அதனால் கிறிஸ்தவர்கள் முஸல்மான்களுடன் போர் புரியலாயினர். இப்போருக்குக் "குரூஸேட்" என்று பெயர். அஃதாவது கிராஸ் எனும் சிலுவையை மீட்டுவதற்கான யுத்தமாகும். இந்தக் குரூ

ஸேட் சுமார் கி. பி. 1453 வரை அடிக்கடி தோன்றியும் மறைந்தும் எரிந்தும் அவிந்தும் சில சமயங்களில் நீறுபூத்த தணலைப்போல் அடங்கியும் தங்கியிருந்ததெனலாம். அந்த ஆண்டில் (1453) அக்காலத்தில் ஐரோப்பாவில் வியாபாரப் போக்குவரவுக்கு முக்கிய ஸ்தானமாய் விளங்கிய கான்ஸ்டாண்டிநோபிள் என்கிற பட்டினம் துருஷ்கர் வசமாய் விட்டது. அந்த நகரம் அவர்கள் கையில் சிக்கிக்கொண்டது முதல் ஐரோப்பாவில் சில நூதனக் கிளர்ச்சிகள் தோன்றின.

ஐரோப்பாவுக்கும் அதற்குக் கிழக்கிலுள்ள பல நாடுகளுக்கும் வியாபாரப் போக்கு வரவு முற்கூறிய குருஸேடு ஆரம்பித்தது முதல் பெருகிக்கொண்டு வந்தது. ஏனெனின் கீழ்நாட்டுச் சாமான்களின் சிறப்பும் வேலைத்திறமையும் உபயோகங்களும் மேனாட்டாருக்குத் தெரியலாயின. அக்காலத்தில்தான் இந்தியாவினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட சர்க்கரை என்பதை முதல் முதலில் அராபியர்கள் மூலமாய் ஐரோப்பியர்கள் தெரிந்து கொண்டனர். ஆங்கிலத்தில் "ஷுகர்" (Sugar) எனும் மொழியே சர்க்கரை எனும் வடமொழியின் சிதைவுற்ற உருவம் என்று சொல்லப் படலாம். நமது பரதகண்டத்தின் பொருள்களும் கைத்தொழில் சரக்குகளும் அனேக நூற்றுண்டுகளுக்கு முன் பரவிநின்ற போதிலும் இடையில் சிலகாலம் வியாபாரங்கள் மந்த மடைந்திருந்தன. ஆதலால் டாக்காமஸ்லின், காஷ்மீரத்திய கம்பள ஷால்கள், வங்காளத்திய பித்தளைச் சாமான்கள், மிளகு ஜாதிக்காய் ஏலக்காய் முதலிய அரிய வஸ்துக்களை மீண்டும் அவர்கள் கண்ணுற்கண்டனர் போலும். கீழ்நாட்டார்களின் நாகரிக மேன்மை மேனாட்டார்களுக்கு மீண்டும் விளங்கலாயிற்று. கீழ்நாட்டின் சாமான்களை

மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்கள். ஐரோப்பாவில் பிரபுக்களின் மாளிகைகளில் நம் நாட்டுப் பொருள்களே சிறப்புற்றோங்கி நின்றன.

அக்காலத்தில் கான்ஸ்டாண்டி நோபில்தான் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்திய மார்க்கமாய் நின்றது. சில (ஸார்த்த) வணிகர்கள் பரத கண்டத்தின் வடமேற்கு எல்லையைக் கடந்து ஆக்ஸஸ் நதிக்கரையை யடைந்து பின்னர் இருகிளைகளாகப் பிரிந்து கொண்டனர். ஒருகிளை கஸ்பியன் ஸமுத்திரத்தை யடைந்து வால்காநதியின் மார்க்கமாய் நிஜ்னி நாவக ரோட் என்ற பெரும் வியாபாரச் சந்தையை யடைந்து வட ஐரோப்பாவிற்குள் புகுந்து விடுவது வழக்கம். மற்றொரு கிளை மேற்கு முகமாய்ச் சென்று கருங்கடலைத் தாண்டி கான்ஸடாண்டி நோபிலில் தங்கி அவ்விடமிருந்து மத்திய தரைக் கடலிலுள்ள வியாபார ஸ்தலங்களுக்குச் செல்வது வழக்கம். சில வியாபாரிகள் அராபிக்கடலில் பாரதநாட்டின் மேற்குக் கரையோரமாய்ச் சுற்றிக்கொண்டு பாரசீகவளை குடா வழியாய் மெஸபடாமியாவுக்குச் சென்று அவ்விடத்தி லிருந்து பலஸ்தினம் அல்லது மேற்கு ஆசியாவின் துறை முகப்பட்டிணங்களில் தம் பண்டங்களைக் கப்பல்களில் ஏற்றி ஜினோவா, வேனிஸ் முதலிய துறைமுகப் பட்டினங்களுக்கு அனுப்பி வந்தனர். மூன்றாவதான ஒரு மார்க்கத்தையும் சில வியாபாரிகள் பின்பற்றி யிருந்தனர். அது வட ஆபிரிக்காவிலுள்ள அலெக்ஸாண்டிரியா என்ற துறை முகத்தின் வழியாய் மேற் கூறப்பட்ட ஜினோவா வேனிஸ் ஆகிய பெரிய வியாபாரஸ்தலங்கருக்குப் போகும் மார்க்கமாகும்.

அந்தக்காலங்களில் கப்பல் போக்கு வரவு நடந்த போதிலும் பல இடையூறுகளினால் கடலில் போவது கஷ்டமாக இருந்தது. தரை மார்க்கமாய் வியரபாரஞ் செய்வது

தான் சௌகரியமாய் இருந்தது. நில பாகத்திலிருந்த இரண்டு மார்க்கங்களுள் கான்ஸ்டாண்டிநோபிள் வழியாய்ச் செல்வதே சீக்கிரமாய் முடிவதாய் நின்றது. அந்நகர் துருஷ்க்கர்கள் கைவசமானது முதல் கிறிஸ்தவர்களுக்குக் கீழ் நாடுகளுக்குப் போகும் சௌகரியம் குறைந்தது. ஏனெனின் ஆத்தோமன் சக்கிரவர்த்திகள் பல்வித இடுக்கண்களை உண்டாக்கினர். வியாபாரிகள் செலுத்தவேண்டிய சுங்கவரி மிதமிஞ்சி விட்டது. சுங்கவரி அதிகாரிகள் வியாபாரிகளைக் கொடூரமாய் நடத்தலாயினர். லஞ்சம் முதலிய உபத்திரவங்கள் விருத்தியாயின. திருட்டுப்பயம் அதிகமாயிற்று. போக்குவரத்துக்குப் பலவிதத்தில் தாமதமும் ஏற்படலாயிற்று. இக்காரணங்களினால் ஐரோப்பியர்கள் துருஷ்க்கர்கள் கையில் சிக்கிக்கொள்ளாமல் கீழ்நாடுகளுடன் வியாபாரத்தை மறுபடியும் செய்யவேண்டுமென்ற ஆவல் கொண்டவர்களானார்கள்.

மேலும் துருஷ்க்கர் அரசாட்சி ஆரம்பித்ததுமுதல் கிரேக்கர்களுள் பலர், முக்கியமாய்க் கல்விமான்கள், ஊரைவிட்டோடும்படி நேரிட்டது. அக்காலத்தில் கிரேக்கர்களுடைய பூகோள ஆராய்ச்சியும் சரித்திர ஆதாரங்களும் பூதபௌதிக சாஸ்திர விசேஷங்களும் தத்துவநூல்களும் அக்கல்விமான்களால் ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் பிரசாரஞ் செய்யப்பட்டன. பதினைந்தாவது நூற்றாண்டில் அச்சு இயந்திரமும் கண்டு பிடிக்கப்பட்டது. அது முதல் அச்சுவாகனமேறிய நூல்கள் தோன்றலாயின. நூதனக் கல்வி யூக்கம் உண்டாயிற்று. ஞானம் விருத்தியாயிற்று. சாமானிய ஜனங்களுக்கும் வெளி நாட்டுச் சரித்திரங்களைத் தெரிந்து கொள்வதில் ஆவல் உண்டாயிற்று. அன்னிய நாட்டு விசித்திரக் கதைகள் எங்கும்

கூறப்பட்டன. "இந்தியா" "சீனு" முதலிய நாடுகளில் ஆச்சரியமான மனிதர்கள் இருந்தார்கள் என்று வதந்தி பெருகிற்று. கடல் மனிதர்கள், ராக்ஷஸர்கள், வேடிக்கையான ஜந்துக்கள், அமானுஷியமான உவர்நீர் தேவதைகள் ஆகியவர்களின் வரலாறுகள் வெளிக்கிளம்பின. தங்களுக்குத் தெரியாத பிரபஞ்சத்தில் நடக்கும் அபூர்வங்களைக் காண்பதற்கு ஆவல் கொண்டனர். ஆனுல் வெகு தூரம் கடற்பிரயாணஞ் செய்வதற்கு வேண்டிய கருவிகளில்லை. அக்காலத்தில் காணப்பட்ட கப்பல்கள் வெகு சிறியவை ஆதலால் கடற்பிரயாணஞ் செய்யவேண்டிய திறமையைக் கற்பிக்க முதன் முதலில் போர்த்துகல் தேசத்தார் ஒரு கலாசாலை ஏற்படுத்தலாயினர். அந்நாட்டில் (1394 முதல் 1460 வரை) அரசுபுரிந்த ஹென்ரி என்பானுக்கு உண்டான தீவிர ஊக்கத்தினுல் கப்பல் ஓட்டிகளுக்கு அரசாங்கத்தின் ஆதரவு ஏற்பட்டது. அந்நாட்டிற்குச் சமீபத்தில் தென் பாகத்திலுள்ள ஆபிரிக்காவைச் சுற்றிப் பார்த்து ஒருகடல் மார்க்கத்தைக் கண்டு கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் அவனுல் செய்யப்பட்டது. புதிய மாதிரியாய்ச் சீர்திருத்த மடைந்த பெரிய கப்பல்கள் கட்டுவிக்கப்பட்டன. மாலுமிகளுக்குச் சகாயமான கருவிகளும் புதியவைகளாய்க் கண்டு பிடிக்கப்பட்டன. அவைகளுள் திசை காட்டி என்னும் (Magnetic Compass) கருவியே முக்கியமானதெனலாம்.

ஹென்ரி இறந்த பிறகும் அவனது முயற்சி தொடர்ந்து கொண்டே யிருந்தது. கி. பி. 1486ல் டையஸ் என்கிற மாலுமி வீரன் ஆபிரிக்கா கண்டத்தின் தென்முனையை யடைந்தான். ஆனுல் அதற்கு மேல் செல்ல முடியவில்லை. ஏனெனின் கடலில் புயல் காற்று அதிகமாயிற்று. அதனுல் அந்த இடத்துக்குப் "புயற்காற்றுமுனை" யென்ற பெயரிட்

டனன். அதற்குப்பின் 1497ல் வாஸ்கோடிகாமா என்பான் அதைப்பின்பற்றியே பாரத மகாசமுத்திரத்தை வென்று அராபிக்கடலில் புகுந்து மலையாளப் பிரதேசத்தின் மேற்குக் கரையில் (அஃதாவது கேரளநாட்டில்) கள்ளிக்கோட்டை (Calicut) என்கிற இடத்தில் கப்பலை நிறுத்தலாயினன். மிளகு, லவங்கம், லவங்கப்பட்டை, ஜாதிக்காய், முதலிய வாசனைத்திரவியங்கள் வாஸ்கோடிகாமாவுக்கு முகமன் கூறின. ஏராளமான தென்னை கமுகு முதலிய விருக்ஷங்களைக் கொண்ட அந்த நாடு அவன் கண்களுக்கு ஆனந்தத்தைக்கொடுத்தன. ஆதலால் கள்ளிக்கோட்டைக்குத் தலைவனுனஜாமரின் என்பவனுடைய தர்பாரையடைய விருப்பமுற்றவனுய் ஜாமரீனுக்குத் தன் தூதர்களை யனுப்பினுன். ஜாமரினும் பல்லக்கு ஒன்றை யனுப்பி மரியாதையுடன் அவனுக்கு வரவேற்பு அளித்தனன்.

வழியில் நடந்ததாய்ச் சொல்லப்படும் ஒரு கதையை ஈண்டுக் குறிப்பிடுவோமாக. வாஸ்கோடிகாமாவின் பல்லக்கு ஒரு மாரியம்மன் கோவிலுக்கெதிரில் சென்று கொண்டிருக்கையில் அவன்முன் சென்ற நான்கு அந்தணர்கள் கோவிலினின்றும் கொண்டுவரப்பட்ட ஜலத்தினுல் அவனையும் அவனுடன் வந்தவர்களையும் பரிசுத்தமாக்கினுர்கள். கோவிலிலிருந்த விக்கிரகம் யாதென அவன் விசாரித்த காலத்தில் அவர்கள் "மாரி, மாரி" என்றவுடன் மேரி, மேரி என்று நினைத்து உடனே போர்த்து கீஸார் அதை வணங்கலாயினர். அதைக்கண்ட அந்நாட்டினர் ஆனந்தம் அடைந்தனர். அவர்களை மிக்க மரியாதைகளுடன் அழைத்துக்கொண்டு போகலாயினர்.

கள்ளங்கவடற்ற ஜாமரின் இவ்வாறு அவனுக்கு நல்வரவு கூர்ந்தனன். இருவர்களுக்கும் சிநேகம் உண்டா

யிற்று. போர்த்துகிஸ் மன்னனின் வெகுமதிகள் ஜாமரின் முன் பரப்பப்பட்டன. மேனாட்டு வியாபாரத்தினால் விளையக் கூடிய தங்கம் பொன் வெள்ளிக்குவியல்கள் அவன் கண்ணைக் கவர்ந்தன. வாஸ்கோடிகாமாவின் வாயிலால் போர்த்துகீஸ் அரசனுக்கு மாற்று மரியாதைகள் புரியப் பெற்றன. அந்த அரசனும் தனது குடிகள் மலையாளத்துடன் வியாபாரஞ் செய்வதற்கான உத்தரவுகளையும் உதவிகளையும் அளித்தான். உருசிகோண்ட பூனை எட்டி எட்டித் தாவுவது என்ன ஆச்சரியம்? போர்த்துகீஸார் கப்பல் கப்பலாய்ச் சாமான்களை இந்நாட்டினின்று ஏற்றுமதி செய்து கொள்ளலாயினர்.

ஆனால் அக்காலத்தில் ஏற்கெனவே அராபிக்கடலில் இங்கும் அங்கும் சுற்றிக்கொண்டிருந்த அராபிய வியாபாரிகள் தங்களுக்குச் சத்துருக்களாய்ப் போர்த்துகீஸார் வந்து விட்டனர் என்று கண்டு ஜாமரினுக்கும் வாஸ்கோடிகாமாவுக்கும் சண்டை மூட்டி விட்டனர். போர்த்துகீஸார் கடற் கொள்ளைக்காரர்கள் என்றும் அடிமை வியாபாரிகளென்றும் வதந்திகள் கிளம்பலாயின. மலையாள நாயர்கள் ஒன்றுகூடி விட்டனர். அடிக்கடி கலகங்கள் தோன்றின. உடனே வாஸ்கோடிகாமா கொச்சி தேசத்து மன்னனுடன் சிநேகம் பாராட்டினான். ஏனெனின் அந்த ராஜாவுக்கும் ஜாமரினுக்கும் விரோதம் என்கிற சூக்ஷ்மத்தைத் தெரிந்து கொண்டிருந்தனன். இதனால் அராபியர்களுடைய கப்பல்களுக்குச் சேதம் உண்டாயிற்று. அதுமுதல் போர்த்துகீஸாருக்கும் அராபியர்களுக்கும் இன்னும் இதர கடல் வியாபாரிகளுக்கும் சமுத்திரமத்தியில் அடிக்கடி சண்டைகள் உண்டாயின. டையூ என்கிற இடத்தில் போர்த்து

கீஸாருக்கு ஏற்பட்ட ஜயத்தினல் அவர்களுடைய கடற்படையின் மேன்மை பிரசித்திபெற்றது.

நிற்க; எகிப்து அரசனுக்குப் போர்த்துகீஸார்மீது கோபம் உண்டாயிற்று. ஏனெனின் அவர்கள் கீழ் நாட்டுக்குப் புதிய வழிகண்டு கொண்டதனல் அவன்தேசத்தின் சுங்கவரி வரவர குறைந்துவிட்டது. மேலும் 'மூர்'கள் என்ற முஸல்மான் வியாபாரிகளைக் கிறிஸ்தவர்கள் படுகொலைகள் புரிந்தனர். அதனல் எகிப்து சுல்தான் தான் பலஸ்தீனத்திலுள்ள கிறிஸ்தவக்கோவில்களை இடித்துப்போடுவதாப் போப்பு அவர்களுக்குக் கடிதம் எழுதினன். தவிர அராபிக்கடலில் எகிப்தியர் கப்பற் படைதோன்றிற்று. அதையும் குஜராத்துக்குச் சமீபத்தில் போர்த்துகீஸர் சமுத்திரத்தில் மூழ்த்திவிட்டனர்.

பிறகு 1510-ல் ஆல்புகர்க் என்ற போர்த்துகீஸ் இராஜப்பிரதிநிதி மேற்குக் கடலோரத்திலுள்ள கோவா நகரத்தைப் பன்முறை தாக்கி முடிவில் அதைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு பாரசீக வளைகுடாவில் முக்கியமான ஆர்மஜ் பட்டினத்தை வென்றன். அதன் பிறகு மலாய்த் துவீபகல்பத்தில் மலாக்கா எனும் நகரத்தை ஸ்தாபித்துக் கொண்டதனல் போர்த்துகீஸ் ராஜ்யம் ஆசியாவில் வெகுதூரம் பரவலாயிற்று. அதுமுதல் கோவா என்னும் பட்டினமே போர்த்துகீஸாருக்குத் தலைநகராய் நின்றது. இன்றைக்கும் போர்த்துகீஸாருக்கு இந்நாட்டில் அதுவே தலைமையை வகித்து நிற்கின்றது. ஏனெனின் முற்காலத்தில் கீழ்நாட்டு வியாபாரங்களுக்கு அதுவே முக்கிய ஸ்தானமாய் விளங்கிற்று. சளுக்கியர்களது அரசாட்சி காலத்திலும் அதுவே முக்கிய ஸ்தலமாயிருந்தது என்று ஏற்கனவே கூறியுள்ளோம்.

இரண்டாவது சருக்கம்.

ஜெஸுயிட் கிறிஸ்தவர்கள்.

போர்த்துகீஸார் மேற்குக் கடலோரத்தில் நங்கூரம் பாய்ச்சின காலம் முதல் மேனாட்டு கிறிஸ்தவ குருமார்களும், மடாதிபதிகளும், சன்னியாசிகளும் மலையாள தேசத்தில் கும்பல் கூடலாயினர். பிரான்ஸிஸ்கன், (Franciscans) டாமினிகன், (Dominicans) ஜெஸுயிட் (Jesuits) என்கிற மதக் கக்ஷிகளை முடி சூட்டிக்கொண்டு முரட்டுப் பிடிவாதத்துடன் மதப்பிரசாரஞ் செய்ய முற்பட்டனர். அவர்களுள் ஜெஸுயிட் கிறிஸ்தவர்கள் வெகு விரைவில் விருத்தியாயினர்.

கோவாவில் விஜயம் செய்திருந்த ஜெஸுயிட் கிறிஸ்தவர்கள் தக்ஷிணத்தில் பீஜபூர் சுல்தானாகிய இரண்டாவது இப்ராஹிம் அதில் ஷாஹி காலத்தில் அவனுடைய ஆளுகைக்குள்ளடங்கிய பிரதேசத்தில் கிறிஸ்தவ மதப் பிரசாரஞ் செய்வதற்கும் மாதாகோவில் கட்டிக் கொள்வதற்கும் உத்தரவு பெற்றனர். ஏனெனின் சித்திரம் முதலிய சிறந்த வேலைகளிடத்தில் அவனுக்கு மிகுதியான பற்றுதல் ஏற்பட்டிருந்தமையால் அவைகளில் தேர்ச்சி யடைந்தவர்களிடத்தில் பிரியமும் அவர்களுடைய மதப் போக்குகளில் பொறுமையும் ஏற்பட்டது. எற்கனவே ஆரிய தர்மத்தைப் பின்பற்றியவர்களிடத்திலும் பொறுமை காட்டி நின்றனன். அதனால் அவனை ஜகத்-குரு என்று முஸ்லிம்கள் பரிகாசம் செய்வதுண்டாம். இம்மாதிரியான மதப்பொறுமை ஆரியாவர்த்தத்தில் அதே காலத்தில் அக்பர் சக்கரவர்த்தியால் காண்பிக்கப்பட்டிருந்தது என்பதை அறியாதாரிலர்.

அக்பருடைய ஆட்சியில் அவனது தர்பாரில் தங்கியிருந்த ஜெஸுயிட் பாதிரிமார்கள் அவனைக் கிறிஸ்தவ

மதத்திற் கிழுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகளைப் பல முறை செய்தனர். ஆனால் பயன்படவில்லை. அக்பரின் சகாயத்தையும், பலத்தையும் பெற்றுப் பிரசங்கங்கள் செய்தக்காலும் அவன் குடிகளையும் மாற்றிக் கொள்ள முடியவில்லை. உண்மையான முஸ்லிம்களிடம் கிறிஸ்தவர்களின் ஜபம் அநேகமாய்ப் பயன்படாது. முஸ்லிம்கள் ஆரிய மதஸ்தர்களின் விக்கிரகங்களையும் உற்சவங்களையும் வெறுத்து நின்றிருக்க ஏற்கனவே ஐரோப்பாவில் பல ஆண்டுகள் க்ருஸேட் யுத்தம் புரிந்த கிறிஸ்தவர்களுடைய விக்கிரகங்களையும் உற்சவங்களையும் கண்டு அவர்கள் எவ்வாறு சிநேகம் பாராட்டக்கூடும்?

மேலும் கிறிஸ்தவர்களின் போதனைகளும், விக்கிரகங்களும், விக்கிரகாராதனைகளும் பாரதமக்களுக்குப் புதியனவல்ல. அல்லது அவர்களுடைய மதம் ஆரியர்களுடைய மதத்திற்குச் சிறந்ததாய் அவர்களுக்குக் காணப்படவில்லை. ஆயினும் தாழ்ந்த வகுப்பினர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களுள் சிலர் வறுமையினாலும் அறியாமையினாலும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்துகொள்ள ஆரம்பித்தனர் என்பது நிச்சயம். ஆனால் கிறிஸ்தவர்களை மொகலாயர்களும் சுல்தான்களும் ஆதரித்ததற்குக் காரணம் ஒருகால் சுயநலமாயிருக்குமென்று சிலர் ஊகிக்கின்றனர். ஏனெனின் போர்த்துகீஸாரிடம் பீரங்கிகளும், குண்டுகளும், யுத்த வீரர்களும், இருந்தமையால் தங்களுக்குள் போட்டிகளும் பொறாமைகளும் ஏற்பட்ட சமயங்களில் அவைகளின் சகாயத்தை அவர்கள் எதிர் பார்த்திருக்கலாம். மேலும் நாளடைவில் ஜெஸுயிட் கிறிஸ்தவர்களின் செய்கைகளைக் கண்டு அவர்களுக்கு விரோதமான மார்க்கங்களைத் தேடுவதற்கு பிராடெஸ்டெண்டுகளான டச்சு வியாபாரிகளும்

ஆங்கில வியாபாரிகளும் பல சூழ்ச்சிகளை ஆரம்பித்தனர். மேனுட்டுக் கிறிஸ்தவ ஐரோப்பியர்கள் தங்கள் தங்கள் கருத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவியாய் லஞ்சங்கள் அளித்தும், வேறு அக்கிரமமான முறைகளைப் பின்பற்றியும் நிற்கலாயினர் என்பதை வரைவதற்கும் வெட்கமாயிருக்கின்றது. ஏனெனின் தற்காலத்தில் வசிக்கும் உண்மையான சில கிறிஸ்தவர்கள் அக்காலத்தில் வசித்தவர்கள் சத்திய வேதத்தை நியாய முறையில் பிரசுரம் செய்திருந்தால் "ஹிந்துக்கள்," எனப்படுவோர் கிறிஸ்தவ மதாபிமானிகளாய் மாறியிருந்திருப்பர் என வியசனிக்கின்றனர்.

அக்பரின் குமாரனுன ஜஹாங்கிர் தனது ஆளுகையாரம்பித்த காலத்தில் ஜெஸூயிட் கிறிஸ்தவர்களை அனுதரவு செய்யலாயினுன். ஆயினும் அவர்களுடைய விடா முயற்சியினுல் 1606-ல் ஆக்ராவில் இருபதுபேர் ஞானஸ்நானம் பெற்றனராம். தெருக்களில் அவர்களுடைய விக்கிரக உத்ஸவங்கள் நடைபெற்றனவாம். அவர்களுடைய செலவுக்கும் தனம் உதவி செய்யப்பட்டதாம்.

அவனுடைய தர்பாரில் மூஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் சில தர்க்கங்கள் நடைபெற்ற காலத்தில் சில முஸ்லிம்களையும் சில ஆரிய மதஸ்தர்களையும் கிறிஸ்தவ மதக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளும்படி செய்வித்தனராம்! அதனுல் அரசனைக் கிறிஸ்தவனுக்கிவிடலாம் எனப் பெருமை கொண்டிருந்தனராம் கிறிஸ்தவர்கள். அரண்மனையில் கிறிஸ்தவப் படங்கள் காணப் பட்டனவாம். போப்பின் பிரதிமையும் இருந்ததாம். அவைகளின் சித்திரச்சிறப்பை மொகலாய மன்னன் புகழ்ந்து பேசினதினுல் கிறிஸ்தவர்களுக்கும் பெரும் பெருமை உண்டாயிற்று. மேலும் அடிக்கடி கிறிஸ்தவ

மதத்தின் கொள்கையைப் பற்றிப் பேசினன். கடிதப் போக்கு வரவில் அமைக்கப்பட்டிருந்த சில சீல் (முத்திரை) களிலும் கிறிஸ்தவப் படங்கள் காணப்பட்டன. "ஜஹாங்கீர் உண்மையான கிறிஸ்தவன். ஆனால் கிறிஸ்தவனானல் ஒரே மனைவியுடன் இருக்கவேண்டுமே என்கிற பயத்தினால் மதத்தை மாற்றிக்கொள்ள வில்லை." என்று கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அடிக்கடி கூறிக் கொண்டிருந்தனர்.

ஜஹாங்கீரின் ராஜதூதன் ஒருவன் கோவாவிற்கு அனுப்பப்பட்டான். அவ்விடத்தில் போர்த்துகீஸ் ராஜப் பிரதிநிதியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் ஐரோப்பாவிலிருந்தே வரவில்லை. அதே சமயத்தில் ஆங்கில காப்டின் ஹாகின்ஸ் (1608) மொகலாய சக்கிரவர்த்தியின் சன்னதியில் வந்து சேர்ந்தான். ஜெஸுயிட்டுக்களைப் புறக்கணிக்க வேண்டிய வழிகளைத் தேடினன். சக்கரவர்த்திக்குக் காணிக்கைகள் கொடுத்த தனல் அவன் தயவைப் பெற்று சுகமாய் வாழ்ந்தான். இச்செய்தி கோவாவை எட்டிற்று. போர்த்துகீஸ் ராஜப் பிரதிநிதி சினங்கொண்டு ஜஹாங்கீரை வெருட்டினன். அவனும் சற்றுத் திகிலடைந்தனன். அதனல் ஆங்கிலேயர்களுக்குக் காட்டிய வியாபார சௌகரியங்கள் ரத்து செய்யப்பட்டன. 1611-ல் காப்டின் ஹாகின்ஸ் மொகலாய சக்கிரவர்த்தியின் சபையையும் விட்டகல நேரிட்டது. இந்த ஹாகின்ஸ் என்பவனே ஜஹாங்கீரைக் "கைதேர்ந்த குடிகாரன்" (Talented drunkard) என்று ஆங்கிலேயர்களுக்கு அறிவித்தவன். அது அவன் குணத்தைக்காட்டுகின்றது. மேலும் ஜஹாங்கீரின் சபையில் நடந்த விஷயங்கள் வேடிக்கையாயும் பரிகாசமாயும் அவனல் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

அவைகளினுல் அக்காலத்தில் ஆங்கிலேயர்களின் நட வடிக்கைகள் நமக்குப் புலப்படுகின்றன. தங்களுடைய காரியங்களை முடித்துக் கொள்வதற்காக ஆங்கில வியாபாரி கள் தங்களுடைய கௌரவத்தையும் பாராட்டாமல் சமயத் திற்குத் தகுந்தவேஷம் போட்டுவிட்டுப் பிறகு பரிகாசஞ் செய்தனர் போலும். குடிப்பதற்கு வேண்டிய சாராயங் களைக் கொடுத்துத் தாமும் கூடிக் குடித்துவிட்டு ஜஹாங்கீர் குடிகாரன் என்று இகழ்ச்சி செய்ததே அக்காலத்தில் அவர் களுடைய நடவடிக்கைகளுக்குப் போதுமான அத்தாக்ஷி யாகும். இதைப்பற்றி மேனுட்டுச் சரித்திராசிரியர்களுள் சிலர் வியசனப்படுகின்றனர்.

மொகலாய சக்கிரவர்த்திகளுடன் இரவும் பகலும் பலவித வேடிக்கைகளிலும் கேளிக்கைகளிலும் தாமே கூடி ஆடிக்கலந்து கொண்டிருந்து பின்னுல் கீழ் நாட்டு மன்னர் களுக்கு யோக்கியதையில்லை என்று கூறியவர்களின் ஆதா ரங்கள் பல இருக்கின்றன. ஆங்கிலேயர்களுக்கும் பாரத மக்களுக்கும் முதலில் ஏற்பட்ட சம்பந்தம் சரியான முறை யில் இல்லாததனுல்தான் பல கோணல்கள் பிற்காலங்களில் தோன்றலாயின. ஆதியில் தோன்றிய ஆங்கில அரச தூதர்கள் உயர்தரமானவர்களா யிருந்திருப்பின் பல சங் கடங்கள் ஒழிந்திருந்திருக்கும். அவ்வாறே முதன் முதலில் இக்கண்டத்தில் தோன்றிய கிறிஸ்தவப் பாதிரிமார்கள் உயர்தர அறிவாளிகளா யிருந்திருப்பின் மேனுட்டார்களுக் கும் கீழ்நாட்டார்களுக்கும் யாதொரு மதப்பிணக்குகளும் தோன்றியிரா.

ஆங்கில வியாபாரிகளின் கூட்டத்தாரின் துவக்க நிலைமையைப் பற்றியும் அக்காலத்தில் நம் நாட்டு நிலைமை யைப் பற்றியும் பின்னர் விசாரணை செய்வாம்.

போர்த்துகீஸ் அதிகார வர்க்கத்தினர் அவர் மதப் பற்றினால் மதக் குருமார்களுக்கடிமையா யிருந்தனர். ஆதலால் ஏற்கனவே ‘மலபார்’ என்று சொல்லப்படும் பாகங்களில் வசித்த ஸீரியக் கிறிஸ்தவர்களையும் கொடுமைக் குள்ளாக்கினர். 1599-ல் டயம்பர் [உதய(ம்) பூர்] என்கிற இடத்தில் நடந்த ஒரு கிறிஸ்தவ சபையில் மலபாரிலுள்ள ஸீரியக் கிறிஸ்தவர்கள் பெருங்கொடுமைகளுக் குள்ளாக்கப் பட்டனர். ஸீரியக் கிறிஸ்தவர்கள் பட்ட துன்பத்தைப் பார்க்குங்கால் கிறிஸ்தவர்களல்லாத “ஹீதன்ஸ்” எனப் படும் பாரதமக்கள் அடைந்த துயரத்தை உரைக்கவும் வேண்டுமோ? முஸ்லிம்களின் கதியைப்பற்றிக் கூறவே வேண்டுவதில்லை. ஏனெனின் மேனாடுகளில் அவ்விரு இனத்தார்களுக்கும் ஜன்மப் பகை என்று அடிக்கடி சொல்லவேண்டுவதில்லை. ஒரு பக்ஷத்திற்குள் ஒருநாளா வது மாதாகோவிலுக்குப் போகாதவர்கள் எவரேயாயினும் தடிகளால் அடிக்கப்பட்டனர் என்றால் அம்மதக் கொடு மையை என்னென்றுரைப்பது! சில சமயங்களில் கிறிஸ்தவ மதத்தினர்க்குச் செய்த குற்றத்திற்காகப் பாரதமக்களும் முஸ்லிம்களும் எரிக்கப்பட்டனர் என்பதைக் கேட்கவும் பயங்கரமாயிருக்கின்றது. இம்மாதிரி ஜெஸூயிட் கிறிஸ்த வர்களால் விளைந்த கஷ்டத்தினால் கி. பி. 1552-ல் சில கிராமங்களும் நகரங்களும் பாழாய் விட்டனவாம்.

இந்நாட்டில் போர்த்துகீஸ் துரைத்தனத்தில் கிறிஸ் தவப் பிரசாரஞ்செய்ய வேண்டிய முறையை ஸ்தாபித்தவர் பிரான்ஸிஸ் ஸேவியர் (Francis Xavier) என்கிற மத குரு ஆவர். அவர் 1542-ல் இந்நாட்டில் முளைத்தது முதல் போர்த்துகீஸார் ராஜ்யம் அழிந்தவரை நடந்த மத அட்டூழி யங்கள் எண்ணித்துலையா. பறவர்கள், முக்கர்கள் முதலிய

செம்படவர்கள் வெகு சுலபமாய்ப் பயப்படுத்தப்பட்டு கிறிஸ்தவர்களாக்கப்பட்டனர். ஆசியா கண்டத்தில் மலாக்கா, ஜப்பான் முதலிய இடங்களுக்கும் அவருடைய கிறிஸ்தவ மதம் பரவலாயிற்று. 1552-ல் அவர் இறப்பதற்குமுன் ஏழு லக்ஷம் தாழ்ந்த வகுப்பு ஏழை மனிதர்களைக் கிறிஸ்தவ ராக்கினதற்காக "இந்தியத் தீவுகளுக்குத் தேவகுரு" என்ற பட்டப்பெயர் பெற்றனர். ஆரிய மதம், புத்த மதம் ஆகிய இவைகளின் கருத்து இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே அவைகளைத் தூஷித்துக் கிறிஸ்தவ மதமே மோக்ஷசாதனம் என்று பறைசாற்றினர்.

ஆயினும் அவர் மதத்திலுள்ள ஆழ்ந்த நம்பிக்கையுடன் அவர் செய்த பிரசாரத்தைப் பற்றி நாம் தூஷிப்பது நியாய மன்று. ஆனால் மதத்தின் பெயரைக் கொண்டு மனிதர்களை யடித்துத் துன்பப்படுத்திக் கொளுத்தி ஜீவ ஹிம்சை செய்ததை ஆரிய மதம் ஒப்புக்கொள்ளாது. அது ஈசுவர சம்மதமும் அன்று 'என்பதை யாம் வற்புறுத்திக் காட்டுகின்றோம். மானிடர் முன்னேற்றமடைந்த இக் காலத்தில் நமது கிறிஸ்தவ நண்பர்களும் அதை ஒத்துக் கொள்கின்றனர்.

கி. பி. 1520 முதல் முப்பது வருஷங்களுக்குள் கோவா, டையூ, பேஸின், மங்களூர், கொச்சி, முதலிய இடங்களில் அரண்கள் கட்டப்பட்டன. யுத்த பீரங்கிகள் அமைக்கப்பட்டன. அதனால் மேற்குக் கடற்கரையோரத்திலுள்ள அரசர்களுக்கே பலம் குறைந்து விட்டது. அந்தக் கோட்டைகளுள் கிறிஸ்தவர்களின் கோவில்களும் குருமார்களுக்கு மடங்களும் கட்டப்பட்டன. கிறிஸ்தவப் பாதிரிமார்களால் வெகு பரபரப்புடன் அப்பாகத்திலுள்ள

மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு இழுத்துக்கொள்ளவேண்டிய வழிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஈதுடன் நிற்காமல், போர்த்துகீஸார் வங்காளத்தையும் வியாபார மூலமாய்க் கிறிஸ்தவ ஆட்சிக்கு உள்படுத்த முயற்சி செய்யலாயினர். ஆனால் வங்காளத்தின் சுல்தான் அவ்விடம் சென்றிருந்த போர்த்துகீஸார்களைக் கைது செய்து விட்டனன். ஆயினும் அந்த சுல்தான் ஓர் ஆப்கனிய முஸல்மானால் கொல்லப்பட்ட காலத்தில் போர்த்துகீஸார் விடுதலை பெற்றுக் கோவாவுக்குத் திரும்பலாயினர். ஏனெனின் வங்காளத்தில் இம்மாதிரியான கொலைகளினாலும் அடிக்கடி புதிய புதிய அரசு ஏற்படுவதனாலும் அரசாங்க முறை நிலை பெற்றதாயில்லை. மேலும் மொகலாயர் ராஜ்யம் அப்பொழுதுதான் ஆரம்ப தசையிலிருந்தது. சிற்றரசர்கள் எங்கும் காணப்பட்டனர். 1538-ல் போர்த்துகீஸாரை டையூவிலிருந்து அப்புறப் படுத்துவதற்காக குஜராத் சுல்தான் தனக்கு உதவிபுரிய வேண்டுமெனத் துருக்கி சுல்தானைக் கேட்டுக்கொண்டான். எகிப்திலிருந்து ஒரு படை யனுப்பப்பட்டது. ஆனால் அது தோல்வியடைந்துவிட்டது. போர்த்துகீஸார் ஸந்தோஷ விழா நடத்தினர்.

மறுபடியும் 1545-ல் டையூவில் முஸ்லிம்களுக்கும் போர்த்துகீஸாருக்கும் நடந்த போரிலும் முஸ்லிம்களுக்கு அபஜயம் நேரிட்டது. போர்த்துகீஸ் தேசத்தின் இராணியார் தம்முடைய ராஜ்யத்தில் தமது அதிகார வர்க்கத்தினரால் நல்ல அதிர்ஷ்டத்தினால் கிறிஸ்தவர்களின் கௌரவம் காப்பாற்றப்பட்டது என்று ஆரவாரம் செய்தனள். கோவாவில் தங்கிய சேனாதிபதிக்குப் பாரதவர்ஷத்தின் அரசனுக்கு ஏற்படக்கூடிய மரியாதைகள் புரியப்பட்டன. அவனை

ஊர்வலம் செய்வித்தனர். வீதிகளில் புஷ்பவர்ஷம் பொழிந்தது. கோவாவில் வசித்த பாரதமக்களுக்குத் தமது தேசத்தின் நிலைமை விளங்கவில்லை. முஸல்மன் ஆட்சியை விட்டு போர்த்துகீஸ் கிறிஸ்தவராட்சிக்குள் சிக்கிக்கொண்ட சமாசாரம் அவர்களுக்குப் புலப்படவில்லை. அது விலங்கை விட்டுத் தொழுக்கட்டையை மாட்டிக்கொண்ட கதை போலும்.

மூன்றுவது சருக்கம்.

க்ஷீணதசை.

அக்காலத்தில் கோவா மாறி நின்ற நிலைமையை விளக்கும் ஆதாரங்களினுல் அன்னிய நாட்டார்களின் ஆட்சி செவ்வனே புலப்படுகின்றது. கிறிஸ்தவர்களின் வழக்க பழக்கங்கள் மெதுவாய் பாரதமக்களின் மனத்தை இழுக்கலாயின. போர்த்துகீஸார் தாம் இந்நாட்டை ஆளுகின்றவர் என்ற எண்ணங்கொண்டு அவரவரால் கூடிய மட்டில் குடிகளை அதிகாரஞ் செய்யலாயினர். அவர்களுக்குச் சலாமும் மரியாதையும் செய்யாதவர்களின் கதி பரிதபிக்கத் தக்கதாயிருந்தது. மேனாட்டார்களுக்குப் பயந்து முழங்காலொடுங்கி முதுகு வளைந்து தொங்கு சலாம் செய்வதற்கு மூலகாரணம் அவ்வித அதிகாரவர்க்கமேயாகும்.

முக்கியமாய் யுத்த வீரர்கள் செய்த கொடுமை அதிகரித்து நின்றது. அவர்களைக்கண்டால் இன்றைக்கும் பயமாயிருக்கிறது. அவர்களுடைய மேனாட்டுக் குடி வழக்கங்களினுல் நகரவாசிகளுக்கும் அவர்களுக்கும் தெருச்சண்டைகள் அதிகரித்து நின்றன. சில போர்த்துகீஸ் ஸ்திரீகள் அவர்களுடைய துர் நடவடிக்கைகளினுல் சமூக வாழ்க்கையின் தூய்மையைக் கெடுத்துவிட்டனர். அது

முதல் குண்டகோளர்* வம்சங்கள் ஏற்படத் தொடங்கின. அவர்களின் வம்சங்கள் பெருகலாயின.

அடிமைகளை வியாபாரஞ் செய்த போர்த்துகீஸாரின் கொடுமை விவரிக்கப் பாலதன்று. அடிமை ஸ்திரீகளைக் குடும்ப வேலைகள் செய்ய ஏற்படுத்திக் கொண்ட இந் நாட்டினரும் போர்த்துகீஸாரைப்போல் அடிமைகளுடன் வியபிசாரஞ் செய்யலாயினர். அழகிய சிறு அடிமை ஸ்திரீகள் தெருவில் வியாபாரஞ் செய்ய ஏவப்பட்டமையால் சிறுவர்களின் நடவடிக்கைகள் கெட்டுப்போயின.

மேலும் தனம் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலத்தில் எந்நாட்டிலும் கற்பினழிவும் அதர்மமும் அக்கிரமமும் மேலிடுவது சகஜம். போர்த்துகீஸார் வியாபாரத்தில் அதிக ஊக்கமுள்ளவர்களான படியால் பொன்னும் வெள்ளியும் இந்நாட்டில் குவியலாயின. மேனாட்டார்கள் வியாபார முறையில் தனத்தை மாற்றிக்கொள்ளும் முறையினாலேயே (Exchange) ஏராளமான லாபத்தைச் சம்பாதிப்பது இன்றைக்கும் வழக்கம். போர்த்துகீஸ் நாணயத்தையும் பாரசீக நாணயத்தையும் சீனர் நாணயத்தையும் இந்நாட்டின் நாணயத்துடன் மாற்றிக் கொள்வதினாலேயே நூற்றுக்கு நாற்பது வரை லாபம் பெற்றனர் என்று சொல்லப் படுகின்றது. ஒவ்வொரு வியாபாரியும் தம்மாலியன்றமட்டில் இந்நாட்டில் அபூர்வ வஸ்துக்களை வாங்கிச் சென்றமையால் அக்காலத்தில் செல்வம் விருத்தியாயிற்று. செல்வத்தின் கொடுமைகளும் விருத்தியாயின. ஆச்சரியமென்னை ?

இந்நாட்டில் வசித்த போர்த்துகீஸ் அரசாங்கத்தினர், ராஜப்பிரதிநிதி முதல் போர்ஷிரணீருக ராஜபோகம்

*பல்விதக் கலப்புப் பிறவி பெற்றவர்.

பெற்றது போக பாக்கி ஏராளமான பொருளை எடுத்துக் கொண்டுபோய்க் கொண்டிருந்தனர். போர்த்துகீஸார்கள் இந்நாட்டின் வழக்கத்தைப் பின்பற்றி நகைகளும் அலங் காரங்களும் செய்து கொண்டனர். அன்னிய நாட்டாரும் இந்நாட்டாரும் போட்டியிட்டுக்கொண்டு படாடோபமும் ஆடம்பரமும் செய்யலாயினர். அழகிய தோட்டங்களும் நடைவாவிகளும் இயற்றப் பெற்ற ஸ்தலங்களின் இடையில் சிறிய பங்களாவை ஏற்படுத்திக்கொண்டு சுகமாய் வாழ்ந் திருந்தனர். பெரிய மாதாகோவில்களும் மடங்களும் பள்ளிக்கூடங்களும் ஏராளமான பொருள் விரயத்தினால் ஆக்கப்பட்டன.

நிற்க;போர்த்துகீஸாருக்கு முக்கிய நோக்கம் கிறிஸ்தவ மதப்பெருக்கமே. பாதிரிமார்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுக்கொண்டு இந்நாட்டினரைக் கிறிஸ்தவர்களாக மாற்றிவிட முயன்றனர். இம்மாதிரி கிறிஸ்தவர்களாகச் செய்வதில் யாதொருவித நன்னெறியும் பாராட்டப்பட வில்லை என்று தெரிகின்றது. அம்மாதிரி மதம் மாறிய குடும்பங்கள் பெருகலாயின. ஆரிய தர்மத்துக்கு இவ் விதத்திலும் குறைவு ஏற்படலாயிற்று. ஆயினும் பாரத மக்களுக்குக் கிறிஸ்தவர்களுடைய செயல்கள் பொருத்த மாயில்லை. கிறிஸ்தவ மதத்தைப் போதிக்கின்றவர்கள் பல பாகுபாடுடையவர்களானதால் சில சமயங்களில் அவர் களுக்குள்ளேயே பல விவாதங்கள் தோன்றலாயின.

மீண்டும் போர்த்துகீஸார் எல்லைகளுக்குள் ஆரியர் களாயினும் முஸ்லிம்களாயினும் தங்களுடைய மதச் சடங்கு களைச் செய்யக் கூடாதென்று கட்டளை பிறந்திருந்தது. "இன்குவிஸிஷன்" (Inquisition) என்ற ஒரு நியாய சபை (அநியாய சபை எனப்படலாம்) ஒன்று ஐரோப்பா

வில் பதின்மூன்றாவது நூற்றாண்டில் இன்னஸெண்டு என்கிற ஒரு பாதிரித்தலைவரால் ஏற்படுத்தப் பட்டிருந்தது. அதனால் கிறிஸ்தவ மதவிரோதமான வார்த்தைகளைக் கூறுகின்றவர்களாயினும் நடவடிக்கைகளைச் செய்கின்றவர்களாயினும் கொடுமையான சிக்ஷைகளுக் குள்ளாக்கப்பட்டனர். அதைப்போலவே கிறிஸ்தவர்களாய் மாறின இந்நாட்டினர்களும் போர்த்துகீஸ் குடிகளும் இந்நாட்டில் அவஸ்தைப்பட்டனர். அதன் கொடூர தண்டனைகள் பத்தொன்பதாவது நூற்றாண்டு வரையிலும் உலகில் சில கிறிஸ்தவ ஆட்சிகளில் நடைபெற்றிருந்தன !!

மேற் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் இந்நாட்டுக்கு வந்திருந்த போர்த்துகீஸ் பிரயாணிகளே விவரித்திருக்கின்றனர். கோவாவில் தாம் கண்ட பாதிரிமார்களுள் பாதிப்பேர்கள் கூட இத்தேசத்திற்கு அவசியமில்லை என்று ஒருவர் கூறியிருக்கின்றனர். அளவுக்கு மிஞ்சி கிறிஸ்தவ பாதிரிமார்கள் கோவாபட்டினம் ஒன்றில் கும்பல் கூடியிருந்தால் பாரதமக்களின் கதி என்னமாயிருந்திருக்கும் என்பதை மனத்தினால் தான் பார்த்துக்கொள்ள வேண்டும். பாதிரிமார்கள் நடத்திய உற்சவங்களும் அவைகளில் காணப்பட்ட சடங்குகளும் ஆரியர்களுடைய உற்சவங்களைக் காட்டிலும் விசேஷித்து நின்றன. தேவதைகளுக் கொப்பானவர்கள் எனக் கொண்டாடப்பட்ட "ஸெயிண்ட்ஸ்" என்றவர்களுடைய படங்களைச் கூச்சுக் கோபுரங்களைப்போல் கட்டி ரதங்களைப்போல் சிங்காரித்து வாத்தியங்கள், தாரைகள், தப்பட்டைகள் முதலிய கோஷங்களுடனும் ஆடல்பாடல்களுடனும் தெருக்களில் உற்சவம் செய்து பாரத மக்களுக்குத் தங்கள் மதப்பெருமையை விளக்கிக்காட்டினார்கள். அந்தருணங்களில் இராஜப்

பிரதிநிதி, அதிகாரவர்க்கத்தினர், படைத்தலைவர்கள், யுத்த வீரர்கள், பாதிரிமார்கள், ஆகிய பல்லாயிரம் ஜனங்கள் திருவிழாக்களில் அரசாங்கத்தின் தனத்தைக் கொண்டே கம்பீரமாய்ப் பல வீண் செலவிட்டனர்.

போர்த்துகீஸார் இம்மாதிரியாய் வீண் ஜம்பங்களில் பணத்தையும் காலத்தையும் செலவிட்டமையால் அரசாங்கத்தின் காரியங்கள் செவ்வனே நடை பெறவில்லை. அதிகார வர்க்கத்தினர் லஞ்சம், வியபிசாரம், முதலிய அயோக்கிய நடவடிக்கைகளுக்கு ஈடுபட்டவராய்க் குடிகளை இம்சை செய்தனர். கோவாவைச் சுற்றியிருந்த பாரத மன்னர்களும் போர்த்துகீஸாருக்குச் சொந்தமான இதர கோட்டைகளுக்குச் சுற்றிலுமுள்ள ஆரிய மன்னர்களும் முஸ்லிம் மன்னர்களும் வலுமைபெற லாயினர். அவைகளுள் முக்கியமானது கன்னட நாடு.

நான்காவது சருக்கம்.

கன்னட நாடு.

கன்னட நாடு விஜயநகர ராஜ்யத்தைச் சேர்ந்துநின்ற ஒரு சிறிய மாகாணம். 1565-ல் தலைக் கோட்டையில் அடைந்த அபஜயத்தினால் விஜயநகர ராஜ்யம் அழிய ஆரம்பித்த காலத்தில் அனேக சிறு சிறு ராஜ்யங்கள் தோன்றிய சமயத்தில் இம்மாகாணமும் தனி நிலைமையை யடைந்தது. கன்னட ராஜாவாகிய வெங்கடப்ப நாய்க்கனுக்கும் போர்த்துகீஸ் ராஜபிரதிநிதிக்கும் மிளகு வியாபார சம்பந்தமான மனஸ்தாபங்கள் அடிக்கடி ஏற்பட்டிருந்தன. போர்த்துகீஸ் இராஜபிரதிநிதி அவைகளைப் போக்கடிப்பதற்காக ஒரு தூது அனுப்பினான். ஏனெனின் அவர்களுடைய வியாபாரச் செருக்குக் குலைய ஆரம்பித்தது.

அதற்குக் காரணம் இதர ஐரோப்பியர்கள் (அஃதாவது டச்சுக்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும்) இந்நாட்டின் வியாபாரத்திற்காகப் போட்டியிட ஆரம்பித்ததே.

மேற் கூறப்பட்ட தூதர்கள் கன்னட ராஜாவின் தலைமை நகராகிய மைசூர் மாகாணத்திலுள்ள இக்கேரியை யடைந்து வெங்கடப்ப நாய்க்கனிடம் தங்களுக்கு வேண்டிய விஷயங்களைக் கூறிக் கொண்டனர். அதன் முடிவு என்னவெனின் வெங்கடப்ப நாய்க்கன் போர்த்துகீஸ் அரசன்பால் சிநேகம் பாராட்டினுன் என்று சொல்லப்படுகின்றது. இந்தத்தூதர்களுடன் ஒரு போர்த்துகீஸ் பிரயாணியும் சேர்ந்திருந்தனன். அவன் தான் கண்ட ஆச்சரியமான நடையுடை பாவனைகளை வெகு விமர்சையாய் வர்ணித்திருக்கின்றனன். அந்த வர்ணனைகள் பாரதமக்களின் அக்காலத்திய நாகரிகத்தைப் பற்றியவைகளாகும். கோவில்கள், விக்கிராகராதனைகள், பூஜைகள், திருவிழாக்கள், ஆடல் பாடல்கள், நாட்டியப் பெண்களின் கூட்டங்கள், ஆகிய ஆசாரங்களைப் பற்றிய வியாக்கியானங்களை அவனது வரலாற்றில் காணலாம். மற்றைய விஷயங்களுள் முக்கியமாய் எடுத்துரைக்கக் கூடியது ஒன்றுண்டு.

அவன் இந்நாட்டில் மலையாளப் பிரதேசத்தில் சஞ்சாரம் செய்த காலத்தில் கன்னட அரசுகளுள் ஒன்றெனக் கூறப்படும் மனேல் என்கிற ஸ்தலத்தில் ஒலாஜா இராணி என்ற ஒரு சீமாட்டி இருந்தனளாம். அவரைக் காண விருப்பமுற்றவனுய் ஒரு பிராம்மணனின் சகாயத்தைக் கொண்டவனுய் அவரது பட்டணத்திற்குச் சென்றனன். கடை வீதியில் போய்க்கொண் டிருக்கும்பொழுது இராணி

யார் சில யுத்த வீரர்களுடன் யாதொரு பாதரட்ஸையுமின்றி கால் நடையாய்ப் போவதைப் பார்த்தான். அம்மாதுக்கு வெயிலினின்றும் நிழல் கொடுக்க ஒரு தாழம் ஓலைக் குடை பிடிக்கப்பட்டிருந்தது. அவளது உருவம் பருத்து இருப்பினும் வெகு சகஜமாய் நடந்தனள். அவர் வர்ணமோ மிகக் கறுப்பாம். அவரது இடையில் மட்டில் உடையிருந்ததாம். மேற்பாகம் மூடப்படவில்லையாம். அவளை அந்தக் கோலத்தில் பார்த்த பிரயாணி அவள் ஒரு சமையல்காரியென்றே நினைத்தான். ஆனால் அவள் பேச்சும் நடையும் கம்பீரமாயிருந்தன. வீதிகளில் நடந்த அவள் விசாரணைகள் அரசாங்க சம்பந்தப்பட்டவைகளாயிருந்தன. அவரது தீர்மானங்கள் ஆங்காங்கு உடனே நிறைவேற்றப் பட்டன.

போர்த்துகீஸ் பிரயாணியின் சகாயமான பிராம்மணனுடைய சிபார்சினால் அந்த அந்நிய நாட்டானுடைய க்ஷேம லாபங்கள் உடனே இராணியால் விசாரிக்கப்பட்டன. அம்மாது தாம் ஒரு மைல் தூரத்திற்கு அப்புறமுள்ள வியவசாய சம்பந்தமான தண்ணீர் வாய்க்காலைக் கவனிக்கப் போவதாய்ச் சொல்லிப் போனாளாம். திரும்ப வந்தவுடன் அரசாங்கக் காரியங்களைப் பார்க்க ஆரம்பித்து விட்டனள். போர்த்துகீஸ் பிரயாணியைப் பார்த்து "நீர் இப்பொழுது காத்துக்கொண்டிருக்க வேண்டாம். மாலை நும்மைத் தருவித்துக் கொள்கின்றோம்" என்று கட்டளையிட்டனள். ஆனால் யாது காரணத்தை முன்னிட்டோ அவள் சொன்னபடி செய்யவில்லையாம்.

ஆயினும் அந்த வெளி நாட்டுப் பிரயாணியைப்பற்றி அடிக்கடி விசாரித்துக்கொண்டிருந்தனள். அவன் தனது ஜீவனத்திற்காகச் செலவிட்ட தனத்தைக் கேட்டு ஆச்சரி

யப்பட்டு "நமது தேசத்தில் நாம் ஒருபணம் சம்பாதிக்க எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கையில் இந்த அன்னிய நாட்டான் செலவழிக்கும் வாழ்நாளின் டம்பம் என்னே?" என்று கூறினள். இம்மாதிரியான புத்தி கூர்மையுள்ள ஆண்மக்கள் சிலர் இருந்தால் அன்னிய நாட்டார்களின் நிலைமை இந்நாட்டில் எவ்வாறு இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

மேலும் இந்த இராணியாருக்கும் அவரது கணவனாகிய பங்கேல் என்ற தேசத்தின் ராஜாவுக்கும் ஏற்பட்டிருந்த சில மனஸ்தாபங்களால் ஒருவரையொருவர் சந்திக்காமலிருந்ததுமன்றி அந்த ராஜாவால் விவாக சமயத்தில் அளிக்கப்பட்ட ஆபரணங்களும் அவரால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன. அதைக் கண்ட ராஜா கோபங்கொண்டு தமது மனைவியாகிய ஒலாஜா இராணியை ஒடுக்கவேண்டி போர்த்துகீஸாரின் உதவியைக் கோரினன். அக்கணவனது அறிவீனம் என்னே!

அம்மாது முன்னர் கூறப்பட்ட வெங்கடப்ப நாய்க்கனின் உதவியைக் கோரினள். இருதரத்தாரும் போர்புரிய, முடிவில் பங்கேல் ராஜா முறியுண்டான். அவனது ராஜ்யத்தை வெங்கடப்ப நாய்க்கன் பிடுங்கிக் கொண்டான். ஆனல் இராணியாருடைய தேசத்திலும் சிலவற்றைப் பிடுங்கிக் கொண்டான். இதனல் அவமானம் இராணியாருக்கு உண்டாயிற்று. போர்த்துகீஸாரோவெனின் பங்கெல் இராஜா தங்கள் மன்னனுக்கு சிநேகிதனைதனல் வெங்கடப்ப நாய்க்கன் செய்த நடவடிக்கைகளைக் கண்டிக்கலாயினர். ஆயினும் இந்த இராணியாரின் புகழ் மெச்சத் தக்கதென்பதற்குச் சந்தேகமில்லை.

அத்தியாயம் :—5

மேனாட்டு வியாபாரப் போட்டிகள்.

முதல் சருக்கம்.

புற்றிடை ஈசல்கள்.

போர்த்துகீஸார் நமது பரத கண்டத்திற்குச் செல்லும் மார்க்கத்தினால் செல்வாக்குடன் வாழ்ந்துகொண்டிருந்த விருத்தாந்தத்தை யறிந்த இதர ஐரோப்பியர்கள் தாங்களும் கீழ் நாடுகளுக்கு ஒரு தனி மார்க்கத்தைக் கண்டுகொள்ள வேண்டிய முயற்சி செய்துகொண்டிருந்தனர். போர்த்துகீஸாருக்கும் அவர்கள் பக்கத்திலுள்ள ஸ்பானிஷ் தேசத்தாருக்கும் புதியதாய்க் கண்டுபிடித்த நாடுகளின் விஷயமாயும் வியாபாரத்தின் விஷயமாயும் விவாதங்கள் நடந்தன. அக்காலத்தில் ஐரோப்பாவில் எல்லா விஷயங்களிலும் மேன்மைபெற்ற போப் (Pope) அவர்கள் கொடுத்த தீர்மானம் இதர ஐரோப்பிய அரசர்களுக்கு மனஸ்தாபத்தை விளைத்தது. ஏனெனின் அத்தீர்மானத்தின்படி ஸ்பானிஷர்களுக்கு மேற்குத்திசையென்றும், போர்த்துகீஸர்களுக்குக் கீழ்த் திசை யென்றும் ஏற்பட்டது. (166வது பக்கத்தையும் பார்க்க.) தாங்கள் தாங்கள் எவ்வாறு பூகோளத்தைச் சுற்றிப் பார்ப்பது என்றும் தங்களுக்குச் சொந்தமான வியாபார ஸ்தலங்கள் எவ்வாறு ஏற்படக் கூடும் என்றும் இதர ஐரோப்பியர்கள் யோசனை செய்யலாயினர்.

மேலும் பதினைந்தாவது நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய நூதனக் கிளர்ச்சிகளால் ஒவ்வொரு தேசத்தாரும் தாம் வியாபாரத்தில் முந்தி நிற்க வேண்டுமென்ற ஊக்கங்கொண்டவ ராயினும் மேற்கில் அமெரிக்கா கண்டத்தில் முதன் முதலில் காலடி வைத்தவர்களின் கீர்த்தி பெரியதாய் விட்டது. அவ்வாறே கீழ்த்திசையில் பாரதகண்டத்தில் முதன் முதலில் தோன்றியவர்களின் பெருமையும் அதிகமாய் விளங்கிற்று. இவ்விரு பாகத்திலும் மேன்மை பெற்றிருந்த ஸ்பானிஷர்களும் போர்த்துகீஸர்களும் ஐரோப்பாவிலும் வெளிநாடுகளிலும் சில சமயங்களில் போரிட்டுக் கொண்டும் சில சமயங்களில் ஒரே ராஜ்யமாக வாழ்ந்து கொண்டும் இருந்த காலத்தில் ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும் தனித்தனியே ஒவ்வொரு மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டி எத்துணையோ பிரயாஸப்பட்டனர். இவ்விஷயமாய்ப் பொருளையும் ஆயுளையும் செலவழித்த வீரர்களின் சரித்திரத்தைப் பாரதமக்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் தமது உடலை லக்ஷியம் செய்யாமல் தமது நாட்டுக்கு நன்மையைக்கோரி உயிரை விட்ட கதைகளை நம் பாரத மக்கள் போற்றக்கடவராக. இவ்விஷயமாய் மேனாட்டார்களின் விடாமுயற்சியை யாம் பெரிதும் நன்கு மதிக்கின்றோம். அவர்களுடைய நற்செயல்களின் பயனாலன்றோ ஐரோப்பியர்கள் ஒவ்வொருவரும் உலகத்தை யாள வேண்டுமென்கிற நோக்கம் பெறலாயினர். ஆனால் அக்காலத்தில் நமது கண்டத்தில் புதிய ஊக்கங்கள் தோன்றவில்லை. மேனாட்டில்போல் சந்தர்ப்பங்களும் வாய்க்கவில்லை. அதனால்தான் பாரத மக்கள் மேனாட்டார்களுக்கு அடிமைகளாய் விட்டனர். நவீன பூகோளார்த்தம்

என்று சொல்லக்கூடிய அமெரிக்காக் கண்டத்தைக் கண்டு கொண்டவர், கொலம்பஸ் மேதாவியே யாயினும் அமெரிகோ வெஸ்பூஷியே யாயினும், வேறு தேவதத்தனேயாயினும் மேனுட்டார்கள் அது முதல் பூவுலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் கைப்பற்றலாயினர். அக்காரியத்திலீடுபட்டவர்களின் பெயர்கள் நூற்றுக் கணக்கானவைகளாகும் என்று மட்டில் குறிப்பிட்டு விட்டு இந்நூலில் நமது சரித்திரத்தை நோக்குவாம்.

கீழ்நாடுகளில் போர்த்துகீஸாரின் மேன்மை, டச்சுக்காரர்களும் பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் போட்டியிட்டுக்கொண்டு வந்தவரை தான் ஓங்கி நின்றது. பதினாருவது நூற்றாண்டினிறுதி வரை போர்த்துகீஸார் ஜயம் பெற்று நின்றனர். 1588-வது வருஷத்தில் இங்கிலாந்தின் மணம்புரியா மங்கை எலிஜபத் அம்மை அரசுபுரிந்த காலத்தில் ஸ்பானிஷ் அரசன் ஒருபெரிய கப்பற்படையைக் கொண்டு இங்கிலாந்தைத் தாக்க முயன்று முறியடைந்த காரணத்தினுல் போர்த்துகீஸாருக்கு பலம் குன்றிவிட்டது. ஏனெனில் 1580-முதல் 1640-வரை போர்த்துகலும் ஸ்பெயினும் ஓரரசுக்குள்ளிருந்தன. அதனுல் ஐரோப்பாவில் ஏற்கனவே கப்பற்படை வெற்றியினுல் முதற்படியடைந்திருந்த ஹாலெண்டு தேசத்தோருக்கும் அச்சம் சற்று தோன்றிற்று. ஆயினும் போர்த்துகீஸாரும் டச்சுக்காரர்களும் கீழ் நாடுகளின் வியாபாரத்தைக் கைவிடவில்லை. டச்சுக்காரர்களின் பெருத்த முயற்சியால் போர்த்துகீஸ் வியாபாரம் குறையலாயிற்று.

பதினேழாவது நூற்றாண்டில் டச்சுக்காரரின் ஆட்சி கீழ் நாடுகளில் வலிமை யடைந்திருந்தது. 1598-ல்

கிழிந்தியத் தீவுகளில் முதலில் வியாபார ஸ்தலம் ஸ்தாபித்துக்கொண்ட பிறகு வங்காளக் குடாக்கடல் கரையில் புலிக்காடு, சதுரங்கப்பட்டினம் ஆகிய இரு வியாபார ஸ்தலங்கள் ஏற்பட்டன. ஆக்ரா, பாட்ணு, ஸூரத், அஹ்மதாபாத் முதலிய நகரங்களில் அவர்களுடைய தொழிற்சாலைகள் பலமாய் வேலை செய்தன. 1675-ல் வங்காளத்தில் சின்சூரா என்கிற இடம் டச்சுக்காரருக்குக் குடி ஏற்ற நாடாக்கப்பட்டது. அதுவரை அவர்கள் வியாபாரத்திலேயே கவனஞ் செலுத்தினர். ஆனல் ஆங்கிலர்கள் வலுமை பெற்று வந்ததைக் கண்டு அவர்களைத் துரத்த வேண்டியதாயிற்று. அதனல் விளைந்த துன்பங்களைப் பின்னர் கூறுவாம். முடிவாய்க் குறிப்பிடத்தக்கது யாதெனின், டச்சுக்காரர்களாகிய அன்னிய நாட்டார்களுடைய ஆட்சி பரத கண்டத்தில் நிலைநிற்கவில்லை என்பதே. ஏனெனின் ஆங்கிலர்களுடைய பெரு முயற்சியினுல் 1805-வது ஆண்டு முதல் அவர்கள் இந்நாட்டில் இருந்த இடமும் தெரியாமல் துரத்தி விடப்பட்டனர்.

மேலும் இக்கண்டத்தில் போர்த்துகீஸார் இருந்ததற்கு மட்டில் அடையாளம் கோவா, டையூ, டேமான் என்கிற சில ஸ்தலங்கள் அவர்கள் கைவசத்தில் இப்பொழுதும் இருக்கின்றன. பிரஞ்சுக்காரர்களைப் பற்றிப் பின்னர் பேசுவாம். இம்மாதிரியான மேனட்டார்களின் வியாபாரப் போட்டியைப் பற்றிப் பேசு முன்னர் அவர்கள் புற்றிடை ஈசல்கள் போல் கிளம்பிச் செய்த சாகச காரியங்களையும் பரத கண்டத்தை எட்டிப்பார்த்த விருத்தாந்தத்தையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

இரண்டாவது சருக்கம்.

"கடல் நாய்கள்"*

ஏற்கனவே கூறப்பட்டிருக்கும் நூதன மார்க்கக் கிளர்ச்சியில் ஆங்கிலேயர்களுடைய முயற்சியின் தன்மை ஒருவாறு புகழத்தக்கதாயினும் சில காரணங்களை முன்னிட்டு இகழத்தக்கதாயுமுளது. ஏனெனின் போப் அவர்கள் மேற்குத் திசையில் ஸ்பானிஷ் ஆட்சியென்றும் கிழக்குத் திசையில் போர்த்துகீஸார் ஆட்சி யென்றும் வகுத்த ஒரு நிபந்தனையை ஆங்கிலேயர் மீறி நடக்கலாயினர். ஆனால் போப்பின் அதிகாரத்தை ஒழித்துவிட்ட பிராடஸ்டண்டு இங்கிலாந்துக்கு அவருடைய உத்தரவு குப்பையைப் போன்றது போலும். ஒரு தேசத்தார்கள் கண்டுபிடித்த வழியாய் வேறொரு தேசத்தார் போகக்கூடாதென்பது முற்காலத்திய கொள்கை. அக்கொள்கையை நிராகரிக்கத் தொடங்கினதுமன்றி அத்தேசத்தவர் கப்பல்களைக் கடலில் கண்ட விடத்தில் கொள்ளையடித்தனர். அது அக்கிரமமான காரியம். இதை ஆங்கிலர்கள் ஒப்புக்கொள்ளாதிருக்கவில்லை. இக்கடற் கொள்ளையைச் செய்தவர்கள் அக்காலத்திய ஆங்கிலேய அரசாங்கத்தாரின் ஆதரவுக்கும் மரியாதைக்கும் கௌரவத்துக்கும் பாத்திரராயிருந்தனர். ஏனெனின் பெருங் கொள்ளைகளைச் செய்பவர்கள் அதிவீரர்களாயிருக்கவேண்டுமன்றோ! ஒருவன் உயிரை நீக்குகின்றவன் கொலைக்குற்றவாளி. பல கொலைகளைப் புரிகின்றவன் வீர புருஷன் என்ற நியாயம் போல் சிறு கொள்ளை யடிப்பது திருட்டு. பெரிய கொள்ளை அடிப்பது (Adventure,) 'அட்வென்சர்.' அஃதா

* Sea dogs of Elizabethan days.

வது சாகஸகாரியம்!! அந்த வீரர்களைத் தான் கடல் நாய்களென எலிஜபத் மகாராணியார் புகழ்ந்து பேசினார். அவர்களுக்குப் பரிசளித்தார். பட்டஞ் சூட்டினார். அவர்களைப் பக்கத்தில் இருத்திக் கொண்டார்.

போர்த்துகீஸ் அரசன் (Philip II) பிலிப் என்பான் ஆங்கிலேயர் அதிக்கிரமங்களைப் பற்றித் தெரிவித்த காலத்தில் இங்கிலாந்து இராணியார் கூறியதாவது:—"சமுத்திரம் எல்லோருக்கும் சொந்தமானது. அவ்விடத்தில் எல்லாத்தேசத்தோரும் பிரயாணஞ் செய்யலாம். ஆகையால் அவ்விடத்தில் பிரயாணஞ் செய்பவரைத் தடுக்க யாவரேனும் முயன்றால் அவர் தண்டிக்கப்படுவது நியாயந் தான்." இது ஒரு பெரும் தீரச்செயல்தான்.

எலிஜபத் ராணியாரின் பாட்டனார் காலத்திலும் தகப்பனார் காலத்திலும் புதிய மார்க்கங்களைக் கண்டு பிடிக்க ஜான் காபோ, ஸெபஸ்டியன் காபோ, தாரன், ஹோர், வில்லோபி, சான்ஸிலர், ஆகிய பலர் யத்தனஞ் செய்தும் காரியம் முடியாததனால்தான் அந்த ராணியார் காலத்திய "கடல் நாய்கள்" (Sea dogs) பரஸ்பர ஜனசமூக சட்டங்களை (International Laws) மீறி நடக்கலாயினர். இதற்கொரு சமாதானங் கூறுவதுண்டு. அஃதாவது "ஆங்கில மேன்மைக்கு அவசியம்." இவ்வாறு வேறு இனத்தார் செய்திருப்பின் அஃது சரியான சமாதானமா என்று யாம் கேட்கின்றோம். அந்த ராணியாரின் அரசாட்சியில் 1580-ல் டிரேக் என்பான் ஸ்பானிஷார் சென்ற வழியாகவே சென்று தென் அமெரிக்காவைச் சுற்றலாயினன். 1582-ல் எட்வார்டு பெண்டன் (E. Fenton) என்ற வேறொருவீரன் போர்த்துகீஸார் சென்ற வழியாகவே தென் ஆப்பிரிக்காவைச்

சுற்றலாயினன். 1586-ல் காவெண்டிஷ் என்பானும் ஸ்பானிஷர்கள் கடல் வழியைப் பின் பற்றிச் செல்லலாயினன். ஸ்பானிஷர்கள் தடுத்ததும் அவர்களுடைய நாடுகளையே எதிர்த்துத் தாக்கினன். 1591-ல் பாரத மகா சமுத்திரத்தைக் கடந்து சென்றனன் லங்காஸ்டர்.

அதே மாதிரியாய் டச்சுக்காரர்களும் தம் வரைமீறி நடந்து கொண்டிருந்தனர். ஏனெனின் முதற் காரணம் இங்கிலாந்தைப்போல் ஹாலெண்டும் போப்பினது ஆட்சியாகிய காதோலிக் மார்க்கத்தை மீறிச் சீர்திருத்த மதமென்று கூறப்படும் பிராடஸ்டண்டு சமயத்தைப் பின் பற்றியதே. மேலும் கான்ஸ்டாண்டிநோபிள் வழியை முஸ்லிம்கள் தடைசெய்த காலத்தில் வியாபாரத்துக்குப் புதிய வழியையும் தேசங்களையும் கண்டுகொள்ள முயன்றனர். பிற்பாடு மதப்பாகுபாடும் மத விரோதமும் மதப் பொறுமையும் ஏற்பட்ட காலத்தில் இன்னும் அதிக ஊக்கம் ஏற்பட்டது. ஸ்பானிஷரும் போர்த்துகீஸாரும் செல்வத்தையும் புதிய நாடுகளையும் பெரிய ராஜ்யத்தையும் பெற்ற காலத்தில் வியாபார எரிச்சலும் அழுக்காறும் அதிகமாயின. ஆதலால் 1595-ல் கார்னீலியஸ் ஹௌட்மன் எனும் டச்சுக்காரன் கீழிந்திய துவீபகல்பங்களை யடைய விரும்பினன். ஆனால் வழியில் காலஞ்சென்று விட்டனன். ஆயினும் டச்சுக்காரர்கள் தமது கருமத்தை விடவில்லை. 1602-வது ஆண்டில் ஒரு டச்சு வியாபார சங்கம் ஏற்படுத்திக்கொண்டு ஜாவாத் தீவைக் கைப்பற்றி விட்டனர்.

ஆங்கிலேயர்களும் 1599-வது ஆண்டில் ஒரு கீழிந்திய வர்த்தக சங்கத்தை ஸ்தாபிக்க ஸ்ரீமுகம் பெற்று டச்சுக்காரர்கள் சென்ற தீவுகளிலேயே வியாபாரஞ் செய்ய

லாயினர். டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் போர்த்துகீஸாரின் பிரதேசங்களை அடிக்கடி தனித்தனியே தாக்கிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய சாமான்களையும் கப்பல்களையும் கொள்ளையடிக்கலாயினர். 1602 முதல் 1642 வரை இவ்வாறே போர் நடந்து வந்தன. டச்சுக்காரர்களுக்குத்தான் வாசனைத்திரவியங்கள் பெற்ற கிழிந்தியத் தீவுகள் என்ற முடிவு ஒன்று ஏற்பட்டது.

அதனிடையில் ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் மனஸ்தாபம் ஓங்கிற்று. இருவர்களும் ஒருவரை மற்றொருவர் "இண்டர்லோபர்" (Interloper) அஃதாவது வியாபார சுவதந்தரத்தை மீறி நடந்தவர் அல்லது துராகிருதமாய் அன்னியர் சொத்தில் பிரவேசித்தவர் என்ற குற்றஞ் சாற்றிக்கொண்டனர். அவர்கள் வியாபாரஞ் செய்த நாடுகளில் வசித்த சுவதேசிகள் என் செய்வர்? அவர்களுக்கு அக்காலத்தில் யாதொரு சூதும் வாதும் தெரியாது, துப்பாக்கியும் மருந்தும் குண்டும் கிடையா. யார் வியாபாரஞ் செய்தாலும் தமது நாட்டுக்கு சௌக்கியந் தானே என்று நினைத்தனர். போர்த்துகீஸார் கேரளத்தில் செய்ததேபோல் வியாபாரத்திற்காக வந்தவர் கோட்டையை வளைத்துக்கொண்டு பீரங்கிகளை ஏற்றிக்கொண்டு சுவதேசிகளைச்சுட ஆரம்பித்தால் கொடூரமான உயிர்க்கொலை ஆயுதங்கள் பெறாத பண்டைக்காலத்தியவர்கள் என் செய்திருக்கக்கூடும்? வியாபாரஞ் செய்யவந்தவர்களுள் ஒருவரையொருவர் எதிர்த்துத் தாக்குங்கால் உள் நாட்டார் முற்றிலுந் தனிமையாய் நிற்பது எங்ஙனம் சாத்தியம்? இருகட்சியார்களுடனும் சிலர் ஒரு புறமும் வேறு சிலர் வேறொரு புறமும் அபிமானமும் துவேஷமும் காட்டுவது இயல்பே. இவ்வாறு பாரதமக்கள் அன்னிய நாட்டுப்

போர்களுக்கு இரையானது அவர்களது துர்ப்பாக்கிய மன்றோ!

மேலும் ஐரோப்பாவில் ஏற்பட்ட போர்க் கக்ஷிகளெல்லாம் ஆசியாவில் எதிரொலி காட்டிநின்றன. எலிஜபெத் ராணியா ரிறந்தவுடன் ஜேம்ஸ் மன்னன் போர்த்துகலுடனும் ஸ்பெயினுடனும் சிநேகம் பாராட்டினதனுல் டச்சுக்காரருக்கும் இங்கிலீஷ்க்காரருக்கும் சிநேகம் குறையலாயிற்று. அது ஆசியாவுக்குப் பரவிற்று. அதன் பயன் அம்போயனுவின் படுகொலை. அஃதாவது கீழிந்தியத் தீவுகளில் ஒன்ருகிய அம்போயனு என்கிற தீவில் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் வியாபாரஞ் செய்துகொண்டிருக்கப் பதினெட்டு ஆங்கிலேயர்களை டச்சுக்காரர்கள் வெகு இமிசைகளுக்குள்ளாக்கி அவர்களைக் கொடுமை செய்து கொலைபுரிந்தனராம். இவ்விஷயமாய்ப் பல ஆதாரங்கள் தற்காலத்திலும் காணப்படுகின்றன. டச்சுக்காரர்கள் ஜயக்கொடி நாட்டினுர். ஆங்கிலர்கள் பரதகண்டத்தில் ஏற்கனவே பெற்றிருந்த சில இடங்களிலும் டச்சுக்காரர்களுக்குப் பொருமை யதிகமாயிற்று. (1623.)

இந்த சம்பவத்திற்குப் பிறகு பாரத வர்ஷத்தைத் தவிர வேறு கதியில்லை என்று ஆங்கிலேயர்களும் சட்டி சுட்டது கைவிட்டது என்று கீழிந்தியத் தீவுகளை மறந்து விட்டனர். ஆனுல் பழிக்குப் பழி வாங்குவதற்கு வேண்டிய சமயத்தை மட்டில் ஆங்கிலேயர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் என்பதைக் கூற வேண்டுவதில்லை. பதினேழாவது நூற்ருண்டில் ஐரோப்பாவில் நடந்த பல யுத்தங்களிலும் ஆங்கிலர்களும் டச்சுக்காரர்களும் எதிர்க் கட்சிகளில் தோன்றி நின்றனர். இறுதியில் ஆங்கிலேயர் ஜயம் பெற்றனர்.

அத்தியாயம்:—6
இடம்பெறல்.

முதல் சருக்கம்.
" அதிர்ஷ்டப் புதல்வர்கள்."

கிழிந்திய வர்த்தக சங்கம் ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் ஆங்கில வியாபாரிகள் பலர் பாரத நாட்டையே கண்ணோக்கி நின்றனர். ஐரோப்பாவில் டச்சுக்காரர்களுடன் போர்கள் ஏற்பட்டகாலத்தில் பரதகண்டத்தில் அரசாட்சி செய்த மொகலாயர்களுடைய சகாயத்தை எவ்விதமாகிலும் பெற்றுவிட வேண்டுமென்கிற ஊக்கம் ஆங்கிலர்களுக்கு அதிகரிக்கலாயிற்று.

கி. பி. 1607-வது ஆண்டில் வில்லியம் ஹாக்கின்ஸ் என்கிற கப்பலோட்டித் தலைவன் மேற்குக் கடலோரத்தில் சூரத்தில் இறங்கினான். ஆக்கிராவில் தர்பார் நடத்திய ஜஹாங்கீர் சக்கிரவர்த்தியைப் பார்க்கச் சென்றனன். ஆனால் போர்த்துகீஸாருடைய செல்வாக்கின் மேன்மையால் ஹாகின்ஸின் ஜபம் சாயவில்லை. மறுபடியும் 1611-ல் மிடில்டன் என்பவன் சூரத்திலிருந்த முகலாய கவர்னரிடமிருந்தே வியாபாரத்துக்கு இடம் பெற்றனன். அடுத்த ஆண்டில் பெஸ்டு என்பவன் போர்த்துகீஸாரின் கப்பல்களை எதிர்த்து வென்றனன். சூரத்தில் வியாபாரஸ்தலம் நல்ல நிலைமையி லாக்கப்பட்டது. அவ்விடத்திலிருந்தே உள்நாட்டு வியாபாரங்கள் பரவலாயின. அஹமதாபாத்,

பர்ஹாம்பூர், அஜ்மீர், ஆக்கிரா, முதலிய ஸ்தலங்களில் சிறிய சிறிய வியாபாரச்சாலைகளில் ஆங்கிலேயருடைய செல்வாக்கு ஏற்படலாயிற்று. 1615-ல் ஸர் தாமஸ் ரோ என்ற ஆங்கிலேய ராஜதூதன் ஜஹாங்கீர் சக்கிரவர்த்தியின் தர்பாரில் வசித்து ஆங்கிலேய வியாபாரிகளுக்கு வேண்டிய உதவிபெறுவதற்கு ஆங்கில மன்னனாகிய ஜேம்ஸினிடமிருந்து ராஜதூதன் என உத்தரவு பெற்றனன்.

ஆங்கில ராஜ தூதனாகிய ரோ தனது பெரிய உருவத்தினாலும் சில சமயங்களில் துருக்கியரைப்போன்ற வேஷம் தரித்துக்கொண்டதனாலும் அவனுடைய சமயோசிதமான சாமர்த்தியத்தினாலும் தர்பாரின் பாஷையிலும் பரிபாஷையிலும் தேர்ந்தவனாதலாலும் சில ஆண்டுகள் மொகலாயர் தர்பாரில் நக்ஷத்திரம் போல் விளங்கினான். அவன் தனது அனுபவங்களையும் தனது அபிப்பிராயங்களையும் வரைந்துள்ளான். ஆனால் அவைகள் அன்னிய நாட்டுக் கண்களால் பார்க்கப்பட்டவை; வித்தியாச மடைந்த மனத்தினால் அபிப்பிராயப் பட்டவை. ஆயினும் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருக்கிறபடி ஜஹாங்கீர் சாமர்த்தியமான குடிகாரன் என்பதை வெளிப்படுத்திய ஆங்கிலேயர்கள் அக்குடி வழக்கத்தைப் பெருக்கியே குடிமயக்கத்தில்தானே அவனிடமிருந்து வியாபார உரிமைகள் பெற்றனர் போலும். இது நீதி நெறிச் சட்டப்படி செல்லுமா என்ற கேள்வி புறப்படுகின்றது?

ஜஹாங்கீர் மன்னன் ஒரு அழுக்குக் கந்தையை உடுத்திக் கொண்டு ஏழைப் பக்கிரியின் கையைப்பிடித்து மூன்றுமுறை மார்புடன் அணைத்துக் கட்டிக்கொண்டு "அப்பா! அப்பா!!" என்று கூறியதைப் பார்த்த ரோ "மொகலாய அரசனின்

மூடத்தனம் என்னே!" என்றால் பாரதமக்களாகிய நாம் அவனது அபிப்பிராயத்தை என்னென்று மதிப்பது? கீழ் நாட்டார்களின் மனோபாவம் தெரியாதவர்களின் மனப்பாங் குக்கு எத்துணை கௌரவம் அளிக்கக்கூடும்? இஸ்லாம் மார்க்க மும் ஆரியதர்மமும் பிச்சைக்காரர்களையும் சன்னியாசி களையும் யாதொரு வித்தியாசமின்றி சகோதரர்களைப் போல் நடத்தவேண்டுமெனக் கூறுவது உலகமறிந்த உண்மை. ஆனால் இயேசு கிறிஸ்துவும் இவ்வாறே கூறி யிருக்கின்றனர் என்பதைச் சமயத்தில் கிறிஸ்தவர்கள் மறந்து விடுகின்றனர் போலும். இது ஒரு புறம் நிற்க.

சூரத்தில் ஆங்கில வியாபாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றிய வரலாறுகளை ஆங்கிலேயர்களே வெளிப்படுத்தியிருக் கின்றனர். அவைகளை ஆண்டர்ஸன் என்கிற ஒரு பாதிரியார் வெட்ட வெளிச்சமாய் வெளிப்படுத்தியிருக்கும் ஒரு நூலில் காண்க. அக்காலத்திய சரித்திர ஆதாரமான பதிவுகள் பாரதமக்களால் எழுதப்படவில்லையே என்று சில சரித் திராசிரியர்கள் கவலைப்படுகின்றனர். ஸையத்குலாம் ஹுஸ் ஸைன், ஆனந்த ரங்கம் பிள்ளை, போன்ற மேதாவிகள் இல்லை யென்பதும் கவலைக்கிடந்தான். ஆயினும் ஆங்கிலர்கள் விர லைக் கொண்டே அவர்கள் கண்ணைக்குத்துவது சுலபமா யிருக்க யாதொருகவலையும் சரித்திராசியர்கள் கொள்ள வேண்டுவதில்லை. பர்க், மில், ஹில், டாரன்ஸ், முதலிய பல ஆசிரியர்கள் நமக்குபகாரிகளாய் நிற்கின்றனர். பாருங்கள்! சூரத்தில் அதிகாரம் வகித்தது முஸ்லிம் ஆட்சி. குடிகளில் பெரும்பாலர் ஆரியர். இவ்விரு இனத்தோருக்கும் பூர்ண மான ஒற்றுமையில்லை. ஏனெனின் *ஜஸையாவரி கொடூர

*ஜஸையா என்பது வீரமுஸ்லிம் மன்னர்களால் முஸ்லி மல்லாத குடிமக்களுக்கு விதிக்கப்பெற்ற வரியாகும்.

மாய் வசூல் செய்யப்பட்டது. அத்தருணத்தில் யாவரேனும் தூண்டிவிட்டால் ஒருவரை யொருவர் எதிர்த்துக் கொள்வது சகஜந்தான். அந்நிலைமையில் வியாபார மேன்மைக்காகப் போட்டியிட்ட ஆங்கிலேயர்களின் செயல்கள் சந்தேகத்துக் கிடமானவை என்பதற்குப் பல சான்றுகள் உள.

[1759-வது ஆண்டுவரை நடந்த விருத்தாந்தங்களை எண்டெடுத்துக்காட்டுவதற்கு அவகாசமில்லை. அந்த ஆண்டில் அந்நகரானது ஆங்கிலேயரால் முற்றிலும் பிடித்துக் கொள்ளப்பட்டது. அதுமுதல் 1799-வரை நான்கு நவாப்பு சாஹெப்புகள் பெயருக்குமட்டில் ஆட்சி புரிய அதிகாரம் முழுவதும் ஆங்கிலேயர்கையிலிருந்தது. 1800-வது ஆண்டில் சூரத்து நவாப்புக்குப் பென்ஷன் கொடுக்கப்பட்டது. சரித்திராசிரியராகிய மில் இவ்விஷயத்தை வர்ணித்திருக்கின்றனர். அவருடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாய் வெளியிடின் ஒரு பொம்மை நவாப்புக்குப் பட்டஞ்சூட்டி, கீழிந்தியவர்த்தக சங்கத்தார் வேடிக்கை செய்தனராம். இது நாகரிகம் பெற்றவர்களுடைய முறையன்றோ! "யாதாமொரு காரணத்தைக் காட்டியேதான் ஒரு நாயையும் தூக்கிலிடவேண்டும்." என்பது நாகரிகத்தின் புதிய ஏற்பாடு. நாயை யடிக்கத் தடியும் வேண்டுமோ என்பது அநாகரிகரின் முறையாகும். நிற்க இவ்விடத்தில் சூரத்தின் கதையைச் சுருக்கமாய்க் கூறியதின் காரணம் இயாதெனின் வியாபார விஷயமாய் ஏற்பட்ட அந்நகரத்தின் நிலைமையே. அஃதாவது அதற்கு மேற்கில் பாரஸீக வளைகுடா நீண்டகாலமாய் வியாபாரத்தில் தலைமை வகித்திருந்தது. பாரத மகாசமுத்திரத்தின் மேற்குப் பாகமாகிய அந்த பாரசீக வளைகுடாவினின்று ஆசியாவுக்குக் கீழ்ப்பாமாகிய மலாக்கா ஜலஸந்திவரை நடந்துவந்த பெரிய

வியாபாரங்களில் பாரதநாட்டின் மேற்குக் கடலோரத்தி லுள்ள சூரத்தே முக்கியமானதாய் விளங்கிற்று.]

மேலும் போர்த்துகீஸாரின் தொந்தரவு சகிக்க முடியாமல் பாரசிகத்திய ஷா (அரசன்) பிரஞ்சுக்காரரையும் ஆங்லேயரையும் ஸகாயம் புரியக் கேட்டுக்கொண்டனன். அதிர்ஷ்டத்திற்குச் செல்வப் புதல்வரான ஆங்கிலேயர் 1620-ல் போர்த்துகீஸாருடைய கப்பற்படையை அழித்து விட்டனர். இரண்டு வருஷங்களுக்குள் ஆர்மஜ் பட்டினத்தையும் கைவசம் செய்துகொண்டனர். அதனால் மக்கத்திற்குப் போகும் முஸ்லிம் யாத்திரைக் காரர்களுக்கு ஆங்கிலர்கள் ஸகாயஞ்செய்யக்கூடிய நிலைமையிலிருந்தமையால் மொகலாயர்களுடைய தயவுக்குப் பாத்திரர்களாய் விட்டனர். இதுவும் ஆங்கிலர்களின் அதிர்ஷ்டமே.

நிற்க; சூரத்திலும் டச்சுக்காரர்களின் வியாபார ஸ்தலம் ஏற்பட்டிருந்தாலும் ஆங்கிலேயர்களைப்போல் மொகலாயர் ராஜ்யத்தில் மேற்குக் கடற்கரையில் செல்வாக்கு பெறவில்லை. ஆனால் வங்காளத்திலும் வங்காள விரிகுடாவில் சென்னைக்கு வடக்கிலுள்ள புலிக்காட்டிலும் மச்சிலிபட்டினத்திலும் (Muslipatam) சென்னைக்கு தெற்கில் சதுரங்க பட்டினத்திலும் வியாபாரம் அதிகமாய் நடத்தலாயினர். ஆயினும் அம்போயனு முதலிய இடங்களில் நடந்த போட்டியும் போராட்டமும் பாரத நாட்டிலும் நிகழ்ந்தன. ஏனெனின் வைரம், செம்பு, துணிகள், ஆகிய வியாபாரத்திற்குப் பெயர் பெற்றது கோல்கொண்டா தேசம். ஆனால் டச்சுக்காரர்களுடன் போட்டியிட முடியாமல் இரண்டு வருஷங்கள் பின்தங்கி நின்று சமயம் பார்த்து மறுபடி மச்சிலிபட்டினத்தை ஆங்கிலேயர் அடைந்தார்கள்.

இங்கிலாந்திலுள்ள கிழிந்திய வர்த்தகச் சங்கத்தின் நிர்வாக கர்த்தர்கள் டச்சுக்காரர்களின் கொடுஞ் செயல்களைக் கேட்டது முதல் அவர்களைத் தண்டிக்க வேண்டிய வழிகளைத் தேடிப் பன்முறையும் திருப்தியடையவில்லை. ஆயினும் (முதலாவது) சார்லஸ் 1625-ல் அரியணை யடைந்ததும் அவர்கள் மீண்டும் தங்கள் முயற்சியைப் புதிப்பித்தனர். சார்லஸ் தனக்கு அவர்களால் யாதேனும் பொருளுதவி யுண்டாகுமெனக் கருதி சிநேகம் பாராட்டிக் கொண்டிருந்தான். ஆனல் சார்லஸுக்கும் அவனது குடிகளுக்கும் நட்பு இல்லை என்றும் ஜனங்களின் இருதயம் கொதித்துக் கொண்டிருந்ததென்றும் டச்சுக்காரர்கள் தெரிந்து கொண்டிருந்தனர். அக்காலம் முதல் *1707-வது ஆண்டு வரை இங்கிலாந்தில் அரசு புரிந்த மன்னர்களுக்கும் கிழிந்திய வர்த்தக சங்கத்தாருக்கும் அதற்கு விரோதமாய்க் கிளம்பிய வியாபாரக் கூட்டங்களுக்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் இந்நாட்டுக்கு எட்டக்கூடிய சௌகரியங்களில்லாமையினல் பரதகண்டம் அன்னிய நாட்டார்களின் சூழ்ச்சிகளுக்கு இரையாய் முடிந்தது. மேலும் ஆங்கிலேயர்களுக்குள் எத்துணையோ கலகங்களும் யுத்தங்களும் நடந்தன. முதலாவது சார்லஸு மன்னன் குடிகளால் சிரச்சேதம் செய்யப்பட்ட விஷயமும் கிராம்வலின் (கவர்ண்மெண்டு) அரசாட்சி பரீக்ஷைகளும் இரண்டாவது ஜேம்ஸ் ஊரை விட்டோடின சமாசாரமும் புதிய புதிய அரசாங்க முறைகள் ஏற்பட்ட வரலாறும், இங்கிலாந்திலுள்ள கிறிஸ்தவர்களுள் மத பேதங்கள் ஏற்பட்டதும் மதப் போர்கள் நடந்ததும், தம் மதத்தை இடையூறின்றி அனுஷ்டிப்பதற்கு

---

* இவ்வாண்டு அவுரங்கஜீபு இறந்ததையும் மொகலாயர் ராஜியம் க்ஷீணதசையை நோக்கினதையும் குறிப்பிடுவதாகும்.

அமெரிக்காவுக்கு யாத்திரை புறப்பட்டவர்கள் ஒரு புதிய நாட்டை ஏற்படுத்திக்கொண்டு கால வளவில் ஆங்கில அரசாக்ஷியை நீக்கிவிட வேண்டிய ஏற்பாடுகளை நடத்தியதும் ஆகிய பல்லாயிரம் விஷயங்கள் இந்நாட்டில் பாரதமக்களுக்கு அக்காலத்தில் தெரியவில்லை.

அச்சரித்திரங்களை யறிந்து கொள்ளாமலும் ஊரை விட்டு வெளித் தேசங்களுக்குப் போகாமலும் புதிதாய் வந்தவர்களின் மர்மந்தெரியாமலும் தர்மமே ஜயம் என்றும் நினைத்துக்கொண்டிருந்த பாரதமக்கள் மேனுட்டார்களுடன் சகவாசஞ் செய்யத்தெரியாத காலத்தில் வியாபாரஞ் செய்ய இடத்திற்காகப் போராடின மேனுட்டார்கள் ஒரு தேசத்தாருக்குப்பின் மற்றொருதேசத்தார் புற்றிடை ஈசல்கள்போல் தோன்றி * 1707-வது ஆண்டு வரை நடாத்திய விஷயங்களைச் சுருக்கமாய் அடுத்த சருக்கத்தில் முடித்துவிடுவது போதுமென நினைக்கின்றோம்.

இரண்டாவது சருக்கம்.

வியாபார ஸ்தலங்கள்.

முதன் முதலில் சூரத்தில் ஆங்கிலர் அஸ்திவாரம் கோலின விவரம் ஏற்கனவே கூறப்பட்டிருக்கின்றது. அடுத்தபடியாய் மேற்குக் கடலோரத்தில் பம்பாய்ப் பட்டினத்தை எடுத்துக்கொள்வோம். அது சூரத்தைக் காட்டினும் மேனுட்டினின்று பரதகண்டத்துக்குள் நுழைய முக்கியமான வாயிலாகும். இன்றைக்கு பம்பாய் அடைந்திருக்கும் சிறப்பைத் தெரிந்து கொண்டவர்கட்கு இவ்வுண்மை நன்கு புலப்படும். அது போர்த்துகீஸார் வசத்தி

* 176-வது பக்கத்தைப் பார்க்க.

விருந்தமையால் அதைப் பெறுவதற்கு வேண்டிய பகீரதப்



பிரயத்தனம் செய்தனர் கிழிந்திய வர்த்தக சங்கத்தார்

1661-ல் இரண்டாவது சார்லஸுக்கும் போர்த்துகல் ராஜ குமாரிக்கும் விவாகமான காலத்தில் கிடைத்த ஸ்திரீ தனங்களுள் இந்நகரமும் ஒன்றானபடியால் அது கீழிந்திய வர்த்தகச் சங்கத்தாருக்கு 1668-ல் சுவல்ப வருமானத்தைப் பெற்றுக்கொண்டு சார்லஸினால் கொடுத்துவிடப்பட்டது. ஏற்கனவே 1664-ல் சூரத்தை சிவாஜி மகாராஜா எதிர்த்த காலத்தில் ஆங்கிலேயர்கள் அவனை வென்றதனால் மொகலாயருக்குச் சந்தோஷமுண்டாயிற்று. ஆயினும் 1668-ல் பம்பாயைக் கைப்பற்றி அதில் சைன்னியம் ஒன்றை ஏற்படுத்திய காலம் முதல் மொகலாயர்களுக்குக் கோபமுண்டாயிற்று. ஏனெனின் ஆங்கிலேயர்கள் வியாபாரிகள் என்றும் தனத்திற்காக வந்தவர் என்றும் ஆனால் சிவாஜி முஸ்லிம் ராஜ்ய சத்துருவென்றும் நினைத்த காலத்தில் ஆங்கிலேயர்கள் சிவாஜியைத் தோற்கடித்தது சகஜமாயிருந்தது. ஆனால் வியாபாரிகள் சைன்னிய ஸ்தாபனஞ் செய்ததும் சந்தேகத்திற் கிடமுண்டாயிற்று.

மேலும் பம்பாய் கவர்னரான ஆக்ஸண்டன் ஒரு கோட்டை கட்டுவதற்கும் அதன்பேரில் பீரங்கிகளைச் சுமத்துவதற்கும் ஊரைச் சீர்திருத்தஞ் செய்வதற்கும் தொடங்கி விட்டனன். அவனிறந்தபிறகு கவர்னராயிருந்த ஆங்கீர் பம்பாயில் பஞ்சாயத்துச் சபையை மீண்டும் ஸ்தாபித்தனன். அதனால் ஜனங்களுக்கு சௌகரியமுண்டாயிற்றென்று மேனாட்டார்களே கூறிநிற்க எப்புண்ணியவான் பஞ்சாயத்தை யழித்து விட்டனனோ யாமறியோம். இப்பொழுது பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என யாவரேனும் ஞாபகப்படுத்தலாம். அப்பஞ்சாயத்தின் நிலைமையை வேறோர் சமயம் எடுத்துக்காட்டுவாம்.

நிற்க; 1670-ல் மீண்டும் சூரத்து சிவாஜியினல் எதிர்க்கப்பட்டது. அக்காலத்திலும் ஆங்கிலேயர்கள் தமது தற்காப்பு ஆயுதங்களைக் கொண்டே தப்பித்துக் கொண்டனர். பிறகு 1673-ல் டச்சுச்காரர்களும் எதிர்க்கலாயினர். அக்காலத்தில் ஆங்கிலர் சைனியத்தைப் போருக்குமுன் நிறுத்தினவுடன் டச்சுக்காரர்கள் ஓடிவிட்டனர். ஆனதினல் ஆங்கில வர்த்தகச் சங்கத்தினர் பாம்பாய்த் தீவையே தலை நகராக்கிக்கொள்ள முயன்றனர். ஆயினும் 1687-ல்தான் அவ்வாறே செய்யப்பட்டது.

சூரத்து எவ்வாறு அரபிக் கடலோரத்தில் முக்கியமான வியாபார ஸ்தலமாய் நின்றதோ அவ்வாறே வங்காளக் குடாக்கடலோரத்தில் மச்சிலிபட்டினம் விளங்கிற்று. இவ்விடத்திலும் ஆரிய மதஸ்தர்களும் இஸ்லாம் மதஸ்தர்களும் மதப் பொறுமை பாராட்டினர். அதனல் மேனட்டார்களுடைய வியாபாரத்திற்குச் சௌகரியமாயிற்று. அதற்கடுத்தபடி சென்னை நகரம் எனப்படுகின்றது. சென்னை நகரம் முதல் முதலில் (1639) ஆங்கிலருக்கு முகமன் கூறியதென்பதை எல்லோரும் அறிவார். இவ்விடத்தில்தான் அவர் யாதொரு தடங்கலின்றிக் கோட்டைகட்டிக் கொண்டனர். கோலகுண்டா சுல்தான் எதிர்த்த காலத்தில் சுல்தானுக்கு வழக்கம்போலுள்ள வரியைக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டனர். ஆயினும் போர்த்துகீஸாருடைய ஸெயிண்ட்தோம் என்கிற இடத்தைப் பிடித்துப் பீரங்கிகளைக் கொள்ளையடித்துப் போர்த்துகீஸாரைத் துரத்திவிட்டனர். அவர்களும் ஆங்கிலேயர்களுடன் கூடிக்கொண்டனர். ஆனல் அக்காலத்தில் பிரஞ்சுக்காரர்களும் கடலோரமாய் அவ்விடத்தைத் தாக்கித் தங்கள் வசமாக்கிக்

கொள்ளமுயன்றனர். பிறகு 1689-ல் ஔரங்கஜீப்பினுல் கோல்கொண்டா ஜயிக்கப்பட்ட காலத்தில் மொகலாய சக்கிரவர்த்திக்கு ஆங்கிலர் வரி கட்டிவிட்டனர்.

சிவாஜி இறந்த பிறகு மொகலாயர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் போராட்டம் ஏற்பட்டது. அதனுல் சென்னை வியாபாரிகள் மொகலாயர்களால் அடிக்கடி தொந்தரைகள் செய்யப்பட்டனர். பிட் என்கிற கவர்னர் லஞ்சம் கொடுக்காததனுல் சென்னை முற்றுகை ஏற்பட்டது. மூன்று மாதங்களுக்குப் பிறகு சமாதானம் ஏற்பட்டது. ஔரங்கஜீப் 1707-ல் இறந்த பிறகு சுமார் 40 ஆண்டுக்கள் சென்னையில் யாதொரு கேள்வியுங் கிடையாது. ஆங்கிலர்கள் நிலம் வாங்கினுர்கள்; விற்ருர்கள்; வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினுர்கள்.

ஆங்கிலர் சென்னையைப் பெற்ற அடுத்த ஆண்டில் வங்காளத்தில் ஹுக்ளி நதிக்கரையில் ஏற்கனவே போர்த்துகீஸார் வியாபாரம் செய்த இடத்தில் ஷாஜிஹான் உத்தரவினுல் வியாபாரஞ் செய்யலாயினர். ஆனுல் சென்னையில் சுகமாய் வேரூன்றினதைப்போல் முடியவில்லை. எனெனின் அம்மாகாணம் அக்பர் காலம் முதல் முகல் சக்கிரவர்த்தி கண்பார்வையிலிருந்தது. போர்த்துகீஸாரின் பீரங்கிகளால் ஏற்பட்ட கெடுதிகளை மொகல் சக்கிரவர்த்தி மறக்கவில்லை. ஏற்கனவே டச்சுக்காரர்களும் பிரஞ்சுக்காரர்களும் போட்டியிட்டுக்கொண்டிருந்தமையால் ஆங்கில வியாபாரிகளின் மந்திரம் அக்காலத்தில் அவ்விடத்தில் பலிக்கவில்லை. இம்மூவர்களுக்குள் ஐரோப்பாவில் ஏற்பட்ட சண்டைகள் வங்காளத்தில் தோன்ற இடங்கொடுக்கப்படவில்லை.

மூன்றாவது சருக்கம்.

ஆங்கிலேயர் கொண்டாட்டம்.

1600-வது ஆண்டில் முதன் முதலில் ஆங்கில ராணியாரால் அளிக்கப்பட்ட வியாபார ஸ்ரீமுகம் பெற்றவர்கள் அந்த அம்மைக்கு அடுத்த ஜேம்ஸ் மன்னனுடைய தயவினால் மொகல் சக்கிரவர்த்தியான ஜஹாங்கிரின் தர்பாரில் ராஜ தூதர்களாய் வசித்த ஹாகின்ஸ் முதலிய சிலரின் நடவடிக்கைகளைப் பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கின்றோம். அது முதல் பரதகண்டத்தில் இங்குமங்கும் வியாபார ஸ்தலங்கள் ஏற்பட்ட சரித்திரத்தையும் குறிப்பிட்டிருக்கிறோம். அவ்விடங்களுள் சூரத்தில் சிவாஜிக்கும் ஆங்கில வியாபார அதிகாரிகளுக்கும் நடந்த சச்சரவில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றமையால் ஔரங்கஜீப் வெகு சந்தோஷமடைந்து ஆங்கிலேயர்களுக்கு அதிக வியாபார சௌகரியங்கள் புரிந்தது மீண்டும் குறிப்பிடத்தக்கது. ஆயினும் ஆங்கில வியாபாரிகள் பலம் பெற்று விருத்தியாய்க் கொண்டிருந்தது தம்முடைய மொகலாய சாம்ராஜ்யத்திற்குக் குறைவு நேரிடுமென்று எண்ணி ஔரங்கஜீப் ஒரு சமயத்தில் ஆங்கிலேயர்களை முற்றிலும் ஒடுக்கிவிடும்படியான உத்தரவுகளைப் பிறப்பித்து சூரத்திலிருந்தே அவர்களை வெளிப்படுத்திய காலத்தில் பல சூழ்ச்சிகளால் அவனுடைய தயவை மீண்டும் பெற்றுவிட்டனர்.

ஆயினும் வங்காள மாகாணத்தில் அதிகாரம் பெற்றிருந்த மொகலாய அதிகாரிகள் அவ்விடத்திலிருந்த ஆங்கில வியாபாரிகளை அடிக்கடி கண்டித்துக் கொண்டிருந்தனர். வியாபார சூழ்ச்சிகளைக் கவனித்து நின்றனர்.

சென்னையிலும் பம்பாயிலும் கோட்டைகள் கட்டிக் கொண்டும் பீரங்கிகளை அடுக்கிக்கொண்டும் இருந்ததுபோல் ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் செய்ய முடியவில்லை. ஹூக்கிலியைச்சுற்றி வசித்திருந்த பிரஞ்சுக்காரர்களும் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் சண்டை செய்து கொள்ள விட்டுவிடப்படவில்லை. ஐரோப்பாவில் அந்த இனத்தார்களுள் மகாயுத்தங்கள் நடந்தபோதிலும் கங்கை நதிக்கரையில் சமாதானமாய் வாழ நேரிட்டிருந்தது. மேலும் ஆங்கிலேயர்களிடமிருந்தும் ஜஸையாவரி வசூல் செய்யப்படலாயிற்று. அத்தருணம் நவாப்புக்கு ஏராள மான லஞ்சத்தைக் கொடுத்து அவ்வரியினின்றும் தப்பித் துக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஆங்கில கவர்னராகிய ஜாப் சார்ணக் என்பான் கைதி யாக்கப்பட்டபடியினாலும் சூரத்திலும் ஆங்கிலர்கள் பல துன்பங்களுக் குள்படுத்தப் பட்டபடியினாலும் 1685-ல் ஆங்கிலர்களுக்கும் மொகலாய சக்கிரவர்த்தியாகிய ஔரங் கஜீப்புக்கும் விரைவில் யுத்தம் நேரிட்டது. சூரத்தில் ஆங்கிலர் சமாதானம் பெற்றனர். ஆனால் வங்காளத்தில் சமாதானம் பெறவில்லை. ஆதலால் வங்காளத்தை விட்டு சென்னைக்கு ஓட நேரிட்டது. ஆயினும் வங்காளத்திற்கு அனுப்பப்பட்ட வேறொரு நவாப் மீண்டும் ஆங்கிலேயர் களுக்கு முகமன் கூறினான். இதன் பயனாய் 1690-ல் காளிகட்டம், கோவிந்தபுரம், சுத்தாநத்தி என்கிற மூன்று கிராமங்கள் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தன. அவைகள் தான் பிறகு கல்கத்தா என்கிற பெயருடன் விளங்கலாயின. அக்காலத்தில் ஆங்கில மேன்மைக்குக் காரணம் என்று சொல்லப்படும் ஜாப் சார்ணக்கைப்பற்றிய கதை ஒன்று கவனிக்கத்தக்கது. வங்காளஸ்திரீ ஒருத்தி அவள் கணவ

னுடன் உடன்கட்டை ஏறுவதை நிருத்திப் பிறகு அவளைத் தான் விவாகஞ் செய்துகொண்டானும். அவள் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொள்ளாததனுல் அவனே அவள் மதத்திற்கு உட்பட்டானும். அதனுல் அவளிறந்த பிறகு அவளுடைய கல்லறையின் பேரில் பிரதி வருஷமும் ஒரு கோழியைக் காளிக்குப் பலி கொடுத்தானும். ஆதலால் ஜனங்கள் அவனிடம் பிரியமாயிருந்தார்களாம்.

பதினேழாவது நூற்றுண்டின் இறுதியில் வங்காளிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் சில சச்சரவுகள் ஏற்பட்ட காலத்தில் ஆங்கிலர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சௌகரியம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டவுடன் வங்காள நவாப் தற்காப்புக்கு வேண்டிய முறைகளைச்செய்து கொள்ள அவர்களுக்கு உத்தரவு கொடுத்தான். உடனே கோட்டைகளைக்கட்டி பீரங்கிகளை அமைத்துக்கொண்டுவிட்டனர். இங்கிலாந்திய மன்னனுன உவில்லியம் என்பவன் பெயரால் கோட்டை பிரசித்தமாயிற்று. சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் *பங்களாக்கள் ஏற்பட்டுவிட்டன. அப்பொழுதே சுவதேசிகளுக்கு நதிக்கரையில் இடங்கொடுக்கப்படவில்லை. ஆதலால் அவர்கள் சற்று விலகியே குடியிருந்தனரர். ஆங்கில ஸ்திரீகள் வெகு ஆடம்பரங்களுடன் தோட்டங்களிலும் ஆற்றங்கரைகளிலும் கேளிக்கைகள் செய்துகொண்டிருந்தனர். பாரதமக்களால் வகிக்கப்பெற்ற பல்லக்கு சவாரி செய்துக்கொண்டிருந்தனர். ஆயினும் அவர்களுக்குள்ளே அந்தஸ்துப் போராட்டமும் பொறுமைகளும் போட்டிகளும் அதிகரித்திருந்தன.

* பங்களா என்பது வங்காள பாஷைப்பெயர் என்று சொல்லப்படுகின்றது. அது ஆங்கிலப் பெயரல்ல.

ஆங்கில சிப்பாய்கள் சிலர் ஆற்றங்கரையில் காவல் புரிந்துகொண் டிருந்தனர். அவர்களால் அடிக்கடி கலகங் களும் நேரிடுவதுண்டு. நவாப்பின் தலைமை நகராகிய மூர் ஷிடாபாத்திலிருந்து பாட்ணு நகரம்வரை இடையிலிருந்த சில நவாப்புகளின் முக்கிய ஸ்தானங்களில் ஆங்கிலேய வியாபாரிகளின் சாமான்களுக்கு வரி விதிக்கப்பட்டமையால் அவ்வரியைச் செலுத்துவதிலும் வசூல் செய்வதிலும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் நேர்ந்திருந்தன.

ஹூக்கிலியிலிருந்த ஆங்கில வியாபாரிகளுக்கு முக்கிய மான நோக்கம் ஐரோப்பாவினின்றும் வந்த கப்பல்கள் தான். அவைகளினின்றும் கம்பளத்துணிகளும் இரும்புசாமான் களும் தாம்பிரம் பாதரசம் இரும்பு முதலிய உலோகங்கள் ஆகியவைகள் இறக்குமதியாயின. அக்கப்பல்களில் வங்கா ளத்திலிருந்து பஞ்சுநூல் துணிகள் மஸ்லின், பட்டு, நீலச் சாயம், பொட்டிலுப்பு, வாசனைத்திரவியங்கள், விநோத சாமான்கள் ஏற்றுமதியாயின. ஐரோப்பியச் சந்தைகளில் இந்நாட்டுச் சரக்குகளுக்கு ஏற்பட்ட மதிப்பினால் இங்கி லாந்தில் வசித்த "கீழிந்திய" வர்த்தக சங்கத்தின் நிர்வாக சபையார் ஏராளமான வருவாய் அடையலாயினர். இந் நாட்டில் வசித்த சிப்பந்திகள் பல தந்தரங்களினாலும் சூழ்ச்சிகளினாலும் ஈட்டிய பொருளைச் சொந்த நாட்டுக்கு அனுப்பிக்கொண் டிருந்தனர். இந்நாட்டுச் செல்வம் கடலில் கரைக்கப்பட்டதுபோல் வெளிச்சென்றாலும் அத்தருணத் தில் வெளிப்படையாய் யாதொரு குறைவும் இந்நாட்டில் காணப்படவில்லை. அதனால் பரதகண்டத்தின் செல்வம் ஊகிக்கப் பாலதாகும்.

வங்காளம் இவ்வாறிருக்கையில் ஔரங்கஜீப் காலகதி யடைந்தனன். அவன் 1707-ல் இறந்தவுடன் அவனது

மாகாண அதிகாரிகள் ஆங்காங்கு தனித்தனி ஆட்சி முறையை ஏற்படுத்திக்கொள்ள பிரயத்தனஞ் செய்தனர். ஏனெனின் மொகலாய சிங்காசனத்துக்கு அடுத்த வாரஸ் முறையில் கலகம் நேரிட்டது. மூத்தகுமாரன் ஷாஆலம் (முஆஸிம்) காபூலில் தங்கியிருந்தமையால் அவன் டெல்லிக்கு வருமுன் தக்ஷிணத்தில் இருந்த ராஜகுமாரர்கள் (ஆஸம், காம்பக்ஷ்) இருவரும் தனித்தனியே சக்கிர வர்த்தி பட்டம் தாமே தரித்துக்கொண்டு நாணயங்களும் அச்சிட்டுக்கொண்டனர். ஆக்கிராவில் முக்கியமான கஜானு இருந்தமையால் அதைப் பிடித்துக்கொள்வதற்கு மூவரும் போட்டியிட்டுக் கொண்டிருக்கையில் ராஜ்யம் கலகலத்து விட்டது. முடிவில் ஷாஆலம் வெற்றிபெற்று பஹதூர்ஷா என்கிற பட்டத்துடன் அரியணையைப் பற்றினன். பிறகு ஐந்து ஆண்டுகளுக்குள்ளேயே இறந்துவிட்டான். மேலே குறிப்பிடப்பட்ட **காம்பக்ஷ்** என்பவனைப்பற்றிய விசேஷம் ஒன்று குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டும். அவன் தாயார் கிறிஸ்தவ மதத்தினராம். ஆதலால் அவனும் கிறிஸ்தவன் என்றும் அவன் சிங்காசனத்துக்குரியவனல்ல னென்றும் முல்லாக்கள் எதிர்த்து நின்றனராம். இவ்விஷ யத்தைப்பற்றிய விவரம் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும்.

மீண்டும் அவன் குமாரர்கள் நால்வர் சிம்மாசனத்துக் குப் போட்டியிட்டுக்கொள்ளலாயினர். அவர்களுள் மூத்த குமாரன் ஜஹாந்தர்ஷா ஒரு ஆண்டுக்குள்ளேயே இறந்து விட்டான். அவனுக்குப் பின் ராஜ்யத்தை யடைந்த பருக்ஸி யார் (**Farruksiyar**) ஆட்சியில் (ஜஸையாவரிவிதிக்க ஆரம் பித்ததிமுல்) மதக்கலகங்கள் தோன்றின. இந்த சக்கிர வர்த்திக்கு நேரிட்ட ஒரு வியாதியைச் சுகம் செய்வித்த ஹமில்டன் என்கிற வைத்தியன் வாயிலால் ஆங்கில வியா

பாரிகள் வங்காளத்தில் அதிக சௌகரியங்கள் பெற்றனர். அவன் (1719-ல்) காலஞ்சென்றது முதல் முகம்மதுஷா (1748-ல்) இறந்தவரை பல பொம்மையரசர்கள் தோன்றி யழிந்தனர். அந்தோ ! மொகலாயராஜ்யம் !

இம்மாதிரி டில்லிதர்பார் நடந்துகொண்டிருக்கையில் பல தனி மாகாணங்களும் ராஜ்யங்களும் ஏற்பட்டுவிட்டன. என்பதே ஆங்கிலேயர் கொண்டாட்டத்துக்குக் காரணம்.

வங்காளத்தில் அலிவர்டிகான் என்கிற மாகாண அதிபதியும் அயோத்தியையில் ஆதத்கான் என்கிறவனும் டில்லிக்குக் கப்பங்கட்டுவதை நிறுத்திவிட்டனர். கங்கைக்கு வடபுறத்தில் ரோஹில்கண்டு என்று சொல்லப்படும் ஒரு பிரதேசம் ரோஹில்லர் என்கிற ஆப்கானியர்களால் உண்டாக்கப்பட்டது. அதுவும் மிகவும் பலமான மாகாண மாய்விட்டது. தக்ஷிணத்தில் நிஜாம் என்கிற பட்டப் பெயருடன் அஸப்ஜா என்கிற மாகாண அதிகாரி தனியாய் அரசு புரிந்தனன். அவனுக்குக்கீழ் சில நவாப்புகள் ஏற்படலாயினர். அவர்களுள் முக்கியமானவன் கர்ணாடக நவாப்.

நிற்க ; மகாராஷ்டிரர்கள் சிவாஜியினால் ஸ்தாபிக்கப் பட்ட ஸ்வராஜ்ய முறையைப் பின்பற்றி சிறந்த அரசியல் பெற்று நின்றனர். அஷ்ட பிரதான் என்கிற மந்திரிக்குழாத் தின் இரண்டாவது அங்கத்தினரான பேஷ்வா பதவியை யடைந்த பாளாஜி விசுவாநாதர் தம்முடைய சக்தியினால் தன் ஸ்தானத்தை முதன் மந்திரி பதவியாக்கிக்கொண்ட னர். அப்பதவி அவர் குமாரன் பாஜிராவ் காலம்முதல் வம்சபரம்பரையான உத்தியோகமாய் மாறிவிட்டது. மேலும் சிவாஜியின் சந்ததிகள் பெயருக்கு மட்டில்

ராஜாவாய் விளங்கினார்கள். உண்மையாய் பேஷ்வாவே அரசனாய் விளங்கினார். மேற்கூறப்பட்ட பாஜிராவ் காலத்தில் பல மகாராஷ்டிரத்தலைவர்கள் தோன்றினார்கள். அவர்கள் காலப்போக்கில் ஹோல்கார், காயக்வார், ஸிந்தியா, என்கிற மூன்று அரசாங்கங்கள் உண்டாக்கிக் கொண்டனர்.

டில்லி ராஜ்யம் பல்வேறாய்ப் பிளவுபட்ட தருணம் மொகலாயர்களுக்குத் திண்டாட்டமாயும் அன்னிய நாட்டார்களுக்குக் கொண்டாட்டமாயும் முடிந்தது. மஹாராஷ்டிரர்கள் (1737-ல்) டெல்லியை எதிர்த்துத்தாக்கி வெற்றி பெற்றனர். அவர்களது வழக்கம்போல் சௌத்வரி வசூல் செய்யப்பட்டது. தக்ஷிணத்தில் நிஜாம் அரசனையும் தங்களுக்கு வணங்கச் செய்தனர்.

பரதகண்டம் இந்நிலைமையிலிருக்குங்கால் பாரஸீக தேசத்திய மன்னன் நாதிர்ஷா என்பான் டெல்லியின் செல்வத்தைப் பரிமுதல் செய்யநினைத்துத் தைமூர் படையெடுத்ததற்குப் பதின்மடங்கு கொடூரம் வகித்து டெல்லியை எதிர்த்துத்தாக்கிக் கொள்ளையடித்து மனிதர்களைக்கொன்று நகரத்தையே அக்கினிக்கு அர்ப்பணஞ் செய்தான். எமெட்டு மணி சாவகாசத்திற்குள் நடந்த அட்டூழியங்களையும் அக்கிரமங்களையும் வர்ணிப்பது படிப்பவர் மனத்தைப் புண்படுத்துமென அவைகளை விட்டுவிடுகிறோம். முஸல்மான்களே நாதிர்ஷாவை நிந்தித்திருக்கின்றனர். ஏனெனின் அவன் ஒரு மஸ்ஜித்திலிருந்துகொண்டே முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் ஆகிய ஜனங்கள்படுந் துன்பத்தைக்கண்டு களித்து நின்றனன். அம்மாதிரி செய்வது இஸ்லாமிய போதனைக்கு மாறுபாடானது. முஸ்லிம் சவங்களைப்

புதைக்கவும் உத்தரவு கொடுக்க மறுத்தான். டெல்லி வஜீர்கள் கெஞ்சிக் கூத்தாடி மன்றாடி நின்ற பிறகுதான் சற்று தயவு புரிந்தனன். அவனால் ஷாஜஹானின் உயர்ந்த *சிங்காஸனம்கொள்ளையடிக்கப்பட்டது. விலையுயர்ந்த வஸ்துக்களெல்லாம் பாரசீகத்திற்கு அனுப்பப்பட்டன. அவன் கொள்ளையடித்ததின் மதிப்பைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் பாரசீக ராஜ்யம் முழுவதிலும் ஒரு வருஷத்திய வரி யாவும் வசூல் செய்யப்படவில்லை என்று சொல்லிவிட்டால் போதாதா? இவ்வாறு செய்த பின்னர் பத்து ஆண்டுகளுள் மீண்டும் டெல்லியைக் கொள்ளையடித்தான். ஆனால் அதே ஆண்டில் அவனது ராஜ்யத்திற்குத் திரும்பின பிறகு ஒரு கொலையாளியால் வதம் செய்யப்பட்டான். அக்கொலைக்குக் காரணம் யாதெனின் அவன் செய்த அக்கிரமங்கள் ஓர்பால் நிற்கப் பாரசீகர்களுடைய ஷியாமதக்கக்ஷியை நீக்கி ஸுன்னிகளாய் எல்லோரும் மாறிவிடவேண்டும் என்று குடிகளைக் கொடிய துன்பத்திற்கு ஆளாக்கினதுதான்.

அவன் இறந்த உடன் (கி.பி. 1748-ல்) ஆப்கானிய மன்னன் ஒருவன் அஹமத்ஷா அப்தலி என்பான் ஆரியா வர்த்தத்தில் மீண்டும் ஆப்கானிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபனஞ் செய்ய எண்ணங்கொண்டான். அதே ஆண்டில் டெல்லி மொகலாய சக்கிரவர்த்தியாகிய மஹம்மத்ஷா இறந்துவிட்டமையாலும் மஹாராஷ்டிரர்களின் அரசனான ஸாஹு இறந்துவிட்டமையாலும் பரதகண்டம் கலகலத்து நின்றது. அத்தருணத்தில் ஆஹமத்ஷா அப்தலி முதன் முதலில் பஞ்சாபினின்று கப்பம் பெறலாயினன். இம்மாதிரி ஒரு ஆண்டில் (1748-ல்) நடந்த சம்பவங்கள் யாவும் இப்பரதகண்டத்

* முதற்பாகம் 225-வது பக்கங்களைப் பார்க்க.

திற்குப் பெருங்கேடுகளை விளைத்தன. இம்மாதிரியான நிலைமையில் ஒரு நாடு நிற்கின் யார்தான் அந்நாட்டை ஆக்கிரமித்துக்கொள்ள முயற்சி செய்யமாட்டார்? ஆங்கில வியாபாரிகள் காலடிவைத்த 1600-வது ஆண்டு முதல் 1748-வது ஆண்டுவரை மொகலாய சாம்ராஜ்யம் பெற்றிருந்த உன்னத சபையிலும் ஈனதசையிலும் சுகம் பெற்றவர்கள் அன்னிய நாட்டார்கள்தான். மேற் குறிப்பிட்ட நூற்றைம்பது ஆண்டுகளுள் பரதகண்டத்தில் வேரூன்றி நிற்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் தங்களுக்கு நேர்ந்திருந்தன வாதலால் "ஆரிய மதஸ்தர்களும் முஸ்லிம்களும் வசித்த மணற் பாலைவனத்தில் கிறிஸ்தவர்கள் பாலைவனச்சோலைகளாய் விளங்கினார்கள்" என்று ஒரு ஆங்கிலேயர் பெருமை பாராட்டிக்கொண்டனர்.

மேற் குறிப்பிடப்பட்டிருக்கும் நூற்றைம்பது ஆண்டுகளுள் இங்கிலாந்தில் ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட குடி உரிமை விருத்தியாய்க் கொண்டிருந்தது. அதனால் "கீழிந்திய வர்த்தகச் சங்கத்திற்கு"ப் போட்டியாய் ஆங்கில வியாபார சங்கங்கள் பல தோன்றின. அச்சங்கங்களால் ஏற்கனவே வியாபாரச் செருக்கைப் பெற்றிருந்த வர்த்தக சங்கம் நாசமாய்ப் போய்விடும் போலிருந்தது. அச்சமயம் (கி. பி. 1708) அதிகாரம் வகித்திருந்த ஆங்கில அரசியல் நிபுணர்கள் பல வியாபாரப்போட்டி சங்கங்களையும் ஒன்று கூட்டி சமாதான முறையைக் கைப்பற்றினதினால் பிளவுபட்டிருந்த நமது பரதகண்டத்தை சுவல்ப சுவல்பமாய் படிப்படியாய் வெவ்வேறு யுக்திகளினால் பற்பல பாகங்களையும் வெல்வதற்குச் சமயம் ஏற்பட்டது. ஆங்கில வியாபாரிகளின் கொண்டாட்டம் சொல்லொணாது.

நான்காவது சருக்கம்.

ஊர் இரண்டுபட்டால்?

நமது பரதகண்டத்தின் நான்கு திக்குக்களிலும் மேனாட்டார்கள் வியாபார ஸ்தலங்களை நியமித்துக்கொண்ட வரலாற்றைக் கூறிவந்தோம். வங்காளக் குடாக்கடலோரத்திலும் அராபிக் கடலோரத்திலும் கங்கை நதிமுகத் துவாரத்திலும் ஆங்கிலவியாபாரக் கூட்டத்தார் அடைந்த சௌகரியங்களை விவரித்து வந்தோம். அவர்களுக்கு முன் சில நூற்றாண்டுகளாய்ச் செல்வாக்கு பெற்றிருந்த போர்த்து கீஸாரின் கதியைப்பற்றியும் குறித்துக்காட்டியிருக்கிறோம். போர்த்துகீஸாருக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையில் தோன்றிய டச்சுக்காரர்களின் ஸ்தலங்களையும் காட்டினோம். இனி பிரஞ்சு வியாபாரிகளின் செயல்களைப் பார்ப்போம். அதற்குமுன் டேனிஷ்காரர்களைப்பற்றிக் கூறப்படவேண்டிய தொன்றுண்டு. சுமார் கி. பி. 1616-ல் டென்மார்க் நாட்டினர் ஒரு வியாபார சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு நான்கு ஆண்டுகளுக்குள் தரங்கம்பாடி என்கிற இடத்தில் ஒரு வியாபாரசாலை வைத்தனர். சுமார் 1676-ல் கல்கத்தாவுக்குச் சமீபத்திலுள்ள ஸிராம்பூரிலும் ஒரு வியாபாரசாலை ஏற்படுத்தப்பட்டது. இம்மாதிரி இன்னும் சில இடங்கள் அவர்களுக்கிருந்திருப்பினும் வியாபாரத்தில் தலை எடுக்கக் கூடவில்லை. ஆயினும் சுமார் இருநூறு ஆண்டுகள்காலம் கழித்தனர். கீழ்நாட்டில் அவர்களது முடிவு 1845-ல் ஏற்பட்டது.

ஐரோப்பாவில் ஔரங்கஜீப்புக்குச் சமானமான மன்னன் பதிநான்காவது லூயி என்று முன்னொருமுறை கூறியுள்ளோம். அவனுடைய மந்திரியான கோல்பர்ட் என்பான் ஆங்கிலர், டச்சு, ஆகிய இரு இனத்தார்களைப்போல் தன்

இனத்தாரும் வியாபார மேன்மையை யடையவேண்டுமெனத் தீர்மானஞ் செய்து கிழிந்திய வியாபார சங்கம் ஒன்றுக்கு ராஜாங்க உதவிபுரிய வேண்டிய ஒப்பந்தங்களை ஏற்படுத்தி அதை 1664-ல் வெளிக்கிளப்பினன். பிரஞ்சு வியாபாரிகளும் பரதகண்டத்தில் திரிந்து அலைந்து சூரத்திலேயே ஒரு பண்டகச் சாலை கட்டலாயினர். பிறகு மச்சிலிபட்டணத்தி லும் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தினர் (1668). 1674-ல் பிரஞ்சுக்காரருக்கு முக்கியமான புதுச்சேரி கிராமம் மார் டின் என்பவனால் ஸ்தாபிக்கப்பெற்றது. அது நாளடைவில் ஒரு நகரமாய் விருத்தியாயிற்று. அவனுடைய நல்ல சுவபா வத்தினால் தென்னாட்டின் கண் இருந்த சிற்றரசர்கள் அவ னுக்கு நண்பர்களானார்கள். அவன் அந்நகரத்திலேயே மரண மடைந்தான். அவன் பெயர்கொண்ட ஒரு வீதி இன்னும் காணப்படுகின்றது. (Rue d' Martin.)

அவனுக்குப்பின் புதுச்சேரிக்கு வந்தவர்களும் நற்குண முடையோராய் வாழ்ந்தனர். அவர்களுள் மோஸ் என்பவன் பெயர் குறிப்பிடத்தக்கது. ஏனெனின் கர்னாடக நவாப் என்கிற தோஸ்து அலிகான் அவனுக்கு முதல் நண்பன் ஆனான். அதன் பயனாய்த்தான் பரதகண்டத்தில் முஸ்லிம் ஆட்சிக்குப் பக்கத்தில் கிறிஸ்தவ ஆட்சியும் உற்பத்தியாக இடமுண்டு என்று அவனுக்குத் துணிவுண்டாயிற்று. இத் துணிவைப் பற்றியே அவனுக்குப் பிறகு அதிகாரியாய் இருந்த டூப்ளே இந்நாட்டுச் சரித்திரத்தில் பிரசித்தி பெற்றிருக்கிறான்.

புதுச்சேரிக்கு அடுத்தநிலைமையில் கூறக்கூடிய சந்திர நாகூர் ஹூக்லிக்கரையிலுள்ளது. புதுச்சேரிக்குப் போகு முன் டூப்ளே சந்திர நாகூரில் தலைமைவகித்திருந்தான். மேலும் அராபிக் கடலோரத்தில் மாஹி, வங்காளக்குடாக்

கடலோரத்தில் காரைக்கால், கோதாவரி முகத்துவாரத்தில் யேனுன் ஆகிய சில சிறிய ஸ்தலங்கள் பிரஞ்சக்காரர்களுக்குச் சொந்தமாயின.

பிரஞ்சுக்காரர்களும் டச்சுக்காரர்களும் அடிக்கடி வியாபாரப்போர் புரிந்து நின்றனர். ஆங்கிலர்களும் பிரஞ்சுக்காரர்களைப் பற்றியமட்டில் அடிக்கடி கவலை யுற்றிருந்தனர். ஆனால் வியாபாரத்திலும் செல்வத்திலும் பலத்திலும் சூழ்ச்சியிலும் பிரஞ்சுக்காரர்கள் தாழ்ந்த நிலைமையில்தானிருந்தார்கள். ஏனெனின் அவர்களுடைய வியாபார சங்கம் பொதுஜன அபிப்பிராயத்தினுல் ஏற்பட்டதல்ல. அரசாங்கத்தாருடைய தயவைப்பற்றியே புறப்பட்டது; குடிகளுடைய சொந்த முயற்சியாயிருந்தால் சங்கத்துக்கு அங்கத்தினர்களும் பங்காளிகளும் தாராளமாய் முன்னுக்கு வருவார்கள். ஆங்கிலர்களும் டச்சுக்காரர்களும் சொந்த முயற்சியினுல் தாங்களே போராடிப் போராடிப் பல தந்திரங்களினுல் வியாபாரத்தை விருத்திசெய்து கொண்டனர். பிரஞ்சு வியாபாரிகளோ கூலிக்காரர்களைப் போல் அசிரத்தை பாராட்டினர். ஆனுல் டூப்ளே புதுச்சேரியில் மாகாண அதிகாரியின் பதவியைப் பெற்றது முதல் (1742) சுமார் இருபது ஆண்டுகள் வரை பிரஞ்சுக்காரர்கள் இந்நாட்டில் வாழ்ந்திருக்கப் பெருமுயற்சி செய்யலாயினர். அம்முயற்சியே ஆங்கிலேயர்களுடைய அரசாட்சிக்கு வித்தாய் முடிந்தது. அவ் விஷயத்தை எடுத்துக்கொள்ளுமுன் கர்ணுடக நவாப்யார்? என்பதைச் சற்று விசாரிக்கவேண்டும். அது தெரிந்தாலன்றி ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட போர்களும் ஆங்கில விஜயமும் முற்றிலும் விளங்காது.

ஆங்கில சரித்திராசிரியர்களால் கூறப்படும் கர்ணுடகம் என்கிற மொழியைப் பற்றியவரலாறு விசித்திர

மானது. அதைப்பற்றிய விவரங்களை எடுத்துரைக்க அவகாசமில்லை. ஆனால் தென் தேசத்திய சரித்திரத்தில் அடிக்கடி சம்பவிப்பது ஆற்காடு நவாப் என்பதே. முதலில் கர்ணுடக பயின்காட் நவாப் என்றிருந்த பெயரைச் சின்ன பின்னமாக்கி முடிவில் சென்னை மாகாணத்தில் கிழக்கு மலைத்தொடரின் ஒரு பாகமாகிய பயின்காட்டுக்குத் தெற்கில் கன்னியாகுமரிவரை உள்ள பூபாகத்தைக் "கர்ணுடிக்" என்று உபயோகிக்கலாயினர். அதை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். [(1) வடக்குக் கர்ணுடகம், (2) மத்திய கர்ணுடகம், (3) தெற்குக் கர்ணுடகம்] முதலாவது. சுமார் வடபெண்ணைக்கரை வரையிலுள்ளது. இரண்டாவது வட பெண்ணை முதல் கொள்ளிடம் வரையிலுள்ளது. மூன்ருவது கொள்ளிடத்திற்குத் தெற்கிலுள்ளது.

முதல் இரண்டு பாகங்களும் சுமாராய் மொகலாயர் அரசாட்சிக்குள்ளிருந்தன என்றும் மூன்ருவது அனேகமாய் பாளையக்காரர்கள் என்று சொல்லப்பட்ட தென்னுட்டு நாயக்கர்கள் ஆட்சியில் இருந்தது என்றும் பொருள் கொள்ளல் வேண்டும். மேற்கண்ட இரண்டாவது பாகத்தில் (தென்னுற்காடு ஜில்லாவில்) செஞ்சி என்ற ஓர் சிறிய குன்றுண்டு. அதில் பிரசித்திபெற்ற ஒரு கோட்டையுமுண்டு. அதைப் பற்றிய கதைகள் பல உள்ளன. அவைகளுள் தேசிங்ராஜன் கதை என்பதைத் தென்னுட்டுத்தமிழருள் அறியாதாரிலர் என்று நினைக்கிறோம்.

மேற்படி கோட்டை 1677 முதல் 1690 வரை மஹாராஷ்டிரர்கள் வசத்திலிருந்தது. மஹாராஷ்டிரர்களை யடக்குவதற்காக ஔரங்கஜீப், ஜுல்பகர் (Zulfakar) கான் எனும் தளகர்த்தனை அக்கோட்டையைப் பிடிக்க அனுப்பினன். ஏழெட்டு வருஷங்கள் முற்றுகையிலிருந்தபின் அது பிடிபட்

டது. பிடிக்கப்பட்டவுடன் அம்முற்றுகையில் கீர்த்தி பெற்ற ஆப்கானிய தளகர்த்தனுகிய தாவுத்கான் அதற்குச்சிறந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டான். அதுமுதல், முதல் இரண்டு கர்ணுடகங்களும் மொகலாயர் வசத்தில் நின்றன. ஔரங்கஜீப் இறந்தவுடன் தக்ஷிணத்திற்கு ராஜப்பிரதிநிதியாக தாவுத்கான் நியமனம் பெற்றகாலத்தில் ஸாதத் அலிகான் என்கிற ஒரு உத்தியோகஸ்தன் கர்ணுடக அதிகாரியாஞன். ஆனுல் ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறபடி 1723-ல் நிஜாம் ராஜ்யம் தனி நிலைமையைப் பெற்றவுடன் ஸாதத் அலிகான் "கர்ணுடக பயின்காட் நவாப்" என்கிற பட்டப்பெயர் பெற்முன். அவன் இறப்பதற்கு முன் தன்னுடைய சகோதரன் மகனுன தோஸ்த் அலியை நவாப் பட்டத்தில் அமர்த்தினுன். ஆனுல் ஈதுடன் நிற்காமல் தன்னுடைய வேருெரு சகோதரன் பேரப்பிள்ளையான முர்த்தஜா அலிக்கு வேலூர் கோட்டையையும் அதைச் சேர்ந்த ஜில்லாக்களையும் கொடுத்துவிட்டான். முர்த்தஜா அலி, தோஸ்த் அலியின் குமாரி ஒருத்தியை மணம்புரிந்து கொண்டிருந்தான்.

நிற்க; தோஸ்த் அலியின் வேருெரு குமாரியை சந்தா சாஹெப் என்பாஞெருவன் மணம்புரிந்து கொண்டிருந்தான். சந்தா சாஹெப் தன்னுடைய சாமர்த்தியத்தினுல் கர்ணுடக அரசில் முக்கியமான பதவிகளைப் பெற்றிருந்தான். மூன்ருவது கர்ணுடகத்தில் திருச்சிராப்பள்ளியில் அரசுபுரிந்த ஒரு பாளையக்காரன் இறந்தவுடன் அவ்விடத்தில் கலகம் நேரிட்டது. (1736) அச்சமயம் சந்தா சாஹெப் படை எடுத்துச் சென்று அதைக் கைப்பற்றிக்கொண்டு கர்ணுடிக் நவாப் பெயரினுல்தானே அரசு செலுத்தினுன். தன் புதிய பதவியைக் காப்பாற்றிக்

கொள்வதற்காகப் புதுச்சேரியிலிருந்த பிரஞ்சு கவர்னர்களுடன் உறவாடிக் கொண்டிருந்தான். அவ்வுறவை நிலைநாட்டுவதற்குத் தருணம் வாய்த்தது. அஃதாவது தஞ்சாவூரில் அரசுபுரிந்த மஹாராஷ்டிர சிம்ஹாஸனத்தைப் பிடித்துக் கொள்ள விருப்பங்கொண்ட ஒருவன் புதுச்சேரியிலுள்ள டூமோஸின் உதவியைக் கோறினன். ஆனல் அவ்வுதவியின்றியே அவன் ஜயமடைந்தான். ஆதலால் பிரஞ்சுக்காரர்களுக்கு வாக்களித் திருந்தபடி காரைக்கால் எனும் துறைமுகப்பட்டணத்தைக் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. ஆனல் சந்தா சாஹெப் தன்னுடைய சைனியத்தைக் காரைக்காலுக்கனுப்பி அதைப் பிடித்துப் பிரஞ்சுக்காரருககுக் கொடுத்துவிட்டான். அதனல் பிரஞ்சுக்காரருக்கு ஒரு பெரிய பெயர் தோன்றிற்று. சந்தா சாஹெபுக்கும் மரியாதை ஏற்பட்டது.

தென்னாட்டு நிலைமை இவ்வாறிருக்கையில் மஹாராஷ்டிரர்களுக்கும் நிஜாம் அரசனுக்கும் விரோதம் உண்டாயிற்று. அதன் காரணமாய் தோஸ்த் அலியின் ஜில்லாக்களும் எதிர்க்கப்பட்டன. யுத்தத்தில் தோஸ்த் அலி மாண்டான். அவனுடைய குமாரனன ஸப்தர் அலியும் சந்தா சாஹெபும் தங்களுடைய மனைவி மக்களுடன் புதுச்சேரியில் அடைக்கலமடைந்தனர். அதனல் மஹாராஷ்டிரர்கள் புதுச்சேரி கவர்ணரிடம் ஒரு தூதனையனுப்பினர்கள். அப்பொழுது பிரஞ்சு கவர்ணர் தம்முடைய இனத்தாருக்குக்குறைவு வராமலிருக்குமாறு தம்மை யடைக்கலம் பெற்றவர்களை முடிவுவரை காப்பாற்றுவதற்குத் தயாராயிருப்பதாய் விடையளித்து பிரஞ்சு சாராயமும் மரியாதையாயனுப்பபட்டது. மஹாராஷ்டிரத்தலைவனுய் படையெடுத்துவந்திருந்த பீரார் ராகோஜி பான்ஸ்லேயும்

அவனது மனைவியும் அந்தச்சாராயத்தை ருசி பார்த்ததும் மயங்கி விட்டனர். ஊருக்கு திரும்பலாயினர். இதனால் தென்னாட்டில் பிரஞ்சுக்காரர்களுக்கு அதிக கௌரவம் ஏற்பட்டது.

ஸப்தர் அலி தனது செய்ந்நன்றியைக்காட்டுவதற்காக விலையுயர்ந்த ஆடை ஒன்றையும் தனது வந்தனத்தைச் செலுத்திய கடிதம் ஒன்றையும் அனுப்பினான். நிஜாம் மன்னனும் தனது சத்துருவாகிய மஹாராஷ்டிரர்களைத் துரத்தியடித்ததற்காக வந்தனம் செலுத்தினன். டெல்லி சக்கிரவர்த்திகூட பிரஞ்சு கவர்ணராகிய டூமாஸுக்கு "நவாப்" பட்டம் சூட்டி அவன் 4500 குதிரைகளுக்குத் தலைவன் ["மன்சப்தார்"] என்று பறை சாற்றினான்.

பிரஞ்சுக்காரர் அவ்வாறிருக்கையில் சந்தா சாஹேப் தனக்கு யாதொரு குறைவுமில்லை என எண்ணியிருந்தமையால் அஜாக்கிரதை மேலிட்டிருந்தான். மஹாராஷ்டிரர்களுடைய தந்திரம் அவனுக்குத் தெரியவில்லை. ஸப்தர் அலியுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு, பின்னர் திடீரெனத் திருச்சியை எதிர்த்துத்தாக்கினார்கள். தலைவனை ராகோஜி சந்தா சாஹேப்பைக் கைதியாக்கி ஸதாராவுக்கு அனுப்பிவிட்டான். அவனுடைய ராஜ்யம் மஹாராஷ்டிரர்கள் கைவசமாய் விட்டது. பிரஞ்சுக்காரர்களுக்கு இது ஒரு மனக்குறைவாயிருந்தது.

மேலும் ஸப்தர் அலி வேலூர் நவாப் முர்த்தஜா அலியால் கொலை செய்யப்பட்டனன். (1742) முர்த்தஜா அலி கர்நாடகத்திற்கே நவாப் என்று வெளிப்படுத்திக்கொண்டனன். அதைக்கண்ட குடிகள் அவனைத் துரத்திவிட்டு ஸப்தர் அலியின் குமாரனை நவாப் ஆக்கிக்கொண்டனர்.

அவன் பெயர் முஹம்மத்ஸையத். அவன் வயதில் சிறியவனாதால் அரசு மந்திரிகளின் கையில் தங்கிற்று.

இவைகளை யெல்லாம் கேட்ட நிஜாம் மன்னன் தன் அதிகாரத்தைக் கவனியாமல் நடத்திய செயல்களைக் கண்டிப்பதற்காக கர்னாடகத்தை யடைந்தான். அவனைக் கண்டதும் கர்னாடகத்திலுள்ள சில்லரை நவாப்புகள் யாவரும் பணிவடைந்துவிட்டனர். முஹம்மத் ஸையதின் அரசை நடத்துவதற்குத் தன் உத்தியோகஸ்தர்களுள் ஒருவனான அன்வருத்தீன் என்பவனை நியமித்துவிட்டு திருச்சினாப்பள்ளிக்குச் சென்று மஹாராஷ்டிரர்களைத் துரத்திவிட்டு தன்ராஜ்யத்துக்குத் திரும்பினான். உடனே கர்னாடகத்திலோ சிறிய நவாப் முஹம்மத் ஸையத் கொலை செய்யப்பட்டான். அவனுக்கு அடுத்தபடி யார் கர்னாடக நவாப் என்கிற கேள்வி பிறந்தது. நிஜாம் யாதொரு விசாரணையுமின்றி அன்வருத்தீனை ஆர்க்காடுக்குக் காயமான நவாப் என்று பர்மான் (Firman=ஸ்ரீமுகம்) அளித்துவிட்டான். (1744). இதே தருணத்தில்தான் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் யுத்தம் ஆரம்பித்தது. அந்த யுத்தத்திற்குக் காரணம் கர்னாடக நவாப்புகள்தான் என்றும் அவர்களுடைய ஜில்லாக்கள்தான் போர்க்களங்கள் என்றும் கூறிவிட்டு மேனாட்டார்களின் நிலைமையை இனி விசாரிப்போமாக.

ஐரோப்பாவில் ஆஸ்டிரியா தேசத்தில் அரசின்வாரஸ் கிரமத்தைப் பற்றிய பெரிய யுத்தம் ஒன்று 1740-ல் கிளம்பிற்று. பிரஞ்சுக்காரர்கள் ஒரு கக்ஷியிலும் ஆங்கிலேயர்கள் எதிர் கக்ஷியிலும் யுத்தஞ்செய்ய நேரிட்டது. அதற்குக் காரணம் வியாபாரப் பொறாமைதான். அமெரிக்காவிலும் பரதகண்டத்திலும் பிரஞ்சுக்காரர்களுடைய வியாபாரம்

நிலை நிற்பதா அல்லது ஆங்கிலேயர்களுடைய வியாபாரம் நிலை நிற்பதா என்கிற கேள்வி இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் கவனிக்கப்படலாயிற்று.

அமெரிக்காவில் மேற்கூறப்பட்ட இரண்டு இனத்தார்களும் பொறாமையுடனும் துவேஷத்துடனும் அடிக்கடி ரகசியமாயும் பகிரங்கமாயும் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அவ்விடத்தில் இருவர்களும் போட்டியிட்டுக் கொண்டிருந்தாலும் சுலபமாய் ஒருவரைமற்றொருவர் ஜயிக்க முடியாது. பரதகண்டத்திலும் அவ்விரு இனத்தார்கள் சற்றேறக் குறைய சமபலம் உடையவர்களாயிருந்தார்கள். ஆயினும் தென்னாட்டில் ஏற்பட்டிருந்த நவாப்புக் கலகங்களினால் ஒவ்வொரு இனத்தாரும் ஒவ்வொரு கக்ஷியை அடுத்துக் கெடுப்பது சுலபமாயிருந்தது. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிகளுக் கேளிதல்லவா? ஆதலால் இரண்டு இனத்தார்களின் வியாபாரச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தென்னாட்டு நிலைமையைத் தத்தம் சங்க நிர்வாஹ ஸபைக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் பிரான்சும் இங்கிலாந்தும் இருந்த நிலைமையில் துணிவாய் யுத்தத்தைக்கிளப்ப மயங்கி நின்றனர். இருதேசத்து ராஜதந்திரிகளும் ஒருவரையொருவர் நிந்தித்து நின்றனர். ஆனால் இறுதியில் பிரான்சு தேசம் தன்னுடைய கவர்னராகிய டேப்லேயைக் கண்டித்து கோட்டை கட்டல் தளவாடம் சேகரித்தல் முதலிய செலவுகளை நிறுத்திவிடும்படி உத்தரவிட்டது.

ஆயினும் அத்தருணத்தில் ஆங்கிலேயர்கள் மட்டில் யுத்தப்பிரியர்களாய் நின்றனர். இங்கிலாந்திலிருந்து கப்பல்களும் யுத்ததளவாடங்களும் இந்நாட்டில் இறங்கிக்கொண்

டிருந்தன. அவைகளைக்கண்ட டூப்லே தானும் யுத்தத்திற்குத் தயாராயிருக்கவேண்டுமென்றும் மோரீசு இலாகாவில் இருந்த லாபோர்டிஞப் கவர்ணரினுதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் பிரஞ்சு அரசாங்கத்தார் அவனை ஐரோப்பாவுக்கு அழைத்துக்கொண்டுவிட்டனர். அதனால் டூப்லே சற்று மனத்தளர்ச்சியடைந்தான். ஆயினும் கர்ஞடக நவாப்பின் சிநேகத்தினால் சமயத்திற்கு உதவி உண்டாகும் என நம்பி தைரியத்தை இழக்கவில்லை. அன்வருத்தீன், டூப்லேயின் கோறிக்கைப்படி, சென்னையிலிருந்த ஆங்கிலேய கவர்ணருக்கு ஒரு உத்தரவு அனுப்பினான். அஃதாவது நவாப்பின் எல்லைக்குட்பட்ட இடங்களிலிருந்தும் பிரஞ்சுக்காரர்களைத் தொந்தரவு செய்யக்கூடாதென்பதே. ஆனால் சென்னை கவர்னர் தனக்கு இங்கிலாந்தினின்று உத்தரவுகிடைத்திருந்தமையால் பிரஞ்சுக்காரர்கள் எவ்விடத்திலிருந்தாலும் எதிர்க்கப்படுவார்கள் என்று பதிலளித்தான். அதைக்கேட்ட நவாப்பு தன்னுடைய உத்தரவை மீறி நடந்தவர்கள் ஆங்கிலேயராயினும் பிரஞ்சுக்காரர்களாயினும் தண்டிக்கப்படுவார்களென மீண்டும் உத்தரவு பிறப்பித்தான்.

அவ்வாறு அன்வருத்தீன் செய்ததன் பயன் ஆங்கிலேயர்கள் புதுச்சேரியைத் தாக்காமல் ஓய்ந்து நின்றுவிட்டனர். ஆயினும் டூப்லேக்குக்கிடைத்திருந்த நவாப்பின் உதவியைக்கண்டு ஆங்கிலேயர் பொருமை கொண்டனர். டூப்லேயும் எவ்வாருயினும் ஆங்கிலேயர்களை இந்நாட்டைவிட்டே துரத்திவிடவேண்டும் என்ற அவா கொண்டிருந்தான்.

அதேகாலத்தில் (1746) டூப்லேயிக்கு பிரான்சிலிருந்து யுத்தசகாயம் கிடைத்தது. அதனுல் உற்சாக

மடைந்து யுத்தத்திற்குத் தயாராய்விட்டான். அதுமுதல் 1761 வரை ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் விடாமல் இந்நாட்டில் போர்கள் நடந்தன. அவைகளைச் சுருக்கிக் கூறினும் சில புஸ்தகங்கள் தேவையாயிருக்கும். ஆதலால் அந்த யுத்தங்களை மூன்று பகுதிகளாய்ப் பாகுபாடுசெய்து முக்கியமான விஷயங்களைமட்டில் எடுத்துக் காட்டி ஆங்கிலேயர்கள் பிரஞ்சுக்காரர்களைத் துரத்திவிட்ட கதையைக் கூறுவாம். மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று பகுதிகளாவன :—

(1) ஐரோப்பாவில் ஆஸ்டிரியா யுத்தமுடிவு 1748.

(2) தென்னாட்டில் புதுச்சேரிசமாதானம்வரை 1754.

(3) ஐரோப்பாவில் "ஏழாண்டுயுத்த" முடிவு 1763.

முதல் பகுதியில் ஆங்கிலர்கள் புதுச்சேரியையும் பிரஞ்சுக்காரர்கள் சென்னையையும் பிடிப்பதையே முக்கிய நோக்கமாய்க்கொண்டு அவரவர்களுடைய யுத்த சாமர்த்தியங்களைக்காட்டினார்கள். டூப்லேயின் புத்திவன்மையினால் பிரஞ்சுக்காரர்களுக்குத் தான் அதிக ஜயம் ஏற்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் 1748-ல் ஐலாஷாபல்(Aix-la-Chapelle) என்கிற இடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைக்கிணங்க இக்கண்டத்திலும் சமாதானம் உத்தரவிடப்பட்டது. அதாவது யுத்தத்திற்கு முன் அந்த இரு இனத்தாரும் எந்த நிலைமையிலிருந்தனரோ அவ்வாறே மீண்டும் நிற்கவேண்டியதாயிற்று. ஆனால் நமது தென்னாட்டில் வியாபாரஞ்செய்த மேதாவிகளுக்கு அது இஷ்டமில்லை. இருதரத்தாரும் ஏதாவது சாக்குப்போக்குகளை முன்னிட்டு யுத்தஞ் செய்யத் தயாராய் இருந்தனர். ஏனெனின் ஒற்றுமையற்ற சுவதேசிகளை வஞ்சித்து ஐசுவரியம்பெறுவது சுலபமாயிருந்தது.

தென்னாட்டில் அக்காலத்தில் அரசுபுரிந்த சிற்றரசர்களைச் சூத்திரப்பாவைகளைப்போல் ஆட்டுந்திறமை வாய்ந்த மேனாட்டு வியாபாரச் சங்கத்தாருக்குச் சுவையான இரைகள் கிடைத்தன. சில பக்கங்களுக்கு முன்குறிப்பிடப் பட்ட மஹாராஷ்டிரர்களும் நவாப்புகளும் இருந்தகாலத்தில் கலகங்களுக்குக்காரணங்கள் தேடவேண்டியதில்லை. தஞ்சாவூர் அரசின் பட்டத்திற்குப் போட்டி உண்டானதை உதாகரணமாய் எடுத்துக்கொள்வாம்.

ஸாஹூஜி, பிரதாபஸிங் ஆகிய இரு சகோதரர்கள் தோன்றிய காலத்தில் பிரதாபஸிங் சிங்காசனத்தைச் சுலபமாய்க் கைப்பற்றினன். ஸாஹூஜி ஆங்கிலேயருக்குச் சரணாகதி செய்தனன். ஆங்கிலர்களுக்கும் கீழக்கடலோரத்தில் தஞ்சை ஸமஸ்தானத்தைச் சேர்ந்த தேவிகோட்டை என்னும் துறைமுகப்பட்டினம் அவசியமாயிருந்தமையால் ஸாஹூஜிக்கு அவர்கள் முகமன் கூறினார்கள். பிரதாபஸிங்கைத் தள்ளிவிடவேண்டியதற்கு ஆங்கிலச்சைனியங்கள் தஞ்சையில் தோன்றின. அவைகளைக்கண்ட பிரதாபஸிங் ஆங்கிலருக்கு வேண்டிய பட்டினத்தை அதாவது தேவிகோட்டையைத்தானே கொடுப்பதாய் ஒப்புக்கொண்டான். உடனே ஸாஹூஜியின் கதி அதோகதியாயிற்று. ஆங்கிலர் பிரதாபஸிங்தான் சரியான அரசன் என்றும் ஸாஹூஜியைக் கைதி செய்யவேண்டுமென்றும் தீர்மானம் செய்துவிட்டனர். சுவதேச அரசர்களின் வியவகாரங்களில் நுழைந்துகொண்ட அக்காலத்திய ஆங்கிலர்களுக்கு நியாயம் சுய நலத்திற்குப் பிறகு தான் வேண்டற்பாற்று.

இம்மாதிரியே பிரஞ்சுக்காரர்களும் தங்களுக்கு ஒரு ஸ்வதேச அரசனைத்தேடிக் கொண்டிருந்தனர். ஏற்கனவே குறிப்பிடப்பட்ட நிஜாம்ராஜ்யமும் கர்னாடக

நவாப்பும் அவர்களுக்கு இடங்கொடுக்கலாயினர். நிஜாம் அரசன் ஒருவன் 1748-ல் இறந்தான். அப்பட்டத்துக்கு இரண்டு பேர்கள் போட்டியிட்டனர். அவ்வாறே கர்னாடக நவாப் பதவிக்கும் போட்டிகள் ஏற்பட்டன. பிரஞ்சுக்காரர்கள் தலையிட்டுக்கொண்டனர். அவர்களுக்கு அதிபதியான டூப்லே வெகு திறமையுடன் தாமே ஒரு நவாப்போல் விளங்கலானான். அக்காலத்தில் அவனுடைய ஊக்கத்தைத் தடுப்பதற்குத் தகுதியான க்ளைவ் என்கிற ஒரு ஆங்கில மேதாவி கிளம்பலானான். அவ்விருவருக்கும் நடந்த போராட்டங்கள் இரண்டாவது பகுதிக்குள்பட்டவை. அவைகளுள் ஆற்காடு முற்றுகை என்பது ஆங்கிலருக்கு இறவாப்புகழையளித்தது. அதனால் பிரஞ்சு துரைத்தனத்தாரால் டூப்லே அவமானப்படுத்தப்பட்டான். க்ளைவ் ஆங்கிலரால் கௌரவப்படுத்தப்பட்டான்.

மீண்டும் 1756-ல் "ஏழாண்டு யுத்தம்" என்பதொன்று ஐரோப்பாவில் தோன்றிற்று. அதைப்பற்றி கர்னாடகத்திலும் யுத்தம் தொடங்கிற்று. ஆங்கிலர்களும் பிரஞ்சுக்காரர்களும் ஒருவர் ஸ்தலங்களை மற்றொருவர் கைப்பற்றலாயினர். பிரஞ்சுக்காரர்களுள் தலைவனான லாலியும் ஆங்கிலர்களுக்குள் தலைவர்களான க்ளைவ், கூட், ஆகியவர்களும் அவரவர்கள் திறமையைக் காட்டினார்கள். வந்தவாசியில், கூட் என்பவனால் நடத்தப்பட்ட யுத்தம் ஆங்கிலர்களால் புகழப்படுகின்றது. ஆனால் ஐரோப்பாவில் 1763-ல் பாரீஸில் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. அதனால் அவ்விடத்தில் யுத்தம் முடிந்தது. ஆகையால் இவ்விடத்திலும் யுத்தம் நிறுத்தப்பட்டது. முடிவாய்க் கூறக்கூடியது யாதெனின் பிரஞ்சுக்காரர்கள் அதன் பிறகு இந்நாட்டில் தலை எடுக்கொணாமல் ஒடுக்கப்பட்டனர்.

ஆங்கிலர்கள் தென்னுட்டில் வேறு ஐரோப்பியர் போட்டியின்றி வாழத்தொடங்கினர். ஆயினும் பிரஞ்சுக்காரர்களின் முக்கியப்பட்டணங்கள் அவர்கள் வசமே நிற்கலாயின. இன்றைக்கும் புதுச்சேரி, கரைக்கால், ஏனும், மாஹி, சந்திரநாகூர் ஆகிய ஐந்து ஸ்தலங்கள் அவர்களுடைய ஆட்சியில் தாம் இன்றைக்கும் நிற்கின்றன. அவ்விடங்கள் ஆங்கிலருக்கு இடை இடையில் இடுக்கண்களாய் இருக்கின்றன. அவைகள் முக்கியமாய் குற்றவாளிகளுக்கும் கடன்காரர்களுக்கும் புகலிடங்களாய் நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அக்காலத்தில் ஆங்கிலர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட போட்டி உலகில் வேறிடங்களிலும் பரவியிருந்தது. அவ்வவ்விடங்களிலும் பிரஞ்சுக்காரர்களின் கதி ஒரே தோல்வியாகத் தான் முடிந்தது. பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான கானடா (அமெரிக்கா) நாடும் அவர்களால் இழக்கப்பட்டது. இம்மாதிரியான தோல்விகளுக்குக் காரணங்கள் பல கூறப்படுவதுண்டு. அவைகளைப்பற்றி நாம் வியசனப்படவேண்டுவதில்லை. ஆனுல் அன்னிய நாட்டார்களால் எதிர்க்கப்பட்டும் அடிமைகளாக்கப்பட்டும் ஸ்வராஜ்யத்தினின்றும் நீக்கப்பட்டும் நின்ற நம் நாட்டினர் கதிதான் வியசனிக்கத் தக்கது.

நிற்க; இந்நாட்டில் ஆங்கில வர்த்தகர்களின் நடவடிக்கைகளைப் பற்றி நாம் பேசுங்காலங்களில் எல்லாம், வாசகர்களுக்கு ஒரு முன் எச்சரிக்கை இத்தருணத்திலேயே பொதுவாய்க் கூறுவது அவசியமாகும். வியாபாரம், எந்நாட்டிலாயினும், பொதுவாய் நோக்கப் பெறுமளவில், அது பெரும்பாலும் வஞ்சகத்தைப் பின் பற்றிய தொழிலாதலால் அதை நடாத்தியவர்களின் வரலாற்றைக் கொண்டு அவர் இனத்தோரையே நாம் வெறுக்கக்கூடாது. ஏனெனின் இனப்

பொறுமை பாரதமக்களுக்கு இழிவைத் தருவதாகும். மேலும் வியாபாரத்தில் ஏமாற்றப்பட்டவர் அறிவிலிகள் எனக் கருதப்படுவது உலக வழக்கு. அவ்வாறு நம் முன்னோர்களை நாம் அக்குற்றத்திற்கு ஆளாக்குவதும் உசிதமன்று. ஏனெனின் முன்னோரைப் பழித்தல் மக்களுக் கழகன்று.

மீண்டும் சரித்திரத்தில் உண்மையையே உரைப்பது ஆசிரியர்களின் கடனாதலால் ஆங்கிலர்களும் ஆங்கில அரசாங்கத்தோரும் அவர்கள் முன்னோரின் வஞ்சகங்களை வெளிப்படுத்துவது ராஜத்துரோகம் என்று குற்றஞ்சாட்டுவது தவறாகும். ஏனெனின் அவர்கள் இந்நாட்டிற்கு வந்த காலத்தில் நன்னெறியின் விதிகளை நன்றாய் உணர்ந்தனரில்லை. ஆயினும் அக்காலத்தில் குற்றங்குறைகளைக் காட்டாமல் விடுவது உண்மைக்கு விரோதமாகும். தவிர தற்காலத்திய ஸ்வராஜ்யப் போருக்குரிய ஆயுதங்களுள் ஆங்கில வியாபாரிகள் செய்த அக்கிரமங்களும் உதவிகளாகும் என்பதை அடிக்கடி இனி எடுத்துரைப்போம்.

ஐந்தாவது சருக்கம்.

"இருட்டறை" வழி.

நமது பரதகண்டத்தின் தென்னாட்டில் பிரஞ்சுக்காரர்கள் ஜயம் பெற்று நின்ற சமயத்தில் (1756) வடநாட்டில் (ஆரியாவர்த்தத்தில்) வங்காளத்தில் ஒரு பெரிய குழப்பம் ஆங்கிலேயர்களுக்குள் தோன்றிற்று. அஃதாவது கல்கத்தா இருட்டறைச் சம்பவம் (The Black Hole of Calcutta) என்பதே. அதற்குக்காரணம் வங்காளத்திய நவாப்புகளுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சில ஆண்டுக்களாய் நடந்து வந்த விரோதச் செயல்களாகும்.

வங்காளத்தில் தனி அரசு செலுத்திவந்த அலிவர்டிகான் மேனாட்டு வியாபாரிகளின் உட்கருத்து வியாபாரமல்ல என்று துணிவு கொண்டிருந்தான். ஏனெனின் அவர்கள் தங்களைக்காப்பாற்றிக் கொள்வதற்காகக் கட்டிக்கொண்ட கோட்டைகளும் அதில்வைக்கப்பட்டிருந்த தளவாடங்களும் நியாயவிரோதம் என்பது அந்நவாப்பின் தீர்மானம். அதற்குச் சாட்சியமாய்த் தென்னாட்டில் நடந்த விஷயங்களைக்கவனித்துக் கொண்டிருந்தான். ஆதலால் மேனாட்டார்கள் கோட்டைகட்டுவதையும் மராமத்து செய்வதையும் அடிக்கடி தடுத்துக்கொண்டிருந்தான்.

அவன் இறப்பதற்கு முந்தி தன் பேரப்பிள்ளையான ஸூராஜ் உத்தௌலா அடுத்த நவாப் என்று பிரசுரஞ் செய்ததுமன்றி இறக்குமுன் அவனுக்கு நல்லபுத்திகூறு நிற்கையில் "ஐரோப்பியர்கள் நம் நாட்டைக்கண்ணோக்கி நிற்கின்றனர் என்று ஞாபகம் வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு "ஆங்கிலேயர்கள் பலிஷ்டர்கள்.....அவர்கள் கோட்டைகட்டிக்கொண்டு சிப்பாய்களைவைத்துக் கொண்டிருப்பதற்கு இடங்கொடாதே. இடங்கொடுத்தால் நாடு நம்முடையதல்ல" என்று கட்டளையிட்டான்.

மேலும் வங்காளத்தில் முஸ்லிம் அல்லாதவர்களே வியாபாரிகளாகவும் சாமான்களை உற்பத்தி செய்தவர்களாயுமிருந்தமையால் ஆங்கிலேயர்கள் வங்காள மக்களைச் சுலபமாய் சிநேகம்செய்து கொண்டனர். வங்காளிகளும் இஸ்லாம் மதத்துவேஷம் பாராட்டி அவர்களைவிட்டு விலகிவிடவேண்டு மென்று எண்ணி விலங்கைவிட்டுத் தொழில் கட்டையில் மாட்டிக் கொண்டதைப்போல் கிரிஸ்தவ வியாபாரிகளுக்குச் சகாயம் புரியலாயினர். கிரிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்த உட்பகை அதிகரித்துக்

கொண்டிருந்தது. ஔரங்கஜீப்பின் இஸ்லாம் மதப்பற்றை யறிந்த தூர்க்கிசுல்தான் அவனுக்குவிடுத்த கடிதம் ஒன்றில் இனி கிரிஸ்தவர்களுக்குப் பொட்டிலுப்பு கொடுக்கக்கூடா தென்று கேட்டுக்கொண்டான். ஏனெனின் அதைக் கொண்டே கிரிஸ்தவர்கள் முஸ்லிம்களைக் கொலுத்தினார் களாம். அவ்வாறே ஔரங்கஜீப் செய்ததனால் பாடலி புரத்தில் பொட்டிலுப்பு வியாபாரம் சுவல்பகாலம் நின்று விட்டது. இது ஆங்கிலேயர்களுக்கு அழுக்காறு விளைத்தது.

நிற்க; மேனாட்டு வியாபாரிகளுள் சிலரும் வியாபாரசங் கத்தின் உத்தியோகஸ்தர்களுள் சிலரும் இந்நாட்டை விளை யாட்டாய்ப் பிடித்துக்கொள்ளலாம் என்று கூறுவதுடன் நிற்காமல் ஐரோப்பாவில் வாழ்ந்திருந்த முக்கியமான அர சர்களுக்கும் கடிதங்கள் வரைந்து கொண்டிருப்பது வழக்கம். 1746-ல் கர்னல் மில் என்பவன் எழுதிய ஒருகடிதத்தைக் கவனிப்போமாக. "மொகலாயர் ராஜ்யத்தில் தங்கமும் வெள்ளியும் குவிந்து கிடக்கின்றன. அந்த ராஜ்யம் பல வீனமுற்றது; தற்காப்பு முறையற்றது. கப்பற்படை பெற்ற ஐரோப்பிய மன்னனொருவன் வங்காளத்தைத்தாக் கிப் பிடித்துக்கொள்ளாதது ஒரு விந்தையாகும். ப்ரெஜில், பெரு, இரண்டு இடங்களிலுள்ள சுரங்கங்களுக்கு யேற் பட்ட ஐசுவரியத்தை ஒரே தாக்கில் பெற்றுவிடலாம்.

"மொகலாயர்களுடைய அரசு முறை தவறானது. அவர்களுடைய நிலப்படை பலஹீனமானது. அவர் களுக்குக் கப்பற்படையே கிடையாது. ராஜ்யத்தில் சதா கலகம்தான். அவர்களுடைய துறைமுகப்பட்டினங்களும் ஆறுகளும் அன்னிய நாட்டார்களுக்கு முகமஞ் கூறுகின் றன. நாடு ஜயிக்கப்படலாம், அல்லது அமெரிக்காவிலுள்ள நிர்வாணிகளான இந்தியர்களை ஸ்பானிஷ் தேசத்தார்

எவ்வளவு சுலபமாய் அடக்கிவிட்டனரோ அவ்வளவு சுலபமாய் கப்பங்கட்டும்படி ஆக்கிவிடலாம்.

"மொகலாயர் ராஜ்யத்தினின்றும் வங்காளத்தையும் பீஹாரையும் ஓரிஸ்ஸாவையும் அலிவர்டிகான் என்ற கலகக்காரன் பிரித்துத் தனிமையாக்கிவிட்டான். முப்பதாயிரம் பவுன் அவனது கஜானாவில் தங்கி யிருக்கின்றது. அவனது வருஷவாரிவருவாய் சுமார் இருபது லக்ஷம் பவுன்களாகும். இந்த மாகாணங்கள் சமுத்திரத்தின் வழியாய்ப் பிடிக்கப்படகூடியவை. மூன்று கப்பல்களும் ஆயிரத்து ஐந்நூறு அல்லது இரண்டாயிரம் ஆள்களும் போதும். கொள்ளை யடிப்பதற்காகவும் வியாபாரத்தை விருத்தி செய்வதற்காகவும் பிரிடிஷார்கள் ஒற்றுமைப்பார்கள். கிழிந்தியா வர்த்தக சங்கத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டாம். ஒரு வர்த்தக சங்கமும் ரகசியத்தைக் காப்பாற்றாது. மேலும் இங்கிலீஷ் கம்பெனி மிகவும் பிளவு பட்டிருக்கின்றமையால் ஒருவிதமான தீர்மானத்திற்கும் வராது."

இக்கடிதத்தினால் மேனாட்டார்களின் பொது நோக்கம் வெளியாகின்றது. ஆயினும் இங்கிலாந்திலுள்ள கிழிந்திய வர்த்த சங்கத்தாரின் நிர்வாக சபையார் "நவாப்பின் உதவியைக்கொண்டு வியாபாரஸ்தலங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்" என்றும் "நமது நோக்கம் வர்த்தகலாபந்தான்" என்றும் அடிக்கடி உத்தரவுகளை அனுப்பிகொண்டிருந்தாலும் இந்நாட்டிலிருந்த ஆங்கிலேயர்கள் கோட்டைக் கட்டிக்கொள்வதை நிறுத்தவில்லை. சுவாமி வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடுக்காது. ஆங்கிலவர்த்தக உத்தியோகஸ்தர்கள் பரதகண்டத்தை ராகுபோல் விழுங்கிவிடுவதிலேயே நோக்க

முடையவர்களாயிருந்தனர். சண்டைகளையே எதிர்பார்த்து நின்றார். ஏனெனில் அக்காலங்களில்தான் அவர்கள் கொள்ளையடிக்க முடியும்.

அலிவர்டிகான் இறந்த பிறகு ஸுராஜ் உத்தௌலா ஆங்கிலேயர்களைத் தண்டித்து நாட்டைவிட்டே ஓடும்படி செய்யவேண்டும் என்பதற்கு மூன்று காரணங்கள் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறான். "ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் கோட்டை கட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்குக் கொடுத்திருக்கும் ஸ்ரீமுகங்களை மீறி நடப்பதனால் ராஜ்யத்திற்கு நஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் முஸ்லிம் அரசுக்கு விரோதிகளான ராஜதுரோகிகளுக்கு அடைக்கலம் கொடுக்கின்றனர்."

அன்னிய நாட்டார்கள் தன்னுடைய ராஜ்யத்திற்குள் பழைய கோட்டைகளை ரிபேர்கள் செய்யக் கூடாதென்றும் புதுக்கோட்டைகளைக் கட்டக் கூடாதென்றும் ஸுராஜ் உத்தௌலா செய்தி அனுப்பியதற்குத் தாங்கள் பிரஞ்சுக்காரர்களுடைய யுத்தத்தில் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கோட்டைகள் கட்டிக்கொள்ளவேண்டிய தவசியமென்றும் ஆங்கிலேயர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பிரஞ்சுக்காரர்கள் உத்தரவைக் கீழ்ப்படிந்தனர் என்று ஜீன்லா என்கிற சரித்திராசிரியரால் தெரிகின்றது. மீண்டும் அலிவர்டிகானுக்கு உறவினனான ஷௌகத்ஜங் என்பவன், தான்தான் சரியான வாரிசு என்றும் ஸுராஜ் உத்தௌலா அக்கிரமாய் நவாப்பாய் செய்யப்பட்டனன் என்றும் டெல்ஹி தர்ப்பாரில் எடுத்துக்காட்டி ஸ்ரீமுகம் ஒன்றைப் பெற்று ஆங்கிலேயர்களுடைய உதவியை எதிர்பார்த்து நின்றான். அத்தருணம் ஸுராஜ் உத்தௌலா திடீரென அவனை எதிர்த்துத் தாக்கினபோழ்து ஷௌகத்

ஜங்அவனுக்குப்பணிவுசெய்து உபசாரமளித்து வெகுமானங்களைக்கொடுத்து விட்டுத் தனக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இருந்த சம்பந்தத்தை வெளிக்காட்டிவிட்டான்.

இன்னும் ராஜா வல்லபன் என்கிற ஒரு பிரபுவுக்கும் ஸூராஜ் உத்தௌலாவுக்கும் விரோதம் நேரிட்டவுடன் ராஜாவானவன் தன் குமாரன் கிருஷ்ணதாஸ் என்பவனைத் தன்னுடைய சாமான் வகைராக்களுடன் கல்கத்தாவுக்கு அனுப்பினான். அவ்விடத்தில் அமீர் சந்த் என்கிற பெரிய பஞ்சாப் வியாபாரியின் வீட்டில் அவன் தங்கியிருந்தான். அது ஆங்கிலேயர்களுடைய சம்மதம் பெற்றதாயிருந்தது. ஆதலால் அவனையும் அவன் சொத்தையும் தம்மிடம் ஒப்புவிக்கும்படி வங்காள நவாப் கேட்டதை ஆங்கிலேயர்கள் மறுத்து விட்டனர். இவ்விஷயமாய் நாம் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அஃதாவது அடைக்கலம் புகுந்தவனைக் காட்டிக்கொடுப்பது தர்மமன்று என்பதுதான். ஆனால் ஆங்கிலேயர்கள் சிலவாரங்களுக்குள்ளேயே அவனையும் அமீர் சந்தையும் கைது செய்துவிட்டனர் என்பதை யோசித்தால் அது உண்மையான தர்மமா என்று சந்தேகம் உண்டாகின்றது.

ஆயினும் ஆங்கிலேய வியாபாரிகளுடன் சண்டையிட்டுக்கொள்ளக் கூடாதென்று சமாதான முறையுடன் அரசுபுரியவேண்டிக் காஸிம்பஜாரிலுள்ள வாட்ஸ் என்கிற ஆங்கில வியாபார அதிகாரியைக் கேட்டுக்கொண்டான். ஆனால் இச்சமாதான முறையைக் கல்கத்தாவுக்கு அவன் தெரிவிக்கவில்லையாம். ஆதலால் வங்காள நவாப் காஸிம்பஜாரிலுள்ள ஆங்கிலக்கோட்டைகளை எதிர்த்து வாட்ஸை ஜயித்தான். அவனையும் இதரர்களையும் கைதிசெய்தான். ஆயினும் அவன் யாதொரு அக்கிரமும் செய்யவில்லை.

அதற்குமேல் கல்கத்தாவை நோக்கிச் சென்றான். இடையில் டாண என்கிற ஆங்கிலக்கோட்டையை எதிர்த்துத்தாக்கிப்பிடித்துக் கொண்டான்.

ஆறாவது சருக்கம்.

" இருட்டறை " வெளிச்சம்.

ஸூராஜ் உத்தௌலா கல்கத்தாவையடைந்ததும் மறுபடியும் சமாதான முறையை ஆரம்பித்தனன். அது முடியவில்லை. யுத்தம் ஆரம்பித்தது. நவாப்பின் சைன்னியத்தில் இருந்த ஐரோப்பியர்கள் முஸ்லிம் எஜமானர்களை விட்டுவிடும்படி கிறிஸ்தவமதத்தின் கௌரவத்தை முன்னிட்டுப் பாதிரி குருமார்களால் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஆனால் அவர்கள் தப்பித்துஓட வழியில்லாம லிருந்தது.

கல்கத்தா நகரிலுண்டாயிருந்த குழப்பத்திற்குக் கணக்கில்லை. சுவதேசிகளிடத்தில் ஆங்கிலேயர்களுக்கு நம்பிக்கையில்லை. எத்தருணத்தில் எந்த வங்காளி என்னமோசம் செய்துவிடுவானோ என்று பயந்து ஆங்கிலேயர்கள் தங்களுக்கு உபகாரஞ் செய்த அமீர் சந்தையே கைதுசெய்துவிட்டதுமன்றி அவனிடத்தில் அடைக்கலம் புகுந்திருந்த கிருஷ்ண தாஸையும் சிறைப்படுத்திவிட்டனர். இதையே முந்தி குறிப்பிட்டுக்காட்டினோம். ஈதுடன் நிற்காமல் அந்த வீட்டைச்சுற்றி சிப்பாய் பாரா ஏற்பட்டிருந்ததைக்கண்டு பயந்த ஒரு எஜமான விசுவாசமுள்ள சேவகன் அந்தப்புறத்தில் நுழைந்து ஸ்திரீகளின் கௌரவத்தையும் மானத்தையும் கற்பையும் காப்பாற்றுவதற்காக அவர்களையெல்லாம் கொன்றுவிட்டுத் தானும் தன்னைக்குத்திக் கொண்டான். ஏனெனின் சிப்பாய் பாராவென்றால் ஸ்திரீகளுடைய கண்ணியம் காப்பாற்றப்படுவது சாத்தியமல்ல.

சிப்பாய்கள் என்றால் மிருகங்களைப்போல் காமவெறியும் குடிவெறியும் கொண்டவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

நிற்க; யுத்தம் ஆரம்பித்தது முதல் நவாப்பின் சைன்னியத்திலிருந்த ஐரோப்பியர்கள் தம் கடமையைப் புரியவில்லை. ஒப்புக்குத்தான் சிப்பாய்கள் நின்றனர். சுவதேச சிப்பாய்கள் உயிரைத்துறந்தனர். முடிவில் நவாப் ஜயம் பெற்றனன். ஆங்கிலேயர்கள் முறியடிக்கப்பட்டனர். அதன்பின்னர் சமாதானவார்த்தை கிளம்பிற்று. அதன் பொருட்டு அமீர் சந்தை அனுப்ப உத்தேசித்தனர். ஆனால் சிறையிலிருப்பது மேலென்றும் ஆங்கிலர்களுக்கு உபகாரம் செய்வது உபயோகமில்லை என்றும் அவன் கூறிவிட்டான். ஆங்கிலேயர்களுடையகதி கஷ்ட நிலைமையிலிருந்தது. ஓடக்கூடியவர்கள் ஓடினார்களாம். தங்கினவர்களுள் பலர் நவாப்பின் சிப்பாய்களால் துன்புற நடத்தப்பட்டனராம். அது நவாப்பினுடைய உத்தரவு என்று ஆங்கிலேய சரித்திராசியர்களால் வெளியாக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும் ஸுராஜ் உத்தெளலா தன் பாட்டியார் தாயார் ஆகிய இருவர்களுடைய சிபாரசினால் ஆங்கிலேயர்களை யாதொருவிதமான ஆபத்துக்கு உள் படுத்தவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறிருக்கையில் பிரசித்தி பெற்ற கல்கத்தா இருட்டறைச் சம்பவத்திற்கு இடம் எங்கே? அச்சம்பவத்தின் வரலாற்றை ஆராய்ச்சி செய்து இதற்கு விடையளிப்பது நம் கடமையாகும்.

ஆங்கிலேய சரித்திராசியர்களுள் பலர் ஸுராஜ் உத்தெளலாவைப் பற்றி எவ்வளவு கொடூரம் கூறக்கூடுமோ அவ்வளவும் செய்திருக்கின்றனர். சில சரித்திராசிரியர்களோ ஆங்கிலேயர்களுடைய குற்றங்களையும் கூறி நவாப்பின் கொடுமைகளையும் காட்டியிருக்கின்றனர். சென்ற சில

ஆண்டுகளாய்ச் செய்யப்பட்டுவரும் ஆராய்ச்சிகளினுல் அந்த நவாப் ராக்ஷஸனல்ல வென்றும் இருதரத்திலும் குற்றங் களிருந்தன வென்றும் ஏற்படுகின்றது. அல்லது ஒருகால் ஆங்கிலேயர்கள்பால்தான் குற்றங்கள் அதிகம் காணப் படுகின்றன என்று மேனுட்டார்களின் நூல்களைக் கொண்டே மேஜர் பாஸு என்பவர் அவருடைய "இந்தி யாவில் கிறிஸ்தவ ஆட்சியின் உற்பத்தி" என்கிற சரித்திரத்தில் செவ்வனே விளக்கியிருக்கின்றபடிதான் உண்மையிருக்குமோ என்று சந்தேகிக்க இடமிருக் கின்றது. ஏனெனின் நாகரிகம் பெற்ற நமது நூற் ருண்டில் நம் கண்ணுக்கெதிரில் நடந்த "மாப்பிளா ரயில்வே இருட்டறைப் படுகொலை" என்பதைப்பற்றி பல சரித்திரங்கள் காணப்படுகின்றன. இக்காலத்தில் உண்மை வெளியாவதற்கு வேண்டிய சௌகரியங்களிருக்கை யிலேயே மேற் கூறப்பட்ட விஷயத்தின் தத்துவம் அரசாங் கத்தாரால் ஒப்புக்கொள்ளப் படுகின்றதில்லை. ஆனுலோ கல்கத்தா இருட்டறைச் சம்பவம் சரித்திரவாயிலால் சிலா சாசனம் செய்யப்பட்டு விட்டது. அந்த சம்பவத்தைப் பற்றி ஏற்பட்டு வரும் தர்க்கங்கள் எக்காலத்தில் முடிவு பெறுமோ யாம் அறியோம். டாக்டர் போலாநாத் சந்திரா என்பவர் அந்த இருட்டறையின் அளவுகளைக் கொண்டும் அதிலடைக்கப்பட்டவர் சங்கியையைக் கொண்டும் யாதொரு சம்பவமும் நடந்திருக்க முடியாதென்கிருர். ஏனெனில் அந்த அறையின் நீளமும் அகலமும் உயரமும் அடைக்கப் பட்டவர்களின் கணக்கும் மாறிமாறிக் கூறப்பட்டிருப் பினும் குறைந்த எண்ணிக்கையும் அந்த அறையில் அடைக் கப்பட்டிருக்கமுடியாது என்பது அவர் கூற்று. வேருரு வர் கூறுவதாவது அக்காலத்தில் எத்துணையோ ஆங்கி

லேயர்களும் போர்த்துகீஸார்களும் அர்மீனியர்களும் இருந்திருக்கையில் ஹால்வல் என்கிற ஆங்கிலர் ஒருவர் மாத்திரம் ஏன் இந்த சம்பவத்தைப்பற்றி எழுதியிருக்க வேண்டும் என்பதே. இந்த ஹால்வல் என்பவரின் வார்த்தைகள் நம்பத்தக்கவையல்ல என்று கனம் பாஸு அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அதற்குக் காரணங் களை அவர் நூலில் விவரித்திருக்கின்றனர். அவைகளுள் முக்கியமானதை ஈண்டெடுத்துரைப்போம்.

ஸுராஜ் உத்தௌலாவுக்கு அடுத்தபடியாய் நவாப் பதவியில் இருத்தப்பட்ட மீர்ஜாபிரைப் பற்றி இந்த ஹால் வல் இங்கிலாந்துக்கு ஒரு கடிதம் எழுதநேரிட்டது. 1760-ல் அலிவர்டிகான், ஷஹமத்ஜப், ஸுராஜ் உத்தௌலா ஆகிய மூவர்களுடைய வம்சத்தவர்கள் ஐந்து பேர்களும் (ஆண் களும் பெண்களும் குழந்தைகளும் கூடியவர்கள்), இன்னும் வேறு 20 ஸ்திரீகளும் ஒரே நிமிஷத்தில் நள்ளிரவில் கொலை செய்யப்பட்டு ஒரு நதியில் தள்ளி விடப்பட்டனர் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. 1765-ல் அதே விஷயத்தைப்பற்றி க்ளேவ் பிரபு பின் வருமாறு எழுதி யுள்ளார் :—

“ஹால்வல் என்கிறவன் எழுதியிருப்பது முற்றிலும் பொய்யாகும். கொல்லப்பட்டவர்களாய்ச் சொல்லப்படு கின்றவர்களுள் இரண்டு பெயர்கள் தவிர பாக்கி மனிதர்கள் இப்பொழுதும் உயிருடன் இருக்கிறார்கள்.” க்ளேவ் என்பவரைப் பற்றியும் சந்தேகப்படக் கூடிய விருத்தாந்தங்கள் இனிக்காணப்படுமாதலால் அக்காலத்திய ஆங்கில வியாபாரி களுடைய நடவடிக்கைகளே நம்பத்தக்கவைகளா என்று நமக்குச் சந்தேகம் தோன்றுகின்றது.

ஸையத்குலாம் ஹுஸ்ஸெயின் என்கிற ஒரு சரித்திராசிரியர் வரைந்திருக்கும் “ஸையர் உல்முத்தகரின்” என்கிற நூலிலாவது ஆங்கில வியாபாரிகளால் நடத்தப்பட்ட வியவகார தஸ்தாவேஜிகளிலாவது ஸுராஜ் உத்தௌலாவைப் பற்றி இங்கிலாந்துக்கு விடுத்த பல இதர கடிதங்களிலாவது அச்சம்பவத்தைப்பற்றி ஒரு வரிகூட ஏன் காணப்படுகின்றதில்லை என்று சிலர் வினவுகின்றனர். அக்காலத்தில் வசித்த ஆங்கில சரித்திராசிரியரான ராபர்டு ஆர்மே என்பவரும் மேற்படி சம்பவத்தைப்பற்றிய விவரங்கள் விஷயமாய் மௌனம் சாதிக்கின்றனர். ஏன்? அல்லது அவருடைய சிபார்சினால் கல்கத்தாவுக்குச் சென்ற க்ளைவ் பிரபுவும் அவரால் ஏவப்பட்டபடி அச்சம்பவத்தில் சம்மந்தப்பட்டவர்களை ஏன் தண்டிக்கவில்லை என்று கேட்கின்றார் நம்முடைய பாஸு.

எல்லா வற்றிற்கும் மேலாய்க் குறிப்பிடத்தக்கது ஒன்று. அந்த இருட்டறைச் சம்பவம் உண்மையாயினும் கல்கத்தாவில் கைதி செய்யப்பட்டவர்கள் ஸுராஜ் உத்தௌலாவின் முன் நிருத்தப்பட்டபொழுது அவர்களிடம் கருணை பாராட்டி ஹால்வலின் கட்டுகளை யவிழ்த்துவிட உத்தரவளித்தது மன்றி அவனையும் இதரர்களையும் இரவில் பந்தோபஸ்தில் வைப்பதற்கு இடந்தேடும்படி ஏற்பாடு செய்தான். அதற்குத் தக்க வேறு இடங் கிடைக்க வில்லையாம். ஆங்கிலேயர்களால் உபயோகப்படுத்தப்பட்ட அந்த இருட்டறைதான் கிடைத்ததாம். அஃதுண்மையாயின் “தன்வினை தன்னைச்சுடும்” என்பது இயற்கைப்பாடம். அதற்கு யார் என்னசெய்யக்கூடும்?

ஸுராஜ் உத்தௌலா கல்கத்தாவில் ஒரு தர்பார் நடத்தி அதற்கு அலிநகர் என்று நாமம் சூட்டித் தன் தலை

நகருக்குப் புறப்பட்டான். அதற்குமுன் ஸுராஜ் தௌலா மனிக்சந்த் என்பவனைக் கல்கத்தாவுக்குத் தலைவனாய் நியமித்தான்.

அவ்விடத்திலிருந்து தப்பித்து ஓடியிருந்த ஆங்கில வியாபாரிகள் சென்னைக்குப் புறப்பட்டுப் போய்விடத் தயாராய் இருந்தனர். கப்பல் பிரயாணஞ் செய்யவேண்டிய காற்று சௌகரியம் ஏற்பட்டவுடன் அவர்கள் போகும்வரை அவர்களுக்கு வேண்டிய சௌகரியஞ் செய்யும்படி நவாப் கட்டளை யிட்டிருந்ததாய் ரேக் என்கிற ஒரு ஆங்கிலேயர் வசனத்தினாலேயே ஏற்படுகின்றது. இவ்வாறு சௌகரியம் பெற்றிருந்த வியாபாரிகள் அவ்விடத்தில் சும்மாயிராமல் தாங்கள் அவ்விடத்திலேயே தங்கி நிற்கும்படியான சூழ்ச்சிகளைத் தேடிக்கொண்டிருந்தனர் என்று வேறொரு ஆங்கிலேயர், மேஜர் கில்பாட்ரிக், என்பவருடைய ஒரு கடிதத்தினால் நமக்குத் தெரிகின்றது. மேலும் தமக்கு ஏற்பட்ட தோல்வியைச் சென்னைக்குத் தெரிவித்துக் கப்பற்படை யனுப்பும்படி கேட்டுக்கொண்டனர். அதனால் க்ளைவ் என்பவன் தரை மார்க்கமாயும் வாட்ஸன் என்பவன் கடல் மார்க்கமாயும் புறப்பட்டனர்.

ஏழாவது சருக்கம்.

குடியைக்கெடுப்பது கோடரிக் காம்பே.

1756-வது ஆண்டின் இறுதியில் கல்கத்தாவுக்குச் சென்றவுடன் க்ளைவ் ராஜா மனிக்சந்துக்கு ஒரு கடிதம் எழுதினான். ஆங்கிலர்களுக்கு நவாப் விளைத்த இடையூறுகளுக்குச் சமாதானங்கோருவதைப் போல் அதில் காணப்பட்டிருந்தது. ஆயினும் ஆங்கிலேயர்களுடைய சைன்னிய பலத்தையும் அவர்களால் மொகல் ராஜ்யத்துக்கு உண்டா

யிருந்த வியாபார சௌகரியங்களையும் கவனித்து யுத்தம் புரியாமல் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்று க்ளைவ் குறிப்பிட்டிருந்தான். தவிரவும் தான் தென்னாட்டில் அடைந்த ஜயமும் நவாப் வடநாட்டில் அடைந்த ஜயமும் சமானமானவைகளாயினும் தானும் நவாப்பும் எதிர்த்து நிற்கில் தன்னுடைய பலமே பெரியதாய் நிற்கும் என்று பொருள்தரக்கூடிய வசனங்களால் சிங்கார வார்த்தைகள் ஆடியிருந்தான்.

நிற்க; க்ளைவ் நவாப்பின் தர்பாரிலுள்ள உத்தியோகஸ்தர்களுள் பலரையும் தன் வசம் செய்துகொள்ள வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்துகொண்டிருந்தான். அவைகளின் பயனாய் முதல் முதல் கல்கத்தாவுக்கு அதிகாரியான ராஜா மனிக்சந்த் பஜ்பஜ் என்கிற முக்கியமான கோட்டையை ஆங்கிலேயர்கள் தாக்கினவுடன் தனக்குப் பல சௌகரியங்களிருந்த போதிலும், அதை விட்டு விட்டுத் தன் சைன்னியங்களுடன் ஓடிவிட்டான். இது ஒரு பெரிய துரதிர்ஷ்டமான சம்பவமாயிற்று. ஆதலால் நவாப் ஸூராஜ் சமாதானத்திற்குத் தயாராயிருந்தான். அதைக் கண்ட ஆங்கிலேயர்கள் பின்வருமாறு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமென்றனர். “ஆங்கிலேயர்கள் நஷ்டத்திற்கு நவாப் ஈடுசெய்யவேண்டும். ஆங்கிலேயர் வியாபாரத்தின் சகல உரிமைகளும் சுவதந்திரங்களும் நிலைநிறுத்தப்படவேண்டும். ஆங்கிலேயர்கள் கோட்டை கட்டிக்கொள்வதற்கு யாதொரு விதமான இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாது. ஆங்கில வியாபார சங்கத்தார் ஒரு நாணயச்சாலையைக் கல்கத்தாவில் அமைத்துக்கொள்ள வேண்டும்.” மேற்கூறப்பட்டவைகளுள் முதல் மூன்று கோரிக்கைகளையும் நவாப் ஒப்புக்கொண்டான். ஆனால்

ஆங்கிலேயர்கள் மேலும் மேலும் புதிய புதிய நிபந்தனை களைக் கிளப்பிக் கொண்டிருந்தனர்.

மேலும் நவாப் ஸூராஜ் கல்கத்தாவில் அமீர் சந்த் பங்களாவில் தங்கியிருக்கும் போழ்து ஒருநாள் ஆங்கிலேயர் கள் இரண்டுபேர்கள் அனுப்பப்பட்டனர். சமாதானம் பேசுவதைப்போல் நடித்து நவாப்பின் சைன்னிய ரகசியங் களை அவர்கள் தெரிந்துகொண்டு போயினர். அவர்க ளுடைய நடவடிக்கைகளைப்பற்றி சந்தேகங்கொண்ட நவாப்பும் வேறோரிடத்தில் இரவைக்கடக்கத் தயார் செய்து விட்டனன். அவன் நினைத்தபடியே திடீரென ஆங்கில சைன்னியம் முஸ்லிம்களை எதிர்த்துத்தாக்கிப் பலரைக் கொன்று விட்டது.

இச்சம்பவம் ஆங்கிலேயர்களுக்குக்குறைவை விளை விக்கும் விஷயமாகும். இவ்விஷயமாய்ப் பல மாறுபாட டைந்த கதைகள் உலவுகின்றன. அவைகளெல்லாம் நவாப்பின் மனிதர்கள் காட்டிய ராஜத்துரோகத்தையே குறிக்கின்றன. குடியைக்கெடுப்பது கோடரிக் காம்பே! அந்தோ பாவம்! இம்மாதிரியான செயல்களாலன்றோ பரதகண்டம் அன்னிய நாட்டார்களுக்கு இரையாயிற்று.

எட்டாவது சருக்கம்.

உடன்படிக்கையும் "சுவிசேஷமும்."

இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் நவாப் ஸூராஜ் ஆங்கி லேயர்களால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளை ஒப்புக்கொண் டான். அவைகளினால் நவாப்பின் சர்வ சுவதந்தரமும் ஒழிந்துவிட்டது. ஆயினும் ஆங்கிலேர்கள் திருப்தியடைய வில்லை. ஒரு யுத்தசபையைக் கூட்டினார்கள். அதில் பல விஷயங்களைத் தர்க்கஞ் செய்து முடிவாய்ச் சமாதானத்தைக்

காப்பாற்றவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. அது நிறைவெறியிருப்பின் இருதாரத்தாருக்கும் சௌகரிய மாயிருந்திருக்கும். ஆனால் எவ்விதத்திலாவது நவாப்பையே ஒழித்துவிட்டு அவனுக்குப்பதில் ஒரு பொம்மை நவாப்பை ஏற்படுத்தவேண்டிய ஊக்கமே ஆங்கிலேயர்களுக்கு அதி கரித்தது. ஏனெனின் ஸுராஜ் உத்தௌலாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை பலருக்குத் திருப்திகரமாயில்லை. அதை மீறி நடப்பதும் உசிதமாயிராது. ஆங்கிலேயர்களு டைய பிரதிநிதி ஒருவனை மூர்ஷிடாபாத்தில் ஏற்றுக்கொள்வ தாய் நவாப் ஸுராஜ் ஒத்துக்கொண் டிருந்தமையால் அந்த பிரதிநிதியாகிய வாட்ஸ் (Watts) மூலமாய் ஏதேனும் காரி யம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று ஆங்கிலர்களுள் சிலர் எதிர் பார்த்திருந்தனர். அவனுக்கு உதவியாய் அமீர் சந்தும் அனுப்பப் பட்டிருந்தான். ஆங்கில வர்த்தகர்கள் கூடிய ஒரு சபையில் சில தீர்மானங்களைச் செய்து அவை களை ரகசியமாய் வாட்ஸுக்கு அனுப்பினார்கள். அவை களால்தான் நவாப்புக்கும் வர்த்தக சங்கத்தாருக்கும் மீண் டும் மனஸ்தாபங்கள் நேரிட்டன. ஏனெனின் முந்தி செய்து கொண்ட உடன்படிக்கையின் ஷரத் ஒவ்வொன்றுக்கும் புதிய வியாக்கியானம் உண்டாக்கப்பட்டது. அதை நவாப் ஸுராஜ் வெறுத்தான்.

அதன் பிறகு வாட்ஸ் என்பான் தந்திரமாய்த் தம் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்று சில்லறைக் கலகங்களைக் கிளப்பிவிட்டான். இம்மாதிரி செய்வதைப் பல ஆங்கில சரித்திராசிரியர்கள் ஆமோதிக் கின்றனர். காரணம் •இயாதெனின் கீழ் நாட்டார்கள் எந்த விஷயத்தையும் கபடமின்றி வெளிப்படையாய்ச் செய்வ தில்லையாம். ஆதலால் அவர்களுடைய மார்க்கங்களைப்

பின்பற்றியே கிருத்திரமவழிகளால் அவர்களை வஞ்சித்துத்தான் ஜயம் பெறவேண்டுமொம். இந்த விதமான சமாதானத்தைப்பாரத சரித்திராசிரியர்கள் ஒப்புக்கொள்வதில்லை. "யுத்தத்திலும் இனப்பெருக்க இச்சையிலும் எவ்வித உபாயமும் நியாயம்தான்" என்பது மேனாட்டுப் பழமொழி. "எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் தர்மயுத்தந்தான் விதிக்கப்பட்டிருக்கிறது" என்பது கீழ்நாட்டாரின் மதம். நியாயம் எப்படியாயினு மிருக்கட்டும். வாட்ஸுக்கும் நவாப்புக்கும் விரோதம் ஏற்பட்டது.

நவாப்பின் உத்தரவை எதிர் பார்க்காமலே பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சந்திர நாகூரை எதிர்த்துத் தாக்கும்படி வாட்ஸு முன்னொரு முறை கல்கத்தாவுக்குச் செய்தி அனுப்பியிருந்தான். அதன்படி பிரஞ்சுக்காரரை எதிர்க்கவேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அவைகளை யறிந்தவுடன் வங்காள நவாப் ஆங்கில வாட்ஸுக்கு ஒரு பெரிய கடிதம் அனுப்பினன். அதன் ஸாராம்சத்தை மட்டில் இவ்விடத்தில் எடுத்துரைப்போம். "என்னுடைய தேசத்தில் கலகங்கள் உண்டாகாமல் வியாபாரங்கள் செவ்வனே நடப்பதற்காக ஆங்கிலேயர்களுடைய விருப்பத்திற்கிணங்க சமாதான உடன்படிக்கை செய்துகொண்டேன். *** என்னுடைய அதிகாரத்தின் கீழ்வசிக்கும் பிரஞ்சுக்காரர்களுடைய தொழிற்சாலைகளை நீங்கள் எதிர்க்கப்போவதாய்த் தெரிகின்றது. இம்மாதிரி செய்வது அநீதியாகும். தர்மத்திற்கு விரோதமாகும். உங்களுடைய தேசங்களில் ஏற்படும் உங்களுடைய கலகங்களை நீங்கள் என் நாட்டில் ஏன் பரவச்செய்கிறீர்கள்? *** நீங்கள் பிரஞ்சுக்காரர்களை எதிர்த்தால் நான் அவர்களுக்குச் சகாயமாய் இருப்பேன். நீங்கள் உடன்படிக்கையைச் சின்னபின்னமாக்க

நினைக்கிறீர்கள் போலும். மஹாராஷ்டிரர்கள் என் நாட்டை யடிக்கடி எதிர்த்து வரி வசூல்செய்தனர். போர் புரிந்தனர். ஆனால் உடன்படிக்கைகள் செய்துகொண்ட பிறகு யாதொரு அக்கிரமங்களும் புரியவில்லை. உடன்படிக்கையை மரியாதை யுடன் காப்பாற்றினர். ** அதேமாதிரி நீங்களும் நானும் நடந்துகொள்ள வேண்டும்."

மேற்கண்ட கடிதத்தை வரைந்த பிறகு பிரஞ்சுக்காரர்கள் மூலமாய் ஆங்கிலர்களுடைய நடவடிக்கைகளைத்தெரிந்து கொண்டு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பினன். அதன் சாராம்சம் பின்வருமாறு :—

"நீங்கள் உடன்படிக்கையின் ஷரத்துக்களை உண்மையாய்க் காப்பாற்றுவதாயிருந்தால் இப்பொழுது அதிகமாய்க் கொண்டு வந்திருக்கும் கப்பல்களை யனுப்பி விடுங்கள். நான் என் மட்டில் உடன்படிக்கையைப் பூர்த்தி செய்யத்தயாரா யிருக்கிறேன். இவ்வாறிருக்க நீங்கள் யுத்தத்திற்குத் தயாராய் நிற்பது நியாயமா? மஹாராஷ்டிரர்கள் "சுவிசேஷம்" (Gospel) பெற்றவர்கள் அல்ல. அவர்கள் உடன்படிக்கையைக் காப்பாற்றுகின்றனர். "சுவிசேஷம்" பெற்ற நீங்கள் கடவுளுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் முன்னிலையில் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுவிடில் அது நம்பத்தக்கதல்ல; ஆச்சரியமாகவும் தோன்றும்."

மேற்குறிப்பிட்ட கடிதங்களுக்கு விடை வெகு சாமார்த்தியமாயிருந்தது. உடன்படிக்கைப்படி, அஃதாவது அக்ஷரம் அக்ஷரமாய்ப் பார்க்கும் பக்ஷத்தில், நியாயமாகவோ அந்நியாயமாகவோ, ஆங்கிலேயர்களுக்கு ஏற்படும் சத்துருக்கள் நவாப்பினுல் தன் சத்துருக்களாகப் பாவிக்கப் படவேண்டும் என்பதே.

ஐரோப்பாவில் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏதாவது வித்தியாசங்கள் நேரிட்டால் அவர்களிருக்குமிடங்களில் எல்லாம் அந்த விரோதம் பற்றி எரியவேண்டுமாம். பிரஞ்சுக்காரரால் நவாப்புக்கு யாதொரு கெடுதியும் நேரிடாவிடினும் பிரஞ்சுக்காரர்களை நவாப்பு கொல்லவேண்டுமாம். ஒருகால் நவாப்பு அவ்வாறே செய்திருப்பின் அவன்புத்தியில்லாதவன், பகுத்தறிவில்லாதவன் என்று உலகம் கூறும். அவ்வாறே சரித்திரங்களில் அது குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும். அது ஒரு பெரிய தர்ம சங்கடம் எனல் தகும். மேலும், வாட்ஸ் தன்னுடைய நல்ல குணத்தைப்பற்றித் தற்புகழ்ச்சி செய்துகொண்டு இறுதியில் நவாப்புக்கு ஒரு பயம் காட்டினன். அஃதாவது " கங்கைநதியின்பிரவாகம் அத்துணையும் கூடி அவிக்கமுடியாத ஒரு அக்கினியை உன் தேசத்தில் மூட்டிவிடுவேன் " என்பதே.

ஒன்பதாவது சருக்கம்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

இம்மாதிரியான அசந்தர்ப்ப விஷயங்களில் யார் குற்றவாளி என்பதைக் கண்டுபிடிப்பதற்குச் சரித்திராசிரியருக்கு வெகு நுட்பமான அறிவுவேண்டும். தர்மஸங்கடத்தை வெல்வதற்குத்துணிபும் வேண்டும். அக்காலத்திய ஆங்கில வியாபாரிகளைக் குற்றஞ் சாட்டினல் தற்காலத்திய ஆங்கில அரசாங்கத்தார் ராஜத்துரோகத்திற்காகப் பாணந்தொடுக்கலாம். நவாப்பைக் குற்றஞ் சாட்டிவிட்டால் இப்பொழுது கேட்பாரில்லை. ஆனல் நமது மனச்சாக்ஷிக்குப் பயன் என்னே? இருவர் பேரிலும் குற்றமிருக்கின்றதென்றால் அதைக்கோமுட்டிச் சாக்ஷி என்று உலகங் கூறும். நவாப் ஸுராஜுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் நடந்த விஷயங்களைக்

கவனித்துப்பார்க்குமிடத்து பிரஞ்சுக்காரர்களை ஜயிப்பது தான் ஆங்கிலேயர்களுக்கு முக்கியமாய்த் தோன்றின படியால் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்கிற கதையை யொக்க நவாப்பினால் யுத்த உடன்படிக்கை சரிவர நிறைவேற்றப் படவில்லையென்று தீர்மானஞ் செய்துகொண்டனர் ஆங்கில வியாபாரிகள். அதற்கேற்றபடி ஒரு சமயமும் நேரிட்டது. டெல்ஹி சக்கிரவர்த்தியின் சைன்னியம் ஒன்று வங்காளத்தை எதிர்க்கவந்தது. அத்தருணம் நவாப் பாடலி புரத்துக்குப்போக நேரிட்டது. அப்பொழுது ஆங்கிலேயர் களுடைய சகாயத்தை ஸுராஜ் எதிர்பார்த்தான். ஆனால் வாட்ஸன் கூறியதாவது:—

"இப்பொழுது உனக்குச்சகாயமாய் நான் வரும் பக்ஷத்தில் நாமிருவரும் இல்லாத சமயத்தில் ஆங்கிலர்கள் மொகலாய சக்கிரவர்த்தியால் தாக்கப்படுவார்கள். ஆதலால் நாமிருவரும் சந்திர நாகூரை எதிர்த்து வென்றுவிட்டால் அந்த சத்துருபயம் நீங்கிவிடும். அப்பொழுது எவ்வளவு சகாயம் வேண்டுமானாலும் நான் செய்வேன். டெல்ஹியையும் எதிர்க்க உடன் வருவேன்."

இவ்விஷயத்தைப்பற்றி இனி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. மேற்கண்ட யுக்தி நவாப்புக்குத் திருப்தி கரமாய்த் தோன்றவில்லை. இவ்வாறு சந்திர நாகூரை உடனே எதிர்த்துச்செல்லாதது உடன்படிக்கைக்கு விரோதம் என்று வாட்ஸனால் மதிக்கப்பட்டதுபோலும். பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் சமாதானமாய் வாழலாம் என்று கல்கத்தாவில் நடந்த ஏற்பாட்டை வாட்ஸன் தடுத்துவிட்டான். "ஸுராஜ் உத்தௌலாவையும் சண்டைக்கு இழுக்க வேண்டும், பிரஞ்சுக்காரரையும் அடக்கிவிடவேண்டும்" என்பதுதான் அவனது உட்கருத்து. இதைக் கேட்ட

க்ளேவ் 1757௵ மார்ச்சு மீ 4௳ நடந்த ஒரு சபையில் பிர சங்கம் செய்ததன் கருத்து பின்வருமாறு :—

"நாம் சமீபத்தில் நடத்திக்கொண்டிருக்கும் விஷயங் களை உலகத்தார் என்னென்று மதிப்பார்? சற்று கவனியுங் கள். சந்திர நாகூரிலுள்ள கவர்னராலும் அவருடைய சபையோராலும் கேட்டுக்கொண்டபடி அவர்களுடைய பிரதி நிதிகள் மூலமாய் யுத்தமின்றி சும்மாயிருப்பதாய் ஒப்புக்கொண்டமாதிரி உடன்படிக்கைகள் இருதரத்தாருக் கும் சம்மதங்களாய் நின்றன அல்லவா? நவாப்பு என்ன நினைப்பான்? வாக்குத்தத்தங்கள் செய்த பிறகு நாம் தவறி னால் உலகத்தார் நம்மை அல்பர் என்றும் நியாயம் இல்லா தவர் என்றும் பழித்திடுவார். ஆதலால் வாட்ஸனின் அபிப் பிராயம் எவ்வாறிருப்பினும் அதைத் தள்ளிவிட்டு நாம் தீர்மானஞ் செய்தபடி உண்மையைப் பின்பற்றுவோமாக. மேலும் வாட்ஸன் கடிதத்திற்கு மாறுபாடாகவே அவன் அபிப்பிராயம் உள்ளது என்று நாம் அடிக்கடி எண்ணு கிறேம்."

இந்த வார்த்தைகள் ஆங்கிலேயர்கள் காதில் விழவில்லை. பிரஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளைப் பற்றி நவாப்புக்குத் தெரிவித்தார்கள். நவாப்பும் ராய்துர் லபன் என்கிறவனைச் சைன்னியத்துடன் சந்திர நாகூருக்குப் போகக்கட்டளை யிட்டான். பிறகு நந்தகுமாரனும் அனுப் பப்பட்டான். இம்மாதிரி செய்த நவாப்பின் கருத்து பிரஞ் சுக்காரருடைய உதவிக்காக அல்லவென்றும் பிரஞ்சுக்காரர் களும் ஆங்கிலர்களும் சண்டையிட்டுக் கொள்ளாமலிருக் கும்படி பார்த்துக் கொள்வதற்காகவென்றும் தெரிகின்றது. க்ளேவ் தன்னுடைய சைன்னியத்துடன் சந்திர நாகூரை எதிர்க்கப் புறப்பட்டான். அதற்குக்காரணம் என்னவென்று

பிரஞ்சுக்காரர்கள் க்ளைவ் என்பவனைக் கேட்டபொழுது "தற்காலம் உங்களை எதிர்க்க எனக்கு எண்ணமில்லை. எக்காலத்தில் அப்படிசெய்ய நேரிடுகின்றதோ அக்காலத்தில் வெளிப்படையாய் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" என்று விடையளித்தான். இவ்வார்த்தை உலகில் எம்மட்டில் உண்மையெனக் கொள்ளத்தக்கது என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். ஆற்காட்டை எதிர்க்கும்போது சந்தா சாஹெபுக்கு இம்மாதிரி தெரிவித்திருந்தால் க்ளைவ் வார்த்தையை வேதவாக்காய் நினைத்திருப்போம்! மேற்குறிப்பிட்ட பதில் மார்ச்சுமீ 9௳ யுள்ளது. ஆனால் இரண்டு நாள்களுக்குள் பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களின் வசத்திலிருந்து ஓடிப்போனவர்களுக்கு அடைக்கலம் அளித்தார்கள் என்று ஒரு குற்றம் பிறப்பிக்கப்பட்டது. அது க்ளைவ் யுக்தியே. பிறகு இரண்டு நாள்களுக்குள் சந்திர நாகூர் கவர்னர் கோட்டையைத் தன்னிடம் ஒப்புவித்துவிட வேண்டும் என்று க்ளைவின் உத்தரவு பிறந்தது. க்ளைவுக்கு உதவியாய் வாட்ஸன் கப்பற்படையுடன் தயாராய் நின்றான். மார்ச்சுமீ 14௳ யுத்த பிரசுரம் கிளம்பிற்று. 23௳ கோட்டை பிடிக்கப்பட்டது. வங்காளத்தில் பிரஞ்சுக்காரர்களின் ஆட்டம் ஓய்ந்துவிட்டது. இதற்கெல்லாம் டெர்ரானோ என்கிற ஒரு பிரஞ்சுக்காரனும் வங்காள நவாப்பின் வேலைக்காரர்களுள் சிலரும் உதவிகளாய் நின்றனர். அவர்களுக்கு ஏராளமான பொருளுதவி (லஞ்சம்) ஆங்கிலேயர்களால் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட விஷயமாய் இவ்விடத்தில் ஒரு சிறிய கதையை வெளியாக்க வேண்டியிருக்கின்றது. மேற்கண்ட டெர்ரானோ தனக்குக்கிடைத்த பொருளில் கொஞ்சம் தன்னுடைய விருத்தாப்பியத் தந்தைக்கு அனுப்பினான்.

அவன் அப்பொருள் ஈட்டப்பட்ட மார்க்கத்தைக் கேட்டுத் தன் நாட்டுக்கு விளைந்த அவமானத்தைக் கருதித் தன் மகனுக்கு அப்பொருளைத் திருப்பி விட்டான். அதைப்பெற்றுக் கொண்ட மகனின் உள்ளம் அம்பு தைத்தாப்போல் ஆய்விட்டது. அது முதல் சில நாளைக்குள்ளேயே நெஞ்சம் நொந்து வெட்கமடைந்து மனமுருகித் தூக்கிட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக்கொண்டனன்! இதற்கு வியாக்கியானம் தேவையில்லை. லஞ்சம் கொடுத்தாவது வேலையை முடித்துக்கொள்வதும் லஞ்சத்துக்காகத் தன் தேசத்துரோகியாய் நிற்பதும் என்ன கொடும்பாவம்! அமீர்சந்த் என்பவனும் நந்தகுமார் என்பவனும் தற்கொலை செய்துகொள்ளவில்லையே யென நாம் வியசனிக்கின்றோம்! அவர்கள்தான் ஆதி வர்த்தகர்களுக்குதவியாய் நின்றவர்கள். நவாப்பினால் அனுப்பப்பட்ட நந்தகுமாரன் அமீர்சந்தின் பொருளுதவியால் தன் கடமையைச் செய்யாமல் சந்திர நாகூரைச் சமயத்தில் கைசோர விட்டான். நவாப்புக்கு இம்மாதிரி துரோகம் செய்ததற்காக ஆங்கிலேயர்களால் ஒரு சபையில் அமீர்சந்துக்கு வந்தனமளிக்கப்பட்டது.

சந்திர நாகூர் கோட்டை பிடிபட்ட பிறகு பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் சாமான்கள் நவாப்பினிடம் அடைக்கலம் பெற்றவர்கள் முதலிய விஷயங்களைப்பற்றி நீடித்த வியவகாரங்கள் புறப்பட்டன. அவைகளைப் பரிசோதித்துப் பார்த்தால் அக்காலத்திய மனிதர்களுடைய மனோபாவங்களும் நடவடிக்கைகளும் மீண்டும் சந்தேகிக்கத்தக்கவைகளாகவே யிருக்கின்றன. அவ்விஷயங்களில் தலையிட்டுக்கொண்டிருந்த அமீர்சந்த் முதலியவர்களும் க்ளைவ், வாட்ஸ், வாட்ஸன் முதலியவர்களும் நவாப்பும் நவாப்புக்கு விரோதமாய் நடந்துகொண்டு அவனது

உப்பைத் தின்றவர்களும் நடித்த நாடகம் கௌரவம் பெற்றதன்று எனக் கூருநிற்போம்.

அத்தியாயம்—7.

முடிவற்ற சூழ்ச்சி முறைகள்.

முதலாவது சருக்கம்.

போய்ப்பத்திரம்; போய்க்கையெழுத்து.

நவாப் ஸுராஜை நீக்கிவிட்டு மீர்ஜாபர் (Mir Jaffer) என்பவனைச் சிங்காஸனத்தில் அமர்த்துவதற்காக நடத்திய கடிதப்போக்குவரவும் அதே தருணத்தில் நவாப்பினிடம் சிநேகம் பாராட்டிய கடிதமும் ஒரே வேலைக்காரன் கையிலனுப்பப்பட்டன. அதே வேலைக்காரனிடத்தில் "மீர்ஜாபர் பயப்படவேண்டுவதில்லை" என்று தெரிவிக்கும்படி வாட்ஸுக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. பிறகு மீர்ஜாபரை நவாப்பாய் மகுடம் சூட்டுவதற்காக ஒரு உடன்படிக்கை ஏற்பாடும் நடந்தது. அக்காலத்தில் அமீர்சந்த் என்பவன் தான்செய்த உதவிகளுக்குத் திருப்திகரமான நன்றியறிதலைக்காட்டும்படி ஆங்கிலேயர்களை வற்புறுத்தினான். நவாப் ஸுராஜ் உத்தௌலாவை ஒழித்த பிறகு ஆங்கிலேயர்கள் பெறும் எவ்விதவருவாயிலும் தனக்கு நூற்றுக்கைந்து "கம்மிஷன்" வேண்டுமென்றும் விலையுயர்ந்த கற்கள், முத்துக்கள், முதலியவைகளிலும் பங்குகள் தேவையென்றும் அவைகள் மீர்ஜாபர் உடன்படிக்கையில் காணப்பட

வேண்டுமென்றும் கேட்டான். அவைகள் அளவுக்கு மிஞ்சியவை என்றும் அவ்வளவு பேராசை பிடித்த அயோக்கியனை நல்வழிக்குத்திருப்புவது அசாத்தியமென்றும் தம் காரியம் முடியவேண்டிய தவசியமென்றும் கருதிய க்ளைவ் ஒரு சூழ்ச்சியைச் செய்யத் தீர்மானித்து விட்டான். அஃதாவது இரண்டு தஸ்தாவேஜ்களை உண்டாக்கவேண்டியது. ஒன்றில் அமீர்சந்த் இஷ்டம்போல உடன்படிக்கை காணப்பட வேண்டியது. மற்றொன்றில் அது மாத்திரம் நீக்கி விடப்படவேண்டியது. முதலாலது சிவந்த காகிதத்தில் இருக்க வேண்டும். மற்றொன்று சாதாரணமாய் வெள்ளைக்காகிதத்தில் இருக்கவேண்டும். இவைகளைக்கேட்ட கப்பற்படையோன், வாட்ஸ்ன், தான் அப்பேர்ப்பட்ட ஒருவஞ்சனைக்கு உடந்தையாயிருக்கத் தயாராயில்லை என்றதனால் அவன் கையெழுத்தைத் தானே "போர்ஜரி" (Forgery) செய்யத் தயாராய்விட்டான். அப்படியே அந்த தஸ்தாவேஜ் அமீருக்குக் காட்டப்பட்டது. தன் காரியம் முடிந்தது என்று சுய நலப்புலியான அமீர்சந்த் ஆனந்தக் கூத்தாடினன் போலும். அந்தோ அறிவிலி !

வாட்ஸ் என்பவன் இரண்டாவது தஸ்தாவேஜ் எடுத்துக்கொண்டு கோஷாஸ்திரீகள் பிரயாணஞ்செய்யும் டோலியில் ஏறிக்கொண்டு நள்ளிரவில் (1757ஹு ஜூன் மீ 4உ) மீர்ஜாபர் கையெழுத்தைப்பெற்றான். இது ஒரு ராஜ தந்திர முறை போலும் !

அதுமுதல் ஒரு வாரத்திற்குள் மூர்ஷிடாபாத்தை விட்டு வெளிக்கிளம்புவதற்கு வேண்டியவாறு ஆங்கிலேயர்கள் தயார் செய்துகொண்டிருந்தனர். பக்ஷிகள் பறந்து விட்டன. அவர்கள் வெளியேறின பிறகு நவாப் ஸுராஜ் விழித்துக் கொண்டான். ஆயினும் தான் உடன்படிக்

கையை மீறி நடக்கவில்லை யென்றும் கடவுள் முன்னிலை யிலும் முஹம்மத் நபி அவர்களுடைய ஆணை பேரிலும் தான் குற்றவாளி யல்லவென்று சந்தோஷமடைந்து மீர்ஜாபரிடம் சென்றான். அவனும் குர்'ஆன் மீதில் சத்தியஞ்செய்து நவாப்புக்கு உதவி புரிவதாய் ஒரு பக்கஞ் சொல்லிக் கொண்டே ஸுராஜ் உத்தௌலாவை ஒழிக்கவேண்டிய முறைகளை மனதில் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். அவன் தலைமறைந்ததும் சரித்திர பிரசித்தி பெற்ற பிளாஸி யுத்தத்திற்குத் தயாராய் இருப்பதாய் மீர்ஜாபர் ஆங்கிலர்களுக்குத் தெரிவித்தான்.

பிளாஸியைப்பற்றிய வர்ணனைகளையும் மாந்தோப்பின் வனப்பையும் யுத்தத்தைப்பற்றிய விவரங்களையும், போர்க் களத்தின் நடவடிக்கைகளையும் போரின் பெருமைகளையும் இருதரத்தாரின் சைன்னிய பலத்தையும் திறமையையும் சைன்னியத்தலைவர்களின் சாமர்த்தியத்தையும் வீரகோஷங்களையும் ஜயங்களையும் புகழ்ந்து பல நூல்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஸுராஜ் உத்தௌலா கொலையுண்ட விஷயமும் அவனது தோஷங்களும் ஜீவித சரித்திரமும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளை அவசியம் நம் நாட்டார்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய ஆதாரங்களுக்குக் குறைவில்லை. அவைகள் நம் தாய்ப் பாஷையில் வெளிப்படவேண்டும். ஆனால் தற்சமயம் நமது முக்கியக் கருத்து யாதெனின் அந்த யுத்தத்தின் நன்னெறி யாது? என்பதே. அதை நாம் விசாரிப்போமாக.

இரண்டாவது சருக்கம்.

தனத்தின் குணம்.

கல்கத்தா இருட்டறைச் சம்பவம் (1756ஆ ஜூன்மீ 24உ) முதல் பிளாஸி யுத்தம் (1757ஆ ஜூன்மீ 23உ)

முடிந்தவரை ஒரே ஆண்டுக்குள் இந்நாட்டில் நடந்த வரலாறு இவ்வுலகில் தோன்றிய மானிட வர்க்கத்தினரின் இயற்கைக் குணத்திற்கே சாக்ஷியான பொக்கிஷமாகும். பொக்கிஷத்தின் குண தோஷங்கள் யாவும் அதில் காணப்படுகின்றன. பொருளில்லார்க் கிவ்வுலகில்லை என்பதும் அப்பொருளே இவ்வுலக வாழ்க்கைக்கு விரோதமான தென்பதும் நாம் பிரதி தினமும் தெரிந்துக் கொள்ளும் உண்மைகளாகும். தனத்தினுல் முடியாத நல்லகாரியமு மில்லை கெட்டகாரியமுமில்லை. உலகில் நடக்கும் தர்மங்கள் யாவும் பொருளினுதவியினுல்தான். கல்விச்சாலைகள், தேவாலயங்கள், தர்மசத்திரங்கள், புத்தகசாலைகள், முதலியவைகள் தக்க மூலதன மிருந்தாலன்றி சாசுவதமாய்ப் பெருகிவரா. நல்ல அரசாட்சிமுறையும் ஐசுவரியத்தினுல் தான் செலுத்தப்படுகின்றது. அதே தனத்தைத் துர்வினியோகங்களுக்கும் பொருளாக்கலாம். கொலைப்பாதக ஆயுதங்களிலும் சண்டைகளிலும் அழிக்கப்படுவது பொக்கிஷந்தான். இனப்பொருமை ஜாதித்திவேஷம் வேருருவர் ராஜ்யத்தை யபகரித்தல் முதலிய காரணங்களைப் பாராட்டிக்கொண்டு உலகில் சர்வவியாபியாய்த் தானே விளங்கவேண்டும் என்கிற பேராசை கொள்வதற்கு மூலம் பொக்கிஷந்தான். அப்பொக்கிஷத்தைப் பெறுவதற்காக நடத்தப்படும் தந்திரங்கள், வஞ்சனைகள், செய்நன்றி மறத்தல், நியாயமார்க்கங்களை மறுத்தல், சுவயநலத்தைப்பாராட்டல், ஆகிய துர்க்குணங்கள் மானிடர்களைப் பீடித்து நிற்கின்றன. அவை மிருக சுவபாங்களாகும். அவைகளைத் தாமத குணமென்றும் ராஜஸ குணமென்றும் தத்துவசாஸ்திரிகள் கூறுகின்றனர். ஆனுல் பொருளைச் சம்பாதிப்பதற்கு நல்ல வழிகளிருக்கின்றன. அவைகள் ஸாத்துவீகங்களாகும்.

மேற் கூறப்பட்ட விஷயங்கள் பாரதமக்களுக்குப் புதியனவல்ல. நமது பரதகண்டத்தில் வர்த்தகஞ்செய்துப் பொருளைச் சம்பாதித்துக் கொள்ள விஜயஞ்செய்த மேனாட்டார்கள் பலதுறைகள் வாயிலால் இக்கண்டத்தையே ஆட்சி செய்ய ஆரம்பித்தது என்ன நன்னெறி? என்பதுதான் கேள்வி. மேனாட்டார்களுக்குள் ஆங்கிலர்கள் மேன்மை பெற்ற முறை ஸாத்துவிகமானதா? என்பது இன்னுமொரு கேள்வி.*

ஆதிகாலத்திய பாரதமக்களுடைய ஆட்சி நாகரிக முறையற்றதென்று பறையறையும் ஆங்கிலேயர்களுடைய ஆட்சி முறை எத்தகைத்து? என்பதும் வேறொரு கேள்வி. அது நன்னெறி முறையைப்பற்றிக் கைக்கொள்ளப்பட்டதாயின் நாகரிகம் பெற்றதென்பதற் கையமில்லை. அது நன்னெறி முறையைப் பின்பற்றிக் கைக்கொள்ளப்படாவிடினும் ஒருகால் நாகரிகமற்ற இந்நாட்டார் நாகரிகமுள்ளவர்களாக்கப் பட்டிருப்பின் ஒருவாறு சமாதானம் ஏற்படும். அஃதுண்மையா? என்றும் கேள்வியும் புறப்படுகின்றது. இக்கேள்விகளுக்கு விடைபெற ஆங்கில வியாபாரிகளின் சரித்திரத்தை மேலும் ஆராய்ச்சி செய்வோமாக.

மூன்றாவது சருக்கம்.

பிரித்து ஆளல்முறை.

ஆரியாவர்த்தத்தில் வங்காளத்திய நவாப் பதவி மீர் ஜாபரின் பேரவாவினால் ஆங்கிலவியாபாரிகளின் கையில் சிக்கிக்கொண்டது. மீர்ஜாபர் சேனைக்கதிபதியாய் இருந்

* "மேனாட்டார்களுள் ஆங்கிலர்கள் இந்தியாவைப் பிடித்துக் கொண்டது ஒரு பெரிய அதிர்ஷ்டம்" என்பது சிலர் அபிப்பிராயம். அதைப்பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் ஆராய்ச்சி செய்வோம்.

தவனே யல்லாது ராஜ்யஞ் செய்யும் திறமைவாய்ந்தவ னல்லன். குருடனை ராஜவிழி விழிக்கும்படி செய்த ஆங்கில வியாபாரிகளின் காலில் விழுந்து கிடந்தான் மீர் ஜாபர். முஸ்லிம்களும் ஆரியமக்களும் பெரும்பான்மையாய் சமாதானமடைந்துகொண்டிருந்த காலத்தில் மேனாட்டார் கள் தோன்றினர் என்று அடிக்கடி கூறியிருக்கிறோம். அலிவர்டிகான், ஸுராஜ் உத்தௌலா இருவரும் ஆரியமக் களை நம்பி அவர்களை உயர்ந்த நிலைமையில் வைத்திருந்தார் கள். ஆனால் ஆங்கிலேயர்களின் தயவை நம்பியிருந்த மீர் ஜாபர் ஆரியர்களை நம்பவில்லை. ஒருகால் அமீர்சந்த்போன்ற வர்கள் எஜமானதுரோகம் செய்ததனால் அவ்வினத்தார் களையே வெறுத்தனன் போலும். அல்லது ஆங்கிலேயர் களுதவியிருந்ததனால் ஆரியர்களையே துவேஷித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இம்மாதிரி செய்ததனால் பிறகு தனக்கே கெடுதி நேரிடும் என்பதை முற்றிலும் உணர வில்லை. பீஹாருக்குக் கவர்னரான ராமநாராயணன் அலிவர்டிகானின் வம்சத்துக்கு உபகாரியாயிருந்தானென் றும் பிரஞ்சுக்காரர்களுக்கு உதவியாயிருந்தானென்றும் குற்றஞ்சாட்டப்பட்டான். மேஜர் கூட் என்பவன் அவனு டைய மாகாண அதிகாரத்தைப் பிடுங்கிக்கொள்ள வேண்டி க்கினவினல் அனுப்பப்பட்டான். அவனைக்கண்டதும் ராம நாராயணன் பழய நவாப் இருந்தவரை அவனுக்கு விசு வாசமுள்ளவனாயிருந்தது உண்மையாயினும் மீர்ஜாபர் அப் பதவியை யடைந்தது முதல் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாய்த்தெரிவித்துக்கொண்டான். அதைக்கண்ட கூட் அவனையே மாகாணாதிகாரியாய்த் தொடர்ந்திருக்க உத்தர வளித்தான். பராதீனனாயிருந்த மீர்ஜாபர் என்ன செய்யக் கூடும்? ஆயினும் ராமநாராயணனிடத்தில் உண்மையான

நம்பிக்கைவைக்கவில்லை. அதனால் அவனையடிக்கடி வீண் தொந்தரவு செய்தான். எனினும் ராமநாராயணன் தன் சாமர்த்தியத்தினால் தன் பதவியில் வாழ்ந்திருந்தான்.

பிறகு ஒரிஸ்ஸா கவர்னரான ராம்ராம் ஸிங்கை வேலையை விட்டு நீக்குவதற்காக அவனைத்தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். க்ளைவின் நல்ல புத்திமதியினால் மீர்ஜாபருக்கு அவனையும் நீக்க முடியவில்லை. அவனும் ராஜ்யதந்திரத்துடன் கவர்னராய்க் காலந்தள்ளினான். இம்மாதிரியே புதிய நவாப் பல ஆரியர்களை விரோதம் செய்துகொண்டான். அதனால் அவர்கள் ஆங்கிலேயர் களிடம் அபிமானங் காட்டலாயினர். ஆங்கிலேயர்களோ பாலுக்குங்காவல் பூனைக்குந்தோழன். அவர்கள் ஆரியர்களுக் குஞ் சகாயஞ்செய்ததைப்போல் பாவனை காட்டிக்கொண் டிருந்தார்கள். முஸ்லிம் நவாப்பின் ஆட்சியில் முஸ்லிம் களுக்கு சௌகரியம் தானுப் ஏற்படுவது சகஜம் என்று அவர்கள் தனித்து நின்றுவிட்டார்கள். மீர்ஜாபருக்கோ சுவதந்திரம் ஒன்றும் ஏற்படவில்லை என்பது திண்ணம்.

அதனால் கால அளவில் மீர்ஜாபர் ஆங்கிலர்களின் சகா யத்தை மேலும் மேலும் கோறவேண்டியதாயிற்று. ஆதலால் ஆரியர்களையும் முஸ்லிம்களையும் "பிரித்து ஆளல்" முறை அக்காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. இக் குறையை வெளியிடுவது குற்ற மெனின் ஆங்கிலரால் வெளியிடப்பட்டிருக்கும் ஆதாரங்களையே எடுத்துரைக்கக் கூடும்.

மீர்ஜாபருக்கு வருவாய் குறைந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயர்கள் வியாபாரம் செய்யக் கூடாதென்று வெகு ஆண்டுகளாய் தள்ளிவைக்கப்பட்டிருந்த உப்பு முதலிய சாமான்களை அவர்கள் வாங்கவும் விற்கவும் ஆரம்பித்தனர்.

இவ்விஷயத்தை நவாப் க்ளைவுக்குத் தெரிவித்துக்கொண்டான். அதைத் தடுப்பதற்கு வேண்டிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அது எழுத்தில்தானிருந்தது. உண்மையாய் நிறுத்தப்படவில்லை.

மேலும் புதிய நவாப் ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்டிருந்த அனேக செலவுகளைக் கொடுக்க நேரிட்டது. அதனால் கஜானு காலியாக ஆரம்பித்தது. குடிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்ட வருவாய் குடிகளுக்கு உபயோகப்படவில்லை. மீர்ஜாபர் நவாப் பதவியை யடையுமுன்னர் அவனுக்குச் சகாயமாயிருந்த பந்துக்களும் மித்திரர்களும் தாங்கள் எதிர்பார்த்த லாபங்கள் தங்களுக்குக்குக் கிடைக்கவில்லை யென்று அவர்கள் அதிருப்தியுள்ளவர்களாயிருந்தார்கள். சைன்னியத்திற்குத் தக்கபடி சரிவர சம்பளம் கொடுக்கப் படவில்லை என்று சிப்பாய்களும் குறை கூறி நின்றனர்.

அரசாட்சி முறையில் பலவித கட்டுப்பாடுகள் ஆங்கில வியாபார அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டன. உதாரணமாய் ஆங்கிலேயர்களால் சந்தேகிக்கப்பட்ட ஒருவரும் நவாப்பை எட்டிப்பார்க்கக் கூடாது. குடிகளுக்குத் திருப்திகரமாய் ஏதேனும் நவாப் செய்தது வெளியானல் அதைக் கிளைவ் வெகு தந்திரமாய்க் கண்டித்தான். ஏனெனின் குடிகளின் அதிருப்திதான் மீர்ஜாபரை க்ளைவுக்குக் "கழுதைபோல்" ஆக்கக்கூடும். அதனல் எத்துணை பாரம் போட்டாலும் தாங்கக்கூடும் என்பது அக்காலத்திய பழமொழியாகும். வங்காளம் இந்நிலைமையிலிருக்க, க்ளைவின் அதிர்ஷ்டவசத்தினல் இன்னும் பெரிய சம்பவம் நேரிட்டது. அஃதாவது டெல்ஹி சக்கிரவர்த்தியின் குமாரனன ஷாஜாதா என்பவன் வங்காளத்தை எதிர்க்கலாயினன். ஏனெனில் டெல்ஹி சக்கிரவர்த்தியின் அதிகாரம் வங்காள மாகாணத்

தில் குன்றிவிட்டதை மீண்டும் கைக்கொள்வதற்காக ஆலம்கிர் சக்கிரவர்த்தி அவனை யனுப்பினான். அவனும் ஆங்கிலேயர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதாய் வாக்குத்தானஞ் செய்தான். ஆனால் அவன் தகப்பனின் உத்தரவுப்படி வந்ததாய்த் தெரியவில்லை யென்று க்ளைவ் வெளியிட்டான். ஏனெனின் அவன் ஊகித்துப்பார்த்த காலத்தில் ஏற்கனவே மீர்ஜாபரால் அடைந்த சௌகரியங்களைக் காட்டிலும் அதிகம் யாதொன்றும் கிடைக்காதென்று நினைத்தான். மேலும் டெல்ஹி சக்கிரவர்த்தி மீண்டும் பழைய செல்வாக்கை யடைந்துவிட்டால் ஆங்கிலேயர்களுடைய நிலைமை யவ்வளவு விரும்பத்தக்கதாயிராதென்றும் நினைத்தான். ஆதலால் மீர்ஜாபருடைய உதவியைக்கொண்டே க்ளைவ் ஷாஜாதாவைத் துறத்திவிட்டான். யுத்தச்செலவு நவாப்பைச் சேர்ந்தது. ஜயம் ஆங்கிலேயரைச் சேர்ந்தது. க்ளைவின் சொந்த உபயோகத்திற்காக ஒரு ஜஹகிர் விடப்பட்டது. அதன்வருவாய் அக்காலத்தில் சுமார் முப்பதாயிரம் பவுன் எனின் தற்காலத்திய அதன்மதிப்பைக் கணக்கிட்டுக்கொள்வோமாக.

இன்னுமொரு அதிர்ஷ்டம் க்ளைவுக்குத் தோன்றிற்று. அஃது யாதெனின் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஒரு கப்பற்படை ஹுக்ளியில் தோன்றியதுதான். அக்காலத்தில் டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஐரோப்பாவில் விரோதமில்லை. ஆதலால் அந்தப்படை வந்ததற்குக் காரணம் ஒருகால் நவாப்பின் வேண்டுகோளாயிருக்கலாம் என்று க்ளைவ் நினைத்தான். இவ்வாறு நினைத்ததற்குக் காரணம் மீர்ஜாபரின் குடிகளின் அதிருப்தியும் அவனுடைய மூத்த மகனின் நோக்கமும்; அவை க்ளைவுக்குத் தெரிந்திருந்தன. மீர்ஜாபர் அவனது உடன்படிக்கைப்படி

ஆங்கிலேயர்களுக்குக் கடைப்பாடுடையவ னுயிருந்தான் என்பதும் டச்சுக்காரர்களை வரவழைக்கவில்லை என்பதும் 1772-ல் நடந்த இங்கிலாந்திய மகாசபையின் விசாரணையினுல் வெளிப்படுகின்றன. ஒருகால் டச்சுக்காரர்களே தங்களுடைய வியாபாரத்தை விருத்திசெய்து கொள்வதற்காக மீண்டும் பிரயத்தனஞ் செய்திருக்கலாம் என்பது நமது சந்தேகம். ஏனெனின் டச்சுக்காரர்களாவது முஸ்லீம்களாவது ஆங்கிலேயர்களைப் போல் தந்திரவாதிகளா யிருந்திருக்கும் பக்ஷத்தில் அக்காலத்தில் வங்காளத்தில் ஆங்கிலேயர்களது வாழ்வு சுகமாயிருந்திராது. நவாப்பும் க்ளைவுடன் கூடி டச்சுக்காரர்களைத் துறத்தியிருக்கமுடியாது. உண்மையில் டச்சுக்காரர்கள் பெருந்தோல்வியடைந்து ஓடலாயினர். ஆங்கிலேயர்களுக்கு வெற்றி ஏற்பட்டது. அது முதல் இக்கண்டத்தில்இதர ஐரோப்பியர்களுடைய போட்டி ஒழிந்துவிட்டது என்றே கூறலாம். க்ளைவுக்கு அத்தருவாயிலும் தனங்குவிந்தது. இந்நாட்டில் அவன் ஈட்டிய பொருளுக்குச் செலவு இங்கிலாந்தில்தான் ஏற்படவேண்டும் என்று கருதலாயினன். வங்காளத்தை ஆங்கிலேயர்களுக்குக் கைவசப்படுத்தியதற்காக இங்கிலாந்திலுள்ள கிழிந்திய வர்த்தக சங்கத்தார் வேறென்ன கைம்மாறு செய்யக்கூடும்? வங்காளத்தை எட்டிப்பார்த்தது முதல் மூன்று ஆண்டுகளுக்குள் க்ளைவ் நடத்திய செயல்கள் அற்புதமானவை என்பது சில ஆங்கிலேயர்களின் கருத்து. ஆற்காடு முற்றுகை, ப்ளாஸி யுத்தம், வங்காளம், பிகார், ஒரிஸ்ஸா ஆகிய மூன்று மாகாணங்களின் ஆட்சி முறை இவைகளுக்கெல்லாம் காரணம் க்ளைவ். வியாபாரம் செய்வதாய் வந்தவர்களுக்கு ஒரு ராஜ்யமே கிடைக்கும்படி செய்தவன் ஒரு ஆச்சரியமான புருஷனல்லவா? ஆனுல் அவைகளை யெல்லாம்

எவ்வாறு முடித்தனன் என்றால் வஞ்சகம், கிருத்திரமம், சுயநலம், பொய்க்கையெழுத்து, உடன்படிக்கைத் துரோகம் ஆகியவைகளால்தான் என்று கூறுகின்றனர் சில ஆங்கிலேயர்களே. நன்னெறி முறைப்படி சம்பாதிக்கப் படாத ஐசுவரியம் எக்காலமும் நிந்திக்கத்தக்கது என்பது பாரத மக்களின் சித்தாந்தம். ஆதலால் அவைகளைச் சொந்தக் காரர்களிடம் ஒப்புவித்துவிடுவது நல்ல தர்ம முறையாகும்.

வங்காள மாகாணத்திய கவர்னராக இருந்த காலத்தில் பல துன்பங்களும் கஷ்டங்களும் அனுபவித்ததற்காக க்ளைவுக்கு ரஜா கொடுக்கப்பட்டதாம். வங்காள கவர்னர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பி "இந்திய நவாப்" என்று எல்லோராலும் புகழப் படும்படியான சௌக்கியம் பெற்று வாழ்ந்தனன். ஆயினும் அக்காலத்தில் இங்கிலாந்திலுள்ள புத்திசாலியானவர்கள் "நியாயமான முறையில் அவ்வளவு பொருள் ஒருவனுக்கு எவ்வாறு சேர்ந்திருக்கக் கூடும்?" என்று சந்தேகிக்கலாயினர். முக்கியமாய் உவில்லியம் பிட் என்கிற பிரதம மந்திரிக்கு க்ளைவின் மார்க்கங்கள் சந்தேகிக்கத் தக்கவைகளாகவே யிருந்தன. முக்கியமாய் பரதகண்டத்தின் ஒரு சிறிய பாகத்தையும் இங்கிலாந்திற்கு அடிமையாக்குவதற்கு அம் மந்திரி பிரியப்படவில்லை. இவ்வாறு தாராள சிந்தைகொண்ட ஒருவனின் ஜீவிதசரித்திரம் நம்மால் போற்றத் தக்கதாகும். க்ளைவ் தன் சாமர்த்தியத்தையும் ஒரு புதிய ராஜ்யஸ்தாபனஞ்செய்த வரலாற்றையும் கூறி அதற்குமேல் வெகுசுலபமாய் ஆரியாவர்த்தத்தையே அரசாளலாம் என்று எழுதிய ஒரு கடிதத்தை பிட் ஆமோதிக்கவேயில்லை.

க்ளைவ் வங்காளத்தை விட்டுப்புறப்படும் காலத்தில் (1760 பிப்பரவரி) ஹால்வல் என்கிறவனிடம் சென்னையி

விருந்து வான்ஸிடார்ட் என்பவன் வரும்வரை சுவல்ப காலத்திற்கு மாகாண அதிகாரம் ஒப்புவிக்கப்பட்டது. ஆனால் சைன்னிய அதிகாரம் மட்டில் காலியாட் என்பவ னிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஆனால் க்ளைவ் தானிருந்த வரையில் மாகாண அதிகாரியாகவும் சைன்னிய அதிகாரி யாகவும் இருந்தான் என்பது அவனுடைய சாமர்த்திய தைக்காட்டுகின்றது.

ஹால்வெல் அதிகாரம் அடைந்தது முதல் மீர்ஜாபரை நவாப் பதவியை விட்டு நீக்கிவிட முயற்சி செய்தான். அதற்காகக் காலியாடின் உதவியை அவன் கோரியபொழுது காலியாட் அதற்கிசையவில்லை. ஆயினும் விடாமுயற்சியினால் காலியாட்டைத் தன் வசம் செய்துகொண்டான். ஹால்வல் ஏற்கனவே க்ளைவ் இந்நாட்டைவிட்டுப் புறப்படும் சமயத்தி லேயே ஷாஜாதா மறுபடியும் பிஹாரைத்தாக்குவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். அதனால் காலியாட் தன் ஸைன்னியத்துடன் ஷாஜாதாவை எதிர்க்கத் தயா ராய் இருந்தான்.

அத்தருணத்தில் டெல்ஹி சக்கிரவர்த்தி ஆலம்கிர் கொலைசெய்யப்பட்டான். அதைக்கேள்விப்பட்ட ஷாஜாதா, ஷா ஆலம், என்கிற பட்டப்பெயருடன்தான் சக்கிரவர்த்தி எனப்பிரசுரஞ் செய்வித்தான். பக்கத்திலிருந்த அயோத் தியை நவாப்புக்கு "வஜீர்" பட்டஞ்சூட்டினான். தனக்குப் புதியதாய் ஏற்பட்ட நிலைமையினால் அதிக சைன்னியம் சேர்ந்தது. உடனே பாடலிபுரத்தை எதிர்த்துச்சென்றான்.

மொகலாய சக்கிரவர்த்திக்கும் வங்காள நவாப்புக்கும் நடந்த யுத்தத்தைப் பற்றிய விவரங்கள் காலியாடினாலேயே வெளியிடப் பட்டிருக்கின்றன. அவைகளின் சாராம்சம்

யாதெனின், மீர்ஜாபரின் மூத்த குமாரன் மீரான் என்பவன் யாது காரணத்தினாலோ பரலோகஞ்சென்றனன். யுத்தத்தில் மரிக்கவில்லை என்பது நிச்சயம். ஆனால் அவன் வியாதியால் பீடிக்கப் பட்டிருந்தான் என்று வதந்தி யுலவியிருந்திருப்பினும் உண்மை அவ்வாறில்லை என்பதும் அனேக விஷயங்களினால் ருஜுவாகின்றன. இடியேற்றினால் ஒருகால் மாண்டிருக்கலாம் எனப்படுவதுண்டு. ஆனால் புதிய கவர்னர் வான்ஸிடார்டு அதிகாரம் பெற்றகாலத்தில் மீரான் இறந்ததைப்பற்றி ஹால்வல் சந்தோஷமடைந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையை இறைவனே அறிவான். இவ்வாறு நின்றது ஒரு பொம்மை நவாப் வாழ்வு.

நான்காவது சருக்கம்.

வேறொரு பொம்மை நவாப்.

வேண்டாத மனைவி கைப்பட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்.

மீர்ஜாபரால் ஆங்கிலேயர்களுக்கு நடக்கவேண்டிய சகாயங்கள் நிறைவேற்றப் பட்டுவிட்டன. அதன் பிறகு அவனால் ஆகவேண்டிய தொன்றுமில்லை. டெல்ஹிசக்கிரவர்த்தி முறியடிக்கப்பட்டான். மீர்ஜாபருக்கடுத்தபடி நவாப்பட்டத்திற்குப் பிறந்திருந்த மீரான் மரணமடைந்துவிட்டான். மீர்ஜாபரின் மருமகனான காஸிம் அலிகான் (மீர்காஸிம்) நவாப் பதவியைக் கண்ணோக்கி நின்றான். வர்த்தக சங்கத்திற்கு ஏற்பட்டிருந்த பணக்குறையை ஒருவாறு தீர்க்கத் தயாராயிருந்தான். பர்த்வான் மிதுனபுரம் சித்தகாங்க் ஆகிய மூன்று ஜில்லாக்களை ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்கத் தீர்மானஞ்செய்து கொண்டிருந்தான். ஆதலால் மீர்ஜாபரை எவ்விதத்திலாவது சிம்ஹாஸனத்தை

விட்டு இறக்கி மீர்காஸிமை அதில் ஏற்றிவைக்க வேண்டும் என்று ஹால்வல் முதலிய நிர்வாகசபையார் சூழ்ச்சி செய்ய லாயினர். அவ்வாறுசெய்யக் காரணக்களைத்தேட ஆரம் பிக்குங் காலத்தில் குற்றம் யாதொன்றும் தோன்றவில்லை. மீர்ஜாபர் ஆட்சி சரியானதல்ல என்றும் அவன் குரூரமுள்ள எஜமானன் என்றும் பேராசைபிடித்தவன் என்றும் ஆத லால்தான் சங்கத்தின் வருவாய்க்கு நஷ்டம் ஏற்பட்டதென் றும் கூறலாயினர். ஆனால் நஷ்டம் ஏற்பட்டதற்குக் கார ணம் வியாபார சங்கத்தின் அநீதிகள் என்று மீர்ஜாபர் பலமுறை தெரிவித்திருந்தும் அவர்கள் அதைக் கவனிக்க வில்லை. மீர்ஜாபருக்கு வருமானம் கொடுக்கக் கூடிய வியா பாரங்களில் திருட்டுத்தனமாய்த் தலையிட்டுக்கொண்டிருந் தனர் ஆங்கில உத்தியோகஸ்தர்கள். இவைகளை யாலோ சிக்காமல் மீர்ஜாபரின்பேரில் குற்றஞ் சுமத்தினவுடன் அவன் காலியாடுக்கு முன்னிலையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினன். அதன் கருத்து பின் வருமாறு:—

"இங்கிலீஷ்க்காரர்கள் என்னைச் சிம்மாசனத்தில் அமர்த்தினர்கள். உமக்குப் பிரியமானல் நீர் என்னை நீக்கிவிடலாம். நீங்கள் உடன்படிக்கைகளைச் சரிவர நடத்து கின்றீர்களில்லை. நான் அப்படி செய்யத்துணியமாட்டேன். அப்படி செய்ய நினைத்திருந்தால் இருபதினயிரம் சிப்பாய் களைச்சேர்த்து உங்களுடன் போர்புரிந்திருப்பேன். ஆனல் என் மகன் சோடாசாஹெப் என்னும் மீரான் உங்களுடைய நடவடிக்கைகளைப் பற்றிப் பன்முறை எச்சரிக்கை செய்திருக்கிறன்."

ஸுரஜ் உத்தௌலாவை யொழித்து மீர்ஜாபரைத் தாங்கி நின்ற வர்த்தகசங்க உத்தியோகஸ்தர்களுக்கு அந்த மீர்ஜாபரைக் கீழேதள்ளி மீர்காஸிமை ஆளாக்கி வைப்பது

கஷ்டமாய்த்தோன்றவில்லை. ஒரு ராஜ்யத்தைச் சிருஷ்டித்துக்கொண்ட ஆங்கில வியாபாரிகளுக்கு ஒரு ராஜாவைச் சிருஷ்டிப்பது என்ன கடினம்! அது ஒரு விளையாட்டுத் தொழில்தான். இவ்விஷயம் இங்கிலாந்திய நிர்வாக அங்கத்தினருக்கும் தெரிவிக்கப்பட்டது. அதைக்கேட்டவர்கள் வங்காளத்திய அதிகாரிகளின் நடவடிக்கைகளைக்கண்டித்தனர். அனேக ஆயிரமைலுக்கு அப்புறம் இருந்த அக்காலத்தவர்களின் வார்த்தைக்கு என்னமதிப்புண்டு? ஒருகால் கேள்வி புறப்பட்டால் வேலையைராஜிநாமா செய்ய ஒவ்வொருவரும் தயாராயிருந்தனர். ஏனெனின் நமது பரதகண்டமாகிய அரிய காமதேனுவை யண்டினவர்களுக்குப் பொருளுக்குக்குறைவேயில்லை என்று முதற் பாகத்தில் குறித்திருக்கிறோம். அதிலும் முகலாய மன்னர்களின் காலத்தில் அரசர்களால் கொடுக்கப்பட்டது ஒரு பங்கென்றால் ஆங்கிலேயர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது நாற்பத்தைந்து. "ஆங்கிலேயர்களுக்கு ஒரு அங்குலம் கொடுத்தால் ஒரு எல் அஃதாவது 45 அங்குலங்கள் எடுத்துக்கொள்வார்கள்" என்பது ஆங்கிலப் பழமொழி. ஒவ்வொரு ஆங்கில உத்தியோகஸ்தனும் கம்பெனி அலுவலுடன் சொந்த வியாபாரமும் செய்துகொண்டிருந்தான். இதைப்பற்றி இத்தேசத்திலும் இங்கிலாந்திலும் அடிக்கடி புகார்கள் கிளம்பின. ஆயினும் அவர்கள் தொழிலை விடவில்லை. ஆதலால் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தக்கவாறு தனிகர்களானார்கள். க்ளைவ் முதல் ஒவ்வொருவரும் நவாப் அந்தஸ்தையே நமூனாவாக வைத்துக்கொண்டிருந்தனர். இவ்விடத்தில் குமாஸ்தா வேலை செய்த ஆங்கிலர்களின் மனைவிகளும் மக்களும் இங்கிலாந்தில் பகட்டின ஆடை ஆடம்பரங்களும் படாடோபங்களும் சமூகவாழ்க்கையில் பெற்ற ["ராங்க்"

(Rank)] அந்தஸ்துக்களும் சாதாரண ஜனங்களுக்கும் சந்தேகத்துக்கு இடங்களாயின. அவைகளைக் கவனித்துக் கீழிந்திய வர்த்தக சங்கத்தின் உண்மையான நிலைமையை விசாரிக்க வேண்டுமென்று பல கிளர்ச்சிகள் தோன்றின. அவைகளைப்பற்றி வேறோரிடத்தில் கூறுவோம்.

இந்நிலைமையில் எவ்விதமாகவே யாயினும் வேண்டாத மனைவி கைப்பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பதேபோல் ஏதோ சில குற்றங்களைக் குறிப்பிட்டு மீர்ஜாபர் நவாப்பதவியினின்று நீக்கப்பட்டான். இவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டது **டாரன்ஸ்** என்பவர்போன்ற நூலாசிரியர்களால் "நம்பிக்கைத் துரோஹம்" என்றே கூறப்படுகின்றது.

ஏற்கனவே தீர்மானஞ் செய்திருந்த வண்ணம் மிர்காஸிம் நவாப்பு பதவியை யடைந்தான். உடனே ஆங்கிலேயர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதைகள் நடைபெற்றன. இந்த மரியாதைகளை லஞ்சம் என்றுதான் கூறுவது நியாயமாகும். இவ்விஷயமாய் க்ளைவ் பிரபுவின் அபிப்பிராயம் (1772௵ மேமீ 26உ-ல்) ஒரு சாக்ஷியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் ஆங்கில அரசாங்கத்துக்கும் ஆங்கில வியாபார சங்கத்தின் உத்தியோகஸ்தர்களுக்கும் யாதொரு ஒப்பந்தமும் விதியும் இல்லாதபடியாலும் தனக்குக் கிடைத்த வருவாய்களின் ஜாபிதாவை அடிக்கடி தன் எஜமானர்களுக்குத் தெரிவித்தபடியாலும் தான் பெற்றுக்கொண்ட துகைகள் நியாய முறையில் சம்பாதிக்கப்பட்டது என்றான்.

வியாபாரச் சங்கத்துக்கு வேண்டியவைகளுள் முக்கியமான "நாணய அச்சு" விஷயமான உத்தரவு பிறப்

பிக்கப்பட்டது. இவ்விஷயமாய் ஸுராஜ் உத்தௌலாவின் காலம் முதல் அநேக குறைகள் இருந்தன. நவாப் ஸுராஜ் உத்தௌலா நாணயங்களை அச்சிடக் கூடாதென்றே தடுத்துக் கொண்டிருந்தான். பிறகு கால அளவில் சில நாணயங்களை மட்டில் போட்டுக்கொள்ளும்படி சம்மதித்தான். ப்ளாஸி யுத்தத்திற்குப் பிறகு (1757ஹு ஆகஸ்டுமீ 19உ) முதல் கிழிந்திய வர்த்தக சங்க நாணயங்கள் கிளம்பின.

ஆயினும் சுவதேச தனநிதிக்காரர்களாகிய ஸேட்டுகளுடன் போட்டியிடக் கூடவில்லை. நவாப்பின் அதிகாரத்துக்குள்ளடங்கிய குடிகள் ஆங்கில நாணயங்களை மதிக்கவில்லை. ஒவ்வொரு நாணயத்துக்கும் வட்டம் ஏற்பட்டிருந்தது. மாற்றப்படுங்காலத்தில் குறைந்த துகைக்கே ஒப்புக்கொள்ளப்பட்டது. இது ஆங்கிலேயர்களுக்குப் பெரிய குறையாய்த்தோன்றிற்று. ஆதலால் மிர்காஸிம் அரியணையேறிய உடன் ஜமீன்தார், குடிகள், ஸேட்டுகள் முதலியவர்கள் எல்லோரும் ஆங்கில நாணயத்தை நவாப் ரூபாயைப் போலவே செலாமணியாய்க் கொள்ளல்வேண்டும் என்று ஸ்ரீமுகம் விடுத்தப்பட்டது. மீர்ஜாபரைக் காப்பாற்றுவதற்காக ஆங்கில சைன்னியம் ஒன்று தேவையானபடியால் அதற்குப்போதுமான வருவாயளிக்கக்கூடிய பர்த்வான், மிதுனபுரம், சித்தகாங்கு ஆகிய மாகாணங்கள் ஆங்கிலேயர்களுக்கு தானஞ்செய்யப்பட்டன. அவைகளின் ஜமீன்தாரர்களுக்கு ஸநந்துகள் பிறப்பிக்கப்பட்டன. அவைகளினால் அவ்விடங்களிலுள்ள குடிகளும் ஜமீன்தார்களும் ஆங்கிலேயர்களிடம் ஒப்புவிக்கப்பட்டனர். ஸேட்டுகள், பணக்காரர்கள், ஏழைகள், முதலிய எல்லோரிடமிருந்தும் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. அதனால் ஆங்கி

லேயர்களுக்குக் கொடுக்கவேண்டிய பொக்கிஷமும் நிரப்பப் பட்டது.

மிர்காஸிம் தனது ஆட்சியை நடத்திக்கொண் டிருக்கையில் ஆங்கிலேயர்களுள் இரண்டு கக்ஷிகளிருந்தன. ஒருகக்ஷி மீர்ஜாபரை நீக்கியது தவறென நினைத்தது. மற் றொன்று மிர்காஸிமை ஆமோதித்து நின்றது. ஆதலால் மிர்காஸிமை ஆமோதித்தவர் எப்பொழுதும் அவனுடைய நன்கொடைகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர். அவனிட மிருந்து வியாபாரசுதந்திரங்களை மேலும் மேலும் அடைந்து கொண்டிருந்தனர். மிர்காஸிமுக்கு விரோதிகள் அவனு டைய ஆட்சியின் குறைகளையே கவனித்து நின்றனர். மேலும் மொகல் சக்கிரவர்த்தி, ஷாஆலம், பீஹாரிலேயே தங்கியிருந்தமையால் அடிக்கடி கலகங்கள் நேரிட்டுக்கொண் டிருந்தன. ஆதலால் ஆங்கிலேயர்களால் அனுப்பட்ட கார்னுக் என்கிற தளகர்த்தனுடன் புதிய வங்காள நவாப் டெல்ஹி சக்கிரவர்த்தியையும் அயோத்தியை வஜீரையும் எதிர்த்துத்தாக்கி முற்றிலும் முறியடித்தான். ஆயினும் ஷாஆலம் என்பவனை மொகலாய சக்கிரவர்த்தியென ஒப்புக்கொண்டு கார்னுக் மிர்காஸிம் ஆகிய இருவர்களும் அவனைப் பாடலிபுரத்துக்கு அழைத்துக்கொண்டு போய் ஒரு தர்ப்பார் கூட்டினார்கள். அதில் மொகலாய சக்கிர வர்த்திக்குத் தகுந்தபடி மரியாதைகள் செலுத்தப் பட்டன. காணிக்கைகளளிக்கப்பட்டன. அவனிடமிருந்து மிர்காஸிம் ஸநந்துகள் பெற்றான். ஆனால் ஆங்கிலேயர் களும் தங்களுக்கு ஸநந்துகள் கேட்டார்கள். ஆனால் கப்பங் கட்டத்தயாராயில்லை. ஆதலால் மொகல் சக்கிரவர்த்தி ஸநந்து கொடுக்க மறுத்துவிட்டான். சத்துருக்களின்

இடையில் இருந்த போதிலும் அவன் தன் கௌரவத்தை விடவில்லையென்பது போற்றத்தக்கது.

நிற்க; ஷா ஆலம் மேலேகுறிப்பிடப்பட்ட மூன்று ஜமீன் தாரிகளுள் பர்த்வான் ராஜா தனக்கு விரோதியான பிர்பூம் ராஜாவுடனும் கூடிக்கொண்டு மாஹாராஷ்டிரர்களின் உதவியைத் தேடி அதன் பின்னர் வங்காளத்திய புதிய நவாப்பையும் ஆங்கிலேயர்களையும் எதிர்த்துத்தாக்குவதற்கு முயற்சி செய்தான். இதற்குதவியாய் நின்றவன் நந்த குமார்ராய் என்பான். [இவன்தான் முன்னொருகால் சந்திர நாகூரை ஆங்கிலர்கள் எதிர்த்தகாலத்தில் நவாப் ஸுராஜுக்குப் பிரதிகூலமாய் கோட்டையை விட்டுக்கொடுத்தவனாயினும் இச்சமயத்தில் தேசாபிமானம் பெற்று தான்முந்தி செய்த குற்றத்துக்குப் பரிகாரஞ்செய்ய எண்ணினான் போலும். மேலும் ஆங்கிலவியாபாரிகள் அடிக்கடி வங்காள நவாப்பை மாற்றிக்கொண்டிருந்ததும் உடன்படிக்கைகளை மீறி நடந்து கொண்டிருந்ததும் நாட்டையே ஆக்கிரமித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்ததும் நாளடைவில் புலப்பட்டமையால் தன் தேசத்தைக்காப்பாற்ற வேண்டுமென்ற மன உறுதி அவனுக்கு ஏற்பட்டது போலும்.]

நிற்க; மொகலாய சக்கிரவர்த்திக்கும் ஆங்கில கவர்ணரான வான்ஸிடார்டுக்கும் சில ரகசிய உடன்படிக்கைகள் நடந்துகொண்டிருந்தன. ஷா ஆலம்தான் டெல்லிக்குப் போவதற்கு வேண்டிய உதவி தனக்குச்செய்தால் ஆங்கிலேயர்களுக்கு வங்காளம் பிஹார் ஒரிஸ்ஸா ஆகிய மூன்று மாகாணங்களின் திவானி என்னும் வரிவசூல் செய்யும் அதிகாரத்தைச் சாசுவதமாய்க் கொடுத்துவிடுவதாய்ச் சொன்னான். வான்ஸிடார்டு தன்னுடைய சைன்னியத்தை வெகுதூரம் அனுப்ப சம்மதிக்கவில்லை. இவ்விஷயங்களைக்கேட்ட மிர்

காஸிம் சினங்கொண்டான். ஏனெனின் ஆங்கிலேயர்களுக்கு திவானி அதிகாரம் கிடைத்தால் அவனுடைய பதவி போய்விடும். அதுமுதல் ஆங்கிலேயர்களைத் துலைத்து விடவேண்டுமென்று தீர்மானஞ் செய்துகொண்டான். தன் செலவுகளைக் குறைத்துச் சைன்னியபலஞ் சேர்த்தான். சைன்னியத்தில் உபயோகமில்லாதவர்களை ஓட்டிவிட்டுப் போரிடுவதற்குத் தகுந்தவர்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டான்.

ஜமீன்தார்கள் முதலியவர்களால் சேரக்கூடிய வரிகளையும் கப்பங்களையும் வசூல்செய்தான். மூர்ஷிடாபாத் கல்கத்தாவுக்குச் சமீபமானதனால் அதைவிட்டு இன்னும் முன்னூறுமைல்களுக்கு அப்புறம் உள்ள மாங்கீர் என்ற இடத்தைத் தலைநகராக்கிக் கொண்டான். அவ்விடத்தில் யுத்ததளவாடங்கள் தயார்செய்யவேண்டிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தினான். இவைகளுக்குதவியாய் நின்றவன் ஒரு ஐரோப்பியன். அவனை இந்நாட்டுச் சரித்திரத்தில் ஸம்ரு என்று பெயரிட்டழைப்பது வழக்கம்.

இம்மட்டில் யுத்தத்திற்குத் தயார்செய்து கொண்டிருக்கையில் ஏற்கனவே பன்முறை கூறியவாறு ஆங்கில உத்தியோகஸ்தர்களால் ஏற்பட்ட வியாபாரப்போட்டியைப்பற்றி விசாரணை செய்ய ஆரம்பித்தான். ஆங்கில வர்த்தக சங்கத்தார்கள் ஹுக்லிக்கரையை யடைந்ததுமுதல் வர்த்தக சங்கத்தின் கொடியையும் முத்திரையையும் பெற்ற படகுகளுக்குச் சுங்கவரி இல்லாமலிருந்தது. ஏனெனின் மொத்தமாய் வருஷவாரி மூவ்வாயிரம் ரூபாய் ஆங்கிலேயர்களால் நவாப்புக்குக் கட்டப்பட்டது. ஆனால் இந்த விதியை ஆங்கில வியாபார உத்தியோகஸ்தர்கள் கம்பெனிக்குச் சம்பந்தமன்றி தாங்களே சொந்தமாய்ச்செய்துகொண்டி

ருந்த வியாபாரத்திற்கும் உபயோகப்படுத்தினார்கள். நவாப் ஸுராஜ் உத்தௌலா இதை ஒருவாறு தடுத்துக் கொண்டிருந்தான். மீர்ஜாபர் நவாப்பாக நியமனம் பெற்ற பொழுது இத்தடையை நீக்கிவிட்டான். ஆனால் நீண்ட காலத்திய வழக்கம்போல் சுவதேசிகள் சுங்கவரி கொடுத்து கொண்டிருந்தனர். ஆங்கிலேயர்களுக்குச் சுங்கவரியில்லாத தனால் உப்பு, புகையிலை, வெற்றிலை, அரிசி, சர்க்கரை, நெய் முதலிய முக்கியமான பொருள்களுக்கு அவர்களால் விலை குறைக்கப்பட்டது. சுவதேசி வியாபாரிகள் அவர்களுடன் போட்டியிடக்கூடவில்லை. ஆங்கிலர்களுடைய வியாபாரம் விருத்தியாயிற்று. ஆங்கிலர்களைப்போல் உடைகளைத் தரித்துக்கொண்ட வங்காளிகள் சிலர் மட்டில் வியாபாரத் தினால் பயனடைந்தார்கள். இதரர்களின் கதி வியசனிக்கத் தக்கதாயிற்று. இதனால் நவாப்புக்கு வருமானங் குறைந்து விட்டது. அதை ஆங்கிலேயர்கள் நன்குணர்ந்தார்கள்.

கவர்ணர் வான்ஸிடார்டும் அக்காலத்தில் அவனது சபையிலிருந்த வாரன் ஹேஸ்டிங்கஸ் என்பவனும் மேலே கூறப்பட்ட குறைகளை நீக்க முயன்றார்கள். ஆங்கிலேய உத்தி யோகஸ்தர்களுக்கு லாபகாரமான முறையை விட்டுவிட சம்மதமில்லை. மேலும் நவாப் என்பவன் தங்களுடைய இனத்தாருக்கு அடிமையானவனானதனால் தங்களுடைய சௌகரியங்களை முதலில் கவனிக்கவேண்டுமே யல்லாது சுவ தேசிகளைக் கவனிக்கக்கூடாதென்கிற அகம்பாவங் கொண்ட னர் ஆங்கிலர். கவர்ணர் சபையிலோ சொந்த வியாபாரத்தை நாடினவர்கள் அதிகமாயிருந்தனர் (மஜாரடி). ஆகையால் நவாப்பினால் குறிப்பிடப்பட்ட குறைகள் கவனிக்கப்பட வில்லை. இதைக்கண்ட மீர்காஸிம் சுவதேசிகளுடைய வியா பாரத்துக்கும் சுங்கவரியை நிறுத்திவிட்டான். ஆதலால் சுவ

தேசிகளின்போட்டி கிளம்பிற்று. ஆங்கிலேயர்களுக்குஅகங் காரம் அதிகமாயிற்று. கவர்ணர் சபையில் வாக்குவாதங் கள் உண்டாயின. நவாப் செய்தது தவறென்றும் அவனுக்கு யாதொரு அதிகாரமில்லை யென்றும் உடன்படிக்கைப்படி மிர்காஸிம் பொம்மைபோலிருக்க வேண்டியவனென்றும் அவனைத் தள்ளிவிடவேண்டுமென்றும் மறுபடி வேறொரு பொம்மையைக் கொண்டுவரவேண்டுமென்றும் வியவகாரங் கள் கிளம்பின. வாரன் ஹேஸ்டிங்கஸ் மட்டில் நவாப் செய்தது நியாயமென்றான். அதனால் வசைமொழிகளும் அடிதடிகளும் தோன்றின. ஆயினும் இறுதியில் அம்பத், ஹே, என்கிற இரண்டு அதிகாரிகள் நவாப்பினிடம் தூதர் களாக அனுப்பப்பட்டனர்.

இவ்விஷயங்களைக் கேட்டவுடன் நவாப் தான்செய்த உத்தரவைத் ரத்து செய்யமாட்டேன் என்று தெரிவித் தும் மேற்கண்ட இருவர்களும் மாங்கீருக்குச் சென்றனர். அவர்களுக்கு மரியாதைகள் செய்தபோதிலும் அவர்களை எப்பொழுதும் தன் பார்வையிலே வைத்திருந்தான். ஏனெ னின் ஸூராஜ் உத்தௌலாவை ஆங்கிலேயர் நடத்திய கதை அவன் ஞாபகத்தில் இருந்தது. அதற்குத்தக்கவாறு ஒரு கப்பலில் ஆங்கில சைன்னியத்துக்கு உதவியாய் துப்பாக்கிகள் வந்து சேர்ந்துகொண்டிருந்தன. அவைகளைக் கண்டவுடன் சந்தேகம் பலத்தது. ஆதலால் ஹே என் பானை ஜாமீனாப் நிறுத்திவைத்துக்கொண்டு மற்றொருவனைக் கல்கத்தாவுக்குப் போக உத்தரவளித்தான்.

ஐந்தாவது சருக்கம்.

பாட்னா படுகொலை.

பாடலிபுரத்திற் கருகாமையிலிருந்த ஆங்கிலத் தொழிற்சாலைகளுக்குத் தலைவனாயிருந்த எல்லிஸ் என்பவன்

மேற்கண்ட விஷயங்களைத் தெரிந்துகொண்ட பிறகு யுத்தம் நேரிடுவது திண்ணமென்று நினைத்து பாடலிபுரத்துக் கோட்டையைப் பிடித்துக்கொண்டாலன்றி தானும் தனது மனிதர்களும் தப்பித்துக்கொள்ளமுடியாதென நினைத்து பாடலிபுரத்தைத் திடீரென எதிர்த்துக் கைவசமாக்கிக் கொண்டான். நவாப்பின் சைன்னியம் வரும்வரை அதிலுள்ளகுடிகளும் ஆங்கிலேயர்களும் கைகலந்து போரிட்டுக் கொண்டிருந்தனர். நவாப்பின் சைன்னியம் அவ்விடத்தில் தோன்றியதும் ஆங்கிலேயர்கள் ஓட ஆரம்பித்தார்கள்.

இம்மாதிரி காஸிம்பஜார் என்ற இடத்திலும் கலகம் நடந்தது. அவ்விடத்திலும் நவாப்பின் சைன்னியம் ஜயம் பெற்றது. அதன்பயனாய் ஆங்கிலேயர்களைக் கண்டவிடத்தில் எதிர்த்துக் கைதியாக்கும்படி பிரசுரம் பிறந்தது. அதற்கு முதல்பலி ஆமியாத் என்பவன்தான். இதைக் கொடூரமான செயல் என்று கூறுவது சகஜம். ஆனால் யுத்தத்தில் தர்மத்தை வகிக்கின்றவர்களைக் காண்பதரிது. இருதரத்தாருக்கும் குரோதம் புகைந்து கொண்டிருந்தது. ஸுராஜ் உத்தெளலா நவாப் என்ற பட்டம் பெற்றது முதல் கொடூரச் செயல்களும் கிருத்திரமங்களும் ராஜதுரோகங்களும் இரு பக்கங்களிலும் ஒன்றின்பின் ஒன்றாய்த்தொடர்ந்து கொண்டிருந்தன. ஆங்கிலேயர்கள் தாம் வியாபாரத்திற்காக இந்நாட்டில் வந்தது முதல் நியாயமான முறையிலிருந்த தாகவும் ஆரியாவர்த்தத்தில் சரியான சக்கிரவர்த்தியில்லாததனால் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே கோட்டைகளைக்கட்டிக்கொண்டு துப்பாக்கிகளை ஏற்றிவைத்துக்கொண்டனர் என்றும் சொல்லிக்கொண்டனர். முஸ்லிம்களோவெனின் இந்நாட்டுக்கு அதிபதி தாங்கள் என்றும் தங்களுக்கிஷ்டப்படி இல்லாதவர்களைத் துறத்தவேண்டியது கடமை என்

றும் சொல்லிக்கொண்டனர். இடையிலிருந்த ஆரியமக்களுள் பலர் நாட்டு விஷயங்களைச் சரிவர கவனித்தனரில்லை, அல்லது வேறு சிலர் முஸ்லிம்களின் மதத்தை வெறுத்த தனுல் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களைக் கவனித் தனரில்லைபோலும். எது எப்படியிருந்தாலென்ன? நமது பரதகண்டம் அன்னியநாட்டுக் கிரஹணத்துக் குட்படலா யிற்று. ஆங்கிலர்கள் எல்லோரும் நவாப்பை நசுக்கி விட வேண்டுமென்று கூக்குரலிட்டனர். முஸ்லிம்களோ ஆங்கி லேயர்களை அழித்துவிடத் தயாராயினர். இடையிலுள்ள ஆரியமக்களுள் பலர் துன்பமடைந்தனர்.

கவர்ணர் வான்ஸிடார்டும் அவனுடைய சபையோரும் ஒன்றுசேர்ந்து மிர்காஸிமை நீக்கிவிட்டு பழைய மீர்ஜாபரே நவாப் என்று பிரசுரஞ் செய்தனர். மீர்ஜாபர் அல்ப சந்தோ ஷங்கொண்டுத் தன் விதியை மறந்து மதியை இழந்து மிர் காஸிமுக்கு விரோதியாய் ஆங்கிலேயர்களுடன் கூடிப் போருக்குத் தயாராறுன். ஆங்கிலேயர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரேமனத்துடன் மிர்காஸிம் சைன்னியங்க ளுடன் போரிட்டு முடிவில் மாங்கிருக்குச் சென்றனர். மிர்காஸிம் பாடலிபுரத்துக்கு ஓடிவிட்டான். மாங்கீர் பிடிக்கப்பட்டது. உடனே பாடலிபுரத்தில் தன்வசத் திலிருந்த ஐரோப்பியக் கைதிகள் யாவரையும் கண்டங் கண்டமாய்த் துண்டித்து விட்டான். இதற்கு ஏற்பட் டவன் முன்குறிப்பிடப்பட்ட ஐரோப்பிய ஸம்ருதான். ஏனெனின் நிராயுதபாணிகளான கைதிகளை சுவதேசிகள் கொல்லத்துணியவில்லை. இந்த பாட்ளு படுகொலை சரித்திரத் தில் அடிக்கடி கண்டிக்கப்படுகின்றது. கொலையுண்டவர் களுக்கு யாம் அனுதாபங் காட்டக் கடமைப்பட்டிருக்கி ரும். ஆனல் இவ்வுலகில் இது கடைசியானதல்ல. இப்

பொழுதும் பல படுகொலைகள் நடைபெற்று வருகின்றன. நாகரிகமும் உயர்தரமான அரசாட்சிகளும் உலாவிக்கொண் டிருக்கும் ராஜ்யங்களிலும் படுகொலைகள் நடக்கின்றன. நமது பரதகண்டத்தில் பாஞ்சாலத்தில் சில ஆண்டுகளுக்கு முன் கூட பெருங் கொலைகள் புரியப்பட்டன. அவைகளும் சரித் திரத்தில் வரையப்படும். எக்கோலையாயினும் யாவராலா யினும் அக்கோலைநிந்தனை என்று மறவாது. அஹிம்சை யைக்காட்டிலும் உயர்ந்த தர்மம் உலகிலில்லை என்பது ஆரிய மத தர்மமாகும்.

நிற்க ; மிர்காஸிம் தான் இனி பிழைத்திருக்க முடியா தென்று நினைத்துத் தனக்கு வேண்டிய தனம் முதலிய வைகளுடன் குடும்ப சமேதமாய் அயோத்தியையில் அடைக் கலம் பெற்றான். அயோத்தியையின் நவாப் வஜீரும் ஆங்கி லேயர்களைப் பழிக்குப் பழிவாங்கத் தயாராயிருந்தனன். மேலும் ப்ளாஸி யுத்தம் முதல் பாட்ஞ படுகொலைவரை விசுவாசத்துடன் போர்செய்த ஆங்கில சிப்பாய்களுள் பலர் அதிருப்தியுள்ளவர்களானார்கள். அவர்களுள் ஒத்துமை யில்லாமலிருந்தது. அவ்வமயத்தில் நவாப் வஜீரும் ஷா ஆலமும் பாடலிபுரத்தை எதிர்த்துத் தாக்கினார்கள். ஆனால் முற்றிலும் தோல்விபெற்றனர்.

நவாப் வஜீர் இனி மிர்காஸிமைக்கைவிட்டு மீர்ஜாபரின் சகாயத்தைக் கோரவேண்டுமென எண்ணி ஆங்கிலர்களுடன் சமாதானத்தைத் தேடினான். அதற்கு முதற்படியாய் மிர் காஸிமையும் ஸும்ருவையும் தங்களிடம் ஒப்புவித்துவிடும்படி ஆங்கிலேயர்கள் கேட்டார்கள். அடைக்கலம் புகுந்தவர் களைக் காட்டிக்கொடுப்பது கொடும்பாவம் என்றான் நவாப் வஜீர். தவிர, மழைகாலமும் நெருங்கிற்று. ஆதலால் வஜீர் அயோத்தியைக்குத் திரும்பிவிட்டான். ஆங்கிலர்களிடத்

தில் உழைத்த சிப்பாய்கள் கலகஞ்செய்ததற்காக ஹெக்டர் மன்ரோ என்பவனால் தண்டனை செய்யப்பட்டார்கள். எஞ்சினவர்கள் விசுவாச முள்ளவர்களானார்கள். மாரிகாலமும் மாறிற்று. பக்ஸார் என்கிற இடத்தில் மீண்டும் யுத்தம் நடந்தது. நவாப் வஜீர் மீண்டும் தோல்வி பெற்றான். ஆதலால் அயோத்தியைவிட்டு ரோஹிலர்களுடைய பிரதேசமாகிய ரோஹில்கண்டுக்கு ஓடிவிட்டான். ஷா ஆலம், தன்னை வஜீர் கைதியாக அடைத்து வைத்திருந்தான் என்று சொல்லி ஆங்கிலேயர்கள் பக்கம் சேர்ந்துகொண்டான். ஆதலால் அவனுக்கு அபயம் கொடுக்கப்பட்டது. அயோத்தியையும் ஆங்கிலேயர்களுடைய வசமாயிற்று.

அயோத்தியை

ஆங்கில வர்த்தக சங்கத்தாருக்கு ப்ளாஸி யுத்தம் வங்காளமாகாணத்தையளித்தது, பக்ஸார் யுத்தம் அயோத்தியைக் கொடுத்தது. இவைகளினால் ஆரியாவர்த்தத்தில் பாதி "கம்பெனி" ஆளுகைக்குட்பட்டது. இனி கால அளவில் பரதகண்டம் பூராவும் அன்னியநாட்டார் கண்ணோக்கத்தினின்று நீங்கி அவர்களுக்கு அடிமையாகவே மடிந்தது ஆச்சரியமன்று. ஏனெனின் அயோத்தியை இக்கண்டத்திற்குத் திலகம்போன்றது. அதை அடைந்தாலன்றி எந்த மன்னனும் இந்த நாட்டை ஆளமுடியாது. அவ்விடத்தில் தோன்றிய ஆரிய சக்கிரவர்த்திகள் பரதகண்டத்தை ஒருகுடையின் கீழ் ஆண்டனர். ராம ராஜ்யத்துக்கு ஆதாரம் அயோத்தியை அன்றோ! அத்தேசத்தைப்பற்றி ஆங்கில அதிகாரி ஒருவர் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார். "அயோத்தியையைக் காட்டிலும் இந்தியாவின் வேறெந்தப்பாகமும் இங்கிலாந்தில் பிரஸ்தாபம் செய்யப்பட்டதில்லை. * * * அதைப்போல்

ஆங்கிலேயருக்கு திரவியம் வேண்டியசமயத்தில் செவிலித் தாயைப்போன்றது வேறொன்றுமில்லை". மீண்டும் "அதிலுள்ள ஜனங்களுள் ஐந்தி லொருபாகம் ஹிந்துக்கள். அவர்கள் இந்திய காலாட்படைகளுள் உயர்தரமானவர்கள்." அந்த அயோத்தியை படான் அரசுக்குள் முதலிலும் மொகலாய் அரசர்களுக்குள் பிறகும் அடங்கியிருந்த காலத்தில் ஐசுவரியம் கங்கைநதிப் பிரவாகத்தைப்போல் பெருகிற்று. ஔரங்கஜீப் இறந்தகாலத்தில் அது தனியரசான விஷயத்தை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அதற்கு ராஜபிரதிநிதியாயிருந்த ஸ'ஆ'தத்கான் இறந்த பிறகு ஸப்தர் ஜங்கும் அவனுக்குப்பிறகு ஷுஜா உத்தௌலாவும் வஜீராக வாழ்ந்தனர். இந்த வஜீர்காலத்தில்தான் அயோத்தியை அன்னிய நாட்டார்கள் கைவசப்பட்டது. ஏனெனின் ஷுஜா உத்தௌலா பலவாறு முயன்றும் தன் பழைய நிலைமை கிட்டாதென்று எண்ணி ஆங்கிலர்களுக்குச் சரணுகதி செய்தான் (1764). அதன் பிறகு அத்தேசத்தின் வரலாற்றை வேறோரிடத்தில் எடுத்துக் கொள்வோம்.

இவ்வாறு தென்னுட்டிலும் வடநாட்டிலும் ஆங்கிலேய ஆதிக்கியம் ஒரே சமயத்தில் ஏற்பட்டுவிட்டது. மேலும் வங்காளத்திய நவாப் மீர்ஜாபர் 1765 ஜனவரியில் இறந்துவிட்டான். முன் அத்தியாயங்களில் வங்காளத்திய நவாப்மார்களின் வரலாற்றை ஏற்கனவே கூறியிருப்பதைவிட விஸ்தாரமாய்த் தெரிவிப்பதற்கு சாவகாசமில்லை. ஆயினும் முக்கியமான அம்சங்கள் விசதமாய்க் கவனிக்கப்பட்டிருக்கின்றன. அம்மாகாணத்தில் ஆங்கிலேயர்களுடைய ஆட்சிக்கு அடிக்கோலூன்றிய க்ளைவ் 1760-ல் இங்கிலாந்துக்குச் சென்ற விஷயம் வாசகர்களின் ஞாபகத்திலிருக்கலாம். அது முதல் ஐந்து ஆண்டுகளுள் இக்கண்டத்தில்

ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான இடங்களில் நடந்த விருத்தாந்தங்களும் புதிதாய்த் தோன்றி கொண்டிருந்த சௌகரியங்களும் இங்கிலாந்தை எட்டிக்கொண்டிருந்தன. இவ்விடத்திலிருந்த ஆங்கில உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய வியாபார விருத்திக்காகவும் தம் நாட்டின் சிறப்புக்காகவும் தம் அரசனின் பெருமைக்காகவும் தம் இனத்தாரின் கௌரவத்துக்காகவும் பாடுபட்டுக்கொண்டிருப்பதாய் நினைத்துக்கொண்டிருக்கையில் இங்கிலாந்திலுள்ள கம்பெனி நிர்வாகச் சபையார் தங்களுடைய வியாபாரம் செவ்வனே நடை பெறவில்லை என்றும் இந்நாட்டின் அரசர்களின் குழப்பங்களில் தலையிட்டுக்கொண்டு மேன்மேலும் வீண் தொந்தரைகள் உண்டாக்கப்பட்டன என்றும் மீர்ஜாபரை நீக்கி மிர்காஸிமை நவாப் எனச்செய்தது தவறென்றும் மிர்காஸிம் சூக்ஷ்ம புத்தியுள்ள தேச பக்தியுள்ளவன், ஆதலால் பல யுத்தங்கள் நேரிட்டன என்றும் தீர்மானஞ் செய்துகொண்டனர்.

மேலும் இங்கிலாந்திலுள்ள சாமானிய ஜனங்களுக்கு ஆங்கில வியாபாரிகளின் குமாஸ்தாக்களின் செல்வம் வியப்புக்கும் நகைப்புக்கும் பொறாமைக்கும் துவேஷத்துக்கும் இடங்கொடுத்தது. இவ்விஷயத்தை முன்னொரு முறை குறிப்பிட்டிருக்கிறோம். (இனியும் அடிக்கடி கூறுவோம்.) அதற்குக்காரணம் அவர்கள் திருட்டுத்தனமாய்ச் செய்த வியாபாரம் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஆறுவது சருக்கம்.

புதிய க்ளைவ்.

அச்சமயத்தில் "பழைய" க்ளைவைத் தவிர வேறொருவராலும் சீர்திருத்தம் நடத்தப்பட முடியாதெனத் தீர்மானஞ்

செய்த, கம்பெனி நிர்வாக சபையோர் க்ளேவுக்கு "பிரபு" என்ற பட்டப்பெயர் சூட்டி அவனை இவ்விடத்திற்கு மீண்டும் அனுப்பினார்கள். அவன் கல்கத்தாவுக்குப் போகும் வழியில் சென்னையில் தங்கிய காலத்தில் மிர்ஜாபர் இறந்துவிட்டான் என்றும் அவன் மகன் நஜ்மத் உத்தௌலா வார்சு கிரமத்தில் நவாப் என்று விளங்கினாலும் அவனிடம் புதிய உடன் படிக்கைகள் செய்துகொண்டுதான் கல்கத்தா ஆங்கில வர்த்தக அரசாங்கத்தினர் அவனை ஒப்புக்கொண்டனர் என்றும் தெரிந்துகொண்டான். மிர்ஜாபர் இறந்துபோன விஷயம் அவனுக்குச் சந்தோஷம் விளைத்தது. முன் அவனிடம் பெற்றுக்கொண்ட லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்கு ஒரு துளி கண்ணீரும் பெருக்கவில்லை! வங்காளஞ் சென்றதும் தன்னுடைய சூழ்ச்சிகளுக்குத்தகுந்த ஒரு நவாப்பைச் சிருஷ்டிசெய்யத் தீர்மானஞ் செய்துகொண்டான். அவ்வாறே செய்வதற்கு வேண்டிய வழிகளைத் தேடலாயினன்.

கல்கத்தா சென்றவுடன் அவ்விடத்திய விஷயங்களைப் பற்றித் தனது நண்பனொருவனுக்கு எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயர்களின் துர்க்குணங்களை வெளியிட்டிருப்பதை நோக்குகின்றவர்களுக்கு க்ளேவின் பழைய குணத்தை நிர்ணயிப்பது கடினமாயிருக்கும். அக்கடிதத்தில் "அந்தோ! இங்கிலீஷ்க்காரர்களின் பெயர் எவ்வளவு அதம நிலைமையை யடைந்திருக்கின்றது! பிரிடிஷ் இனத்தாரின் மரித்த கீர்த்தியை நினைத்துக் கண்ணீர்த் தர்ப்பணஞ் செய்யாமலிருக்க எனக்குச்சாத்தியமில்லை. ஆயினும் மறுவுலகேன்பதோன்றிருந்தால் நம்முடைய அந்தரங்கத்தைச் சோதிக்க வல்லமையுள்ள எந்தக்கடவுளுக்கு நாம் ஜவாப்தாரியாயிருக்கின்றோமோ அந்தக்கடவுளின்மேல் ஆணையாய் எல்லாவிதமான

தீய செயல்களுக்கு நான் ஆளாகாமல் இருப்பேன் என்றும் இப்பொழுது விருத்தியாய்க்கொண்டிருக்கின்ற எல்லா விதமான பெருந்தீமைகளையும் ஒழிக்கத்தீர்மானஞ் செய்திருக்கிறேன் என்றும் அப்படிச் செய்வதில் நான் நாசமடையவும் தீர்மானஞ் செய்திருக்கிறேன் என்றும் உறுதிமொழி கூறுகின்றேன்" என்பது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தன்னுடைய பழைய நடவடிக்கைகளை மறந்துவிட்டானோ? அல்லது புதிய வேஷம் போட்டுக்கொண்டானோ? யாரை ஏமாற்ற அந்த ஆண்டிவேஷம் போட்டானோ? அல்லது உண்மையிலேயே குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததோ? இவைகளை யாவர் அறிவார்.

இப்பேர்ப்பட்ட க்ளைவினுடைய சகோதர ஆங்கிலேயர்கள் அவனுடைய புதிய நோக்கங்களை யாமோதிக்கவில்லை. அவர்கள் அவனுடைய சிஷியர்களைப்போல் அவனுடைய பழைய வழிகளிலேயே சென்றுகொண் டிருந்தமையால் க்ளைவின் புதிய சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. மீண்டும் க்ளைவின் தெய்வபக்தி "ஆல்"என்கிற விசேஷணத்துடன் கூடிய தென்பதை மேலே குறிப்பிடப்பட்ட "மறுவுலகென்பதிருந்தால்" என்பதனுல் நன்கு விளங்குகின்றது. அவனுல் குறிப்பிடப்பட்ட ஆங்கில குணதோஷங்கள் அக்காலத்திலுள்ளவர்களுக்கே சகஜமாயிருந்தமையால் க்ளைவின் புதிய சீர்திருத்தங்கள் அவனுடைய சுவயநலத்தைப்பற்றியவையென்றே சந்தேகிக்க இடமுண்டு. பொய்க்கையெழுத்து முதலிய சூழ்ச்சிகளால் ஸுராஜ் உத்தௌலாவைத் துலைத்து மீர்ஜாபரைக் க்ளைவ் கைப்பற்றியதே போல் வேறு சூழ்ச்சிகளால் மீர்ஜாபரை யொழித்து மிர்காஸிமை ஆளாக்கி மீண்டும் அவனைத் தள்ளி மீர்ஜாபரை நவாபாக்கி அவனிறந்ததும் அவனுடைய சிம்மாசனத்தை

இருபதுலக்ஷ ரூபாய்களுக்கு நஜம் உத்தௌலாவுக்குத் தாங்கள் கொடுத்தது சரியான முறையாகும் என்று கல்கத்தா அரசாங்கத்திய சபையார் முறையிட்டனர். ஆனால் க்ளைவ் தான்செய்தவை எல்லாம் ராஜதந்திரங்கள் என்றும் ஆங்கிலேயர்களுடைய கௌரவத்திற்காகச் செய்யப்பட்டவையென்றும் அவர்களுடைய கொடியை நிலை நாட்டுவதற்காகச் செய்யப்பட்டவையென்றும் ஆதலால் அவைகள் குற்றமாகா என்றும் சொல்லிக்கொண்டான்.

க்ளைவ் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுவதற்குச் சில மாதங்கள் முன்னதாகவே ஆங்கில வர்த்தக சங்கத்தின் உத்தியோகஸ்தர்களும் குமாஸ்தாக்களும் சொந்த வியாபாரஞ் செய்யக்கூடாதென்கிற நிர்வாகச்சபையின் உத்தரவு கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவ்வுத்தரவைப் பற்றிக் க்ளைவ் பேசியபொழுது அவனினத்தார்களுக்கு நஷ்டப்பட உத்தேசமில்லை. அவர்கள் சொந்தமாய்ச் சம்பாதித்த பொருளைத் திருப்பிக் கொடுத்துவிட இஷ்டப் படவில்லை. அவர்கள் வேலைகளை ராஜிநாமா கொடுக்கத் தயாராய்விட்டனர். அதை அங்கீகாரஞ்செய்ய அவனும் தயாராய் நின்றான்.

பிறகு க்ளைவ் கம்பெனியாரின் சைன்னிய நிலைமையைப் பற்றிக் கவனிக்கலாயினன். சண்டைகளில் சிப்பாய்களின் நடவடிக்கைகள் நிந்திக்கப் படத்தக்கவைகளா யிருந்தன. பிடிக்கப்பட்ட பட்டணங்களில் கொள்ளையடித்த தனங்களைத் தாங்களே எடுத்துக் கொண்டார்களாம். கொள்ளையடித்த தனத்தில் கம்பெனி யாருக்கும் பங்குகொடுத்தால் அது நியாயம் என்று க்ளைவ் நினைத்தான்போலும். மேலும், செல்வத்தினால் விளையும் சௌகரியங்களினால் யுத்த ஆள்கள் சோம்பேரிகளாய்விட்டனர்.

இவைகளை நீக்குவதற்கு பிரயத்தனஞ்செய்ய ஆரம்பித்தகாலத்தில் ஆங்கிலேயர்கள் க்ளைவைத் தூஷிக்கலாயினர். அவனை பஹிஷ்காரம் (Boycott) செய்தவர்கள் சிலர். அவனிடத்தில் வேலைசெய்ய இஷ்டமில்லாமல் ராஜிநாமா செய்துவிட்டுத் தம் வியாபாரத்தைத் தொடங்கினவர் சிலர். வேறு சிலர் இங்கிலாந்துக்குத் திரும்பி அவ்விடத்தில் க்ளைவுக்கு விரோதமாய் கக்ஷிகட்டிக்கொண்டு அவனுடைய பழைய வரலாறுகளை வெளியாக்கினர்.

நிற்க; ஆரியவர்த்தத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சி நிலை பெறுவதற்காக வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மூன்றின் தீவானி என்கிற பதவி வேண்டுமென்று நினைத்தான். அதே பதவியை ஐந்து ஆண்டுகளுக்கு முந்தியே பெற்றிருக்கலாம். அக்காலத்தில் அதைக்கோராமல் இக்கணத்தில் தேடியது ஒரு பெரிய ராஜ்யதந்திரம். இவ்விஷயத்தைப்பற்றிக் க்ளைவ் தானே ஒரு கடிதத்தில் விவரித்திருக்கிறான். அதன் உண்மையாதெனின் அநியாயமாய்க் காரணமின்றி இந்நாட்டின் நவாப்மார்களை அடிக்கடி சண்டைகளில் சிக்கவைத்துத் துடையைக்கிள்ளித் தொட்டிலையாட்டுவதைப்போல் அவர்களுக்குச் சகாயமாய் நின்று அவர்கள் நாட்டை ஆக்கிரமித்துக்கொண்டதனால் அப்பொழுது தீவானியைப் பெறவில்லையாம். மேலும் வெகு சீக்கிரத்தில் எல்லாவல்லமையும் இந்நாட்டில் அடைந்துவிட்டால் இதர ஐரோப்பியர்கள் அழுக்காறுகொண்டு யுத்தத்திற்குக் கிளம்பிவிடுவார்கள் என்பதும் க்ளைவின் அபிப்பிராயம். ஆனால் தருணம் வாய்ந்தகாலத்தில் 1765ஆம் ஆகஸ்டுமீ 9உயன்று ஆக்ராவிலிருந்த ஷா ஆலம் (மொகல் சக்கிரவர்த்தி) செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் அப்பதவி கீழிந்திய வர்த்தக சங்கத்துக்குக்கிடைத்தது.

தவிர அயோத்தியையின் நவாப் வஜீரைக்கண்டு அவனிடம் க்ளைவ் பெற்ற ஒரு உடன்படிக்கையினால் அலஹாபாத்தும் கோராவும் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தது. யுத்த செலவுக்காக ஆறுலக்ஷம் பவுன்களும் வஜீரினால் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது.

க்ளைவ் மூர்ஷிதாபாத்தில் வசித்துக்கொண்டிருந்த நஜ்மத் உத்தௌலாவையும் நேரில் பார்த்து அவர்களிடம் சிநேகம் பாராட்டி மறைந்ததும் நஜ்மத் உத்தௌலா திடீரென இறந்துவிட்டான். இதைப்பற்றி சந்தேகம் பலமாய்க்கிளம்பிற்று. அவனது மந்திரி ரஜாகானும் நவாப்புடன் க்ளைவ் பிரபுவைத் தர்சனம் செய்தமையாலும் அந்த பிரபு திரும்பினவுடன் அதிசீக்கிரத்தில் நவாப்புக்கு மரணம் ஏற்பட்டதென்றால் யார்தான் என்னென்ன நினைக்க மாட்டார்கள்? வங்காளத்திய நவாப்புகளுள் ஸுராஜ் உத்தௌலாவின் மரணமும் மீர்ஜாபரின் இளவரசனான மீரானின் மரணமும் சந்தேகிக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் மரணமடைந்தது குடிகளின் ஞாபகத்தில் இருந்தது. இம்மாதிரியான மரணம் கீழ்நாட்டு அரசவம்சங்களுக்கு உரித்தானவையென்று மேனாட்டுச் சரித்திராசிரியர்கள் கூறுவது வழக்கம். ஆனால் மேனாட்டார் அம்முறையை யனுஷ்டிக்காமலிருந்திருக்கலாமே யெனின் கீழ்நாடு சீர்திருத்தமும் நாகரிகமும் அடைவதற்காகக் கீழ்நாட்டு வஞ்சக முறைகளையே அனுஷ்டித்துப் பரதகண்டத்தைக் கைப்பற்றியது நியாயம் என்று சமாதானங் கூறுவதும் வழக்கம். சரித்திர தத்துவத்தைக் கவனிக்கின்ற ஆன்றோர்களுக்கு இச்சமாதானம் திருப்திகரமானதல்ல. ஏனெனின் நல்ல முடிவை யடைவதற்காக இடையில் அனுஷ்டிக்கப்படுகின்ற கெட்ட தந்திரங்கள் கெட்டவைகளல்ல; நாய்விற்ற காசு

குலத்துக் காட்டாது; கலால்விற்ற காசு துர்க்கந்தம் வீசாது; என்பவைபோன்ற வாக்கியங்கள் நன்னெறி முறைக்கு விரோதமான அந்நியாய வசனங்கள் என்பதற்குத் தடையில்லை.

தத்துவம் எப்படி யிருந்தாலும் அந்த நவாப் இறந்த பிறகு வங்காளத்தின் சர்வாதிகாரமும் க்ளைவ் உள்ளங் கையில் அடங்கிவிட்டது.

இனிச்சீர்திருத்தம் செய்யவேண்டிய விஷயங்களைக் க்ளைவ் கவனிக்கலாயினன். மேலே குறிப்பிடப்பட்ட தீவானி யென்கிற அதிகாரத்தினால் அரசாட்சி முற்றிலும் ஆங்கிலேயர்களுடையதாயினும், க்ளைவ் செய்த ஏற்பாட்டினால் அனேக குழப்பங்கள் தோன்றின. ஏனெனின், வங்காளம் முதலிய மாகாணங்களில் நவாப்புக்கு யாதொரு அந்தஸ்துமில்லாமல் போய்விட்டபோதிலும் அவனைத் தள்ளிவிடவில்லை. நவாப் பேருக்குத் தலைவனாயிருந்தான். ஆனால் கம்பெனியால் நியமிக்கப்பட்ட சில அதிகாரிகள் நாயப் திவான் என்று ஆங்கிலர்களால் கூறப்படும் நவாப் திவான் என்கிற பட்டம்பெற்றவர்கள் வரிவசூல் செய்வதற்கும், வியாஜ்யம் வியவகாரம் தீர்ப்பதற்கும் குற்றம் முதலியவைகளை விசாரணை செய்வதற்கும் தண்டிப்பதற்கும் போலீஸ் பந்தோபஸ்து செய்வதற்கும் ஜவாப்தாரிகளாக்கப் பட்டார்கள். ஆனால் மேலே கூறப்பட்ட ஒவ்வொரு அம்சமும் ஆங்கிலேயர்களாலும் கண்டிக்கப்படலாம்.

மேலும் ராணுவ சம்பந்தமான விஷயங்கள் கம்பெனியார்களாலேயே கவனிக்கப்பட்டன. ஆனால் நவாப், திவான்கள்செய்த அக்கிரமங்களைக் கண்டிக்கச் சக்தி இல்லாமல் போயிற்று. அவைகளை நவாப்தான் கவனிக்கவேண்டும்

என்றும் வருமான விஷயங்களை மட்டில் தாங்கள் கவனிக்க வேண்டும் என்றும் கம்பெனியார் நினைத்தபடியால் நவாப் திவான்கள் செய்த அக்கிரமங்கள் எவராலேயும் கவனிக்கப் படவில்லை. அதனால் குடிகள் மிகத் துன்பமடைந்தார்கள். நில வரி வரைமுறையன்றி வசூல் செய்யப்பட்டது. வசூல் செய்ததில் பாதிகூட கம்பெனியாருக்குச் சேரவில்லை. "ஸிவில்" விஷயங்களும் "க்ரிமினல்" விஷயங்களும் ஒன்றுடன் மற்றொன்று கலந்து கொண்டிருந்தமையால் குடிகளை அதிகாரிகள் எதையும் வற்புறுத்தக் கூடியதில்லமையிலிருந்தனர். ஒரே உத்தியோகஸ்தன் நில வரி வசூலில் ஏற்பட்ட தகரார்களை "க்ரிமினல்" குற்றமென்று விசாரணை செய்து ஒரு குடியானவனை உடனே தண்டித்துவிட்டால் அதற்கு அப்பீலில்லை. (இம்மாதிரியான விஷயம் இப்பொழுதும் இருக்கின்றது என்பதைப் பின்னர் ஆராய்ச்சி செய்வோம்.) ஆதலால் குடிகளுக்கு அவர்களுடைய சொத்துக்கள் சொந்தமென்கிற அபிமானம் குறைந்துவிட்டது. அவர்களுடைய ஊக்கமும் குறைந்துவிட்டது. செல்வம் க்ஷீணதசையையடைந்தது.

மீண்டும் இதுவரை பன்முறை கூறியிருக்கிற வண்ணம் வியாபார விஷயத்தினால் ஏற்பட்ட துன்பத்திற்கு அளவில்லை. இந்நாட்டில் உடலுக்கு வேண்டிய பொருள்களுள் முதன்மையானது "உப்பு". அதுவிஷயமான வரிகளும் நிர்ப்பந்தங்களும் அதிகரிக்கலாயின. ஆனால் இப்பொருளின் மேல் ஏற்படுத்தப்பட்ட வரி பண்டைக்காலத்தியதான படியால் அப்பொருள் அரசாங்கத்துக்குச் சொந்தமென்றே க்ளைவ் அடிக்கடி கூறுவது வழக்கம். இன்றைக்கும் உப்பு வரியைப்பற்றிய தகரார்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றியும் பின்னால் பேசுவோம். ஆனால் க்ளைவ் காலத்திய சமா

சாரங்களைப் பற்றிப் பேசுங்கால் அக்காலத்திய அதிகாரிகள் செய்த அக்கிரமங்களினுல் பிரஜைகளுக்கு அதிக கஷ்டம் நேரிட்டதென்பதற்கையமில்லை.

நிற்க; நாணயக்குறைவு ஏற்பட்டிருந்தது என்பதும் செவ்வனே விளங்குகின்றது. அதற்குக் காரணம் நவாப் மிர்காஸிம் கணக்கற்ற நாணயங்களைத் தன்னுடன் தூக்கிக் கொண்டுபோய்விட்டான் என்று ஆங்கில உத்தியோகஸ்தர்கள் கூறினுர்கள். மேலும் ஆரிய மக்கள் பணத்தைப் புதைத்துவைத்து விடுவதனுலும் நகைகள் அணிந்து கொள்வதனுலும் நாணயக்குறைவு ஏற்படுகின்றதென்பது எக்காலத்தும் மேனுட்டார்கள் அபிப்பிராயம். ஆனுல் அக்காலத்திய முஸ்லிம் நூலாசிரியர் ஒருவர் ஆங்கிலேயர்கள்பால் தான் குற்றஞ் சுமத்துகின்றனர். ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அதிகமாய்க்கொண்டிருந்தனர். ராணுவத்தில் சுவதேசிகளான குதிரைப்படைகள் குறைந்துவிட்டன. ஆங்கிலேயர்கள் அதிகமாய் விட்டனர். பீரங்கிப்படைகள் அதிகமாய்விட்டன. முக்கியமாய் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி தம் நாட்டுக்குப் போய்க்கொண்டிருந்தமையால் ஏராளமான வெள்ளியையும் பொன்னையும் மூட்டை கட்டிக்கொண்டு போய்விட்டனர். இவ்வாறு நம் நாட்டுப் பொருள் வெளிநாட்டுக்குப் போகலாயிற்று. உள்நாட்டுச் செல்வத்திற்கு வெளிப்போக்கு ஏற்பட ஆரம்பித்தது. இராணுவத்திலும் அதிர்ப்தி தோன்றிற்று. ஏனெனில் யுத்தகாலத்தில் அதிகமாய்க்கொடுக்கப்பட்டிருந்த "பட்டா" அஃதாவது இரட்டைப்படி நிறுத்தப்பட்டது. இதனுல் சிப்பாய்களுள் கலகம் ஏற்பட்டது. அதையடக்க வெகு கண்டிதமான தண்டனைகள் விதிக்கப்பட்டன.

இம்மாதிரியான நிலைமையில் இந்நாடு இருந்தகாலத்தில் (1767) க்ளைவ் இங்கிலாந்துக்குக் கடைசியாய்த் திரும்பி விடநேரிட்டது. அவ்விடத்தில் ஜீவதசையுடன் இருந்த ஏழு ஆண்டுகளுள் அவனுக்கு ஏற்பட்ட சுகதுக்கங்களைப் பற்றி ஆராய்ச்சிசெய்வது அவசியமில்லை. ஆனால் அவனது மரணத்திற்குக் காரணம் தற்கொலை என்பது அவனது கருமங்களின் பயன்தான் என நமக்குத் தோன்றுகின்றது.

க்ளைவ் இந்நாட்டை விட்டகன்றதுமுதல் சுமார் நான்கு ஆண்டுகள்வரை அவனுடைய சீர்திருத்தங்கள் மேனேக் காப்ப் பார்த்தவர்களுக்கு மேன்மையானவைகள் என்று தோன்றின. ஆனால் அவைகள் ஏற்கனவே விவரித்த வண்ணம் பலகுறைகளை யுடைத்தானமையால் இந்நாட்டினருக்குக் கொடுங்கோல் ஆட்சியை விளைத்தன. ஜமீன்தார்களுள் பெரும்பான்மையோர் முஸல்மான்கள். அவர்களுடைய குடிகளுள் பெரும்பான்மையோர் ஆரியர்கள். வழக்கம்போல் மதத்துவேஷம் ஓர்பால் நிற்க வரிவசூலில் மிகக் கடுமையுள்ளவர்களா யிருந்தார்கள். ஜமீன்தார்களின் உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சமளித்தாலன்றி அதிக தண்டவரிகளினின்றும் குடிகள் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. ஜமீன்தார்கள் க்ரிமினல் அதிகாரமும் பெற்றவர்களானதனுல் அபராதம், சிறைச்சாலை, சித்திரவதை, முதலியவைகள் விருத்தியாயின. மீண்டும், நவாப் திவான்களுள் முகம்மத் ரஜாகான், ராஜா ஸிதாப்ராய் என்பவர்களைப்பற்றிய வரலாறுகள் அனேக ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதும் மனத்தைப் புண்படுத்தத் தக்கவைகளாயிருக்கின்றன. அவ்விருவர்களுள் ராஜாவின் யுக்தியும் தந்திரமும் சுயநலத்துக்கு நமூனக்கள் ஆகும். அவன் ஆங்கிலேயர்களின் மனப்பாங்குக் கேற்றவாறு நடித்துக்

கொண்டு அவர்களுடைய தயவுக்குப்பாத்திரனாகி உயர்ந்த பதவியை யடைந்தான். அவன் அவர்களுக்குத் தொண்டு செய்வதில் சாமர்த்திய முள்ளவன். அவர்களை ஸ்தோத்திரம் செய்யவேண்டிய சமயத்தில் ஸ்தோத்திரம் செய்தும் அவர்களைச் சவாரி செய்யவேண்டிய சமயத்தில் சவாரியுஞ் செய்தான். ஆங்கிலேயர்களுடைய நாகரிகத்தின்படி மரியாதைகள் செலுத்துவதில் கெட்டிக்காரன். அவர்களுக்குப் பிரியமானபடி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட வேலைசெய்வதில் கைதேர்ந்தவன். தன்னிடம் வேலை நிமித்தம் வருகின்றவர்களிடம் அதிக வார்த்தை யாடாமல் ஆங்கிலேயர்களைப்போல் "என்னால் கூடியமட்டில் உன் விஷயம் கவனிக்கப்படும், ஆனால் நான் வாக்களிக்கமாட்டேன். வந்தனம் போய்வா" என்று சொல்லி விட்டதைக் கண்ட ஆங்கில அதிகாரிகள் அவனிடம் பிரியம் பாராட்டினார்கள். "பாலிஸி" என்று ஆங்கிலத்தில் கூறப்படும் தந்திரத்தைச் செவ்வனே நடத்திக் காட்டினான். கொலை செய்வதற்கு உத்தரவு அளிக்கப்போவதற்கு முந்தியும் நல்லவார்த்தை பாடிக்கொண்டே பல "தாங்கஸ்" களைக் கூறிப் பின்னாலேயே கொலையுத்தரவு அனுப்பவேண்டிய மரியாதைகளைத் தெரிந்து கொண்டிருந்தான். அதிகார வர்க்கத்தினரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக அவர்களுக்கு விரோதமாயிருந்த குடிகளின் மனுக்களைக் கவனிக்கவில்லை. குடிகளின் ஈனதசை அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தாலும் ஆங்கிலேயர்களுக்கும் தனக்கும் சேரவேண்டிய தனத்தைமட்டில் கவனித்துவந்தான். இம்மாதிரியான பாரதமக்கள் இக்காலத்திலு மிருக்கின்றனர் என்பது வியசனிக்கத்தக்க தென்பதை நாம் கூறவேண்டியதில்லை. ஆயினும் இவ்விருவர்களின் கதி வாரன் ஹேஸ்டிங்ஸ்

காலத்தில் அதிகமாய் விபசனிக்கத் தக்கதாயிற்று. இவர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டனர் சட்டமூலமாய் விடுதலை செய்யப்பட்டபோதிலும் அவர்கள் குற்றவாளிகள் என்றே ஏற்படுகின்றது.

இந்நாட்டின் பயங்கரமான நிலைமை இங்கிலாந்துக்கு எட்டிற்று. அது அவ்விடத்திலிருந்த கம்பெனி நிர்வாகக சபையாருக்கும் அரசாங்க மந்திரி வர்க்கங்களுக்கும் பொதுவாய் இங்கிலீஷ்காரர்களுக்கும் கவலைக்கு இடமாயிற்று. ஒரு விசாரணைசபை நியமிக்கப்பட்டது. முடிவாய் பரதகண்டத்தில் ஆங்கிலேயர்களுடைய ஆட்சியைச் சீர்திருத்தஞ் செய்யத் தக்கவன் வாரன் ஹேஸ்டிங்ஸ் (W. Hastings) என்பவன்தான் என்று தீர்மானஞ் செய்யப்பட்டது. அந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் 1772 ௵ ஏப்பிரல் மாதத்தில் கவர்னர் பதவியை படைவதற்குமுன் கீழிந்தியா வர்த்தக சங்கத்தில் குமாஸ்தா முதல் பல உத்தியோகங்களில் அனுபவம் பெற்றவனாதலால் அவனைப் பழைய பெருச்சாளி எனக்கூறுவது உலகவழக்குக்குரிய முறையாகும். ஏனெனின் கீழ்த்தர உத்தியோகத்திலிருந்து உயர்தரபதவிக்கு ஒருவனைத் தூக்குவது நியாயமேயாயினும் பல குறைகளிருக்கின்றன. ஆதலால்தான் தற்காலத்தில் மாகாணாதிபதிகள் இங்கிலாந்திலிருந்தே நேராக அனுப்பப்படுகின்றனர். இம்முறையிலும் பல குறைகளிருக்கின்றன. அவைகளை வேறோரிடத்தில் கவனிப்போம்.

ஏழாவது சருக்கம்.

தேனை வழித்தவன்....................

ஆங்கிலவர்த்தகச்சங்கத்தின் நிலைமையைச் சீர்திருத்தஞ் செய்வதற்காக வாரன் ஹேஸ்டிங்ஸ் அனுப்பப்பட்ட

விஷயம் முந்தியே நம்மால் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. க்ளைவ் மூட்டிய தீயை அவியவொட்டாமல் காப்பாற்ற வேண்டிய கடமை அவனைப் பொருத்ததாயிற்று. அந்த பிரபு தற்கொலை செய்துகொள்வதற்கு முன், வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு நல்ல புத்திமதிகளைப் புகட்டிய கடிதம் ஒன்றெழுதினான். அதின் முக்கியமான கருத்துக்களாவன:—"நிஷ்பக்ஷபாதமாயிரு; மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடந்துகொள்; குடிகளுக்கு நியாயம் செய்." இவைகள்போர்ஜரி செய்த பேனுவிலிருந்து புறப்பட்டாலும் அவைகளின் உண்மையைப் போற்றுவோமாக. அந்த உபதேசங்கள் எம்மட்டில் சிஷியன்காதில் நுழைந்தன என்பதைச் சரித்திரம் விளக்கிக்காட்டுகின்றது. அவனுடைய ஜன்மம் முதல் அவன் மாகாண அதிபதியாகவும் பிறகு ஆங்கிலமாகாணாதிபதிகளின் தலைவனாகவும் நியமிக்கப்பட்ட காலம் வரைவாழ்ந்த வாழ்வைப்பற்றிய சரித்திரம் ஆங்கிலேயர்களுக்குச் சிலாக்கியமாய்த் தோன்றும். அவனுடைய பல குணங்களை வர்ணிக்காதவரில்லை. ஆனால் 1769-ல் இங்கிலாந்திலிருந்து கப்பலில் யாத்திரை செய்யும்பொழுது அவன் வியாதியினால் பீடிக்கப்பட்டகாலத்தில் அவனுடன் கூட பிரயாணஞ்செய்த ஒருவன் சகாயஞ்செய்தான். அத்தகைய ஒருவன் மனைவி தாய் எனக்கருதப்படவேண்டுமன்றோ! ஆனால் அவளை விவாகஞ் செய்துகொள்வதற்கு வேண்டிய சூழ்ச்சிகளை நிறைவேற்றினான். இது நன்னெறியாமோ?

நிற்க; மாகாணத்தலைவனாய் விளங்கினவுடன் மொகல் சக்கிரவர்த்தி ஆங்கிலேயர்களை விட்டு விலகினான் என்ற ஒரு குற்றஞ்சாட்டி அவனுக்களிக்கப்பட்டிருந்த கோராவையும் அலஹாபாத்தையும் விட்டுவிடும்படி அவனை வற்புறுத்

தினதுமன்றி அவனலளிக்கப்பட்ட வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாகாணங்களுக்காகக் கொடுத்த காணிக்கைத் துகையையும் நிறுத்திவிட்டான். இது நியாயமா அல்லது அநியாயமா என்கிற விஷயம் பலர்களால் தர்க்கஞ் செய்யப்பட்டிருக்கின்றது. அது அநியாயமென்பதுதான் பலர் அபிப்பிராயம்.

அடுத்தபடியில் அயோத்தியை நவாப் வஜீரைக் கிருத்திரமமாய் ஒரு உடன்படிக்கைக்குள்ளாக்கினன். அது அவனுடைய சொந்த கடிதங்களினலேயே ஏற்படுகின்றது. அயோத்தியைக்கு வடமேற்கிலுள்ள ரோஹில்லர்கள் எனப்படுவோர் மஹாராஷ்டரர்களால் துன்பத்துக்குள்ளாக்கப்பட்ட காலத்தில் அவர்களுக்குத் தலைவனயிருந்தவன் நவாப் வஜீரின் சகாயத்தைக் கோறினன். அதற்காக நாற்பது லக்ஷம் ரூபாய்கொடுப்பதாய் வாக்களித்தான். ஆங்கிலேய சைன்னியத்தின் சகாயத்தைக்கொண்டு நவாப் வஜீர் ஜயம் பெறலாமென நினைத்தான். அதற்குள் மஹாராஷ்டரர்கள் தமது நாட்டுக்குத்திரும்பிவிட்டனர். யுத்தம் நடைபெறுததனல் நாற்பது லக்ஷம் ரூபாய் கொடுக்கப்படவில்லை.

நவாப் வஜீர்ஷியா; ரோஹில்லர்கள் ஸன்னிகள். இந்த வித்தியாசத்தினல் சத்துருத்துவம் பாராட்டி எப்படியாவது ரோஹில்லர்களை அழிக்கவேண்டுமென்று கருதி வஜீர் ஆங்கிலர்களுடன் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டான். அதாவது ரோஹில்லர்களை யுத்தத்தில் ஜயித்துவிட்டால் நாற்பது லக்ஷம் ரூபாய் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டான். ஆங்கில கஜான காலியாயிருந்தது. இங்கிலாந்திய வர்த்தக நிர்வாகசபையார் "பணம்" "பணம்" என்று கிட்டி கட்டினர்கள். ஆதலால் ஹேஸ்

டிங்ஸ் மேற்படி உடன்படிக்கைக்கு உட்பட்டு விட்டதுமன்றி அலஹாபாத் கோரா இரண்டையும் அவனுக்குக்கொடுத்து விட்டு ஐம்பது லக்ஷம் பெற்றுக்கொண்டான். இதனிடையில் ஹேஸ்டிங்ஸின் பாக்கெட்டிலும் பணம் விழுந்ததோ என்பது ஒருசங்கை. தேனை வழித்தவன் புறங்கையை நக்க மாட்டானே? தவிர 1769-ல் இங்கிலாந்தை விட்டுக் கப்பலேறுவதற்குக் கடன் வாங்கினன். ஐந்து வருஷங்களுக்குள் மேலே குறிப்பிடப்பட்ட "உபகாரியின் மனைவி" கல்கத்தாவில் நவாப் மனைவியாய் விளங்கினள். அவள் சொந்தப்புருஷனை விட்டு நீங்குவதற்கான பாரிஸில் நடந்த விவாகவிலக்கு வியவகாரச் செலவுகளெல்லாம் ஹேஸ்டிங்ஸினுடையது. அது அவனுடைய பணமா அல்லது பரதகண்டத்தின் பணமா என்பது கேள்வி. இதற்கு விடையைத்தேடி ஹேஸ்டிங்ஸ்பேரில் குற்றஞ்சாட்டுவதற்குமுன் அவனுடைய ஆட்சிமுறையை மேலும் கவனித்துப்பார்ப்போம்.

மேற்படி ரோஹில்லா யுத்தம் தங்களாலேயே ஜயம் பெற்றது என்றனர் ஆங்கிலேய தளகர்த்தர்கள். நவாப் வஜீர் தானும் தனது சைன்னியமும் ரத்தத்தைச் சிந்தினதாய்ச் சொன்னர்கள். யுத்தமுடிவில் ஆங்கிலேயர்கள் கொள்ளையடித்ததும் அக்கிரமங்கள் புரிந்ததும் அட்டூழியங்கள் செய்ததும் கருப்பு மனுஷியருடைய சகவாசத்தினல் தோன்றிய குணங்கள் என்கிறார் ஒரு ஆங்கில சரித்திராசிரியர். ஆனல் ஆங்கிலேயர்கள்தான் யுத்தம் முடிந்தவுடன் நவாப்பின் சிப்பாய்களுக்கு எப்படி கொள்ளையடிப்பதென்பதைக் கற்றுக்கொடுத்தனர் போலும்! யார் அறிவார்?

இந்நிலைமையில் இருக்கையில் புதிய சட்டம் ஒன்று இங்கிலாந்திய மகா சபையில் வெளியாயிற்று. அதன்படி ஆங்கிலக் கீழிந்திய வர்த்தக சங்கம் ஆங்கில கவர்ன்மெண்

டாருக்கு உத்தரவாதியாகச் செய்யப்பட்டது. ஆறுமாதத்திற்கொருமுறை வரவு செலவு கணக்குகள் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாதிரி "பார்லிமெண்டு" (Parliament) மகா சபை ஏற்படுத்திய "இந்தியன் கான்ஸ்டிடியூஷன்" (Indian Constitution) அஃதாவது "இந்திய ஆட்சி முறை யமைப்பு" என்பது பரதகண்டத்துக்குப் புதியதென்றும் பரதகண்டத்திய ஜனங்களுக்கு ஒரு கொடுங்கோன் மன்னனுடைய "அரசாங்க பரிபாலன முறை"யே ஏற்றதாயிருந்ததென்றும் ஒரு ஆங்கில சரித்திராசிரியர் கூறுகின்றார். அவரே தற்பொழுது இந்நாட்டுக்கு அளித்திருக்கும் சீர்திருத்தம் கெடுதியையளிக்கும் என்று பறையறைகின்றனர். நல்ல ஆட்சி முறை யமைப்பு பரதகண்டத்திலிருந்ததோ இல்லையோ என்கிற சந்தேகத்தை நீக்கிக்கொள்ள விரும்புகிறவர்கள் ஆரிய ராஜ சிரோமணிகளின் சரித்திரத்தை மீண்டும் படிப்பாராக.

பரதகண்டத்தின் ஒரு பாகத்தைப் பிடித்துக்கொண்ட ஆங்கில வர்த்தகர்களின் அநீதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக 1774-ல் செய்த சட்டத்தினுல் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாகாணங்களின் கவர்னர் என்பவன் கவர்னர் ஜெனரல் எனப் பட்டம் பெற்ருன். அவனுக்கு ஒரு சகாய சபை ஏற்படுத்தப்பட்டது. அதில் நால்வர்களிருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் சம்பளங்கள் நியமிக்கப்பட்டன. அவர்கள் யாதொருவிதமான வியாபாரம் செய்யக்கூடாதென்றும் ஒருவரிடமிருந்தும் இனும் வாங்கக்கூடாதென்றும் உத்தரவிடப்பட்டிருந்தது. அந்த சபையில் மஜாரிடி ஓட்டின்படியே தீர்மானங்கள் நடைபெற வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருந்தது. மேலும் வங்காள மாகாணமே இதர இரண்டு மாகாணங்களுக்குத் தலைமை வகிக்க

வேண்டுமென்றும் கவர்ணர் ஜனரல் உத்தரவின்றி இதர கவர்ணர்கள் அரசாங்க விஷயமாய் யாதொரு நடவடிக்கைகளும் செய்யக்கூடாதென்றும் ஏற்பட் டிருந்தன. நியாயஸ்தலங்களைப்பற்றிய சீர்திருத்தங்களும் செய்யப்பட் டிருந்தன.

மேற்படி சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட சமயத்தில் அனேக குறைகள் காணப்பட்டன. அவைகளினால் விளைந்த தீமைகளுக்குக் குறைவில்லை. அக்குறைகள் அரசாங்க பரிபாலன முறை தெரியாத பாரதமக்களால் ஏற்பட்டதல்ல. கொடுங்கோன் மன்னனும் செய்யத்துணியாத நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அந்த நடவடிக்கைகளால் எத்துணையோ அட்டூழியங்கள் செய்யப்பட்டன. ஆனால் அவைகளெல்லாம் சட்டம் செய்யப்படும் எக்ஸ்பெரிமெண்டு (அஃதாவது ஆராய்ச்சி பரீக்ஷை) என்பதன் பலன்களென ஆங்கிலேயர்களால் கொண்டாடப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட அட்டூழியங்களை இவ்விடத்தில் கூறத்துணிகின்றோம்.

முதன் முதலில் மஹாராஜா நந்தகுமார் என்கிற ஒரு தனிகப்பிராம்ஹணன் தூக்கிலிடப்பட்டான். அவன் செய்த குற்றம் போர்ஜரி (Forgery) அஃதாவது க்ஷைவைப் போல் பொய்க்கையெழுத்து செய்த குற்றம். இம்மாதிரி எடுத்துக்கூறுவதனால் ஆங்கிலேயர்களுடைய மனம் பதைக்கும். ஆனால் போர்ஜரிக்காக ஆங்கிலேயன் பிரபுப்பட்டம் பெற்றிருக்க ஒரு பாரதப்புதல்வன் தூக்கிலிடப்பட்டான் என்பதனால் பாரதமக்களுடைய மனம் துடிக்குமன்றோ! போர்ஜரி என்பது ஆங்கிலேயர் பழைய சட்டப்படி கொலைக்குள்ளாகும் குற்றமாகும். அச்சட்டம் ஆங்கிலேயர்களுடன் இந்நாட்டுக்கு வந்தது வாஸ்தவமே. அதை நிஷ்பக்ஷபாத

மாய் க்ளேவ் விஷயத்திலும் காட்டியிருந்தால் அச்சட்டத்தை ஒருகால் நாம் ஆமோதிக்கலாம்.

நந்தகுமாரனைப்பற்றிய விசாரணை முதலிய ஒழுங்குகளைக் கொண்டும் தஸ்தாவேஜுகளைக்கொண்டும் அனேக ஆங்கிலேயர்கள் மிகச்சந்தோஷமடைந்து ஆங்கில நியாயாதிபதிகளை ஸ்தோத்திரஞ் செய்கின்றனர். அதே நியாயாதிபதிகளின் செயல்களை அவர்களுடைய சமகாலத்திய கவர்ணர் ஜனரல் சபையின் அங்கத்தினர்கள் நேரில் கண்டவைகளையும் தாங்கள் அனுபவித்தவைகளையும் எழுதிவைத்திருப்பதைப் பார்க்கின் நந்தகுமாரனிடம் ஹேஸ்டிங்ஸ் காண்பித்த துவேஷம் வெளியாகின்றது. அவ்விருவர்களும் ஒருவரை மற்றொருவர் சந்தித்தது முதல் மனஸ்தாபங்களுடையக் காரணங்களிருந்தன. நந்தகுமாரனைத் தண்டித்த நியாயாதிபதி கனம் இம்பே நிஷ்பக்ஷபாதி என்றும் ஜூரிகளின் தீர்மானத்தைப்பின்பற்றி நின்றானென்றும் கூறுவதுண்டு. ஆனால் சரித்திராசிரியரான மகாலே பிரபு இவ்விஷயத்தைக் குறிப்பிட்டுக்காட்டி கனம் இம்பேயை நிந்தித்திருக்கிறார். பர்க், மில், தாரண்டன், முதலிய சமகாலத்தவர்களும் அந்த நியாயாதிபதியின் தீர்மானத்தை வெறுத்திருக்கின்றனர். கோலையும் ஒருகலே எனின் நந்தகுமாரனின் கொலையை மறந்து செல்வோமாக.

மீண்டும் மேலே குறிக்கப்பட்ட சட்டத்தினால் ஏற்பட்ட கவர்ணர் ஜனரல் சபையின் அங்கத்தினர்களுள் மூவர் இங்கிலாந்திலிருந்து நேராய் கப்பலிலிருந்து இவ்விடம் இறங்கினவர்கள். அவர்களுள் ஒருவனான பிரான்ஸிஸ் என்பானைப்பற்றிய வரலாறு இங்கிலாந்தில் பிரசித்தமானது. நமக்கு வேண்டிய மட்டில் பார்க்குங்கால் அவன் மனச்சாக்ஷியுள்ளவன் என்றும் அக்கிரமங்களைப்பார்க்கச் சகிக்கமாட்டாதவன் என்றும்

ஒரு மகா மேதாவி என்றும் அவனுடைய சில நூல்களால் நமக்குத் தெரிகின்றது. மற்ற இருவர்களும் அவனுடைய அபிப்பிராயங்களுக்கு ஈடுப்பட்டவர்களா யிருந்ததாகத் தெரிகின்றது. அம்மூவர்களுக்கும் இவ்விடத்தில் உத்தியோகத்திலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸுக்கும் அவனுக்கு உதவியாயிருந்த பார்வெலுக்கும் சபையில் விவாதங்கள் முதல் முதற்கொண்டு ஏற்பட்டன. அவைகளால் விளைந்த தீமைகளுக்கு இரையானவர்கள் பாரதமக்கள். மூவர்களும் ரோஹில்லாயுத்தத்தின் அக்கிரமங்களைக் கண்டித்துச் சில போக்குவரவுக் கடிதங்களைக் கேட்டபொழுது ஹேஸ்டிங்ஸ் அவைகளை வெளிக்காட்டவில்லை. இதனால் ஹேஸ்டிங்ஸ் பேரில் சந்தேகம் தோன்றிற்று.

மேலும் அயோத்தியை நவாப் வஜீர் இறந்துவிட்டான். அவனுடைய குமாரன் அதிகாரம் பெற்றவுடன் காலஞ்சென்ற வஜீரின் இரு பாரியைகள் தங்களுடைய கணவனுடைய சொந்த கஜானாவிலிருந்த சொத்தைத் தங்களுடையதென்று சொன்னார்கள். புதியநவாப் அது சர்க்கார் துகையென்று சொன்னான். இவ்விருதரத்தார்களுக்கும் நடந்த விவாதத்தில் ஆங்கில வர்த்தகசங்கத்தார் தலையிட்டுக் கொள்ளக் கூடாதென்று ஹேஸ்டிங்ஸ் அபிப்பிராயப்பட்டான். ஆனால் எதிர்கக்ஷிக்காரர்களின் அபிப்பிராயம் மாறி நின்றது. முடிவான விஷயம் இயாதெனின் அயோத்தியையில் ஏற்பட்ட குழப்பத்தினால் ஆங்கிலர்களுக்கு லக்ஷக்கணக்கான ரூபாய்கள் கிடைத்தன. இதை அயோத்தியைக் கொள்ளை என்று மேனாட்டுச் சரித்திராசிரியர்களே ஒப்புக்கொள்கின்றனர். ஆயினும் ஹேஸ்டிங்ஸ் பாகத்துக்குக் கிடைத்த துகையை "நவாப் இனாம்" என்று தான் எடுத்துக் கொள்ளலாமா என்று இங்கிலாந்துக்கு அவன்

எழுதினதாயும் அதைக் கம்பெனிக்குத்தான் கொடுத்துவிட வேண்டியதென்றும் அவ்விடத்திலிருந்து உத்தரவு கிடைத்ததென்றும் அதனால் ஹேஸ்டிங்ஸினிடம் யாதொரு சந்தேகமும் இல்லை என்கின்றனர் ஆங்கில சரித்திராசிரியர்கள். அவர்கள் துரபிமான மென்னே!

இவைகளைப் பற்றிய பல தர்க்கங்கள் இருக்கின்றன. ஹேஸ்டிங்ஸுக்கு விரோத கக்ஷி ஒன்றிருந்தமையால் இந்த சமாசாரத்தை இங்கிலாந்துக்குத் தெரிவித்தானென்றும் ஆனால் 1774-ம் வருஷத்திய சட்டத்திற்கு முந்தி வாங்கிக் கொண்டிருந்த தொகை யெல்லாம் வெளிக்குத்தெரியவில்லை என்றும் மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பத்துக்குப் பிறகு கிடைத்த தொகைகளை ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாய் வைத்துக்கொண்டிருந்தான் என்றும் சொல்வதற்குக் காரணங்களுண்டு. விதவைகளான வஜீர் ராணிக்கும் புதிய நவாப்புக்கும் நடந்த சண்டையில் ஹேஸ்டிங்ஸ் பணம் பிடுங்கவில்லையா? ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிகளுக்கு எளிது. வேறென்ன? அவன் "சுத்தன்" என்று சொல்வதற்குத் தக்க முகாந்தரங்களைக் காணேம்.

எவ்வாறே பலவிதமாகவும் ஆங்கில வர்த்தக சங்கத்துக்கும் ஹேஸ்டிங்ஸுக்கும் பணம் சேர்ந்தது. ஆனால் ஹேஸ்டிங்ஸ் பெற்றது லஞ்சம் என்று அடிக்கடி கூறப்படுகின்றது. முன் குறிப்பிட்டுக் காட்டியநந்தகுமாரன் அடைந்த கதிக்கு மூலகாரணம் ஹேஸ்டிங்ஸ் லஞ்சம் பெற்றதாய் சாட்டிய குற்றந்தான். அதற்குப் பதிலாக ஹேஸ்டிங்ஸ் செய்த தந்திரத்தினல் நந்தகுமார் "போர்ஜரி" குற்றத்திற் காளாக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டு, கொலையும் செய்யப்பட்டான் என்பது பலர் கொள்கை.

நிற்க; அக்காலத்தில் பல யுத்தங்கள் சம்பவித்தன. அவைகளுள் முக்கியமானது ஒன்று மஹாராஷ்டர யுத்தம். மற்றொன்று மைசூர் யுத்தம். இவ்விரண்டு விஷயங்களைப் பற்றியும் வேறோரிடத்தில் விவரிக்கவேண்டி யிருக்கின்றது. அவைகளினால் ஏற்பட்ட பலன்களைப்பற்றி மட்டில் இவ்விடத்தில் குறிப்பிடவேண்டியிருக்கின்றது. அவையாவன:— "மனுஷியசேதம்" "பொருள் நஷ்டம்" "காலி கஜானா" "குடிகளின் சிறுமை". மனுஷிய சேதத்தைப் பற்றிய கவலை ராஜதந்திரிகளுக்கு இல்லை. ஏனெனின் அரசாங்கங்களில் எக்காலத்திலும் யுத்தங்களுண்டாவது சகஜம் என்று தத்துவம்பேசுவது அவர்களியல்பு. பொருள் நஷ்டம் ஏற்பட்டால் புதிய பொருள் சிருஷ்டியாகின்றது; அதனால் குடிகளுக்கு ஐசுவரியமுண்டாகும்; என்பது பொருளாதார சாஸ்திரஞர்களின் சித்தாந்தம். கஜானா காலியென்றால் பழைய கணக்கைப் புரட்டவேண்டியது அவசியம். எவ்விதத்திலாவது விட்டுப்போன கணக்கை வசூல் செய்ய வேண்டியது சட்ட நியாயம். குடிகள் படுந்துன்பமோவெனின், அதுதான் தேசாபிமானம் என்றும் அரசாங்கத்தார் தர்ம யுத்தம் புரிகின்றனரா அதர்ம யுத்தம் புரிகின்றனரா என்று குடிகள் கவனிக்கவேண்டியதில்லை என்றும் யுத்தம் என்றால் உடல் பொருள் ஆவி மூன்றினையும் தத்தம் செய்யவேண்டியது குடிகளின் கடமை என்றும் தேசாபிமானத்தைக் காண்பிக்கவேண்டிய தருணம் அதுதான் என்றும் தன் சரீரம் தன்னுடைய பொருள் தன் உயிர் என்று நினைக்காமல் கஷ்டப்படுவதுதான் "தியாகம்" என்றும் பறைசாற்றுவர் அரசாங்கத்தவரும் அவர்களுக்கு உடந்தையாயிருப்பவர்களும்.

இவைகளையறிந்த ஹேஸ்டிங்ஸ் உடனே பழைய கணக்குகளைப் பார்த்தான். அயோத்தியை நவாப் வஜீர் சர்க்கார் பாக்கிவைத்துக்கொண்டிருப்பதாய்க்கூறி அவனிடமிருந்து சில லக்ஷங்களைப் பெறுவதற்கான யுக்திகளைத் தேடினான். காசிராஜா ஷேட் (Chait Sing) ஸிங்க் என்பவன் ஆங்கிலேயர்களுக்குட்பட்டவனுதலால் கேட்டதைக் கொடுக்கக் கடமைப்பட்டவன் என்று சைன்னியத்திற்காக ஏராளமான பொருளையளிக்க வற்புறுத்தப்பட்டான். ஹேஸ்டிங்ஸுக்கு விரோதக் கக்ஷியிலிருந்த பிரான்ஸிஸ் இந்நாட்டைவிட்டோட நேரிட்டமையால் ஹேஸ்டிங்ஸ் இஷ்டப்படி காரியங்கள் நடத்தப்பட்டன.

பிரான்ஸிஸ் ஓடினதற்குக் காரணம் நமக்கு வியப்பையளிக்கத்தக்க வரலாறுயிருக்கின்றது. அது இங்கிலாந்தில் சென்ற நூற்றுண்டுவரை வளர்ந்திருந்த ஒரு அபூர்வ நாகரிகத்தைக் காட்டக்கூடிய புதுமையாகும். இருவர் எக்காரணத்தினுலாவது தீராக்கோபமும் தீர்க்க வைரமும் அடங்காப் பொருமையும் ஆராத அழுக்காறும் பெற்றவர்களாயினின் அவர்களிருவரும் "டியூயெல்"—(Duel)—என்கிற துவந்துவ யுத்தம் பலர் அறியச் செய்யத் தீர்மானித்துக் கொண்டு அவ்வாறே நடத்துங்கால் ஒருவருக்கு அதிகக் காயம் பட்டுவிட்டாலும் அல்லது ஒருவன் தோற்று விட்டதாய் ஒப்புக்கொண்டாலும் யுத்தத்தை நிறுத்திவிடுவது வழக்கம். இந்தமாதிரி யுத்தம் அக்காலத்திய "கௌரவத்தைக் குறித்த" வழக்கமாம். ஹேஸ்டிங்ஸின் சபையில், இந்நாட்டில் நடந்துகொண்டிருந்த யுத்தங்களைப் பற்றிய விவாதம், வாய்வார்த்தை முற்றிக்கைகலக்கும் நிலைமையையடைந்தது. ஆதலால் ஹேஸ்டிங்ஸும் பிரான்ஸிஸும் புரிந்து கொண்டிருந்த தர்க்கங்களின் முடிவு துவந்துவ யுத்த

மாயிற்று. பிரான்ஸிஸின் விலாவில்ஒரு குண்டு பாய்ந்ததாம். யுத்தம் நிறுத்தப்பட்டது. அவன் அசெளக்கியமாயிருந்த காலத்தில் ஹேஸ்டிங்ஸ் அவனுக்கு உதவி செய்தானும். என்ன கருணை ! கொஞ்சம் செளக்கியமானவுடன் 1780-ல் அவன் இவ்வூரைவிட்டு ஓடினபொழுது இங்கிலாந்துக்குச் சந்தோஷக் கடிதம் விடுத்தான் ஹேஸ்டிங்ஸே. அதேமாதிரி யான யுத்தம் சென்னை கவர்னருக்கும் அவனுடைய சபை அங்கத்தினர்களுக்கும் 1776-7ல் நடந்ததாம். ஒருகால் ஒருவிருந்தில், ஐர்லண்டுக்கு ராஜ பிரதிநிதியாயிருந்த பிரபு டவுன்ஸெண்டு என்பவன் தன் பின்பாகத்தைப் பிரபு பெல்லாமண்டு என்பவனுக்குக் காட்டிக்கொண்டு வீற்றிருந்த குற்றத்திற்காக பெல்லாமெண்டினுல் "கெளரவத் துவந்துவ யுத்தம்" தொடுக்கப்பட்டதாம்.

இந்த யுத்தத்தைப் பற்றி நாம் குறிப்பிடுவது யாதெனின் ஒரு ஆங்கில சரித்திராசிரியர் இந்த துவந்துவ யுத்தத்தைக் கெளரவமானதென்று சுருக்கமாய்க்கூறி வேறோர் சமயத்தில் முஸ்லிம் ஆட்சியின் தர்ப்பார்களில் நடைபெற்ற குஸ்திகள், கத்திச் சண்டை முதலிய துவந்துவ யுத்தங்களை விவரித்து அவைகளின் அநாகரிகத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். இதே விஷயத்தைப் பற்றி "பெரிஷ்டா" (Ferishta) என்பவர் கூறுவது பாராட்டத் தக்கது. அஃதாவது "இது வெறுக் கத்தக்க பெரிய துர்வாடிக்கை. இது தக்ஷிணத்தில் மாத்திரம் காணப்படுகின்றது. இது வேறு நாகரிக உலகத்தில் காணப்படுவதில்லை". ஆனல் பிரிடிஷார் தீவுகளில் இவ்வழக்க மிருந்ததை பெரிஷ்டா அறியார் போலும்.

மீண்டும் வாரன் ஹேஸ்டிங்ஸின் நிலைமையைப் பார்ப்போம். இந்நாட்டில் அக்காலத்தில் உத்தியோகம் வகித்தவர்களுள் பெரும்பான்மையோர் அக்கிரமம் செய்தபடியால் அவர்களிருந்தவரை ஒருவித நியாயமும் நடைபெறக் கூடவில்லை என்பது ஹேஸ்டிங்ஸின் உட்கருத்து. அவர்கள் லஞ்சம் வாங்குவதிலேயே காலந்தள்ளினமையால் சீர்திருத்தங்கள் நடைபெறக் கூடவில்லை என்பது அவன் கருத்து. ஆயினும் தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றிய சந்தேகங்கள் அவனுக்கு இல்லைபோலும்.

ஹேஸ்டிங்ஸ் ஏராளமான தனக்குவியலைச் சேர்த்துக்கொண்டான் என்றும் அவன் நடத்தைகள் சந்தேகிக்கப்படத்தக்கவைகள் என்றும் சிலர் ஒருபக்கத்தில் கூறிக்கொண்டிருக்க வேறு சிலர் அவனை "இந்தியாவுக்குத் தகப்பன்; இந்தியாவுக்கு மோக்ஷமளித்தவன்; மகா புத்திசாலி; ஆங்கிலேயர்கள் அமெரிக்காவில் இழந்த கௌரவத்தைக் காப்பாற்ற அவதரித்தவன்" எனப்புகழ்ந்தனர். அவன் தூஷிக்கப்பட்டதற்குக் காரணம் வர்த்தக சங்கத்திற்குப் பணம் தேவையானால் எந்தக் காரணத்தையாவது கூறிப் பாரதமன்னர்களிடமிருந்தும் பிரபுக்களிடமிருந்தும் அவர்களுடைய விதவைகளிடமிருந்தும் லக்ஷம் லக்ஷமாய்த் தொகைகளை வற்புறுத்தி வாங்கினதுதான். அவன் பூஷிக்கப்பட்டதற்குக் காரணம் அமெரிக்காவில் குடியேறியிருந்த ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் தங்கியிருந்த ஆங்கிலேயர்களால் பீடிக்கப்பட்ட காலத்தில் இங்கிலாந்தை உதைத்துத் தள்ளிவிட்டுத் தங்களுடைய ஐக்கியமாகாணம் என்கிற ஸ்வராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்ட காலத்தில் அதனால் ஏற்பட்ட அவமானத்திற்கும் நஷ்டத்திற்கும் ஈடுகொட்டக் கூடிய "இந்தியாவை" இங்கிலாந்துடன் இருப்புச்சங்கிலி

பால் இறுக்கக் கட்டின பேருதவிதான். ஆனால் இங்கிலாந்திலுள்ள பொதுஜனங்கள் கண்டவைகளோவெனின் "ஆங்கில-இந்திய நவாப்புகள்" எனப்படுவோர் தங்களுடைய மனைவி மக்களுடன், பூர்வீகமாய்ப் பிரபுக்களாய் வாழ்ந்துகொண்டிருந்தவர்களைக் காட்டிலும் அதிக ஜம்பமாய் வாழ்ந்ததும் அவர்கள் மகாசபை அங்கத்தினராய் விளங்குவதற்காக எலெக்ஷன் (Election) காலங்களில் பொருளை வாரி இறைத்ததும் ஆடல்களிலும், பாடல்களிலும், ஆட்டங்களிலும், கூத்துகளிலும் முதல் இடங்களுக்குப் போட்டியிட்டதும் ஆகிய படாடோபங்களே.

இங்கிலாந்திலிருந்த ஆங்கில வர்த்தகசங்க நிர்வாக சபையின் அங்கத்தினர்களோவெனின் தங்களுடைய முக்கிய நோக்கம் இந்தியாவின் வியாபாரமென்றும் அதனால் கிடைக்கக்கூடிய லாபப்பிரிவினையென்றும் தங்களுக்கு யாதொரு ராஜ்யமும் தேவையில்லையென்றும் தாங்கள் அரசாட்சிக்கு ஆசைப்படவில்லையென்றும் அதனால் இந்தியாவில் ஏற்படக்கூடிய யாதொரு யுத்தங்களிலும் ஆங்கிலேயர்கள் தலையிட்டுக்கொள்ளக் கூடாதென்றும் பிரபலமான உத்தரவுகள் பிறப்பித்திருந்தார்கள். ஆயினும் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் வீண்சண்டைகளிலேயே திருஷ்டியுடைத்தானவர்களாய் அவைகளினாலேயே தங்களுக்கு லாபமும் தங்கள் எஜமானர்களுக்கு லாபமும் உண்டாக்கிக்கொண்டனர். லாபங்கிடைத்துவிட்டால் அதன்பிறகு அது எவ்வாறு கிட்டியது என்கிற அம்சத்தை நிர்வாக சபையார் மறந்துவிடுவது வழக்கம். மீண்டும் லாபங் குறைந்தகாலத்தில் நஷ்டம் ஏற்பட்டதற்கு முகாந்தரம் கேட்டால் உடனே இந்நாட்டிலிருந்த மாகாணாதிகாரிகள் யாரை என்னகுற்றஞ் சாட்டுவது என்று யோசனை செய்யலாயினர். ஒவ்வொருவரும்

ஆட்டுக்குட்டிக்கும் நடந்த சம்பாஷணைகள் தோன்றின. முடிவு சொல்லாமலே விளங்கும்.

இங்கிலேண்டிலிருந்த வியவகாரங்களைப் பிரிடிஷ் அரசாங்க மந்திரி சபையார் விசாரிக்காமல் விட்டுவிடுவது தமது இனத்தாருக்கே அகௌரவம் என்று நினைத்தனர். அக்காலத்தில் இருந்த முக்கிய மந்திரி (25 வயதுள்ள) பிட் என்பான் 1784-ல் ஒரு மசோதாவைக் கிளப்பினான். அதற்கு "போர்ட் அவ் கண்ட்ரோல்" (Board of Control) என நாமஞ் சூட்டினான். அதனால் பரத கண்டத்தில் உள்ள வர்த்தக சங்க உத்தியோகஸ்தர்களை ஹத்துக்கு மீராமல் இருக்கும்படியான முறைகளை அடிக்கடி அமலுக்குக் கொண்டுவருவதற்காக ஒரு பஞ்சாயத்து சபை ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவனும் இதர ஐந்து அங்கத்தினர்களும் அரசனுக்கும் மகா சபைக்கும் உத்தரவாதிகளாயிருந்தனர். அதன் முக்கிய நோக்கம் கீழிந்திய வர்த்தக சங்கத்தாரின் நடவடிக்கைகளை யடக்கி யாள்வதானபடியால் அச்சபையின் உத்தரவை எதிர்பார்த்தே பரதகண்டத்தில் யுத்தங்கள் புரியவேண்டும் என்றும் சமாதானங்களும் உடன்படிக்கைகளும் செய்யப்படவேண்டும் என்றும் தீர்மானஞ்செய்யப்பட்டது. மேலும் ஆங்கிலர்கள் யாவரேயாயினும் பரதகண்டத்திலுள்ள அரசருடன் யாதொருவிதமான பொருள் சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அவைகள் எம்மட்டில் அநுஷ்டிக்கப்பட்டன என்பதுதான் கேள்வி. ஆயினும் இம்மாதிரியான முயற்சிதோன்றியதைப் பற்றி மட்டில் நாம் சந்தோஷிப்போமாக.

மேலே குறிப்பிடப்பட்ட தீர்மானங்களை முன்னிட்டு கர்ணாடக நவாப்புக்கு அவனுடைய தேசம் அவனுடைய

ஆட்சியில் விட்டுவிடப்படவேண்டுமென்றும் அவனுக்கு ஏற்பட்டிருந்த நியாயமான கடன்களைத் தீர்த்துவிடவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதைக் கேட்டவுடன் சென்னை கவர்னரான மக்கார்ட்னே தனக்குகௌரவக் குறைவு நேரிட்டதென நினைத்துத் தன்பதவியை ராஜிநாமா செய்துவிட்டுத் தன்னாட்டிற்குச் சென்றனன். இவ்வாறு ஓடுவானேன்? ஒருவனுடைய சொந்த சொத்தை அவனுக்கு ஒப்புவிப்பது என்ன கௌரவக்குறைவு? மீண்டும், அவனுக்கு உபகாரச்சம்பளம்—அல்லது ஜீவனும்சம்— கொடுத்து அவனது நாட்டைப் பிடுங்கிக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்தவர்களின் அபிப்பிராயம் என்னே? இக்கேள்விகளுக்குச்சில சமாதானங்களும் இருக்கின்றன.

பதினெட்டாவது நூற்றாண்டில் இங்கிலாந்தை விட்டு இந்நாட்டினில் உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ள பிரயத்தனஞ் செய்தவர்கள் எல்லோரும் நமது பாரதமாதாவின் பாலைக் குடிப்பதற்காகவேயன்றி வேறில்லை. மேலே கூறப்பட்ட பஞ்சாயத்துக்குத் தலைவனான டண்டாஸ் முதல் தண்டச்சோற்று "ஜான் புல்" (John Bull) இறுதியாக அப்பாலையுண்டே பறுத்துப்போயினர். நமது தென்னாட்டில் வாழ்ந்த ஆற்காடு நவாப்புகளின் தர்ப்பாரில் தங்கி அவர்களை ஸ்தோத்திரஞ்செய்து இனம் பெற்றவர்கள், "நவாப்" ஸ்வதந்திரம் பெற்றுத் தனியாய் நின்றுவிட்டால் தங்களுக்குப் பிழைப்பு கிடைக்காதென்று சந்தேகித்தனர். நவாப்புக்குக் கடன் கொடுத்து ஒன்றை மூன்றாப்ப் பெருக்கிக்கொண்டவர்கள் தங்களுடைய கதி என்ன ஆகுமோ என்று பயந்துவிட்டனர். சில ஆங்கில உத்தியோகஸ்தர்கள் நவாப்பின் உயிரையே உள்ளங்கையிலடக்கிவைத்திருந்தனர். ஒரு பால் பென்பீல்டு (Paul Benfield) என்பவன்மட்டில் ஐந்து

லட்சம் பவுனுக்குக் கடன்பத்திரம் வைத்திருந்தான். இவர்களைத்தவிர சில்லரைக் கடன்காரர்கள் கதி இன்னும் பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. வராகன் வராகனுய்க் காய்க்கக் கூடிய விருக்ஷம் (Pagoda tree) வேருடன் வெட்டிவிடப்பட்டால் நஷ்டம் ஏற்படுமே என்று பயந்தவர்கள் நவாப் என்கிற பட்டப்பெயர் இருக்கவேண்டுமென்று நினைத்தனர்.

நிற்க ; இங்கிலாந்தில் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு உதவியான கக்ஷியைச்சேர்ந்தவர்களின் சங்கியை குறைந்துவிட்டது. அவனுடைய நடவடிக்கைகள் ஆமோதிக்கப்படவில்லை. அவனுடைய சிநேகிதர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டபோதிலும் அவன்பேரில் அதிர்ப்திகள் அதிகமாய்க் கொண்டிருந்தன. ஆகையால் மரியாதையாய் ராஜினமா செய்துவிடும்படி நேரிட்டது. அதனுல் 1785 பிப்பிரவரியில் கப்பலேறி விட்டான். மீண்டும் இக்கண்டத்தை எட்டிப் பார்க்கவில்லை.

இங்கிலாந்திலோ அவனுடைய கதி வியசனிக்கத்தக்கதாயிற்று. அவன்பேரில் தொடுக்கப்பட்ட பாணங்கள் கூர்மையானவைகளா யிருந்தன. இருபத்தெட்டு குற்றங்கள் அவன்பேரில் தொடுக்கப்பட்டன. அக்குற்றங்களைக் கேட்ட சிலர் மூர்ச்சைபட்டு விழுந்தனர். அவன் குற்ற விசாரணைக்குள்ளாக்கப்பட்ட தருணத்தில் பிரபுக்களின் சபையில் (House of Lords) பிரசன்னமா யிருந்தவர்கள் இங்கிலாந்தின் ராணியார், இராஜகுமாரர்கள்; இராஜகுமாரத்திகள், மகாப்பிரபுக்கள், வித்துவான்கள் ஆகியவர்களாவர். அக்காலத்தில், குற்றங்களை விவரித்த பிரசங்கங்கள், விசாரணை செய்த பிரபுக்களின் மனோபாவங்கள், வாரன் ஹேஸ்டிங்ஸின் தற்காப்பு ஆதாரங்கள், ஆகியவைகளைக் குறிப்பிட்டுக்காட்டும் நூல்கள் ஆங்கில பாஷைக்

குக்கௌரவம்கொடுக்கத் தக்கவைகளாய்நிற்கின்றன. அவைகளை நமது நாட்டுப்பாஷைகளில் மொழி பெயர்த்துவிட்டாலே நமது பரதகண்டம் ஸ்வராஜ்யம் பெற்றுவிடும் என்பது திண்ணம். ஆயிரம் நாவு பெற்ற ஆதிசேஷன் தானே என்று சந்தேகிக்கக்கூடிய நாவன்மைபெற்ற எட்மண்டு பர்க் (Edmund Burke) என்பவனுடைய தர்க்கங்களைப்படிக்காத ஆங்கிலம் கற்றவர்கள் உலகில் இரார் என்று நாம் நினைக்கிறோம். அவனுக்கு உதவியாளர்களாய் நின்ற ஷெரிடன் (Sheridon) பாக்ஸ் (Fox) க்ரே (Gray) ஆகியவர்கள் உண்மையை வெளியாக்குவதற்காக உழைத்தனர். அவர்களாலேயே ஹேஸ்டிங்ஸ் விசாரணை உலகப் பிரசித்தியாய் நிற்கின்றது. அப்படி அவர்கள் செய்யாதிருப்பின் நம் நாட்டில் நடந்த அனேக அக்கிரமங்கள் வெளியாயிருக்கமாட்டா.

கல்லாயினும் கரையக்கூடிய விவாதங்களைக்கொண்ட அந்த விசாரணை ஏழு ஆண்டுகள் நடைபெற்றன. அவன் பொருளெல்லாம் கரைந்துவிட்டன. (ஆயினும் வாரன் ஹேஸ்டிங்ஸ் அசையவில்லை.) தன்னால்கூடிய சாமர்த்தியஞ் செய்தான். இறுதியில் அவனுக்கு ஜயமும் உண்டாயிற்று, அவன் குற்றங்களினின்றும் நீக்கப்பட்டான். ஆனால் அவனுக்கு அது கௌரவம் உண்டாக்கவில்லை. ஏனெனின் இன்றைக்கும் அவன்பேரில் சந்தேகம் தெளியவில்லையே. மேலும் இந்நாட்டைப்பற்றிய விஷயம் எதுவாயினும் இங்கிலாந்தின் கௌரவத்திற்குக் குறைவையுண்டாக்குவதானால் நியாயம் இந்நாட்டுக்கு விரோதமாய் விடுகின்றது என்பது பொதுவான வதந்தி. இக்காலத்தில் நடைபெறும் "லோகமான்ய திலகர்—சிரால்" "ஸர் சங்கர நாயர்—ஓடையர்" போன்ற வியாஜ்யங்களிலும் நியாயம் சரியாய் நிலைநாட்டப்படுகிறதில்லை என்பது பொதுஜன அபிப்பிராயம். இவ்விஷயத்தைப் பற்றி வேறொரு தருணத்தில் விவரிப்போம்.

ஆந்திரவம்சம்.

சிசுகன் (சிமுகன்)	மேகஸ்வாதி
கிருஷ்ணன் (அவனுடைய சகோதரன்)	ஸ்வாதி
	ஸ்கந்தஸ்வாதி
சாதகர்ணி (அல்லது மல்ல கர்ணி கிருஷ்ணனின் புத்திரன்)	மிருகேந்திர ஸ்வாதிகர்ணன்
	குந்தல ஸ்வாதிகர்ணன்
	ஸ்வாதிகர்ணன்
பூர்ணோத்சங்கன்	புலோமாயி
ஸ்கந்தஸ்தம்பி	அரிஷ்டகர்ணன்
சாதகர்ணி	ஹாலன்
லம்போதரன்	மந்தலகன்
ஆபீலகன்	....

	சுமார் கி. பி.
புரிகசேனன்	59
சுந்தர சாதகர்ணி	80
சகோர சாதகர்ணி	81
சிவஸ்வாதி	81
கௌதமீபுத்திர சாதகர்ணி	109
புலோமாயி (கௌதமீபுத்திரனுடைய புத்திரன்)	135
சிவஸ்ரீபுலோமாயி	163
சிவஸ்கந்த சாதகர்ணி	170
எஞ்ய ஸ்ரீ சாதகர்ணி	173
விஜயன்	202
சந்திர ஸ்ரீ சாதகர்ணி	208
புலோமாயி	218—225

(சாகக்ஷத்திரபர்கள் : உஜ்ஜயினி.)

சுமார் கி. பி.

சஷ்டாணு 80
|
ஜயதாமன் 110
|
ருத்திரதாமன் 128
|
தாமதஜஸ்ரீ 155
|
ஜீவதாமன் 178
|
ருத்திரஸிம்ஹன் 180
|

ருத்திர சேனன்	சங்கதாமன்	தாமசேனன்
199	222	223

மகாராஷ்டிர க்ஷத்திரபர்கள்.

பூமகன் ×
நாஹபாணன் ×
|
தக்ஷமித்திரை + ரிஷபதத்தன் ×

வாதாபியில் சளுக்கியவம்சம்.

புலிகேசின் I (ஸத்யாசிரய ரணவிக்ரம வல்லபன்) 550

கீர்த்தி வர்மன் I (வல்லபரண பராக்ரமன்) 566-7

மங்களேசன் (வல்லபரண விக்ராந்தன்) . 597-8

புலிகேசன் II (வல்லப ஸத்யாசிரயன்) 608

(642 லிருந்து 655 வரை இடையூறு ஏற்பட்டது.)

விக்கிரமாதித்தியன் I (வல்லப ஸத்தியாசிரயன்) 655

வினயாதித்யன் (ஸத்தியாசிரய வல்லபன்) 680

விஜயாதித்யன் (ஸத்தியாசிரயன்) 696

விக்கிரமாதித்யன் II (அனிவாரிதன்) 733

கீர்த்திவர்மன் II (நிருபசிம்ஹராஜன்).... 746

* * *

கல்யாணி சளுக்கியர்கள்.

தைலபன் I 973

ஸத்யாசிரயன் 997

விக்கிரமாதித்யன் V (திருபுவனமல்லன்) 1009

ஜயசிம்மன் II (ஜகதேகமல்லன்) 1016

ஸோமேசுவரன் (ஆகவமல்லன்) 1042

ஸோமேசுவரன் II (புவனைகமல்லன்).... 1075

விக்கிரமாதித்யன் VI (விக்கிரமார்கன்) . 1075-6

ஸோமேசுவரன் III (பூலோகமல்லன்) 1125-6

பிர்ம—ஜகதேகமல்லன் II 1138

தைலன் II (தைலபத்திரை லோலக மல்லன்) 1149

ஸோமேசுவரன் V (திரிபுவனமல்லன்) . 1162

மானியகேட ராஷ்டிரகூடர்கள்.

தந்திவர்மன்	×	×
கிருஷ்ணன் I (அகாலவர்ஷன்)	....	760
கோவிந்தன் II (பிரபூதவர்ஷன்)	....	775
துருவன் நிருபமன், ஸ்ரீவல்லபன்	....	780
கோவிந்தன் III (பிரபூதவர்ஷன்)	....	793
அமோகவர்ஷன் I (நிருபதுங்கன்)	....	815
கிருஷ்ன் II (கிருஷ்ணவல்லபன்)	....	880
இந்திரன் III (நித்யவர்ஷன்)	....	912
அமோகவர்ஷன் II	....	916-7
கோவிந்தன் IV (சுவர்ணவர்ஷன்)	....	917
அமோகவர்ஷன் IV	....	935

* * *

கிருஷ்ணன் III (கன்னரான்)	....	940
கொட்டிகன் நித்யவர்ஷன்)	....	965
கக்கன் II (கக்கலன்)	....	972

காகதீயர்கள்.

- கரிகாலன் (சோழன் ?)
  - துர்ஜயன்
    - (1) ப்ரோலன்
      - (பேட்) திருபுவனமல்லன்
        - (2) ப்ரோலன் + முப்பலாம்பாதேவி
          - ருத்திரதேவன்
          - மகாதேவன் + பய்யமாம்பிகா.
            - மேலாம்பிகா
            - கணபதி [1198-1261].
              - ருத்திராம்பா
                - மகாதேவன்
                  - பிரதாபருத்திரன்
              - கணபாம்பா.

விஜயநகரம் I இராய வம்சம்.

(1) ஹரிஹரன் [விஜயநகரத்தை ஸ்தாபித்தவன் (1336)]

* * *

(1) புக்கன்—(1343—1376) × [ஸங்கம புத்திரர்கள்.]

|

(2) ஹரிஹரன்.

|

(2) புக்கன்.

* * *

(1) தேவராயன் (1406) வீரவிஜயன் (1410)

* * *

(2) தேவராயன் (1424) [பிரதாபன் அல்லது புரௌடன்]

|

மல்லிகார்ஜுனன் (1447)

* * *

விருபாக்ஷன் × × புரௌட தேவராயன் (1465)

II சாளுவ வமசம்.

நரஸிம்ஹசாளுவன் (1486)

|

தம்மய்யராயன் (1492)

III துளுவ வம்சம்.

நரஸநாயக்கன் (1505) ×

வீரநரஸிம்ஹன் (1506) ×

கிருஷ்ண தேவராயன் (1509)

அச்சுதராயன் (1529)

ஸதாசிவராயன் (1542)

IV கர்ணட வம்சம்.

திருமலராயன்.

ரங்கராயன் (1573) | (1) வெங்கடராயன் (1585)